# முன் பிள்ளைப்பருவ
# அபிவிருத்தி மற்றும் கல்வி



# கற்பித்தல் மற்றும் செயற்பாடுகள் பற்றிய கைநூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி மற்றும் கல்வி

# கற்பித்தல் மற்றும் செயற்பாடுகள் பற்றிய கைநூல்


பேராசிரியர் லால் பெரேரா

ஏ.ஏ. நவரத்ன

ஜீ.எம்.டீ.என். பெரேரா

ஆதர் வெதமுல்ல



ISBN 978-955-1214-12-8

வெளியீடு : மத்திய மாகாண சபை

ஏற்பாடு : ப்லேன் ஸ்ரீ லங்கா (Plan Sri Lanka)

அச்சுப்பதிப்பு : ப்ரின்ட்கெயா(ர்)

நூல் வடிவமைப்பு : மதிப்பீடு மற்றும் கல்வி ஆய்வு
மத்திய நிலையம்
27/A1, அமரசேகர மாவத்தை
கொழும்பு 05.

சித்திர வடிவமைப்பு : ரவீந்திர தேனுவர



Copyright © Plan Sri L anka

Plan
Be a part of it.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய மாகாணசபை முதலமைச்சரின் ஆசிச்செய்தி

மத்திய மாகாணத்தைச் சேர்ந்த பிள்ளைகளது கல்வித்தரத்தை மேம்படுத்தும் வண்ணம் அவர்களது வாழ்வின் பொன்னான வாசலை அதனூடாக திறந்து கொடுக்கும் நோக்கில், "மத்திய மாகாண கல்வியில் நாம்" எனும் கருப்பொருளின் ஊடாக நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

மாணவர்களுக்கு வகுப்பறையிலும் சூழலிலும் கற்றல் மற்றும் கற்பித்தலினூடாக ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியைப் பெற்றுக் கொள்ள தேவையான சந்தர்ப்பங்களை நாம் வழங்குகிறோம். மேலும் அவற்றை பூரணமாக மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை நாம் முறைசார்ந்த கல்வி மூலம் வழங்கி வருகிறோம். மாணவர்கள் பாடசாலையில் ஆரம்பக்கல்வியைப் பெற முன் கடந்து செல்லவேண்டிய ஆரம்ப குழந்தைப் பருவ வளர்ச்சிக்குத் தேவையான கல்விப் பணியை நாம் மேற்கொள்ள வேண்டி உள்ளது. அவற்றை மத்திய மாகாண சபையின் கீழ் கொண்டு செல்வதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். அதற்காக முன் பிள்ளைப் பருவம் மற்றும் முன் பள்ளிக்கூடக் கல்வி பற்றிய ஒரு பிரிவை ஏற்படுத்தி மத்திய மாகாண சபை அதை பலப்படுத்தி முறையான திட்டம் ஒன்றை செயல்படுத்துவதற்கும் நாம் திட்டமிட்டுள்ளோம்.

குழந்தை பிறக்கும் முன்பே உருவாகும் முன் குழந்தைப் பருவம் மற்றும் 3-5 வருடங்களுக்கிடையில் உருவாகும் முன் பிள்ளைப்பருவம் ஆகியவற்றுள் முன் பிள்ளை பருவத்தின் கீழ் முன் பள்ளிக்கூட கல்வியை முறையானதும் விஞ்ஞானரீதியானதுமான அடிப்படையில் செயல்படுத்துவதற்கு இந்த புதிய அமைப்பின் ஊடாக வழி பிறக்கும். அவ்வாறானதோர் சந்தர்ப்பத்தில் எமது பாரிய எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றித்தருவதற்கு ப்லேன் ஸ்ரீ லங்கா நிறுவனமும் எம்முடன் இணைந்து எமது பலத்தை இரட்டிப்பாக்கியுள்ளது. அது எமது மாகாணத்தில் உள்ள சிறுவர் சிறுமியரை மேலும் ஊக்குவித்துள்ளது.

மத்திய மாகாண கல்வித் திணைக்களத்திற்கூடாக செயல்படுத்தப்படும் "நெனோதா" கல்வி அபிவிருத்தி விஷேட திட்டத்தை பலப்படுத்துவதற்கு இதன் மூலம் கிடைக்கும் ஒத்துழைப்பு அளப்பரியது. நாம் இவ்வாறு செய்யும் ஒவ்வொரு செயலும் எமது வரலாற்றுக்கு நல்ல தகவல்களை சேர்ப்பதற்கு இடமளிக்கும் என்பது திண்ணம்.

முன் பிள்ளைப்பருவ வளர்ச்சியின் போது பிள்ளையுடன் முன் பள்ளிக்கூட ஆசிரியர்கள் எவ்வாறு பழக வேண்டும் என்பது பற்றி அவர்களுக்கு அறிவூட்டுவது மிக அவசியமாகும். அதற்கான வழிகாட்டல்களை பெற்றுத்தரவும் ஆசிரிய மாணவ செயல்பாடுகள் பற்றிய அறிவூட்டுதல் போன்ற விடயங்களில் எதிர்காலத்தில் ப்லேன் ஸ்ரீ லங்கா நிறுவனம் எம்முடன் நெறுங்கி இணைந்து செயல்பட உள்ளது. அதற்காக அந்த நிறுவனத்திற்கு எமது அமைச்சும், மத்திய மாகாண சபையும் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது. குழந்தைக் கல்வியின் மிக முக்கியமான கட்டமாக கருதப்படும் முன் பிள்ளைப் பருவ வளர்ச்சி மற்றும் முன் பள்ளிக்கூட கல்வி ஆகியவற்றை முறையாக வழங்குவதன் மூலம் எமது பிள்ளைகளை நாட்டுக்கும் உலகிற்கும் பொறுத்தமான பிரசைகளாக மாற்றுவதற்கு எல்லோரதுபங்களிப்பையும் ஒத்துழைப்பையும் நான் எதிர்பார்க்கிறேன்.

சரத் ஏக்கநாயக்க
முதலமைச்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய மாகாண பிரதான மற்றும் கல்வி அமைச்சின் செயலாளரின் ஆசிச் செய்தி

நாட்டின் அபிவிருத்தி மற்றும் முழு மனித சமூகத்தின் நல்வாழ்க்கைக்கு பொறுத்தமான சூழலொன்றை உருவாக்குவது இன்றியமையாததாகும். அவ்வாறான சூழலொன்றை உருவாக்குவதற்கு உயர்தரமான கல்வி முறை ஒன்றினால் மட்டுமே முடியும். அவ்வாறான கல்வி முறையொன்றில் ஆரம்பம், நடுப்பகுதி மற்றும் இறுதி ஆகிய மூன்று சந்தர்ப்பங்களிலும் விஞ்ஞான ரீதியாகவும் அர்த்தமுள்ளதாகவும் கல்வி உருவாக்கப்படல் வேண்டும். அவை திட்டமிட்ட அடிப்படையில் செயல்படுத்தப்பட வேண்டும். அதன் அடிப்படையில் நிகழ்ச்சிகள் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும். அவ்வாறு நடைபெறும் போது முறைசார்ந்த கல்விக் கொள்கைக்கு சிறுவர்கள் உட்படுத்தப்படுவர். சிறுவர் முன் பள்ளிக்குத் தயாரான நிலையில் அதற்காக உட்படுத்துவதற்கு வசதிவாய்ப்புக்கள் ஏற்படின் அது பயன் மிக்கதாய் மாறும்.

மேற்படி கருத்துக்களுக்கு உரமூட்டுவது போன்று மத்திய மாகாணத்தின் கல்விக் கொள்கைக்குள் முன் பிள்ளைப்பருவ வளர்ச்சி பற்றியும் அதற்கேற்றவாறு முன் பள்ளிக் கல்வியை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண சபையின் பாடநெறிக்கு இந்த பாடத்தை உள்ளடக்கி அதற்கென்றே உருவாக்கப்பட்ட ஒரு விஷேட பிரிவு மூலம் அவற்றை நடைமுறைபடுத்துவதற்காக அத்திவாரம் இடப்பட்டு விட்டது.

இங்கு முதலில் முன் பள்ளிக்கூட கல்வித்திட்டத்தின் கீழ் மத்திய மாகாணத்திலுள்ள முன் பள்ளிக்கூடங்கள் அவற்றின் கல்வித்தரம் அவை அமைக்கப்பட்டுள்ள முறை அவற்றில் கற்பிக்கும் ஆசிரியர்களின் பயிற்சித்தரம் ஆகியவற்றை ஆராய்ந்து மிகச்சரியான தரத்திற்கேற்ப அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

குறிப்பாக பாடநெறி, ஆசிரியர் கைநூல், குழந்தைகள் பற்றிய செயல்பாடுகள் ஆகிவற்றை அறிந்துகொள்ள எமது கவனத்தை செலுத்தவேண்டிய கட்டத்திற்கு நாம் இப்போது வந்துள்ளோம். இந்த சந்தர்ப்பத்தில் ப்லேன் ஸ்ரீ லங்கா நிறுவனம் எமது அமைச்சுடன் இணைந்து இது விடயத்தை மேலும் இலகுவாக்கிக் கொள்வதற்கு முன்வந்தது எமக்கு அளவிலா ஆறுதலைத் தருகிறது. மேலும் பல்வேறு அரச, மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இந்த முன்பிள்ளைப் பருவ, முன் பள்ளிக்கூட கல்வித்திட்டத்தை மத்திய மாகாணத்தில் ஒரு தெளிவான அடிப்படையின் கீழ் ஸ்தாபிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் வளர்ச்சிக்கு கைகொடுக்கக்கூடிய அனைவரையும் வரவேற்கிறேன்.

டீ.எம்.ஆர்.பி. திஸாநாயக்க
செயளாலர்
பிரதான மற்றும் கல்வி அமைச்சு
மத்திய மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

ப்லேன் சிறீ லங்கா நிறுவனம் மூலம் இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட சில மாவட்டங்களில் செயற்படுகின்ற முன் பள்ளி நிகழ்ச்சித் திட்டங்களில் பயன்படுத்துவதற்காகத் திட்டமிட்டுள்ள இக் கைநூல், அனுபவமுள்ள முன் பள்ளி ஆசிரியர்கள்,தேர்ச்சிபெற்ற கல்வியியலாளர்களின் ஒத்துழைப்பு டனும், வழிகாட்டலின் கீழும் தயாரிக்கப்பட்ட ஒன்றாகும்.

அபிவிருத்தி உளவியலாளர்களால் முன்மொழியப் பட்டுள்ள பிரதான ஐந்து துறைகளுடாக இக் கற்றல் செயற்பாடுகள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன. அனைத்து செயற்பாடுகளும் அபிவிருத்தி உளவியலாளர்களால் இனங்காணப்பட்ட நிகழ்ச்சி ஒழுங்கு முறைக்குப் பொருந்தும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளன. உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் அனைத்தும் பிள்ளைகளின் வயது மட்டத் துக்கும் விருத்தி மட்டத்துக்கும் நன்கு பொருந்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

உத்தேச கற்றல் நிகழ்வுகள் அனைத்தையும் அதேபோல் செயற்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படவில்லை. அவை தமது வகுப்பு பிள்ளைகளின் வயது மட்டத்துக்கும் பிரதேச வசதிகளுக்கும் ஏற்றவாறு நவீனமயப்படுத்தி ஆசிரியரால் செய்யப் படக்கூடியவை. அதேபோல் உத்தேச கற்றல் நிகழ்வுகள் அனைத்தையும் ஒரு வருடத்துக்குள் செயற்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப் படவில்லை. தமது விருப்பப்படி எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்கு உண்டு. இந்த ஆசிரியர் கைநூலைத் தயாரிப்பதில் ஒத்துழைத்த சகலருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

இந்நூலைத் தயாரிப்பதற்குத் தேவையான வழிகாட்டல்களையும் நிதி வசதிகளையும் ப்லேன் சிறீ லங்கா நிறுவனம் வழங்கியது. இலங்கையின் கஷ்டப் பிரதேசங்கள் சிலவற்றின் முன் பள்ளிக் கல்விக் கூடங்களை விருத்தி செய்வதற்காகக் கைகொடுக்கும் இந்நிறுவனத்தின் கண்டிக் கிளையின் முகாமையாளர் திருமதி தர்ஸனீ சமரநாயக்க உட்பட்ட குழுவின் முயற்சி மிகவும் பாராட்டத்தக்க ஒரு நடவடிக்கையாகும்.

ஆக்கியோர் குழு

15 . 02 . 2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


பக்கம்

01 கற்றல் செயற்பாடுகளைத் திட்டமிடும்போது கவனத்திற் கொண்ட முக்கிய விடயங்கள் 1

02 பிள்ளைகளில் விருத்திசெய்யவேண்டிய ஆற்றல்கள், திறன்கள், பண்புகள் 7

03 செயற்பாடுகளைச் செயற்படுத்தும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய சில விடயங்கள் 13

04 செயற்பாடுகளுடாகப் பிள்ளைகளுக்குப் பழக்கவேண்டிய மொழித் திறன்கள் 17

05 உடல் சார் தேர்ச்சிகள் விருத்தி 21

5.1 நாங்கள் உறவினர் வீடொன்றுக்குச் செல்வோம் 22
5.2 சின்னஞ்சிறிய நாம், பல்நிறப் பூக்குவியல் மாதிரி 25
5.3 நாம் எல்லோரும் புரண்டு புரண்டு நடனமாடுவோம் 28
5.4 காக் காக் காகம் 31
5.5 எங்கள் அம்மாவிற்கு உதவி செய்வோம் 34
5.6 சின்னஞ் சிறிய செல்லப்பிராணிகள் 38
5.7 நாம் மீன் பிடிப்போம் 42
5.8 கைக்குக் கை மாற்றுவோம் 46
5.9 நாம் முயற்பாய்ச்சல் பாய்வோம் 49
5.10 ஒரு கிளிக் கூட்டம் வந்துள்ளது 53
5.11 ஜம்புப் பழம் சாப்பிட ஓடி வாருங்கள் 57
5.12 பந்தை இலக்கு நோக்கி எறிதல் 60
5.13 யானையார் வந்துள்ளார் 63
5.14 ஒன்று சேர்ந்து பயணஞ் செல்வோம் 66
5.15 நாங்கள் விளையாடுவோம் 69
5.16 நீங்கள் வலை இழுக்க விருப்பமா? 72
5.17 தேங்காய்ச் சிரட்டை பொய்க்கால் மனிதன் 75
5.18 எங்கள் தோட்டத்தில் தேங்காய் பறித்துள்ளார்கள் 78
5.19 நாம் இப்படித்தான் மா இடிப்பது 81
5.20 ஊர்வலம் செல்வோம் 85

06 தனிநபர் மற்றும் சமூக விருத்தி 89
6.1 முன்பள்ளியின் வரவேற்பு வைபவம் 90
6.2 நாம் எல்லோரும் நண்பர்கள் 93
6.3 மதவழிபாட்டுத்தலம் செல்ல ஆயத்தமாவோம் 96
6.4 எங்கள் விளையாட்டு வீடு 100
6.5 உடல் உறுப்புக்களை இனங்காண்போம் 103
6.6 பலாப்பசைப் பிள்ளை 108
6.7 ஒரு குருவிக் கூட்டம் வந்திருக்கின்றது 111
6.8 இது எனது தாய் நாடு 115
6.9 அந்த மணம் இன்னும் எனக்கு ஞாபகம் 118
6.10 நாம் நல்ல பிள்ளைகள் 121




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.11 மூத்தோர்களைக் கவனிப்போம் 124
6.12 குளம், குட்டை, ஓடை வற்றியுள்ளன. அவற்றைக் காணப் போவோம் 127
6.13 தானம் வழங்குவோம் 130
6.14 எங்கள் ஊர் பாதையை அமைப்போம் 133
6.15 எங்கள் வகுப்பை அழகுபடுத்துவோம் 136
6.16 ஒரு பாதை இருந்தால் மிகவும் நல்லது 140
6.17 ஒரு வகுப்பறைக் கூட்டம் நடாத்துவோம் 144
6.18 நாம் மரக்கறி, பழ சந்தை ஒன்றை அமைப்போம் 147
6.19 அன்பும் கருணையும் 151
6.20 நாற்று நடுவோம 155
6.21 எங்கள் உறவினர்கள் 158
6.22 மணக்கிறது - மிகுந்த மகிழ்ச்சி 162
6.23 மரஞ் செடி கொடிகளின் மீது அன்பு கொள்வோம் 165
6.24 நாம் வழிபாட்டுத் தலத்திற்குச் செல்வோம் 169
6.25 பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிவோம் 173
6.26 மனிதர்கள் பல்வகையினர் 177
6.27 எங்களைச் சூழவுள்ள சுற்றாடல் மிகவும் சுந்தரமானது 180
6.28 பெறுமதிமிக்க மாணிக்க முத்து ஆகட்டும் ஒற்றுமை 184
6.29 கடிதம் விநியோகிப்போன் (தபாற்காரன்) 188
6.30 மீன் மாமா இதோ வந்துள்ளார் 192
6.31 சின்ன விவசாயி மிகவும் சிறப்பானவர் 196
6.32 பழங்கள் விற்கும் அம்மா இதோ வந்திருக்கிறார் 200
6.33 ஒற்றுமையும் மகிழ்ச்சியும் 204
6.34 நாம் எல்லோரும் மிகவும் திறமையானவர்கள் 208

07 தொடர்பாடல் திறன்கள் விருத்தி 211
7.1 தன்னை அறிமுகஞ் செய்தல் 212
7.2 அந்தரே சீனி உண்ட விதம் 215
7.3 தொலைக் காட்சி பேசுகிறது 219
7.4 இரண்டு நண்பர்கள் சந்தித்துள்ளார்கள் 222
7.5 கதைகளை உருவாக்குவோம் 225
7.6 பிராணிகள் ஒரு கூட்டம் வந்திருக்கிறது 229
7.7 டக் டுக் மாமா 232
7.8 பாலர் அறிவிப்பாளர் 236
7.9 இரகசியங்கூறல் 240
7.10 றபான் பதம் இசைப்போம் (மேளம் கொட்டுவோம்) 243
7.11 எங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சி 246
7.12 வைத்தியர் மாமா வந்துள்ளார் 249
7.13 காட்டில் உலாவுவோம். 252
7.14 விளையாட்டு வீட்டில் அதிகமான சனம் 255
7.15 எங்கள் சித்திரங்களை நீங்கள் கண்டீர்களா? 258
7.16 மழை பொழிகிறது 261
7.17 ஒரு முரசறைகிறவன் வந்துள்ளான் 264
7.18 அந்தரேயின் மனைவியும் அரசனின் மனைவியும் 267
7.19 தொப்பி வியாபாரி 270
7.20 நான் கூறுபவற்றைக் கேட்பீர்களா? 273
7.21 தாலாட்டுப் பாடல் பாடுவோம் 276

08 ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்தி 279



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | 8.1 | மிதக்கும் காகித ஓடம் செய்து அனுப்புவோம | 280 |
| | 8.2 | பொன்னிற வண்ணத்துப்பூச்சி | 283 |
| | 8.3 | பல்வேறு ஆக்கங்கள் | 286 |
| | 8.4 | கரணம்போடும் முயற்குட்டி | 289 |
| | 8.5 | ஒரு பேரூந்து வந்துள்ளது | 292 |
| | 8.6 | எங்கள் நண்பர் - ஆமையார | 296 |
| | 8.7 | வெற்றிகரமான எங்கள் கடை | 299 |
| | 8.8 | தேங்காய்ச் சிரட்டை நடனம் | 303 |
| | 8.9 | பட்டம் விடுவோம் | 306 |
| | 8.10 | விளையாட்டுத் தொலைபேசி | 309 |
| | 8.11 | சிறிய முள்ளம் பன்றிகள் | 312 |
| | 8.12 | நாம் சிறிய மிருகங்கள் ஆவோம் | 315 |
| | 8.13 | கோழிக் குஞ்சுகள் ஒன்று சேர்ந்துள்ளன. | 318 |
| | 8.14 | நாம் கிளிக் குஞ்சுகள் ஆவோம் | 322 |
| | 8.15 | நாம் மாலை ஒன்றைச் செய்வோம் | 326 |
| | 8.16 | ஒரு பிள்ளை விளையாட்டு | 329 |
| | 8.17 | அகப்பைக் குழந்தை | 332 |
| | 8.18 | சித்திரம் ஒன்றை வரைவோம் | 336 |
| | 8.19 | சிறிய கோழிக் குஞ்சுக் கூட்டங்கள் | 339 |
| | 8.20 | எங்கள் வியாபாரச் சந்தை | 343 |
| | 8.21 | பரமார்த்த குரு | 347 |
| | 8.22 | பாலர் இசைக் குழுவினர் | 351 |
| | 8.23 | கடதாசி நாய் | 355 |
| | 8.24 | செல்லப் பிராணிகள் | 358 |
| 09 | | பகுப்பு மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல்கள் விருத்தி | 363 |
| | 9.1 | நீளம், கட்டை தெரிவு செய்வோம் | 364 |
| | 9.2 | முயற் குட்டிகள் ஆறு | 367 |
| | 9.3 | அழகு நிறங்களை நாம் மிக விரும்புகிறோம் | 371 |
| | 9.4 | குறை நிரப்புவோம் | 374 |
| | 9.5 | ஒத்த தன்மையானவற்றைத் தெரிவு செய்வோம் | 378 |
| | 9.6 | படம் சரியானதா என்று பார்ப்போம் | 381 |
| | 9.7 | பாரத்தை நிறுத்தல் | 385 |
| | 9.8 | எண்ணுதல் | 389 |
| | 9.9 | பாதைகளைத் தேடுவோம். | 392 |
| | 9.10 | நீங்கள் எங்கே? | 395 |
| | 9.11 | நாமும் வளர்கிறோம். மரங்களும் வளர்கின்றன | 399 |
| | 9.12 | மாற்றங்கள் ஏராளம் | 403 |
| | 9.13 | கரடிக் குடும்பம் | 406 |
| | 9.14 | இவைகள் எங்கே உள்ளன? | 409 |
| | 9.15 | எங்கள் உயரம் எப்படி? | 413 |
| | 9.16 | நீங்கள் எப்போது வந்தீர்கள்? | 417 |
| | 9.17 | இராட்சதனும் கட்டையனும் | 421 |
| | 9.18 | சின்ன சின்ன விடுகதைகள் | 424 |
| 10 | | இவ்வாறான நிகழ்ச்சிகளைத் திட்டமிடும்போது பயன்படுத்தக்கூடிய சில கவிதைகள், பாடல்கள், மேளப்பாடல்கள், விடுகதைகள் | 429 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி பெயர்ப்பு

01. திரு. மு.கா. இஸாக் லெப்பே

02. திரு. பீ. மு. மு. சனூர்

03. திரு. மீ. சா. மு. மசூத்

04. திரு. உ. லெ. மு. தாஸிம்

05. திரு. பீ. மு. மு. அன்சார்

06. திருமதி. ஜெ. உ. சி. நஸீமா

07. திருமதி. அ. ம. ச. உ. ஹனான்

08. திரு. அ. வா. அ. நசார்

09. திருமதி. அ. ம. பா. ரொஷானா

10. திருமதி. மு. ஹ. சி. சிஹானா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01

# கற்றல் செயற்பாடுகளைத் திட்டமிடும்போது கவனத்திற் கொண்ட முக்கிய விடயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.0. அறிமுகம்

இங்கு காணப்படுகின்ற கற்றல் நிகழ்ச்சிகளைத் திட்டமிடும்போது கவனத்திற்கொண்ட பிரதான விடயங்கள் பலவுள.

1. பிள்ளைகளின் வயது மட்டம்
2. முறைசார் பாடசாலையில் முதலாந் தரத்தில் சேரும்போது விருத்தியுற்றிருக்க வேண்டிய ஆற்றல்கள், திறன்கள், பண்புகள்.
3. கற்றல்செயற்பாடுகளைத் திட்டமிடும்போது பின்பற்றப்படுகின்ற அணுகுமுறை.

மேலேயுள்ள தலைப்புக்கள் பற்றி மிகச் சுருக்கமாக விளக்குவதை நோக்காகக் கொண்டு இவ்வத்தியாயம் எழுதப்பட்டுள்ளது.

## 1.1. பிள்ளைகளின் வயதுமட்டம்

இலங்கையில் முறைசார் பாடசாலைகளில் ஜனவரி 31 ஆந் திகதிக்கு 5 வயது பூர்த்தியடைந்த மாணவர்கள் மட்டுமே சேர்க்கப்படுகின்றார்கள். எனவே முறைசார் பாடசாலையில் அடுத்த வருடத்தில் முதலாந் தரத்தில் சேர்வதற்குத் தேவையான தயார் நிலையைப் பெற்றவாறு முன் பள்ளியில் கற்கும் பிள்ளைகள் 4 வயதைவிடக் கூடிய 6 வயதை விடக் குறைந்த வயதுக் குழுவிலேயே காணப்படுகின்றனர்.

**பியாஜேயின்** கூற்றுக்கிணங்க இப்பிள்ளைகள் இரண்டாம் விருத்திப் பருவத்திலேயே உள்ளனர். அதாவது 2 வயது முதல் 7 வயது வரையுள்ள முன் வினைத்திறன் சிந்தனைப் பருவத்திலேயே உள்ளனர். இவ்விருத்திப் பருவத்தில் சுமார் 5 வயதாகும்போது ஏழு, எட்டு சொற்களைப் பயன்படுத்திக் கருத்துக்களை முன்வைக்கும் ஆற்றலைப் பிள்ளைகள் பெறுவதாக பியாஜே குறிப்பிடுகிறார். அநேகமாக யாதேனுமொரு நிகழ்வுக்குரியதான ஒரு பக்கத்துக்கு மட்டுமே கவனஞ் செலுத்துகின்றனர். **எரிக்ஸனின்** கூற்றுப்படி இவ் வயதுக் குழுவிலுள்ள பிள்ளைகள் சுற்றாடல்பற்றி ஆராயவும் அதில் நுழையவும் விருப்பம் காட்டுகின்றனர். ஓரளவு சிக்கலான பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றலை இப்பருவத்தில் பெற்றுக்கொள்வதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

4 வயது முதல் 6 வயது வரையுள்ள காலத்தில் பிள்ளைகளின் அறிவாற்றல் விருத்தியில் விசேட கவனஞ் செலுத்தவேண்டுமென **புரொன்பென்றனர்** (Bronfenrenner) குறிப்பிடுகிறார். இவ்வயதுப் பிள்ளைகள் சமவயதுக் குழுவினருடன் இணைந்து செயற்படுவதால் குடும்பத்தோடு வரையறுக்கப்பட்ட அனுபவங்களை அதற்கப்பால் விரிவாக்கிக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொள்வதாக அனைத்து உளவியலாளர்களும் குறிப்பிடுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.2. முறைசார் பாடசாலையில் முதலாந் தரத்தில் சேரும் போது விருத்தியுற்றிருக்கவேண்டிய ஆற்றல்கள், திறன்கள், பண்புகள்

இவ்வயது மட்டத்தில் பிள்ளைகளில் விருத்தியுறவேண்டிய ஆற்றல்கள், திறன்கள், பண்புகள் பற்றி பல்வேறு உளவியலாளர்கள், ஆய்வாளர்கள், ஆசிரியர்கள் முன்வைத்துள்ள வகையீடுகளும் பல்வகையின. எனினும் அவற்றின் உள்ளடக்கத்தில் அநேகமாக ஒத்த தன்மைகள் காணப்படுகின்றன. இந்நூலில் காணப்படுகின்ற கற்றல் நிகழ்வுகளைத் திட்டமிடும்போது பிரித்தானியாவில் மிகவும் பிரசித்தி பெற்றுள்ள "Desirable Outcomes for Children Learning" என்ற பெயருடைய அணுகுமுறை கருத்திற் கொள்ளப்பட்டது. அதற்கேற்ப இங்கு காணப்படுகின்ற செயற்பாடுகள் பிரதான 5 தொனிப் பொருள்களூடாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

1. உடல்சார் திறன்கள் விருத்தி
2. தனிநபர் மற்றும் சமூகத் திறன்கள் விருத்தி
3. தொடர்பாடல் திறன்கள் விருத்தி
4. ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்தி
5. பகுத்தல் மற்றும் பிரச்சினை தீர்க்கும் ஆற்றல்கள் விருத்தி

## 1.3. கற்றல் செயற்பாடுகளைத் திட்டமிடும்போது கவனத்திற் கொண்ட அணுகுமுறை

ஒரு கற்றல் நிகழ்வை, செயற்பாட்டைத் திட்டமிடும்போது கவனத்திற் கொள்ளவேண்டிய இரு பிரதான விடயங்கள் பற்றி ரொபட் எம் கானே குறிப்பிடுகிறார்.

1. கற்றல் செயலொழுங்கின் தன்மை
2. கற்றல் நிகழ்வின் ஒருங்கிணைப்பு

கற்றல் செயலொழுங்கின் தன்மைக்கு ஏற்ப கற்றல் நிகழ்வு ஒழுங்கு படுத்தப்படல் வேண்டுமென அவர் வலியுறுத்துகிறார். இது தொடர்பாக விளக்குகின்ற கானின் அட்டவணை மிகவும் எளிய நடையில் அடுத்த பக்கத்தில் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கற்றல் நிகழ்வின் தன்மை | கற்றல் நிகழ்வின் ஒருங்கிணைப்பு |
|---|---|
| கவனம் ↓ | 1. கவனத்தைப் பெற்றுக்கொள்ளல் |
| எதிர்பார்ப்பு ↓ | 2. நோக்கத்தை விளக்குதல், தூண்டுதலை ஏற்படுத்தல் |
| ஞாபகத்தை மீட்டல் ↓ | 3. முன்னறிவை மீட்டுவதற்கு வழியமைத்தல் |
| தேர்வு அறிதலாட்சி ↓ | 4. ஊக்கிகளை முன்வைத்தல் |
| செய்தியைக் குறியீடுகளாகப் பெயர்த்தல் ↓ | 5. கற்பதற்கு வழிகாட்டல் |
| துலங்கல் ↓ | 6. செயலடைவை வெளிப்படுத்திக் கொள்ளல் |
| உறுதி ஏற்படுத்தல் ↓ | 7. பின்னூட்டல் வழங்கல்<br>8. செயலடைவைக் கணிப்பிடுதல் |
| தகவல்களை மீள மீட்டுதல் | 9. உள்வாங்கிக்கொள்ளலும் பயிற்சி மாற்றத்தை மேலோங்கச் செய்தலும் |

மேலேயுள்ள அட்டவணையில் காணப்படுகின்ற ஒரு கற்றல் நிகழ்வின் ஒருங்கிணைப்பின் உள்ளடக்கத்தையும் ஒழுங்கு முறையையும் கவனத்திற்கொண்டு இந்நூலில் முன்வைத்துள்ள கற்றல் நிகழ்வுகள் பிரதான பத்து தலைப்புகளினூடாக அமைக்கப்பட்டுள்ளன. அவை அடுத்த பக்கத்தில் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை :**

02. **தலைப்பு :**

03. **பிரதான இலக்கு :**

04. **விருத்திசெய்ய எதிர்பார்க்கப்படும்,**
**ஆற்றல்கள் :**
**திறன்கள் :**
**பண்புகள் :**

05. **செயற்பாட்டின் தன்மை :**

06. **முன் ஆயத்தம்:**

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள் :**

08. **பிள்ளைகளிடையே தூண்டுதலை விருத்தி செய்வதையும் அவர்களை விசேட திறமைக்கு ஆளாக்குவதையும் செய்யும் விதம் :**

09. **கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள் :**

10. **வேறுவிடயங்கள் :**

ஒரு கற்றல் செயற்பாட்டைக் கட்டமைத்துள்ள மேலுள்ள தலைப்புக்களில் இலக்கம் 7 இல் "செயற்பாட்டின் பல்வேறு படிகள்" எனும் தலைப்பின் கீழ் மேகர் குறிப்பிட்டுள்ள 1 முதல் 6 வரையுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு வழிகாட்டப்பட்டுள்ளது. 7, 8, 9 ஆம் தலைப்புக்களின் கீழ் மேகர் குறிப்பிடும் தேவைகள் கற்றல் செயற் பாட்டில் 8, 9, 10 ஆம் தலைப்புக்களின் கீழ் விளக்கப்பட்டுள்ளன. இக்கோட்பாட்டிற்கு மாற்றமாக மேகர் குறிப்பிடுகின்ற 7, 8, 9 ஆம் தேவைகள் சில வேளைகளில் "செயற்பாட்டின் பல்வேறு படிகள்" எனும் தலைப்பின் கீழ் விளக்குகின்ற சந்தர்ப்பங்களும் காணப்படலாம்.

கற்றல் செயலொழுங்குத் தொகுதி 5 துறைகள் ஊடாகத் தயாரிக்கப்பட்டிருந்தாலும் யாதேனுமொரு செயற்பாட்டினூடாக அத்துறைக்குரிய ஆற்றல்கள் , திறன்கள், பண்புகள் மட்டுமே விருத்தியுறுகின்றன எனத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. பாடவிதான அபிவிருத்தியின்போது "ஒருங்கிணைந்த அணுகுமுறை பிரவேசம்" இங்கு பின்பற்றப்பட்டுள்ளதால் ஒரு செயற்பாட்டினூடாக பல துறைகளுக்குரிய ஆற்றல்கள், திறன்கள், பண்புகள் விருத்தியாகும். செயற்பாட்டின் மூலம் விருத்தியாகும் பிரதான துறைபற்றி மட்டுமே கவனஞ் செலுத்தி செயற்பாடுகள் 5 துறைகளுக்கேற்ப வகைப்படுத்தப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02

# பிள்ளைகளில் விருத்தி செய்ய வேண்டிய ஆற்றல்கள், திறன்கள், பண்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.0. அறிமுகம்

முறைசார் பாடசாலையில் முதலாந் தரத்தில் சேர்வதற்கு எதிர்பார்த்துள்ள மாணவர்களில் அதற்கு முன்னைய வருடத்தில் முன் பள்ளியில் செயற்படுத்தும் பல்வேறு செயற்பாடுகள் ஊடாக விருத்திசெய்ய வேண்டியவைகள் பற்றிக் கவனஞ் செலுத்துவது இவ்வத்தியாயத்தின் முக்கியமான நோக்கமாகும்.

பிள்ளைகளின் அறிவாற்றல்கள், உள இயக்கத் திறன்கள், மனவெழுச்சிப் பண்புகள், சமூகமயத் திறன்கள் ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு பிரதான ஐந்து தொனிப் பொருள்கள் ஊடாக விடயங்களை முன்வைப்பது மிகவும் பொருத்தமானது.

## 2.1. தனிப்பட்ட சமூகமயத் திறன்களின் விருத்தி

ஒரு பிள்ளை சின்னப் பருவத்திலேயே தன்னைப் பற்றி சுய விளக்கம் ஒன்றைப் பெற்றிருத்தல், தனது சூழலிலுள்ள சமூகத்துடன் தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடிய ஆற்றலைப் பெற்றிருத்தல் ஆகிய இரு விடயங்களும் அவனின் எதிர்கால ஆளுமை விருத்தியிலும் கற்றல் செயலொழுங்கின் வெற்றியிலும் அதிகம் தாக்கத்தை ஏற்படுத்தும். வயதுடன் தனது உடல் உறுப்புக்கள் மாற்றமுறும் என்பதைப் புரிந்து கொள்வதற்குரிய ஆற்றல் இவ்வயது பிள்ளைகளில் விருத்தியுறும் என்பதை எதிர்பார்க்க முடியாது. பிள்ளையிடம் தான், சூழல், சமூகம் பற்றிய நேர்க் கணிய மனப்பாங்கை விருத்திசெய்வதில் ஆசிரியர் கவனஞ்செலுத்த வேண்டும்.

உடலின் பல்வேறு உறுப்புக்களைக் குறிக்கும் பெயர்களை அறிந்துகொள்ளல், மனிதர்களுக்கு அவ்வுறுப்புக்களைப் பயன்படுத்தி செய்யக்கூடிய பல செயல்கள் உள்ளன என்பதை அறிந்துகொள்ளல், நாற்றம், மணம், சுவை, ஸ்பரிசம் போன்ற செயல்களை இனங்கண்டுகொள்ளல் போன்றவற்றுக்கு வாய்ப்பினை முன்பள்ளியில் கொடுத்தல் வேண்டும். மகிழ்ச்சி, துக்கம், கோபம், புதுமை போன்ற மனவெழுச்சிகள் பற்றியும் பிள்ளைகளுக்குத் தெளிவைப் பெற்றுக் கொடுத்தல் அவசியமானது.

தாய், தந்தை, மற்றும் குடும்ப அங்கத்தவர்களுடன் மட்டும் மிகவும் செல்லமாகத் தொடர்பு வைத்திருந்த பிள்ளை அதைவிட விரிவான ஒரு சமூக சூழலின் பக்கம் அழைத்துச் செல்லப்படுவது முன்பள்ளிப் பருவத்திலாகும்.. சமவயதுக் குழுக்களுடன் இணைவதன் மூலம் மிகவும் விரிவான ஒரு சமூக சூழலில் பெற்றுக் கொள்பதற்கு அனுபவிப்பதற்கு பிள்ளைக்கு வழி பிறக்கிறது.

சந்தர்ப்பத்துக்குப் பொருந்தும் வகையில் செயற்படல், ஏனையோருடன் ஒத்துழைப்புடனும் ஒற்றுமையாகவும் செயற்படல், ஏனையோர்களிடம் அன்பு, கருணை, மரியாதை காட்டல் போன்ற நற்பழக்கவழக்கங்கள் பிள்ளைகளில் விருத்தியுறும் வண்ணம் அமைந்த செயற்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும். தான் வாழும் சூழலில் சமூகத்தில் உள்ள அங்கத்தவர்களால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமானவை எனக் கருதப்படுகின்ற மதிப்பீடுகள், பெறுமானங்களை இனங்காண்பதற்கும் அவற்றை மதிப்பதற்கும் பிள்ளைகளைப் பழக்குவது இம்முன் பள்ளிப் பருவத்திலேயே ஆரம்பிக்கப்படவேண்டும். அதன் மூலமே கலாசாரத்தை உரிமையாக்கும் செயலுக்கு அடித்தளமிட முடிகிறது.

## 2.2. தொடர்பாடல் திறன்களின் விருத்தி

பிள்ளைகளின் கருத்துக்களை, உணர்வுகளை ஏனையவர்களுடன் தொடர்பாடக்கூடிய சக்திவாய்ந்த ஓர் ஊடகம் மொழியாகும்.. பேச்சு மூலம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதாகும். கவிதைகள், பேச்சுக்கள், பாடல்கள், கதைகள், உரையாடல்கள், நாடகங்கள் போன்ற அங்கங்கள் இச்செயலின்போது மிகவும் பயன்படலாம்.

மொழி ஒரு தொடர்பாடல் ஊடகம் மட்டுமல்ல. அது பிள்ளைகளின் சிந்திக்கும் ஊடகமுமாகும் என்பதை மறந்துவிடக்கூடாது. ஆகையால் மொழிவிருத்திக்கு வழிகாட்டும்போது தொடர்பாடல் திறன் மட்டுமல்ல சிந்தனா சக்தியும் பலம் மிக்கதாக அமையும், இவ்வயதுப் பிள்ளைகள் பேசும்போது பயன்படுத்துகின்ற வசன அமைப்புக்கள் ஓரளவு இயைபற்றதாகக் காணப்படும் எனினும் அநேகமான பிள்ளைகளுக்கு சாதாரண மட்டத்தில் தகவல்களையும் கருத்துக்களையும் முன்வைக்கவும் அவற்றை விளங்கிக் கொள்ளவும் ஆற்றல் உண்டு. சிறு வசனப்பகுதிகள், சென்றான், வந்தான், வருவான் போன்ற காலங்களைக் காட்டுதல், வெள்ளை, கறுப்பு, அழகான, நல்ல போன்ற அடைமொழிச் சொற்களைப் பேசும்போது பயன்படுத்தல் ஆகிய ஆற்றல்கள் பெரும்பாலோருக்குக் கிட்டியுள்ளதைக் காணமுடியும். குடும்பப் பின்னணியிலிருந்து சமவயதுக் குழுவில் இணைவதால் இச்சந்தர்ப்பங்களும் ஆற்றல்களும் விருத்தியுற வழியேற்படுகின்றது.

வளர்ந்தோர்கள், ஆசிரியர்கள் ஆகியோருடன் மட்டும் பழகும் வேளைகளைவிட சமவயதுக் குழுவிலுள்ளோருடன் இணைந்து யாதேனும் ஒரு செயற்பாட்டில் ஈடுபடும்போது இத்தொடர்பாடல் ஆற்றல்களினால் அதிகம் பயன்பெறுகிறார்கள் என்பது தெளிவாகின்றது. பேசுவதற்கு மட்டுமன்றி செவிமடுப்பதற்கும் பிள்ளைகளைப் பழக்குவது முக்கியமானது.

பிள்ளைகளுக்கு வினாக்கள் கேட்பதற்கும் கருத்துக்களைக் கூறுவதற்கும் வழியமைப்பது ஆசிரியரின் பொறுப்பாகும். அவ்வாறான சந்தர்ப்பங்களின்போது அவர்களுக்குக் கைகொடுத்து உற்சாகப்படுத்துவது மிகவும் அவசியமானது. அப்போதுதான் பிள்ளைகளிடத்தில் தமது தொடர்பாடல் ஆற்றல்கள் பற்றிய ஆத்ம நம்பிக்கை கட்டியெழுப்பப்படும்.

ஏதேனுமொன்றைக் காண்பித்து, ஏதாவது செய்து, ஏதாவது ஒன்றைக் கையாள வழியேற்படுத்தி, பங்கேற்கச் செய்து, வினாக்கள் தொடுத்து, படங்களைக் காண்பித்து, விசேட இடங்களைப் பார்வையிடச் செய்து, செயற்பாடுகளில் ஈடுபடுத்தி, பிள்ளைகளின் கருத்துக்களை முன்வைக்கும் சந்தர்ப்பங்களை விரிவுபடுத்துவது ஆசிரியரின் பொறுப்பாகும். உரையாடல்கள், விவாதங்களில் ஈடுபடுவதற்குப் பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பது அத்தியாவசியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் ஒன்றை நன்கு செவி மடுத்துக் கொண்டிருப்பதும் மொழிவிருத்தியில் முக்கியத்துவம் பெறுகிறது.

எப்பொழுதும் பிள்ளைகளின் கவனத்தை ஈர்த்துக் கொள்ளக்கூடிய வகையில் வகுப்பறையையும் செயற்பாடுகளையும் அமைத்துக்கொள்ளும் திறனை ஆசிரியர் பெற்றிருத்தல் வேண்டும். அதற்கு மேலாக செவிமடுத்துக் கொண்டிருப்பவற்றை தெளிவாக விளங்கும் வகையில் விடயங்களைக் கேட்டறிவதும் அவசியமானது. முன் பள்ளியிலிருந்து முறைசார் பாடசாலைக்குச் சேர்கின்ற வேளையில் தெளிவாகக் கருத்துக்களை முன்வைப்பதற்குள்ள ஆற்றல் விருத்தியடைந்திருத்தல் வேண்டும். முறைசார் பாடசாலையில் எழுதுதல், வாசித்தல் ஆகிய திறன்களை ஆரம்பிப்பதற்குப் பொருத்தமானளவு பிள்ளைகளில் மொழியாற்றல் விருத்தியடைந்திருத்தல் மிகவும் அவசியமானது.

## 2.3. பகுத்தல் மற்றும் பிரச்சினை தீர்க்கும் ஆற்றல்களின் விருத்தி

பிள்ளையின் அறிவாற்றல்கள் விருத்தியில் முக்கியமான பருவமாக இவ்வயது மட்டம் கருதப்படுகின்றது. இப்பருவம் தனக்குக் கிடைக்கும் ஒன்றை வெட்டி, துண்டு துண்டாக உடைத்துப் பார்ப்பதற்கும், நடைபெறுவது யாது? எவ்வாறு நடைபெறுகின்றது? என்று பார்ப்பதற்கும் அதிக அக்கறை காட்டும் ஒரு பருவமாகும். அவர்களுக்கு ஒன்றைத் தர்க்கரீதியாக சிந்திப்பதற்கு, யாதேனுமொரு கருதுகோளைக் கட்டியெழுப்புவதற்கு விசேடமான ஆற்றல்கள் இவ்வயது மட்டமாகும்போது விருத்தியடைந்து இல்லாவிட்டாலும் அதற்கு அவசியமான அடித்தளத்தை இப்பருவத்தில் பெற்றுக் கொடுக்கவேண்டும். ஆசிரியரின் பணி யாதெனில் மேற்கூறிய தேவைகளுக்கு உறுதுணையும் வளமும் கிடைக்கும் வகையில் செயற்பாடுகளில் பிள்ளைகளை ஈடுபடுத்துவதாகும். ஒப்பிட்டுப் பார்த்தல், வகைப்படுத்தல், ஓர் எளிய பிரச்சினைக்கு முகங்கொடுத்து தீர்த்துக் கொள்ளல் போன்ற விடயங்களில் அவர்களை ஈடுபடுத்தவேண்டும்.

இப்பருவத்தில் பிள்ளைகளின் அறிவாற்றலானது அவர்கள் காணக்கூடிய, காணக்கிடைக்கின்றவைகள் ஊடாகவே முக்கியமாக ஏற்படுகின்றது. அவர்கள் யாதேனுமொரு பொருளின் அனைத்து அங்கங்களிலும் கவனஞ் செலுத்தமாட்டார்கள். மிகவும் விசேடமான ஓர் அங்கத்தில் மட்டுமே கவனஞ் செலுத்துவார்கள். பல்வகை வஸ்துக்கள், பொருட்கள், பிராணிகள் போன்றவற்றை அவதானிப்பதற்கு வழியமைப்பது பயன்மிக்கதாக அமையும். வர்ணம், பருமன் போன்ற நியதிகள் அடிப்படையில் வகைப்படுத்துவதற்கு வழியமைத்தல். உயரம், நிறை, மேல், கீழ் போன்ற எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்ளக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுத்தல். ஒன்றிலிருந்து பத்துவரை எண்களை எண்ணுவதில் ஈடுபடுத்தல், ஒன்றைப் பகுதிகளாக வேறுபடுத்தி மீண்டும் முன்பிருந்ததுபோல ஒன்றிணைக்க வழிசெய்தல், தனது சூழல் ஊடாக பெற்றுக்கொண்ட சமூக அனுபவங்களுக்கு ஏற்ப ஒன்றைச் செய்தால் ஏற்படும் பிரதிபலனை விளங்கிக் கொள்வதற்குரிய ஆற்றலைப் பெற்றுக்கொடுத்தல், சிறிய கோலமொன்றை இனங்காண வழி செய்தல் போன்ற செயல்களில் பிள்ளைகளை ஈடுபடுத்தும் வகையில் ஆசிரியர் செயற்படுவது மிகவும் முக்கியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.4. உடல்சார் திறன்கள் விருத்தி

பிள்ளைகளின் கையாளுதிறன்கள், பழகு திறன்களின் விருத்தி தானாக நடைபெறுவதில்லை. உடல் உறுப்புக்களுக்கு, தசை நார்களுக்குப் பயிற்சிகள் கிடைக்கும் வண்ணம் செயற்பாடுகள், நடனங்கள், விளையாட்டுக்கள் போன்றவற்றில் முறையாக, போதுமானளவு, அடிக்கடி ஈடுபடுமளவுக்கு மேற்கூறிய இரு திறன்களினதும் விருத்தியும் வேகமாக நடைபெறும். இங்கு ஓடுதல், பாய்தல், நடத்தல், ஏறுதல் போன்ற செயல்களுக்கு மட்டுமன்றி விரல்கள் போன்ற சிறிய உடல் உறுப்புக்களும் வளர்ச்சியுறுவதற்குத் துணைபுரியும் செயற்பாடுகளிலும் அக்கறை செலுத்த வேண்டும். நடக்கும்போது சமநிலை பேணுதல், இலக்குக்கு எறிதல், பிடித்தல், தாக்குதல் போன்ற செயல்களிலும் பயிற்சி வழங்குவது பொருத்தமானது.

கண்களையும் கைகளையும் ஒரே வேளை பயன்படுத்தி செயற்படக்கூடிய செயல்களிலும் இப்பருவத்தில் கவனஞ் செலுத்துவது பெறுமதி மிக்கது. பேனைகள், பென்சில்களை முறையாகப் பிடிப்பது உடைகளின் பொத்தான்களைப் பொருத்திக்கொள்ளல், பொம்மைகளைச் சரியாக வைத்துக்கொள்ளல், பல்வகை வடிவங்களை வரைதல், பாத்திரங்களில் நீரை ஊற்றல் போன்ற செயல்களில் பிள்ளைகளை ஈடுபடுத்தி, இத்தசை நார்களின் வளர்ச்சிக்குத் துணைபுரிய முடியும். இவ்வனைத்து செயற்பாடுகளும் பிள்ளைகளுக்குக் களைப்பை ஏற்படுத்தாதவைகளாகவும் விருப்புடன் பங்கேற்கக்கூடிய விநோதத்தை ஏற்படுத்தும் விளையாட்டு வடிவம் கொண்ட செயற்பாடுகளாகவும் அமைவதற்கு ஆசிரியர் வகை செய்தல் வேண்டும்.

## 2.5. ஆக்கபுபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்களின் விருத்தி.

ஆக்கபூர்வமானதும் அழகியல் சார்ந்ததுமான ஆற்றல்களின் விருத்தியில் மிகவும் முக்கியமாக அமைவது சங்கீதம், நடனம், சித்திரம், கதைகள் போன்ற ஊடகங்கள் ஊடாகத் தனது கருத்துக்களை முன்வைப்பதற்கும் தொடர்பாடுவதற்கும் வழியேற்படுத்துவதாகும். அதே போன்று தான் வாழும் சூழல் பற்றிய உணர்வை விருத்தி செய்வதாகும். இப்பருவத்தில் பிள்ளைகள் தாம் செய்பவை, கூறுபவை ஊடாக மிகுந்த இன்பம் அடைகின்றனர். இப்பருவத்தில்தான் தமது கருத்துக்களை சித்திரமாக வடிப்பதற்குத் தூண்டப்படுகின்றார்கள். பல்வேறு பொருட்களைக் கையாளுகின்றபோது அவற்றின் நிறம், வடிவம் தோற்றம் போன்றவற்றில் ஆர்வம் காட்டுகின்றனர். தமது அனுபவங்களை, சுற்று சூழலை சித்திரமாக வடிப்பதற்கு மிகுந்த விருப்பம் காட்டுகின்றனர்.

பிள்ளைகளுக்கு வெண்கட்டி, கிறேயோன், பெல்ட் பேனைகள், பென்சில்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி சித்திரம் வரைவதற்கு வழியமைத்தல், கிளே, களிமண் போன்றவற்றைப் பயன்படுத்தி உருவம் அமைக்க வழிசெய்தல், பல்வேறு பொருட்களைப் பயன்படுத்தி கொலாஜ் வேலை செய்வதற்கு வழிசெய்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் அவர்களின் கருத்துக்களையும் உணர்வுகளையும் முன்வைப்பதற்கு வழியேற்படுத்திக் கொடுத்தல் மிகவும் பொருத்தமானது. அவற்றில் ஈடுபடுத்துமளவுக்கு அவர்களுள் சுய நம்பிக்கையை உறுதிப்படுத்தக் கூடியதாக அமையும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகள், பாடல்கள், சங்கீதம், நடனம் போன்றவைகள் பிள்ளைகளின் அழகியல் சார் ஆற்றல்களின் விருத்தியின்போது அதிக பங்கேற்கின்றன. அவ்வாறான செயல்களில் பங்கேற்பதால் அதிக இன்ப உணர்வையும் பெறுவர். அதனூடக சொற் களஞ்சியத்தைப் பெருக்கிக் கொள்ளல், ஒன்றில் கவனத்தை வைத்திருத்தல், சில பிரசினங்களைத் தீர்ப்பதற்கு வழிதேடல் ஏனையோரின் செயல்களுக்குப் பொருத்தமான துலங்கல்களைக் காட்டல், மனனஞ் செய்தல், கற்றவற்றை மீட்டல் போன்ற பல்வேறு திறமைகளை விரிவாக்கிக் கொள்ள சந்தர்ப்பங்கிடைக்கின்றது.

சங்கீதம், உணர்வுகளை முன்வைப்பதற்கு பயன்படுத்தக்கூடிய ஒரு விசேட ஊடகமாகும். ஆசிரியர் வழிநடத்தும் பல்வேறு செயற்பாடுகளின்போது இவ்வூடகத்தை நன்கு பயன்படுத்தமுடியும். கதைகள், கவிதைகள், பாடல்களைப் பயன்படுத்தி நடனத்தில் ஈடுபடுத்துவதற்கு வழியமைத்தலூடாகவும் அவர்களின் ஆக்கபூர்வமான ஆற்றல்கள் விருத்திக்கு துணை புரிய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03

# செயற்பாடுகளைச் செயற்படுத்தும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய சில விடயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.1. செயற்பாடுகளைத் தெரிவு செய்தல்

இந்நூலிலுள்ள செயற்பாடுகள் வகுப்பறையில் செயற்படுத்த வேண்டிய ஒழுங்குமுறையைக் கவனத்திற்கொண்டு தொகுக்கப்படவில்லை. முதலில் ஆசிரியர் இச்செயற்பாடுகளை நன்கு வாசித்து விளங்கிக்கொள்ள வேண்டும். இரண்டாவதாக, தமது பிரதேசம், தமது வகுப்பறை, மாணவர்களின் எண்ணிக்கை, கால இடைவெளி, மத்திய நிலையத்திலுள்ள வசதிகள், பெற்றுக்கொள்ளக்கூடிய மூலப் பொருட்கள், விசேட கொண்டாட்ட சமயங்கள், பிள்ளைகளின் சமயங்கள், மொழி, இனம் போன்ற விடயங்களைக் கவனத்திற் கொண்டு தமது விருப்புப்படி செயற்படுத்துவதற்கு மிகப் பொருத்தமான செயற்பாடுகளை இனங்கண்டு கொள்வது அவசியமாகும். குறிப்பிடப்பட்டுள்ள 5 துறைகளும் மாறி மாறி அமையும் வகையில் செயற்பாடுகளைத் தெரிவு செய்துகொள்ளல், பிள்ளைகளிடையே உள்ள ஆர்வத்தைத் தங்கவைத்துக் கொள்வதற்கும் அவர்களின் பல்வேறு ஆற்றல்கள், திறன்கள், பண்புகள் படிப் படியாக வளர்ச்சியுறுவதற்கு உறுதுணை வழங்குவதற்கும் உதவுகின்றது.

### 3.2. செயற்பாடுகளை நவீனமயப்படுத்தல்

இங்குள்ள கற்றல் செயற்பாடுகளை ஆசிரியரின் விருப்பப்படி நவீனமயப்படுத்திக்கொள்ள முடியும். செயற்பாடுகளில் பெரும்பாலானவை குழு செயற்பாடுகளாகும். தமது வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கு ஏற்ப கற்றல் நிகழ்வின் தன்மைக்குப் பொருந்தும் வகையில் செயற்பாட்டினை நவீன மயப்படுத்தல் அத்தியாவசியமானது.

செயற்பாடுகளைப் பயன்படுத்த உத்தேசித்துள்ள இடம் எல்லா மத்திய நிலையங்களுக்கும் ஒரேவிதமாகப் பொருந்துவதாக இல்லாதிருக்கலாம். சில இடங்களில் முற்றம், தோட்டம் என்பன இருந்தாலும் எல்லா இடங்களிலும் அவ்வாறு இல்லை. மத்திய நிலையத்திலுள்ள உபகரணங்கள் மரத்தளபாடங்கள். விளையாட்டு உபகரணங்கள் என்பவையும் ஒரே மாதிரியானவையல்ல. எனவே தமது மத்திய நிலையத்தின் சூழலிலிருந்து இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய பொருட்கள், பண்டங்கள், உபகரணங்களைப் பயன்படுத்தி செயற்படுத்தக்கூடிய விதத்தில் செயற்பாட்டினை நவீனமயப்படுத்திக் கொள்ளல் ஆசிரியரின் கடமையாகும்.

ஒரு செயற்பாட்டில் உத்தேசிக்கப்பட்டுள்ள கவிதைகள், பாடல்கள், நடிப்புக்கள், விளையாட்டுக்கள் போன்றவைகளும் எல்லாப் பிரதேசங்களுக்கும் ஒரே விதமாகப் பொருந்தமாட்டாது. அவற்றுக்குப் புதிதாக சில பகுதிகளைச் சேர்த்து வளப்படுத்திக்கொள்ள ஆசிரியருக்கு வாய்ப்புண்டு. அநேகமான செயற்பாடுகளுக்குத் தேவையான முன் பயிற்சியை ஆசிரியரே பெற்றுக் கொள்ள வேண்டும். பாடல், இசைத்தல், நடித்தல் போன்ற விசேட திறமை போதுமானளவு தம்மிடம் இல்லை என்று விளங்குகின்றபோது வேறொருவரின் உதவியை அதற்காகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

முன்பள்ளியில் பிள்ளைகளுடன் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுதல், பிள்ளைகளை இனங்காணல், அவர்களுக்கு வழிகாட்டல் என்பன ஒருவரால் மட்டும் தனியாகச் செய்யக்கூடியவையல்ல. அச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளுக்காக ஓர் உதவியாளரின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வது ஆசிரியரின் செயற்பாட்டை மிகச் சிறப்பாக நிறைவேற்றிக்கொள்ள வழியமைக்கும்.

## 3.3. செயற்படுத்தும் செயற்பாடுகளின் எண்ணிக்கை

சுமார் 100 கற்றல் செயற்பாடுகள் இங்கு முன்வைக்கப்பட்டிருந்தாலும் அவை எல்லாவற்றையும் ஒரே வருடத்தில் செயற்படுத்தவேண்டும் என்பது கருத்தல்ல. தமது பிள்ளைகளின் குழுவுக்கு, அவர்களின் வளர்ச்சித் தேவைகளுக்குப் பொருத்தமான செயற்பாடுகள் தொகுதியை இனங்கண்டு செயற்படுத்தல் ஆசிரியரின் விருப்பின்படி செய்யக்கூடியதாகும். சிலவேளைகளில் ஒரே செயற்பாட்டை, விளையாட்டை, நடனத்தை பலநாட்கள் அல்லது பலதடவைகள் செய்வதற்குத் தூண்டுதல் ஏற்படலாம். அதில் எவ்வித தவறும் இல்லை. சிலவேளைகளில் வழங்கப்பட்டுள்ள ஒரு செயற்பாட்டில் சிறு சிறு மாற்றங்கள் செய்து, பலதடவைகள் பல்வேறுகோணங்களில் செயற்படுத்துவதற்கான தீர்மானத்தை ஆசிரியர் எடுக்க வாய்ப்புண்டு. தமது வகுப்புப் பிள்ளைகளின் விருத்தி மட்டத்தை விட இங்கு தரப்பட்டுள்ள சில செயற்பாடுகள் குறைந்த மட்டத்தில் காணப்படுகிறது எனக் கருதும் சந்தர்ப்பங்களில் மிக நல்ல செயற்பாடுகளைத் தாமே ஆக்கி, செயற்படுவதற்கு ஆசிரியர் முயற்சித்தல் மிக முக்கியமானது. எவ்வாறாயினும் ஒரு நாளைக்கு ஒரு செயற்பாடு வீதம் பயன்படுத்துவது மிகவும் பொருத்தமானதாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04

# செயற்பாடுகளூடாகப் பிள்ளைகளுக்குப் பழக்க வேண்டிய மொழித் திறன்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலில் முன்வைக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் அனைத்தும் தமிழ் மொழி மூலத்தில் செயற்படுத்துகின்ற கற்றல் கற்பித்தல் நிகழ்ச்சித் திட்டத்தை நோக்காகக் கொண்டே திட்டமிடப்பட்டுள்ளன. அவற்றினூடாக பிள்ளைகளின் தமிழ் சொற்களஞ்சியம் குறைவின்றி விருத்தியுறும். எனினும் தற்கால இலங்கை சமூகத்தின் தேவையைக் கவனத்திற் கொள்ளும்போது பிள்ளைகளின் ஆங்கில மொழித் திறன்களிலும் முன்பள்ளிப் பருவத்திலிருந்தே கவனஞ் செலுத்த வேண்டியுள்ளது என்பது தெளிவாகின்றது.

இந்நூலிலுள்ள செயற்பாடுகள் பிரதான ஐந்து துறைகளினூடே தொகுக்கப்பட்டுள்ளதால், விருத்தியுறச் செய்ய வேண்டிய ஆங்கில, தமிழ் சொற்கள், வசனங்கள் யாவை என்பதை அத்துறையினூடாகவே அறிந்து கொள்வது மிகவும் பொருத்தமானது. ஆசிரியரின் வசதி கருதி அவ்வாறான உதாரணங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. பிள்ளைகளின் ஆற்றல் மட்டம், பிரதேச வேறுபாடுகள், சுற்றாடல் தேவைகள் ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு ஆசிரியரின் விருப்பப்படி அவற்றை ஒழுங்குபடுத்திக் கொள்ள முடியும்.

## 4.1 உடல்சார் திறன்கள் விருத்திக்குரிய செயற்பாடுகளுடாக

- **உடலின் பல்வேறு உறுப்புக்கள்**
  Head, Hair, Eyes, Nose, Mouth, Teeth, Lips, Chin, Shoulder, Chest, Legs, Fingers போன்ற சொற்கள்.

- **பல்வேறு செயல்கள்**
  running, laughing, crying, sleeping, smiling, eating, drinking, Walking. போன்ற சொற்கள்.

- **சந்தர்ப்பத்துக்கு ஏற்ற வகையில் சொற்றொடர்களைப் பயன்படுத்தல்**
  - My head
  - My legs
  - We are running
  - I drink water
  - She is crying போன்ற பிரயோகங்கள்.

## 4.2 தனிநபர் மற்றும் சமூக அபிவிருத்திக்குரிய செயற்பாடுகளுடாக

- **குடும்ப அங்கத்தவர்கள், சமவயதுக் குழுக்கள், பரந்த சமூகம், சுற்றுச் சூழல்**
  - Mother, Father, Brother, Sister, Uncle, Aunty, Grand – father, Grand -mother, Son, Daughter.
  - Friend, Boy, Girl
  - Teacher, Farmer, Driver, Man, Woman
  - Bus, Car, Cart, Birds, Trees, Flowers, Roses, Bicycle, Train, Lorry, Boat, Ship, Aero plane, Helicopter, Scissor, Ladder, Table, Chair, Toy
  - Milk, Tea, Water, Rice, Curry, Coconut, Cheese, Butter, Sugar



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **சந்தர்ப்பத்துக்கேற்ப சொற்றொடர்களைப் பயன்படுத்தல்**
  - My sister
  - I had tea
  - I come by bus
  - She is pretty
  - Flowers are lovely போன்ற பிரயோகங்கள்.

## 4.3 தொடர்பாடல் திறன்கள் விருத்திக்குரிய செயற்பாடுகளூடாக

- **கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் போது தேவைப்படும் பிரயோகங்கள்**
  - Good Morning
  - How are you?
  - I like you
  - Are you learning?
  - Shall we play?
  - Shall we eat?
  - Shall we go?
  - I will go
  - Can you come?
  - Speak loud
  - Don't cry
  - Don't run
  - Birds fly
  - My toys
  - Your toys
  - He is coming
  - He is going
  - We are singing
  - We are dancing
  - I can swim
  - We are happy போன்ற பிரயோகங்கள்.

## 4.4 பகுப்பு மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல்களுக்குரிய செயற்பாடுகளூடாக

- **பல்வேறு சொற்கள்**
  - Short, Tall, White, Red, Blue, Yellow, Pink, Green, Draw, Paint
  - One, Two, Three, Four, Five, Six, Seven, Eight, Nine, Ten.
  - Tiger, Cat, Dog, Donkey, Rabbit, Horse, Cow, Buffalo, Mynah, Monkey.
  - Coconut, Pears, Apple, Orange, Grapes, Kite, Table, Chair, Door.

    போன்ற சொற்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **பல்வேறு பிரயோகங்கள்**
    - Pussy cat
    - Lovely flowers
    - Ten fingers
    - Two eyes
    - Coconut trees
    - Red flag
    - White shirt
    - Driving the car
    - Riding the bicycle போன்ற பிரயோகங்கள்.

## 4.5 ஆக்கபூர்வமான அழகியல் சார் ஆற்றல்கள் விருத்திக்குறிய செயற்பாடுகளூடாக

- **பல்வேறு சொற்கள்**

  Dancing, Drum, Water, Singing, Moon, Sun, Eat, Violin, Telephone, Jumping போன்ற சொற்கள்.

- **பல்வேறு பிரயோகங்கள்**
    - We dance
    - We sing
    - We play
    - We read
    - We write
    - A nice song
    - A beautiful flower
    - A lovely bird
    - A tall girl
    - Piece of cake போன்ற பிரயோகங்கள்.

மேலேயுள்ள தலைப்புக்களில் சில உதாரணங்களே தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு செயற்பாட்டிலும் பிள்ளைகள் ஈடுபடும் வேளைகளில் சந்தர்ப்பத்துக்கேற்ப, பொருத்தமான ஆங்கில சொற்களை, பிரயோகங்களை ஆசிரியரின் விருப்பத்துக்கேற்பப் பழக்கலாம். தமது வகுப்பு மாணவர்களிடையே விருத்தியுற்றுள்ள சொற்கள், பிரயோகங்கள் பற்றிய குறிப்பை வைத்துக்கொள்வது ஆசிரியருக்கு பயனுள்ளதாக அமையும். இம்முயற்சியின் பலனாக வருட இறுதியாகும்போது எளிய ஆங்கில சொற்கள், பிரயோகங்களைப் பயன்படுத்தி, கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் ஆற்றல் பிள்ளைகளுக்குக் கிடைக்கும்.

இச் செயற்பாட்டின்போது ஆங்கிலத்தில் வாய்மொழியூடாக கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றுக் கொடுப்பது மட்டுமே எதிர்பார்க்கப்படுகின்றது. ஆங்கில சொற்களைப் பிள்ளைகளுக்கு எழுதப் பழக்குவது எவ்விதத்திலும் அவசியமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05

# உடல் சார் தேர்ச்சிகள் விருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.1

## நாங்கள் உறவினர் வீடொன்றுக்குச் செல்வோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : உடல் சார் தேர்ச்சிகள் விருத்தி

02. **தலைப்பு** : நாங்கள் உறவினர் வீடொன்றுக்குச் செல்வோம்.

03. **பிரதான இலக்கு** : சமநிலையாகப் பயணம் செய்வதற்குப் பயிற்சி யளித்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- பல்வேறு இனிப்புப் பண்டங்களின் பெயர்களைக் கூறுவர்.

**திறன்கள்** :
- பல்வேறு விதங்களில் நடமாடுவதற்குத் தேவையான பயிற்சி பெறுவர்.

**பண்புகள்** :
- பெரியோருக்கு மரியாதை செய்வதற்குப் பழகுவர்.

05. **செயற்பாட்டின் தன்மை** :
- இது ஒரு கூட்டுச் செயன்முறைச் செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** : விஷேட உபகரணங்கள் அவசியமில்லை.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி 1**
- பாட்டன், பாட்டி பற்றிப் பிள்ளைகளிடம் விசாரியுங்கள். (சில பிரதேசங்களில் அப்பா, ஆச்சும்மா, வாப்பம்மா என அழைக்கப்படுவதுண்டு என்பதைக் கவனிக்கவும்.) பாட்டனுக்கும் பாட்டிக்கும் ஏன் அன்பு காட்டுகிறீர்கள்? விசாரியுங்கள்.

**படி 2**
- பாட்டன், பாட்டி போன்றோரைப் பார்க்கச் செல்லும் போது எடுத்துச் செல்வது என்ன என்பது பற்றி விசாரியுங்கள். உணவுப் பொருட்களின் பெயர்களை கூறச் செய்யுங்கள். (உதாரணம்: பலகாரம், அச்சு, வாழைப்பழம், பொரிவிளாங்காய்........) உணவு வகைகள் எத்தனை? ஒன்று, இரண்டு, மூன்று,.......... எனக் காட்டுங்கள்.

**படி 3**
- உணவு வகைகளையும் எடுத்துக் கொண்டு பாட்டனையும் பாட்டியையும் நாம் இப்போது பார்க்கச் செல்வோம். உணவு பாரமாக இருக்கிறது. (பிள்ளைகள் பாரம்போல் நடிப்பர்)

**படி 4**
- ஆ! படிக்கட்டுகள் ஏற இருக்கின்றது. நாம் படிக்கட்டுகள் ஏறுவோம். முழங்கால்களை உயர்த்தி படிக்கட்டுகள் ஏறும் விதத்தில் பயணம் செய்வர்.

**படி 5**
- ஆ! நீரோடையுள்ள பாதையொன்றல்லவா? உடைகளில் நீர் படாது செல்வோம். விரல் நுனிகளால் பயணம் செய்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 6 • ஆ பாட்டியின் வீட்டுக்கு வந்து விட்டோம். பாட்டி இருக்கிறார். பொதியை நிலத்தில் வைத்து சந்தோசத்தால் குதித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்துவர்.

படி 7 • பாட்டனுக்கும் பாட்டிக்கும் மரியாதை செலுத்துவர். அவர்களுக்கு சிற்றுண்டி களை வழங்குவர். அவர்களோடு பகிர்ந்து கொண்டு உண்பர்.

படி 8 • செயற்பாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களையும் தனிப்பட்டவர்களையும் சித்திரமாக வரையுங்கள். சித்திரத்தை மதிப்பீட்டுக்கு உட்படுத்துங்கள்.

**08. மாணவர்களில் துண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- எந்நேரமும் பல்வேறு நிர்மாண வேலைகளைச் செய்வதற்குப் பிள்ளைகளை ஊக்கமளியுங்கள்.
- குறைந்த உற்சாகத்தைக் காட்டும் பிள்ளைகள் இருப்பின் அவர்களுக்கு உற்சாகத்தோடு வேலை செய்பவர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுங்கள்.
- பிள்ளைகள் காட்டும் பல்வேறு அசைவுகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்துங்கள்.
- கை தட்டுதல் மூலம் சந்தோசத்தை வெளிப்படுத்துவதற்கு உற்சாகமூட்டுங்கள்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- உணவு வகைகளின் பெயர்கள், முழங்கால், நீரோடை
- ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு........
- பாரம், மரியாதை செய்தல்

**10. வேறு விடயங்கள்**

- பிள்ளைகளினுடைய சித்திரங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்தி வையுங்கள்.
- பின்னர் இச்சித்திரங்களைச் சேகரித்து ஒவ்வொரு பிள்ளைகளுக்காகவும் சுயவிபரக் கோவை ஒன்று தயாரியுங்கள். அவர்களுடைய திறன் விருத்தியை இனங்காண்பதற்கு இது மிகவும் உதவியாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.2

## சின்னஞ்சிறிய நாம், பல்நிறப் பூக்குவியல் மாதிரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : உடல் சார் தேர்ச்சிகள் விருத்தி

02. தலைப்பு : சின்னஞ்சிறிய நாம் பல்நிறப் பூக்குவியல் மாதிரி

03. பிரதான இலக்கு : உடல் உஷ்ணமாகும் விதத்தில் செயற்பாட்டில் ஈடுபடுத்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- நிறங்கள் பலவற்றை இனங்காண்பர்.

திறன்கள் :
- கடதாசி வெட்டுவதற்கும் ஒட்டுவதற்கும் பயிற்சி பெறுவர்.
- ஓடுதல், இருத்தல், குனிதல் போன்ற செயற்பாடுகளைப் பழகுவர்.
- தாளமிடப் பழகுவர்.
- பாட்டுப் பாடும் திறனை விருத்தி செய்து கொள்வர்.

பண்புகள் :
- கட்டளைகட்கு அடிபணிய விரும்புவர்.
- தனிப்பட்டவர்களுடன் தொடர்புகளை வைத்திருக்க விரும்புவர்.
- வெற்றி தோல்விகளை ஏற்றுக் கொள்வதற்குப் பழகுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- அடுத்த தினத்தின் செயற்பாடு பற்றி அறிமுகம் செய்து பிள்ளைகளுடன் ஒன்று சேர்ந்து அவசியமான பிரதான பொருட்களைத் தயார் படுத்துங்கள்.

- பல்வேறு நிறங்களையும் வடிவங்களையும் கொண்டு தயாரித்த அட்டைகளை ஒவ்வொரு பிள்ளைக்கு ஒவ்வொன்று வீதம் தயாரித்துக் கொள்க. சிவப்பு, மஞ்சள், நீலம், பச்சை, ஊதா போன்ற நிறங்களைக் கொண்ட சிறிய கொடிகள் இதற்குத் தகுந்தவையாகும்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1
- பிள்ளைகள் வட்டமொன்றில் உள்ளே திரும்பி இருப்பர். ஐந்து நிறங்களில் தயாரித்த கொடிகளுடன் சிவப்பு, மஞ்சள், நீலம், பச்சை, ஊதா ........ மேலே கூறியுள்ள விதத்தில் முறையாக வட்டத்தில் இருக்கவைக்க வேண்டும்.

படி 2
- ஆசிரியர் ஏதாவது வர்ணக் கொடியொன்றைக் காட்டியவுடன் அவ் வர்ணத்துக்குரிய பிள்ளை இடது பக்கத்துக்கு வட்டத்தில் ஓடிச்சென்று தான் இருந்த இடத்துக்கு வந்து இருத்தல் வேண்டும். அவ்வாறு இருப்பவர்களுக்கு மற்றவர்கள் கைதட்டி பாராட்டுத் தெரிவிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 3 • எல்லாப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பத்தை வழங்கும் விதத்தில் ஆசிரியர் ஒரு முறைக்கு ஒன்று வீதம் பலமுறை கொடியைக் காட்ட வேண்டும்.

படி 4 • ஒரு முறைக்கு இரு கொடிகள் வீதம் காட்டி அதன்படி பிள்ளைகளுக்கு செயற்பட இடமளியுங்கள்.

படி 5 • எல்லோரும் சேர்ந்து வட்டமாக இருந்து கைதட்டிப் பாடலைப் படியுங்கள்.

சிவப்பு, நீலம், மஞ்சள், பச்சை அழகு மிக்கவை
வண்ண வண்ண நிறங்கள் சேர்ந்தால் அழகு கூடுமே
சின்னஞ் சிறிய நாமும் வண்ணப்பூக்கள் போலவே
சிறுவர் உலகில் ஒன்று சேர்ந்தால் உலகே அழகு தான்

படி 6 • கொடிகளை அசைத்தவாறு, தாளத்துடன் பாடலைப் பாடிக்கொண்டு, வட்டமாகச் செல்ல வழி செய்க.

08. மாணவர்களில் துண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- வட்டத்தைப் பூரணப்படுத்திய பிள்ளைக்கு கைதட்டி மகிழ்ச்சி தெரிவித்தல்.
- ஓடுதல், பாய்தல் போன்ற சந்தர்ப்பங்களுக்கு ஆளாகின்ற பிள்ளைகளுக்கு உதவி செய்யத் தூண்டுதல். அனுதாபங் காட்டச் செய்தல். (Empathy)
- உற்சாகம் குறைந்த பிள்ளைகளை ஊக்குவித்தல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம், ஊதா
- ஒற்றுமை, வனப்பு

10. வேறு விடயங்கள்

- செயற்படாதுள்ள பிள்ளைகளுக்குத் தனிப்பட்ட முறையில் உதவுதல்.
- முன்னால் ஓடும் பிள்ளையைத் துரத்திச் செல்லும் பிள்ளை தொட்டவுடன் அனைவரும் கைதட்டி அவ்விருவரையும் பாராட்டுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5.3

# நாம் எல்லோரும் புரண்டு புரண்டு நடனமாடுவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : உடல் சார் தேர்ச்சிகள் விருத்தி

02. **தலைப்பு** : நாம் எல்லோரும் புரண்டு புரண்டு நடனமாடுவோம்.

03. **பிரதான இலக்கு** : தனது உடலைப் பயன்படுத்தி செயற்பாடொன்றில் ஈடுபடும் திறனைப் பெற்றுக் கொடுத்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- கருது கோள்களைக் கட்டியெழுப்புவர்.

**திறன்கள்** :
- புரளும் திறனை விருத்தி செய்து கொள்வர்.
- தாளம் போடவும் பாடல் பாடவும் ஆற்றலைவிருத்தி செய்து கொள்வர்.

**பண்புகள்** :
- சுதந்திரமான செயற்பாடுகளை வரவேற்பர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- அடுத்த நாள் செயற்பாடொன்றிருப்பதை பிள்ளைகளுக்குக் கூறுங்கள். அடுத்த நாளைக்கு வரும்போது நிலத்தில் விரிப்பதற்குப் பாய், மெழுகுப்புடவை, கட்டில் விரிப்பு, இறப்பர் மெத்தை போன்றவற்றைக் கொண்டுவரும்படி ஆலோசனை கூறுங்கள்.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி 1**
- மரக் கட்டையைக் கண்டிருக்கிறீர்களா என மாணவர்களிடம் விசாரியுங்கள்.
- மரக்கட்டை ஒன்றை யாருக்குப் புரட்ட முடியும்? எனப் பிரச்சினையொன்றை முன்வையுங்கள்.

**படி 2**
- பிள்ளைகளுக்குப் பாய், மெத்தை, விரிப்பு போன்றவற்றை விரித்து அதன்மேல் புரளுவதற்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுங்கள்.
- பிள்ளைகளினுடைய பாதுகாப்பு சம்பந்தமாக அவதானஞ் செலுத்துங்கள்
- எல்லாப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பத்தை வழங்கி சுயாதீனமாகச் செயற்பட உதவுங்கள்.

**படி 3**
- வட்டமாக இருந்து பாடலைப் படியுங்கள். கை தட்டிப் பாடலுக்கு மெருகூட்டுங்கள்.

கடல் அலை புரண்டு புரண்டு கரைக்கு வருகுது
கரையிலிருந்து புரண்டு புரண்டு மீண்டும் போகுது
சின்னஞ் சிறிய நாமும் புரண்டு நடனமாடுவோம்
நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து பாட்டு பாடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 4 • மீண்டும் புரளும் செயற்பாட்டை செய்வியுங்கள். பாடலைப் பாடுங்கள். இவ்வாறு பல முறை செய்யுங்கள்.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- உதவி தேவைப்படும் என எண்ணும் மாணவர்களுக்கு புரளுவதற்கு உதவுங்கள்.
- இச்சந்தர்ப்பத்தில் மற்றவர்களுக்கு உதவும் நற்பழக்கத்தை ஏற்படுத்த பிள்ளைகளை ஈடுபடுத்த முடியும்.
- தேவையான சந்தர்ப்பங்களில் கணிப்பீடு செய்வதன்மூலம் பிள்ளைகளை உற்சாகப்படுத்துங்கள்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- மரக்கட்டை, கடல், கரை
- புரட்டுதல், கடல் அலை

10. வேறு விடயங்கள்

- ஆசிரியரின் விருப்பப்படி பாடல் அடிகளைப் புதிதாகச் சேர்க்க
- கடல் அலை, பெருங்கடல், தரைநிலம் போன்ற மனப்பாங்குகளை உண்டுபண்ணும் விதத்தில் ஆசிரியர் கரும்பலகையில் பல்வேறு நிறங்களைப் பாவித்து சித்திரம் ஒன்றை வரைவது பொருத்தமாகும்.
- அச்சித்திரத்தை பிள்ளைகள் வரைவது மிகப் பொருத்தமாகும். பெஸ்டல் போன்றவைகளைப் பாவித்து வரைவதற்குப் பயிற்சியளியுங்கள்.
- ஒவ்வொரு பிள்ளையினுடைய சித்திரத்தையும் காட்சிப்படுத்தி மதிப்பளியுங்கள்.
- அச்சித்திரங்களைப் பிள்ளைகளுடைய கோவைகளில் சேகரியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5.4

## காக் காக் காகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : உடல் சார் தேர்ச்சிகள் விருத்தி.

02. **தலைப்பு** : காக் காக் காகம்.

03. **பிரதான இலக்கு** : கை கால்கள் போன்ற உடல் அவயவங்களை இயக்கும் திறனை விருத்தி செய்தல்

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- கருத்துப் பரிமாறும் ஆற்றலை வளர்துக் கொள்வர்.
- தெரிவு தொடர்பான ஆற்றலை வளர்த்துக் கொள்வர்.

**திறன்கள்** :
- பாடும் திறனை வளர்த்துக் கொள்வர்.
- பேச்சாற்றலை வளர்த்துக் கொள்வர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது வெளியொன்றில் செயற்படுத்த முடியுமான ஒரு குழு செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- வேறு பறவைகளின் படங்களையும் காகங்களின் படங்களையும் பெற்றுக் கொள்ளல். (பிள்ளைகளுக்கு இனங்காணக்கூடிய தெளிவான படங்களாக இருத்தல் வேண்டும்.)

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள் :**

**படி 1**
- பிள்ளைகளோடு வெளியில் சென்ற ஆசிரியர் மறைந்திருந்து காகத்தைப் போல் கரைதல்.
- அந்தச் சத்தம் என்ன என்பது பற்றி பிள்ளைகளிடம் விசாரித்தல்.
- பிள்ளைகளுடன் காகம் சம்பந்தமான கேள்விகளைக் கேட்டு சுமுகமாகக் கதைத்தல்.

  நீங்கள் காகத்தைக் கண்டிருக்கிறீர்களா?
  காகம் என்ன நிறம்?
  காகத்துக்குக் கால்கள் எத்தனை?
  காகம் என்ன உண்ணும்?

**படி 2**
- பிள்ளைகளை வெளியொன்றுக்கு அழைத்துச் சென்று,

  உங்களுக்கு காகத்தைப் போல் நடக்கத் தெரியுமா?
  அவ்வாறாயின் வட்டமாக அழகாக நில்லுங்கள்.
  பிள்ளைகளை வட்டமாக நிறுத்தி காகத்தைப் போல் இறகுகளை அடித்து வட்டத்தைச் சுற்றிச் செல்ல பயிற்சி அளியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 3 • பின்வரும் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்தல்.

காகம் பசியால் இரைதேடிக் கொண்டு வேகமாகப் பறத்தல்.
காகத்துக்கு இரை ஒன்று கிடைக்கின்றது .
காகம் தனது நண்பர்களை அழைக்கிறது.
எல்லோரும் சேர்ந்து உணவு உண்கிறன.
சாப்பிட்ட பின் மீண்டும் பறக்கின்றன.

படி 4 • காகம் பற்றிப் பாடலொன்றைப் பாடுதல்.

காகம் கறுப்பு நிறமாகும் - அதன்
மேனி முழுதும் கறுப்பாகும்.
தினமும் காலை எழும்பிடுமாம்.
காக் காக் என்று கரைந்திடுமாம்.

- பிள்ளைகளுக்கு அதனைச் செவிமடுப்பதற்கு இடமளியுங்கள்.
- மீண்டும் பிள்ளைகளோடு பாடலைப் பாடுதல்.
- பிள்ளைகளுக்குத் தனித்தனியாகப் பாடுவதற்குச் சந்தர்ப்பம் அளித்தல்.
- பாடலைப் பாடுவதுடன் காகத்தைப் போல வட்டத்தைச் சுற்றிச் செல்லுதல்.

படி 5 • பிள்ளைகளுக்குக் காகத்தைப் பற்றிக் கதையொன்றைச் சொல்லிக் கொடுத்தல். (காகமும் உணவுப் பண்டமும் போன்ற)

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- செயற்பாடுகளை மதித்து மீண்டும் மீண்டும் செய்வியுங்கள்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- எந்நாளும், காலையில், முழுதும்
- காலையில் எழும்புதல்
- கறுப்புக் காகம்.

10. வேறு விடயங்கள்

- பிள்ளைகளைப் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து செயற்பாடுகளில் ஈடுபடச் செய்தல்.
- எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு குழுவாகச் செயற்படுவதில் ஈடுபடுத்தல்.
- கவிதையை,, பாடலைப் பாடிக் கொண்டு வட்டமாகச் சென்று மகிழ்ச்சியடைவதற்குச் சந்தர்ப்பம் அளித்தல் இவை போன்ற பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பம் அளிப்பதுடன் இதனை மகிழ்ச்சிகரமான இன்ப அனுபவமாக மாற்றிக் கொள்வது சிறந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.5

## எங்கள் அம்மாவுக்கு உதவி செய்வோம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : உடல் சார் தேர்ச்சிகள் விருத்தி

02. தலைப்பு : எங்கள் அம்மாவுக்கு உதவி செய்வோம்.

03. பிரதான இலக்கு : கை, கால் போன்ற உடல் அவயவங்களைச் செயற்படுத்தும் திறன்களை விருத்தி செய்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- உடலில் அசைக்கக் கூடிய அவயவங்களை இனங்காண்பர்.

திறன்கள் :
- இசைக் கேற்ப இரு கைகள், இரு பாதங்கள், உடல் போன்றவவைகளை அசைக்கும் திறனை விருத்தி செய்து கொள்வர்.

பண்புகள் :
- குழுவாகச் செயற்படுவதன் மூலம் சந்தோசத்தைப் பெற்றுக் கொள்வர்.

05. செயற்பாட்டின் தன்மை : எல்லாப் பிள்ளைகளும் ஒன்றாகச் சேர்ந்து குழுவாகச் செயற்பாட்டில் ஈடுபடுதல்.

06. முன் ஆயத்தம்:
- அடுத்த நாளைக்குரிய செயற்பாடு பற்றி பிள்ளைகளுக்கு அறிவுறுத்தல்.
- நன்றாகச் சுத்தம் செய்யப்பட்ட ஓட்டையுள்ள சிரட்டைகள் இரண்டு.
- ஓரளவு தடிப்பான நீளமான நூல் அல்லது புடவைப்பட்டி ஒன்றை வீட்டிலேயே தயார் செய்து கொண்டுவருமாறு பிள்ளைகளுக்கு ஆலோசனை வழங்குதல்.
- கை மணி ஒன்று அல்லது அது போன்றதொரு தாள வாத்தியக் கருவி ஒன்றை ஆசிரியர் பெற்றுக் கொள்ளல்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- பிள்ளைகளை திறந்தவெளி ஒன்றுக்கு அழைத்துச் செல்லுங்கள். வட்டமாக நிற்பதற்கு ஆலோசனை வழங்குங்கள். தயாரித்துக் கொண்டு வந்த சிரட்டைகள் இரண்டிலும் நூலை இட்டு முடிச்சுப் போட்டு தாளவாத்திய இசைக் கருவி ஒன்றைத் தயார் செய்ய உதவுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆசிரியர் பின்வரும் பாடலை இசையோடு பாடுதல்.

பாடல்:- தேங்காய் பறித்து தேங்காய் பறித்து தேங்காய் உடைத்து
தேங்காய் துருவி தேங்காய் துருவி தேங்காய் பிழிந்து
பால் எடுத்து பால் எடுத்துக் கறிகள் சமைப்போம்.
கறி சமைத்து கறி சமைத்து உணவை உண்போம்.

- வீட்டிலே தாய்க்கு உதவும் மாணவர்கள் பற்றி விசாரித்தல். தாய்க்குச் செய்ய வேண்டிய, முடியுமான சிறிய வேலைகள் பற்றிக் கலந்துரையாடல். பாடலில் குறிப்பிட்டுள்ளபடி தாய்க்குத் தேங்காய் துருவிக் கொடுக்கும் பிள்ளைகள் வீட்டைக் கூட்டிச் சுத்தம் செய்யும் பிள்ளைகள் பற்றி விசாரித்து அறிதல்.

படி 2
- மீண்டும் பாடலை ஆசிரியர் பாடும்போது தயார் செய்துள்ள சிரட்டை இரண்டையும் அடித்துத் தாளம் இடுவதற்கு ஆலோசனை வழங்குதல்.

படி 3
- ஆசிரியை பாடல் அடிகளைப் பிள்ளைகளுடன் பாடுதல். கழுத்தில் போட்டுக் கொண்ட சிரட்டை மாலையால் தாளம் போட்டு பிள்ளைகளுக்குப் பாடுவதற்கு ஆலோசனை வழங்குதல்.

படி 4
- உடலில் இரு கைகள், இரு பாதங்கள், இடுப்பு, கைவிரல்கள் போன்ற வற்றிற்குப் பயிற்சி கிடைக்கும் விதத்தில் பாடலுக்கு ஏற்ப அசைதலுக்கு பிள்ளைகளுக்கு சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுத்தல்.

| | | |
|---|---|---|
| தேங்காய் பறித்தல் | - | இரு கைகளையும் உயர்த்தி அசைத்தல். |
| தேங்காய் உடைத்தல். | - | இரு கைகளையும் உயர்த்தி அசைத்தல் |
| தேங்காய் துருவுதல். | - | இரு கைகளையும் அசைத்தல். |
| தேங்காய் பிழிதல். | - | கைவிரல்களுக்குப் பயிற்சி. |
| அகப்பையால் கடைந்து பால் கறி செய்தல். | - | இடுப்பை வளைத்துப் பயிற்சியில் ஈடுபடல். |

- இவ்வசைவுகளை வேகமாக மெதுவாகப் பிள்ளைகள் மூலம் செய்வித்தல்.
- தாளத்துக்கேற்ப அவற்றைச் செய்வதற்கு அறிவுறுத்தல்.
- உடலில் செயற்பாடுகள் நன்றாக நடை பெறும் விதத்தில் தாளம் போடும் கருவிக்கு அல்லது அது போன்ற கருவிக்கு ஏற்ப தாளம் போட்டு பாடுவதிலும் அங்க அசைவுகளிலும் ஈடுபடல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- முன்னர் கொடுத்த ஆலோசனையின்படி தேவையான பொருட்களை எடுத்து வந்த பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- அசைவுகள் ஏற்படும் விதத்தில் தாளமிட்டு பாடலைப் பாடுதல்.
- மாணவர்களோடு ஆசிரியையும் பாடலுக்கு அசைவுகளில் ஈடுபடல்.
- உடல் உஷ்ணமாகும் விதத்தில் இச்செயற்பாட்டை மகிழ்ச்சிகரமாக முன்வைத்தல்.
- செயற்பாட்டில் ஈடுபடும் எல்லாப் பிள்ளைகளையும் மதிப்பீட்டுக்கு இலக்காக்குதல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- உடைத்து , செய்து, துருவி, பிழிதல், கறி, உணவு
- பயிற்சியின் மூலம் தேகாரோக்கியத்தைப் பெறலாம் என்பது

10. வேறு விடயங்கள்

- ஆசிரியரின் விருப்பப்படி அசைவுகளை ஒழுங்கு செய்து கொள்வது பொருத்தமாகும்.
- கவிதையில் அடியை மாற்றுதல், புதிதாகச் சேர்த்தல், பல்வேறு தாளங்களுக்கு இசைத்தல் போன்ற செயற்பாடுளைச் செய்து பார்த்தல்.
- பிள்ளைகளிடம் தூண்டலை ஏற்படுத்தும் விதத்திலும் உங்களுக்கு கிடைக்கும் இடவசதிக்கு ஏற்றவாறும் பல்வேறு விதங்களில் பிள்ளைகளை வரிசைப்படுத்தி வட்டமாக அனுப்பி, செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5.6

# சின்னஞ் சிறிய செல்லப்பிராணிகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : உடல் சார் தேர்ச்சிகள் விருத்தி

02. தலைப்பு : சின்னஞ் சிறிய செல்லப்பிராணிகள்.

03. பிரதான இலக்கு : உடலின் அவயவங்களை இயக்குவதற்குப் பயிற்சி வழங்குதல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- பல்வேறு உயிரினங்களின் நடக்கும் முறைகள் வெவ்வேறு என்பதை இனங்காண்பர்.

திறன்கள் :
- ஓடுதல் பாய்தல் போன்ற திறன்களை விருத்தி செய்து கொள்வர்.
- பாடும் திறனை விருத்தி செய்து கொள்வர்.
- சித்திரம் ஒன்றை வரையவும் நிறம் தீட்டவும் திறன்களை விருத்தி செய்து கொள்வர்.

பண்புகள் :
- வெற்றி தோல்விகளை ஏற்றுக் கொள்ளும் ஆற்றலை விருத்தி செய்து கொள்வர்.
- குழுவோடு ஒத்துழைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பழகுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழுச் செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம்:
- ஆசிரியர் முயல், நெற்குருவி, தாரா போன்ற உருவங்களை வரைந்து கொள்ளுதல்.
- அவை போன்ற உருவங்கள் வரைவதற்குப் பயன்படுத்த முடியுமான சட்டகங்கள் சிலவற்றை தடித்த கடதாசியால் செய்து கொள்ளுதல்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- போட்டி நடத்துவதற்கு விருப்பத்தை வினவுதல். பிள்ளைகளை குழுக்களாகப் பிரித்தல்.

  முயல் - அல்லிக் குழு.
  குருவி - நீலோற்பலக் குழு
  தாரா - தாமரைக் குழு

படி 2
- அல்லிக் குழுவுக்கு முயற் பாய்ச்சலைப் பயிற்றுவித்தல்.

- பிள்ளைகளை வரிசையாக அடையாளத்தில் நிறுத்தி, ஊதுகுழலை ஊதியவுடன் முயல் போல் பாய்ந்து வெற்றிக் கம்பத்துக்குச் செல்ல வழிகாட்டல்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முயலுக்குப் பாய்வதற்கு நாம் தாளத்துக்கு ஏற்ப பாடலொன்றைப் பாடுவோமா?

  வெண்மையான முயல்கள் - காதுகளை ஆட்டியே
  செல்லமான முயல்கள் - பாய்ந்து செல்லும் முயல்கள்

  முதலில் பாடலொன்றைப் பாடச் செய்தல்.

- இதோ முதலாமவர், இரண்டாமவர், மூன்றாமவர், நான்காமவர் என குழுவிலுள்ள பிள்ளைகளை இனங்காணுதல்.

- செயற்பாட்டை பல முறை செய்தல். எல்லோருக்கும் மிக வேகமாக முயற்பாய்ச்சல் பாய்ந்து செல்வதற்குப் பயிற்சி அளித்தல்.

- எல்லோருக்கும் பாராட்டு வழங்குதல்.

படி 3

- நீலோற்பலக் குழுவுக்கு பறவைப் பாய்ச்சல் பயிற்சி அளித்தல். (கைகள் இரண்டையும் நாடியின் அருகில் வைத்து கால்களை நெருக்கமாக்கி வைத்து இருபக்கத்துக்கும் பாய்தல்) பறவைகள் பாய்வதற்கு சிறிய பாடலொன்றைப் பாடுவோமா?

  குருவிக் கூட்டம் கூட்டமாய்ப் பாய்ந்து பாய்ந்து வருகுது
  ஐயோ அவற்றைப் பிடிக்க எமக்கு ஆசையாக இருக்குது.

- முதலாமவர், இரண்டாமவர் , மூன்றாமவர் என.......

- பாராட்டுதல்.

படி 4

- தாமரைக் குழுவுக்குத் தாரா நடையைப் பயிற்சி அளித்தல். முன்னர் போலவே தாரா நடையைப் பயிற்சி அளித்தல். பாடல் பாடுதல்.

  இதோ இதோ தாராக்குஞ்சு - அழகு மிக்க தாராக்குஞ்சு
  மெல்ல மெல்ல மெல்ல மெல்ல பயணம் செல்லுதே....
  முதலாமவர், இரண்டாமவர், மூன்றாமவர் .....

- எல்லாப் பிள்ளைகளும் சேர்ந்து முயற் பாய்ச்சல் பாய்தல் - பாடல்

  பறவைப் பாய்ச்சல் - பாடல்
  தாரா நடை - பாடல்

- இக்குழுக்களுக்காக ஆசிரியரின் விருப்பப்படி வேறு சிறு பாடல்களையும் தயாரித்துக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 5
- விளையாட்டுக்குப் பொருத்தமான சித்திரங்களை வரைவதில் ஈடுபடுத்தல். வரைந்து வெட்டித் தயாரித்துக் கொண்ட சட்டகங்களுடன் உருவங்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- அவ்வுருவங்களை நிறம் தீட்டச் செய்தல்.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:
- முன்வந்தவர்களைக் கைதட்டி உற்சாகப்படுத்தல்
- பாடும் திறனைப் போற்றுதல்.
- விளையாட்டில் திறமையாக ஈடுபட்டவர்களுக்கு மதிப்பளித்தல்.
- குறைந்த வேகத்தில் பயிற்சி பெறுபவர்களுக்கு மேலும் ஊக்கம் அளித்தல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:
- முதலாமவர், இரண்டாமவர், மூன்றாமவர், நான்காமவர், ஐந்தாமவர், முயற்பாய்ச்சல் , பறவைப் பாய்ச்சல், ,தாரா நடை

10. வேறு விடயங்கள்
- ஒரு குழு செயற்பாட்டில் ஈடுபடும் போது மற்றைய குழுக்களுக்கு அதனைப் பார்வையிடுவதற்கும் கை தட்டுவதற்கும் நெறிப்படுத்துங்கள்.
- குழுக்கள் வேறு வேறாகச் செயற்பட்டு முடிந்தவுடன் எல்லோருக்கும் தமது விருப்பப்படி பாயவும் நடக்கவும் பயிற்சி பெறத் தூண்டுதல்..
- பிள்ளைகள் எல்லோருக்கும் முயல்கள், பறவைகள், தாராக்கள் எனச் சென்று விளையாடுவதற்கு இடமளித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5.7

# நாம் மீன் பிடிப்போம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : உடல் சார் தேர்ச்சிகள் விருத்தி

02. தலைப்பு : நாம் மீன் பிடிப்போம்.

03. பிரதான இலக்கு : இரு பாதங்களையும் இரு கைகளையும் பாவித்து செயற்படுவதற்குப் பயிற்சியளித்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- கடல் பற்றிய எண்ணக்கருவை விருத்தி செய்து கொள்வர்.
- தெரிவு பற்றிய எண்ணக்கருவைக் கிரகித்துக் கொள்வர்.
- இரு கைகள், இரு பாதங்களின் வளர்ச்சிக்கு வழியமைத்துக் கொள்வர்.

திறன்கள் :
- பாடல் பாடும் திறனை வளர்த்துக் கொள்வர்.
- உருவங்களை வெட்டவும் நிறம் தீட்டவும் தேவையான திறனை வளர்த்துக் கொள்வர்.

பண்புகள் :
- ஒன்றிணைந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான பயிற்சியைப் பெற்றுக் கொள்வர்.
- அன்பு, கருணை காட்டுவதற்குப் பழகுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழுச் செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- செயற்பாட்டுக்குப் பொருத்தமான விதத்திலான மீன்காவு தடி ஒன்றும் கடதாசியால் செய்யப்பட்ட சில படங்களையும் நேர காலத்துடன் தயார் செய்து கொள்ள வேண்டும்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- மீன் மாமா போல் நடித்து மீன் கொண்டுவரும் போது ஆசிரியர் பின்வரும் பாடலைப் பாடுதல்.

இவை கடல் மீன்கள் - சுவை மிக்க மீன்கள்.
வாங்குவீரா நண்பரே? - புதிய நல்ல மீன்கள்

படி 2
- யார் இது ............ மீன் மாமா மாணவர்களுடன் கலந்துரையாடல் ஒன்றைச் செய்தல்.
- மீன் சாப்பிடுவீர்களா? மீன் எங்கே இருக்கிறது?
- கடலில், ஆற்றில், குளத்தில். ........ எங்கள் வீட்டிலும் இருக்கின்றது நாம் சாப்பாட்டுக்கு எடுப்பது கடல், ஆறு, குளம் என்பவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளும் மீன்களை, வீட்டில் செல்லப் பிராணிகளாக வளர்க்கிறோம்.
- கடலில் மீன் பிடிக்கும் முறைகள் பற்றிக் கலந்துரையாடல். ஒவ்வொரு மீனாகப் பிடிக்க முடியாது. எனவே வலையால் பிடிப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 3
- மீன் மாமாவுக்கு மீன் பிடிக்க உதவி செய்வோம்.
- இதோ இந்த இடத்தில் கடல். ....... நிறைய நீர்.......... அலைகள் மிக வேகம்.........

  அதோ கடல் அலை வருகின்றது. அவசரமாக ஓடுவோம். அதோ அந்த அலையில் மகனும் மகளும் விழுந்து விட்டார்கள். தூக்குவோம். உதவி செய்வோம். கடல் அருகில் சிறுவர்களின் எண்ணக் கருக்களைப் பிறக்கச் செய்யும் விதத்திலான கருத்துக்களைக் கூறுதல். நாம் சிறிய பாடலொன்றைப் பாடுவோம்.

  கடல் மிகப் பெரியது - நீர் நிறைய உள்ளது.
  கடல் அலை புரண்டு வந்து - மீண்டும் செல்லுது.

  (பாடலைப் பாடலும் அதற்கேற்ற விதத்தில் அங்க அசைவுகளைச் செய்தலும்.)

படி 4
- மீன் பிடிப்பதற்காக வலை விரிப்பதாகச் சொல்லி செயற்பாட்டில் ஈடுபடல். வலையில் மீன்கள் அகப்பட்டு மிகவும் பாரமாய் உள்ளது. தனிமையில் இழுக்க முடியாது. கரையை நோக்கி இழுக்கும் விதத்தை நடித்துக் காட்டுதல்.
- பாடலுடன் வலை இழுத்தல்.

  ஏலேலோ ஏலேலோ ஏலேலோ
  வலை இழுப்போம் வாரீர் ஏலேலோ
  மீன் கிடைக்கும் வாரீர் ஏலேலோ
  மிக மகிழ்ச்சி வாரீர் ஏலேலோ

படி 5
- மீன் கிடைத்தபோது இருக்கும் மகிழ்ச்சி (சத்தம் இடல், உயரப்பாய்தல்)
- குழுக்களின் களைப்பைப் போக்க பாய்மீது இருப்போம்.
- வலை விரித்துப் பெற்றுக் கொண்ட மீன்களாக வரைந்து வெட்டிய மீன்களின் படங்களை மாணவர் மத்தியில் பாயில் இடுதல். இது தான் நீங்கள் கஸ்டப்பட்டுப் பிடித்த மீன்கள். இப்போது மீன் மாமாவுக்கு இந்த மீன்களை இப்படி விற்க முடியாததால் நாங்கள் எல்லோரும் சேர்ந்து மீன்களை தெரிவு செய்து கொடுப்போமா? ஒவ்வொரு மாணவருக்கும் ஒவ்வொரு மீனை எடுப்பதற்கு அறிவுறுத்தல்.
- குழுக்கள் இரண்டிலிருந்தும் ஓர் ஊது குழல் இசைக்கும் போது இருவர் வந்து பொருத்தமான கூடையில் மீனை இட்டுச் செல்வதற்கு அறிவுறுத்தல். (பெரியதும் சிறியதுமாக வரைந்திருக்கும் மீன் கூடைகள் இரண்டு.)
- எல்லா மாணவர்களையும் ஈடுபடுத்துதல்.
- இவ்விடத்தில் சிறிய மீன், இதில் பெரிய மீன் என கூடையை நிரப்புதலை மேற்பார்வை செய்தல். தெரிதல் பற்றிய எண்ணக்கருவை விளக்கல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 6 • தெரிவு செய்த மீன்களை விற்க எடுத்துச் செல்லல்.

மீன் மீன் மீன் - வாங்குவோர்கள் யாரோ?
இரால் பாரை மீன்கள் - வாங்குவீரா தோழா
நல்ல மலிவு மீன்கள் - வாங்குவீரே தோழா

பல தடவை பாடலைப்பாடி நடித்தல்.

படி 7 • மீன் மாமாவுக்கு களைப்பு எனக் காட்டி, மீண்டும் பிள்ளைகளை உட்கார வைத்து இது வரை செய்தவற்றை மதிப்பிடல். மீன்மாமாவிடம் அன்பும் கருணையும் காட்டுவதுபோல் கருத்துக்களைக் கூறுதல்.

கடலைப்பற்றிக் கூறினோம் - விளையாடினோம்
வலையை இழுத்தோம் - மீன் பிடித்தோம்
மீனைத் தெரிவு செய்தோம் - மீன் விற்றோம் - பாட்டுப் பாடினோம்

- நடிப்புகளை, விளையாட்டுக்களை சிறப்பாகச் செய்ததாகப் பாராட்டுதல்.
- மீன் தட்டொன்றை வெட்டி ஒட்டுவதில் ஈடுபடுத்தல்.
- பல்வேறு நீள்வட்ட வடிவங்களைப் பகிர்ந்தளித்து, நிறக்கடதாசியின்மீது வைத்து வரைந்து, அதைச் சுற்றிக் கத்தரிக்கோலால் வெட்டுவதில் ஈடுபடுத்தல். ஒரு பக்கத்தால் ஓரளவு கூடுதலாக வெட்டி, அதை ஒன்றன்மேல் ஒன்று இருக்குமாறு ஒட்டி, மீனை அமைத்தல். (இதனைப் பல்வேறு அளவுகளில் செய்யமுடியும்.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- முன்வரும் பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- நடிப்பில் ஈடுபட்ட பிள்ளைகளைக் கைதட்டி உற்சாகப்படுத்தல்.
- மீனைச் சுற்றி சரியாக வெட்டியுள்ள பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- மீன் தட்டைத் தயாரித்த பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- இயலாதவர்களுக்கு உதவுதல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- மீன், கடல், ஆறு, அலை, புரண்டு, வலை
- கடல், வலை இழுத்தல், அலைத்தாக்கம்

10. வேறு விடயங்கள்:

- ஆசிரியரின் விருப்பப்படி செயற்பாட்டை மறுசீரமைத்துக்கொள்ளல் பொருத்தமானது.
- பாடல்களின் அடிகளையும் தாளத்தையும் மாற்றிக் கொள்வது உகந்தது.
- வலை இழுத்தல், காவு தடி எடுத்துச் செல்லல், படங்கள் வரைதல், நிறந்தீட்டுதல், போன்ற செயற்பாடுகளுக்கு முன் ஆயத்தத்துடன் வகுப்பறைக்குச் செல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5.8

# கைக்குக் கை மாற்றுவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : உடல் சார் திறன்கள் விருத்தி

02. தலைப்பு : கைக்குக் கை மாற்றுவோம்.

03. பிரதான இலக்கு : இரு கைத் தசைகளின் இயக்கத்திறனை விருத்தி செய்தல்.

04. விருத்திசெய்ய எதிர்பார்க்கப்படும்

ஆற்றல்கள் : ஏதாவது காரியத்தில் விசேட கவனத்தை செலுத்துவதற்கு ஆற்றல் பெறுவர்.

திறன்கள் : விரல்களை அசைப்பதன் மூலம் இரு கைகளாலும் வேலை செய்வதற்குப் பயிற்சி பெறுவர்.

பண்புகள் : கூட்டாகச் சேர்ந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குப் பயிற்சி பெறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :

- சிறிய டெனிஸ் பந்து ஒன்று
- வித்துக்கள் கொண்ட உறை ஒன்று
- பாரம் குறைந்த ஓரளவு தடிப்புள்ள தடி ஒன்று.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- மாணவர்கள் அனைவரையும் வட்டமாக இருக்கச் செய்தல்

படி 2
- மேற்கூறிய ஒரு பொருளைக் கைக்குக் கை மாற்றுமாறு செய்தல்.
- இரண்டாவது பொருளையும் அதே மாதிரி கைக்கு கை மாற்றுமாறு செய்தல்.
- மூன்றாவது பொருளையும் கைக்குக் கை மாற்றி அனுப்புதல்.

படி 3
- இரு பொருட்கள் ஒரு மாணவனின் கைக்கு சேரும் போது போட்டியை நிறுத்தி பாடல் ஒன்றைப் பாடுதல். வட்டமாக நடத்தல் போன்ற ஏதாவது ஒரு காரியத்தில் ஈடுபடுத்த வேண்டும். மற்றைய பிள்ளைகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுத்தல். பின்னர் மீண்டும் போட்டியை ஆரம்பித்தல் வேண்டும். இதனைப் பிள்ளைகள் களைப்பாகும் வரையில் செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. **மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- ஆரம்பத்திலேயே செயற்பாட்டைக் கிரகிப்பதற்கு முடியாத மாணவர்களுக்கு பல முறை மாதிரிச் செய்கைகள் செய்து காட்டித் தூண்டுதல்.
- தேவையான சந்தர்ப்பங்களில் பாராட்டுதல்.
- மற்றைய பிள்ளைகளினுடைய கைதட்டல் மூலம் தைரியப்படுத்துதல்.

09. **கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- டெனிஸ், வித்து , உறை, துண்டு.
- டெனிஸ் பந்து, வித்து உறை, இலேசான

10. **வேறுவிடயங்கள்:**

- ஆசிரியருக்குத் தேவையான விதத்தில் இப்பொருட்களை மாற்றிக் கொள்ள முடியும்.
- பொருட்களை மூன்று அல்லது நான்கு ஆக ஆக்கிக் கொள்ள முடியும்.
- செயற்பாட்டின் வேகத்தைக் கூட்டிக் குறைத்து அதனை மாணவர்களுக்குச் சந்தோசமானதாக ஆக்க முடியும்.
- தேவைப்பட்டால் செயற்பாட்டின் போது பாடல் ஒன்றை இசைப்பதற்கும் திட்டமிடமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.9

# நாம் முயற்பாய்ச்சல் பாய்வோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : உடல் சார் திறன்கள் விருத்தி

02. தலைப்பு : நாம் முயற்பாய்ச்சல் பாய்வோம்.

03. பிரதான இலக்கு : கைகள், பாதங்கள் போன்ற அவயவத்தசை நார்களை விருத்தி செய்தல்.

04. விருத்திசெய்ய எதிர்பார்க்கப்படும்

ஆற்றல்கள் :
- கருத்துப்பரிமாற்றத் திறனை விருத்தி செய்து கொள்வர்.
- பேச்சாற்றலை விருத்தி செய்து கொள்வர்.

திறன்கள் :
- பாடும் திறனை விருத்தி செய்து கொள்வர்.

பண்புகள் :
- ஓடும், பாடும் திறனை விருத்தி செய்து கொள்வர்.
- உயிர்களிடத்தில் அன்பு காட்டும் பழக்கத்தை விருத்தி செய்து கொள்வர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு விளையாட்டாகும்.

06. முன் ஆயத்தம் : முயல் சம்பந்தமான தெளிவான படம் சிலவற்றைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1
- ஆசிரியர் பிள்ளைகளுக்குக் கேட்கும் வண்ணம்
- வெண்மையான முயல் ஒன்று
  பாய்ந்து பாய்ந்து வருகுது.........
  என்ற பாடலைப் பாடுதல்.
- முயலைப் பற்றிப் பிள்ளைகளோடு கலந்துரையாடல் ஒன்றைக் கட்டியெழுப்புதல்.
- முயலைப் பற்றி பிள்ளைகள் பெற்றிருக்கும் அனுபவங்களைக் கலந்துரையாடல் செய்வதற்காக தயாரித்த படங்களைப் பிள்ளைகளுக்குக் காட்டி, கலந்துரை யாடல் வேண்டும்.
- அதற்காகப் பிள்ளைகளிடம் பின்வரும் வினாக்களைக் கேட்க வேண்டும்.
  நீங்கள் முயலை கண்டிருக்கிறீர்களா?
  எங்கே கண்டிருக்கிறீர்கள்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயல் பாய்வதைக் கண்டிருக்கிறீர்களா?
முயல் எவற்றை உண்ணும்?
முயலின் காதுகள் நீளமானவையா? கட்டையானவையா?
முயலுக்குக் கால்கள் எத்தனை?

- முயல் பற்றிப் பொருத்தமான கேள்விகளைக் கேட்டு எல்லாத் தகவல்களையும் முன்வைக்க வேண்டும்.

படி 2

- பிள்ளைகளைத் திறந்த வெளி ஒன்றுக்குக் கூட்டிச் சென்று வட்டமாக நிறுத்தி முயலைப் போன்று பாய்ந்து பாய்ந்து செல்லும்படி சொல்லுதல்.
- ஆசிரியர் பிள்ளைகளுடன் முயலைப் போன்று பாய்ந்து பாய்ந்து செல்லுதல்.

படி 3

- ஆசிரியரின் கட்டளைக்கேற்ப பிள்ளைகள் முயல் போன்று செய்து காட்டல்.
- இப்போது முயல் குட்டிகள் பசிக்காக உணவு தேடி, காடெங்கும் செல்கின்றன.
- முயல் குட்டிகளுக்கு முயற்புல் கிடைத்தது. முயல் குட்டிகள் எல்லாம் முயற்புல் தின்னுகின்றன.
- புல் தின்னும் போது சத்தம் கேட்கின்றது.
- முயல் குட்டிகள் காதுகளை உயர்த்தி அங்குமிங்கும் பார்க்கின்றன.
- ஒருவரையும் காணவில்லை. மீண்டும் புல் தின்னுகின்றன.
- இப்போது புல்லை தின்று வயிறு நிரம்பியதால் முயல் குட்டிகள் நீர் தேடித் திரிகின்றன.
- கொஞ்சதூரம் செல்லும் போது தண்ணீர்க்குழி ஒன்று கண்ணில் பட்டது. முயல் குட்டிகள் அவ்விடம் சென்று நீர் அருந்தின.
- சத்தம் ஒன்று கேட்டு காதுகள் இரண்டையும் உயர்த்திப் பார்த்தன. மீண்டும் அவைகள் நீர் அருந்துகின்றன.
- இப்போது முயல் குட்டிகள் உணவு உண்டு நீர் அருந்தி ஒரு மரத்தடியில் உறங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நித்திரை கொண்ட முயல்களுக்கு ஒரு சத்தம் கேட்டது. காட்டில் எல்லா இடங்களிலும் பாய்ந்து பாய்ந்து செல்கின்றன. (இங்கே ஆசிரியை கைதட்டி சத்தம் ஒன்றை எழுப்புதல்.)

படி 4
- முயல் கதை ஒன்று சொல்லிக் கொடுத்தல். (சுரைக்காய்ப் பாற்சோறு சாப்பிட்ட விதம்.)
- முயல் பற்றி ஏதாவது கதையொன்றைச் சொல்லிக் கொடுக்க முடியும்.
- கவிதை ஒன்றைப் பாடுதல்.

படி 5
- முயல் போன்று சித்திரம் வரைதல். நிறம் தீட்டுதல், படங்களைப் பொருத்துதல், களிமண்ணால், கிளேயினால் உருவம் சமைத்தல்.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- அவர்களின் செயற்பாட்டைப் போற்றுதல்.
- பிள்ளைகளுக்குப் பாராட்டுத் தெரிவித்தல்.
- பிள்ளைகளுடைய உள விருத்தியை ஏற்படுத்தும் வகையில் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்தல்.
- பொறுப்புக்களை ஏற்கவும் அன்னியோன்னியமாக நடந்து கொள்ளவும் ஈடுபடுத்தல்.
- பிள்ளைகளின் ஆக்கங்களைக் காட்சிப்படுத்தல்.
- பிள்ளைகளைப் பாராட்டுதல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:-

- காதுகள் இரண்டு, கால்கள் இரண்டு, முயல் புல், நித்திரை, பாய்தல்.
- பசி, தண்ணீர்த்தாகம், நித்திரை கொள்ளுதல்.

10. வேறுவிடயங்கள்:-

- ஏதாவதொரு தாள வாத்திய இசையொன்றுடன் பாடல் பாடுவதற்குப் பயிற்சி அளித்தல் பொருத்தமானதாகும்.

- இச்செயற்பாட்டை, முறைப்படி தயாரித்த உடைகள் ஆகியவற்றைக் உடுக்க வைத்து பின், தவணை இறுதியில் நடைபெறும் பல்சுவை நிகழ்ச்சியில் முன்வைக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.10

# கிளிக் கூட்டமொன்று வந்துள்ளது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01 **பிரதான துறை** : உடல் சார் ஆற்றல்கள் விருத்தி

02 **தலைப்பு** : கிளிக் கூட்டமொன்று வந்துள்ளது.

03 **பிரதான இலக்கு** : கை கால்களின், தசைகளின் இயக்கத்திறன் விருத்தி.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- கிளியினுடைய பல்வேறு செயல்களை இனங்காண்பர்.

**திறன்கள்** :
- பாடும் திறனை விருத்தி செய்து கொள்வர்.
- வேகமாகவும் மெதுவாகவும் திரிவதற்குப் பயிற்சி பெறுவர்.

**பண்புகள்** :
- உயிர்களிடத்தில் அன்பு கொள்வர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- கிளியின் படங்கள் சிலவற்றைப் பெற்றுக் கொள்ளுதல்.
- கிளியின் ஒன்றை வரைவதற்காகப் பயன்படுத்தல்
- கிளியின் படம் ஒன்றை வரைவதற்குப் பயன்படுத்த முடியுமான சட்டகம் ஒன்றைச் செய்து கொள்ளல்.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி 1**
- கிளியின் தெளிவான படங்களைப் பிள்ளைகளுக்குக் காட்டி, கிளியை இனங்காண்பதற்கு சந்தர்ப்பம் அளித்தல்.
- கிளி பற்றி பிள்ளைகளுடன் செய்யும் கலந்துரையாடல் ஒன்றை நடத்துதல்.
- நீங்கள் கிளியைக் கண்டிருக்கிறீர்களா?
- கிளியின் நிறம் என்ன?
- கிளியின் அலகு என்ன நிறம்?
- கிளி எவற்றை உண்ணும்?
- கிளி எங்கே வசிக்கின்றது?
- வீடுகளிலும் கிளி இருப்பதை நிங்கள் கண்டிருக்கின்றீர்களா?
- அவைகளுக்குப் பெத்தா என்று கூறுகிறோம் அல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இவ்வாறான கேள்விகளைக் கேட்பதன் மூலம் கிளி சம்பந்தமான கருத்துக்களை வெளிக்கொண்டு வாருங்கள். முன்வைக்க முடியாது போன கருத்துக்கள் இருப்பின் அவற்றைப் பொருத்தமான கேள்விகளைக் கேட்டு கலந்துரையாடுங்கள்.

படி 2
- பிள்ளைகளைப் பாடசாலைத் தோட்டத்துக்குக் கூட்டிச் சென்று கிளிபோன்று சத்தமிடுவதற்குப் பயிற்சி அளித்தல்.

படி 3
- பிள்ளைகளை வட்டமாக நிறுத்தி கிளியைப் போல பறந்து செல்ல அறிவுறுத்தல்.
- ஆசிரியரும் கிளியைப் போன்று செய்து காட்டுவதற்கு பிள்ளைகளுக்கு உதவுதல். ஆசிரியரின் மேற்பார்வையின் கீழ் பிள்ளைகள் கிளியைப் போன்று பாவணை செய்தல்.

படி 4
- அதோ கிளிகளுக்குப் பசி ஏற்பட்டு உணவு தேடி வேகமாகப் பறந்து செல்கின்றன. பிள்ளைகளுக்கு வேகமாகச் செல்வதற்கு அறிவுறுத்தல். (கிளி போன்று)

படி 5
- வேகமாகப் பறந்து செல்லும் கிளிகள் மா மரம் ஒன்றைக் கண்டன. கிளிகள் மரத்தின் மேல் அமர்ந்து மாங்கனிகளை வயிறு நிறையும் வண்ணம் உண்ணுகின்றன. (பிள்ளைகளைக் கொண்டு செய்வித்தல்)
- கிளியொன்று ஒரு மாம் பழம் வீதம் பறித்து உண்ணுகின்றது.

படி 6
- கிளிகள் வயிறு நிறைந்து மரக்கிளை ஒன்றில் தூக்கத்தில் உள்ளன.
- சத்தம் ஒன்று கேட்டு கிளிகள் வேகமாகப் பறந்து செல்லுதல். (ஆசிரியை பிள்ளைகளுக்குக் கேட்கும் வண்ணம் சத்தம் செய்தல்.) பிள்ளைகளைக் கொண்டு செய்வித்தல்.

படி 7
- இப்போது கிளிகள் இறங்கி மெது மெதுவாகத் திரிகின்றன.

படி 8
- கிளிபற்றிக் கவிதை ஒன்றைச் சொல்லிக் கொடுத்தல்.

  அலகு சிவப்பு நிறமாகும்.
  மேனி பச்சை நிறமாகும்.
  அழகு நிறைந்த மலர் போலே
  ஆடை அணிந்து உள்ளனவே
  பயணம் செல்லும் பயணிபோல்
  பறந்து பறந்து சென்றிடுமே

- பழைய கவிதை ஒன்றைச் சொல்லிக் கொடுத்தல்.

  பெத்தப்பு உன் அலகு அழகு
  கழுத்தைச் சுற்றியுள்ள மாலை அழகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட வாலும் சிவப்பு நிறமும்.
மலர் போல் இலங்கும் காணீரே

- ஆசிரியர் பிள்ளைகளோடு இரண்டு மூன்று தடவைகள் பாடல் பாடிய பின் தனியாகப் பாடச் செய்தல்..

படி 9
- கவிதையைப் பாடிக் கொண்டு கிளி போன்று பறந்து செல்லுதல்.
- ஆசிரியரோடு கவிதை பாடிக் கொண்டு வட்டமாகப் பறந்து செல்லுதல். (பிள்ளைகளைக் கிளியைப் போன்று பறக்கச் செய்தல்.)

படி 10
- முன்னர் தயாரித்துக் கொண்ட சட்டகத்தைப் பாவித்து படங்கள் வரைவதற்கும் அவற்றுக்கு நிறங்கள் தீட்டுவதற்கும் மாணவர்களை ஈடுபடுத்தல்.
- சித்திரத்தைப் பாராட்டி, அவற்றை வகுப்பறையில் காட்சிப்படுத்தல்.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- இலகுவான கட்டளைகள் கொடுத்து கிளி போன்று செய்வித்தல்.
- பிள்ளைகளின் ஆற்றல்களை மதித்தல்.
- அவர்களைப் பாராட்டுதல்.
- ஏனைய பிள்ளைகளைக் கை தட்டுதல் மூலம் முடியுமான வரை உற்சாகப் படுத்துதல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- சொண்டு, நிறம், பழுத்த
- மேலே, கீழே, வேகமாக, மெதுவாக

10. வேறு விடயங்கள்:

- பிள்ளைகளின் சித்திரங்களைச் சேகரித்து ஒவ்வொரு மாணவரினதும் செயல்கள் பற்றிய தரவுகளை சுயவிபரக் கோவைப்படுத்திக் கொள்ள முடியும்.

- வருட நடுப்பகுதியில் பொருத்தமான ஆக்கங்களைத் தெரிவு செய்து, சித்திரக் கண்காட்சி ஒன்றை ஒழுங்கமைத்துக் கொள்ள முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.11

## ஜம்புப் பழம் உண்ண ஓடி வாருங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : உடல் சார் ஆற்றல்கள் விருத்தி

02. தலைப்பு : ஜம்புப் பழம் உண்ண ஓடி வாருங்கள்.

03. பிரதான இலக்கு : உடல் ஆரோக்கியத்துக்காக விளையாட்டில் ஈடுபடுத்துதல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் : வீட்டுத் தோட்டத்திலுள்ள பழவகைகளில் ஒன்றான ஜம்புப் பழத்தை இனங்காண்பர்.

திறன்கள் : ஓடுதல், பாய்தல், வளைதல், எறிதல் போன்ற திறன்களை விருத்தி செய்து கொள்வர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் : • ஜம்பு பழத்தின் படங்கள் பலவற்றைத் தயாரித்துக் கொள்ளுதல்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- ஜம்பு சுவையுள்ள பழமாகும் எனவும் அதனைப் பொதி செய்து கொண்டு விளையாட்டில் ஈடுபட முடியும் என்பதை விளக்கிக் கலந்துரையாடல் ஒன்றை பிள்ளைகளோடு நடத்துதல்.

படி 2
- ஆசிரியரோடு தாளத்திற்குக் கை தட்டி கீழ் வரும் பாடலைப் பாடுதல்.
- பிள்ளைகளுக்குக் கை தட்டி, கவிதைக்குச் செவிசாய்க்கும்படி அறிவுறுத்தல்.
- பிள்ளைகளுக்குப் பாடுவதற்கு முடியுமாகும் வரை ஆசிரியர் கவிதையைப் பாடுதல்.
- ஒரு நாளைக்கு கவிதையின் இரு அடிகளை மாத்திரம் படிக்கும்படி பயிற்சி அளித்தல்.

எங்கள் தோட்ட ஜம்பு உண்ண
ஓடி ஓடி வாருங்கள்
கீழ்க் கிளையில் ஜம்பு உண்டு
நாம் பறிப்போம் பாய்ந்து பாய்ந்து
இதோ இங்கே நிலத்தில் விழுந்து
குனிந்து குனிந்து எடுப்போம் - நாங்கள்
இதோ இங்கே முட்கள் உண்டு
அந்த இடத்தால் பாய்ந்து செல்வோம்
காலில் முள் குத்தியதே.
காலை உயர்த்திப் பார்ப்போமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதோ அங்கே நாய்க் கூட்டம்.
கல்லை எறிந்து அடித்திடுவோம்.
ஜம்பு உண்டு வயிறு நிரம்பி.
நாம் போவோம் வீடு நோக்கி.

**படி 3** • பிள்ளைகளை வட்டமாக நிறுத்தி ஆசிரியை வட்டத்தின் மத்தியில் நின்று பிள்ளைகள் வட்டமாகச் செல்ல கவிதையைப் பாடிக் கவிதையிலுள்ள பல்வேறு பகுதிகளை நடித்துக் காட்டுதல். அந்நடிப்பினைப் பிள்ளைகளுக்குப் பயிற்றுவித்தல்.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- பிள்ளைகளுக்கு முடியுமானவரை பங்குபற்றுவதற்குச் சந்தர்ப்பம் அளித்தல்.
- பிள்ளைகளைப் பாராட்டுதல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- உயரப்பாய்ந்து ஓடி, முள் ஒன்று,
- கூட்டம், வயிறு நிரம்பியது, உயரப்பாய்கிறது.

**10. வேறு விடயங்கள்:**

- கொடுக்கப்பட்ட பாடலுக்குப் பொருத்தமான அங்க அசைவுகளை ஆசிரியர் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.
- பாடலுக்குத் தாளம் போடுவதற்காக உபகரணம் ஒன்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
- பாடலைத் தாளத்திற்கு ஏற்பச் சொல்வதற்குப் பிள்ளைகளுக்குப் பயிற்சி அளித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.12

## பந்தை இலக்கு நோக்கி எறிதல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : உடல் சார் ஆற்றல்கள் விருத்தி.

02. தலைப்பு : பந்தை இலக்கு நோக்கி எறிதல்

03. பிரதான இலக்கு : சிறுதசை நார்களை இயக்குவதற்கான திறனைப் பெற்றுக் கொடுத்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- பொருத்தமான பல்வேறு உருவங்களைக் கட்டி எழுப்புவதற்குப் பயிற்சி பெறுவர்.
- ஒன்று தொடக்கம் பத்து வரை எண்ணுவதற்குப் பயிற்சி பெறுவர்.

திறன்கள் :
- இலக்குக்குப் பந்து எறிவதற்குரிய திறனை விருத்தி செய்து கொள்வர்.

பண்புகள் :
- சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கான பயிற்சியைப் பெறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- டிசுக்கடதாசி, உருவங்களைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான பல்வேறு வடிவங்கள் வரையப்பட்ட பிரிஸ்டல் போர்ட்
- சிவப்பும் நீலமும் கொண்ட இறப்பர் பந்துகள், ஒரு கூடை, ஒரு வாளி

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1
- பிள்ளைகளை முற்றத்திற்கு அழைத்துச் செல்லல். பந்தை கையிலெடுத்து சுதந்திர விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்குச் சந்தர்ப்பமளித்தல்.
- சிவப்பு, நீலப் பந்துகளை பிள்ளைகளுக்கு ஓரளவு தூரத்தில் நிலத்தில் வைப்பதற்கு ஆலோசனை வழங்குதல்.
- எழுமாற்றாகத் தெரிவு செய்த ஒருவரை, நிலத்தில் வைத்த பந்தை ஓடிச் சென்று எடுத்து வருவதற்குக் கூறுதல்.
- கையிலிருக்கும் பந்தின் நிறத்திற்கு ஏற்ப இரு குழுக்களாகுவோம். அதன்படி இப்பாடலை அபிநயத்துடன் பாடுவோம் என்று கூறுதல்.

| | |
|---|---|
| Our balls are red , red, red | Our balls are blue, blue, blue |
| எங்கள் பந்து சிவப்பு நிறம் | எங்கள் பந்து நீல நிறம் |
| சிவப்பு நிறம் | நீல நிறம் |

- மாணவர்களை இரு வரிசைகளில் உட்கார வைத்தல்.
- மாணவர்கள் இருக்குமிடத்திலிருந்து ஒரு மீற்றர் தூரத்தில் ஒரு கூடையை வைத்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி – 2
- அடையாளப்படுத்தப்பட்ட இடத்திலிருந்து கூடைக்குள் பந்தை இடுவதற்குக் கூறுதல்.
- கூடைக்குள் பந்தை இட்ட மாணவர் ஓடிச் சென்று வரிசையின் இறுதியில் உட்கார்ந்து கொள்ளல்.
- இவ்வாறு குழுவிலுள்ள எல்லா மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் அளித்தல்.
- இரு குழுக்களிலும் முதலில் முடித்த குழுவுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தல், கை தட்டுதல், பாராட்டுதல்.
- பலமுறை அதனை திரும்பத் திரும்பச் செய்தல்.
- கூடையிலிருக்கும் பந்தை ஒவ்வொரு மாணவனாக எண்ணச் செய்தல். ஒரு மாணவர் பந்தை எண்ணிக் கூடையிலிருந்து வெளியே வைத்தல். மற்றைய மாணவர் அதனை எண்ணி மீண்டும் கூடைக்குள் இடுதல்.
- ரிசு, நிறக் கடதாசி (நீலம், சிவப்பு) கொடுக்கும் போது அதனைக் கிழித்து உருண்டை செய்து தான் எண்ணி முடித்த அளவு (8 - 10) பந்து செய்வதற்கு வழிப்படுத்துதல்.
- கடதாசியில் வரைந்து கொடுத்த வட்டத்தைச் சுற்றி உருண்டை செய்து கொண்ட பந்துகளை ஒட்டச் செய்து மகிழ்ச்சிகரமான முகம் ஒன்றைச் செய்தல். இரு மாணவர்கள் ஒன்று சேர்ந்து முகம் ஒன்றை நிர்மாணம் செய்தல். (பந்துகள் போதா விட்டால் மேலும் எண்ணி அதே எண்ணிக்கையான தொகையை உருண்டை செய்து ஒட்டச் செய்தல்.)

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- மாணவர்களைப் பாராட்டுதல்.
- கை தட்டுதல்.
- திறமை குறைந்த மாணவர்களுக்கு உதவுதல்.
- பிள்ளைகளோடு சேர்ந்து பாட்டுப் பாடுதல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- ball, red, blue, பந்துகள்
- 10 வரை உள்ள எண்களின் பெயர்கள்.
- 1 - 10 வரை எண்ணுதல்..

10. வேறு விடயங்கள்:

- கடதாசிப் பந்துகளைப் பயன்படுத்தி ஒட்டுவதற்காக பல்வேறு பிராணிகளின் உருவங்களை அல்லது வேறு மாதிரிகளை வரைந்து கொடுத்தல்.
- கடதாசிப் பந்துகளைப் பல்வேறு நிறங்களில் தயாரித்துப் பயன்படுத்துதல் சிறந்ததாகும்.
- பிள்ளைகளின் உபகரணங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்துவதன் மூலம் அவர்களை உற்சாகப்படுத்துதல்.
- 1 - 10 வரை எண்ணுதல். சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் செய்ய முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5.13

## யானையார் வந்துள்ளார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01 பிரதான துறை : உடல் சார் ஆற்றல்கள் விருத்தி.

02 தலைப்பு : யானையார் வந்துள்ளார்.

03 பிரதான இலக்கு : உடலின் பல்வேறு பகுதிகளின் இயக்கத்திறனை விருத்தி செய்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் : • யானை பற்றிய எண்ணக்கருவை உறுதிசெய்து கொள்வர்.

திறன்கள் : • பாடும் திறனை வளர்த்துக் கொள்வர்.

பண்புகள் : • பொறுமையைப் பேணப் பழகிக் கொள்வர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு ஒருங்கிணைந்த செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம்:
- யானையின் உருவத்தை வரைந்து கொள்ளுதல்.
- படுக்கை விரிப்பு போன்ற பெரிய புடைவைகள் சிலவற்றைத் தயார் செய்து கொள்ளல்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- பிள்ளைகள் கண்டுள்ள பெரிய உயிரினம் பற்றி விசாரித்தல்.
- யானை பற்றிய கலந்துரையாடல் ஒன்றை நடத்துதல்.
- கீழே உள்ளது போன்ற கேள்விகளைக் கேட்பதன் மூலம் அணுகுதல்.

    நீங்கள் யானையை கண்டிருக்கின்றீர்களா?
    யானை மிகவும் பெரியதா? சிறியதா?
    யானையின் நிறம் என்ன?
    யானையின் உணவு என்ன?
    யானைக்கு எத்தனை கால்கள் உள்ளன?
    யானைக்கு எத்தனை காதுகள் உள்ளன?

- இவை போன்ற கேள்விகளுக்கு விடைகளைப் பெற்று யானை பற்றி பிள்ளைகள் அறிந்த தகவல் யாவற்றையும் கலந்துரையாடுதல்.

படி 2
- பிள்ளைகளோடு வெளியே சென்று அவர்களை யானை போன்று திரிவதற்கு உற்சாகப்படுத்துதல்.
- ஆசிரியரும் பிள்ளைகளோடு யானை போன்று அலைதல்.
- யானை போன்று தும்பிக்கையை அசைத்து மெதுவாகச் செல்லுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- யானை போன்று தும்பிக்கையை உயர்த்திக் கொண்டு செல்வதைப் பிள்ளைகளைக் கொண்டு செய்வித்தல்.
- பெரிய, சிறிய யானைகளை எண்ணுதல்.

படி 3
- யானை பற்றிய பாடலொன்றைப் பாடுதல்.

யானையாரே யானையாரே
பெரிய வயிறை சுமந்து நீயும்
உரல் போன்ற காலை வைத்து
எங்கே போகிறாய்?

சுளகு போன்ற காது இரண்டு
எனினும் கண்கள் இரண்டும் சிறிது
சோம்பேரியைப் போல ஏனோ
மெல்ல செல்கிறாய்?

- பாடலைப் பாடிக்கொண்டு யானையைப் போன்று வட்டமாகத்திரிதல்.
- யானை ஊர்வலத்தில் செல்வது போன்று வட்டமாகச் செல்லுதல்.

படி 4
- யானையுடைய படத்தை வரைவதில் பிள்ளைகளை ஈடுபடுத்துங்கள்.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- பிள்ளைகளுடைய செயற்பாட்டை மதித்தல்.
- பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- பெற்றார்களோடு அவர்களுடைய செயற்பாட்டை மதித்தல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- தும்பிக்கை, வயிறு, பெரிய, சிறிய
- 1, 2, 3, 4, 5
- சோம்பல்

**10. வேறு விடயங்கள்:**

- மிருகங்களைப் போன்று முதலில் பிள்ளைகள் செய்வதற்குச் சிரமப்படின் ஆசிரியர் எல்லா வேளைகளிலும் பிள்ளைகளுக்கு செய்து காட்டல்.

- பிள்ளைகள் இரண்டு பேர்களை ஈடுபடுத்தி யானைகளாக நிர்மாணித்து (மேனிப் பகுதியை புடைவையினால் மூடி) ஊர்வலம் ஒன்று செல்வதற்குத் தயார் செய்தல்.

- பிள்ளைகளால் வரையப்பட்ட சித்திரங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்தி பிள்ளைகளுக்குள் உற்சாகத்தை உண்டு பண்ணுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5.14

## ஒன்று சேர்ந்து பயணம் செல்வோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01 **பிரதான துறை :** உடல் சார் ஆற்றல்கள் விருத்தி.

02 **தலைப்பு :** ஒன்று சேர்ந்து பயணம் செல்வோம்.

03 **பிரதான இலக்கு :** உடலின் பல்வேறு பகுதிகளின் இயக்கத்திறனை விருத்தி செய்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள் :**
- பல்வேறு உயிர்களின் பயண முறைகளை வெவ்வேறாக இனங்காண்பர்.

**திறன்கள் :**
- பல்வேறு பிராணிகளைப் போன்று செய்துகாட்டும் திறனைப் பெற்றுக் கொள்வர்.
- பாடலைப்பாடும் திறனை விருத்தி செய்து கொள்வர்.

**பண்புகள் :**
- குழுச் செயற்பாட்டில் ஈடுபடும் போது பாதுகாப்பாகச் செயற்படும் பயிற்சியைப் பெறுவர்.
- குழுக்களில் செயல் திறனுடன் நடந்து கொள்ளக் கற்றுக் கொள்வர்.

05. **செயற்பாட்டின் தன்மை :** இது ஒரு குழுச் செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்:**
- கட்டளை பிறப்பிப்பதற்குப் பொருத்தமான ஊதுகுழல் போன்ற உபகரணம் ஒன்றைப் பயன்படுத்துதல்.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி 1**
- பிள்ளைகள் எல்லோரையும் சுதந்திரமான திறந்த வெளியொன்றுக்கு அழைத்துச் செல்லல். சுதந்திரமாகப் பறந்து செல்லத் தயார் படுத்துதல். அடிக்கடி கட்டளை கொடுத்தல். அடிக்கடி உயிர்களினுடைய சத்தத்தை உண்டுபண்ணிப் பறப்பதற்கு ஒழுங்கு படுத்திக் கொடுத்தல்.

**படி 2**
- பூனை, நாய்க்குட்டி, தாராக்குஞ்சு என மாணவர் ஒவ்வொன்றாகப் பெயரிடுதல். பூனை எனப் பெயரிட்டு ஞாவ், ஞாவ், ஞாவ் என ஓர் இடத்துக்குச் செல்ல வழிசெய்தல்.
- வவ், வவ் என சொல்லிக் கொண்டு நாய்க்குட்டிகள் போன்று வேறோர் இடத்துக்குச் செல்லல்.
- தாராக்குஞ்சுகள் யாவும் க்வெக், க்வெக், க்வெக் எனச் சத்தமிட்டுக் கொண்டு வேறோர் இடத்துக்குச் செல்ல வைத்தல். சுதந்திரமாகக் குழுக்கள் மூன்றையும் அங்க அசைவுகளைச் செய்ய சந்தர்ப்பம் அளித்து ஆசிரியர் நன்கு அவதானித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மீண்டும் மாணவர்களைக் கட்டளைக்கு ஏற்ப அருகில் அழைத்துக் கொள்ளுதல்.
- மேற்கூறியபடி பிராணிகளின் நடத்தைகளைச் செய்வதில் பலமுறை ஈடுபடுத்துங்கள்.

படி 3
- மீண்டும் பிள்ளைகளுக்கு நன்றாகச் சுதந்திரமாகத் திரிவதற்குச் சந்தர்ப்பத்தை வழங்குதல்.
- முன்னே சந்திப்பவர்களுக்கு வணக்கம் கூற வழிப்படுத்துங்கள்.
- Good Morning, வணக்கம்
- இப்போது விடுமுறைக்கு ஊர் செல்வதற்கு புகையிரதம் ஒன்றைச் செய்வதற்கு ஆலோசனை வழங்குங்கள்.
- கை, கால்களை அசைப்பதன் மூலம் பாடலுக்கு ஏற்ப புகையிரதம் செல்வதற்கு வழிப்படுத்துங்கள்.

படி 4
- இப்போது புகையிரதத்திலிருந்து இறங்குங்கள்.
- எல்லோரும் பாட்டனின் வீட்டுக்குச் செல்லுங்கள்.
- பாட்டி, பாட்டனுக்கு வணக்கம் கூறி அன்போடு ஏற்றுக் கொள்ளுங்கள்.
- பாட்டனின் வீட்டில் பாடல் ஒன்றைப் பாடி நடனமாடுங்கள்.
- இப்போது எல்லோரும் கலைந்து செல்லக் கட்டளை இடுங்கள்.

08. **மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- பிள்ளைகள் செயற்பாட்டை முன்வைக்கும் போது அவர்களுக்கு பாடல் இசைப்பதன் மூலம் ஒத்துழையுங்கள்.
- நன்றாகச் செயற்பாட்டைச் செய்த பிள்ளைகளைப் பாராட்டுங்கள்.
- திறமை குறைந்த பிள்ளைகளுக்குத் தேவையான இடத்தில் வழிகாட்டுங்கள். பாதுகாப்பு பற்றிக் கவனம் எடுங்கள்.

09. **கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- வணக்கம், Good morning, ஆசிரியர்கள், மியாவ்
- பிராணிகள், உலகம், புகையிரதம்.

10. **வேறு விடயங்கள்:**

- இச்செயற்பாட்டிற்கு ஏற்ப விருப்பப்படி சித்திரம் ஒன்றை வரைவதில் ஈடுபடுத்துங்கள்.
- அச்சித்திரங்களை மாணவர்களுடைய செயலடைவுக் கோவைகளில் சேர்த்துக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.15

## நாங்கள் விளையாடுவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : உடல் சார் ஆற்றல்கள் விருத்தி.

02. தலைப்பு : நாம் விளையாடுவோம்.

03. பிரதான இலக்கு : இரு கைகளினதும் தசை நார்களின் விருத்திக்கு உறுதுணை வழங்குதல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

திறன்கள் :

- பிடித்தல் - கைவிடல் என்ற செயற்பாட்டை முறையாகச் செய்வதற்குப் பயிற்சி பெறுவர்.

பண்புகள் :

- பொறுமையாக நடந்து கொள்வதற்கு பயிற்சி பெறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழுச் செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :

- 4 அங்குல விட்டமுள்ள இறப்பர் பந்துகள் சில.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1

- மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சமமான குழுக்களாக வகுத்துக் கொள்ளுங்கள். உருவில் காட்டப்பட்டுள்ள விதத்தில் வரிசையாக நிறுத்துங்கள்.




- முன்வரிசையில் உள்ள மாணவர்களின் கையிலுள்ள பொருளை படிப்படியாக அடுத்தவருக்கு மாற்றம் செய்தல் வேண்டும். இவ்வாறு மாற்றம் செய்வதற்குப் பொருத்தமான முறையொன்றைக் கட்டியெழுப்புங்கள்.

- நின்ற இடத்தில் அசையாது பொருட்களை கைக்குக்கை மாற்றுவதன் மூலம் பின்வரிசையிலுள்ள மாணவனுக்கு அனுப்பும் முறையைத் தெளிவுபடுத்துங்கள். அவ்வாறு பின்வரிசையிலுள்ள மாணவனின் கைக்குக் கிடைத்த பொருளை எடுத்து முன்வரிசையிலுள்ள மாணவனுக்கு முன்னால் ஓடி வந்து நின்று தனக்குப் பின்னால் உள்ளவருக்குக் கொடுக்க வேண்டும். இவ்வாறு சகலமாணவர்களும் முன்வரிசைக்கு வரச் சந்தர்ப்பம் கொடுத்தல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- செயற்பாட்டை சைகை கிடைத்தவுடன் ஆரம்பியுங்கள்.

- முதலில் முடித்த குழுவுக்கு அடுத்த குழுக்கள் கைதட்டி ஆரவாரம் செய்தல். பல முறைகள் போட்டி முறைக்கு ஏற்ப இதனைச் செயற்படுத்த முடியும்.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- கவனயீனமாக செயற்படும் பிள்ளைகளுக்கு உதவி உற்சாகம் அளியுங்கள்.
- தேவையான சந்தர்ப்பங்களில் கைதட்டுதல் மூலம் ஊக்கம் அளியுங்கள்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- முன்பக்கம், பின்பக்கம்
- பிராணிகள், உலகம், புகையிரதம்.

10. வேறு விடயங்கள்:

- ஆசிரியரின் விருப்பப்படி குழுக்களை அமைத்து, முறையை மாற்றிக் கொள்வது பொருத்தமானது.

- நின்றுகொண்டு மட்டுமல்ல அமரச் செய்தும் மெதுவாக முன்னோக்கி ஓடுவதற்கும் வழியேற்படுத்தி, இவ்விளையாட்டைச் செய்யமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.16

## நீங்கள் வலை இழுக்க விருப்பமா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : உடல் சார் ஆற்றல்கள் விருத்தி.

02. **தலைப்பு** : நீங்கள் வலை இழுக்க விருப்பமா?

03 **பிரதான இலக்கு** : கை, கால்களிலுள்ள தசை நார்களை விருத்தி செய்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- மீன் வலையில் சிறிய மீன்கள் நிறையவும் பெரிய மீன்கள் சிறிதும் அகப்படும் என்பதை விளங்கிக் கொள்வர்.
- மீன்களுடைய பெயர்களை அறிந்து கொள்வர்.

**திறன்கள்** :
- பாடும் திறனை விருத்திசெய்து கொள்வர்.
- நடிக்கும் திறனை விருத்திசெய்து கொள்வர்.

**பண்புகள்** :
- குழுவாக இயங்குவதற்கு விருப்பம் காட்டுவர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு குழுச் செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- மாதிரி மீன் வலை ஒன்றைத் தயாரித்துக் கொள்ளுதல்.
- இதற்காக நுளம்பு வலை ஒன்றை அல்லது சாரி ஒன்றைப் பயன்படுத்திக் கொள்வது சிறந்ததாகும்.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி 1**
- ஆசிரியர் கீழ்வரும் பாடலைப் பாடிக் கொண்டு அபிநயத்துடன் பிள்ளைகளுக்கு மத்தியில் வருதல்.

ஏலேலோ ஏலய்யா............///
வலை இழுப்போம் மச்சான் வலை இழுப்போம் ........//
கட்டா ஓரா கணவாய் கொடுவா
சிறுமீன் பாய்ந்து பாய்ந்து வருகுது
வலை இழுப்போம் மச்சான்.......//
ஏலேலோ ஏலய்யா.............//

- நீங்கள் இப்பாடலைக் கேட்டிருக்கிறீர்களா?
- இது மீன்பிடிக்கும் போது பாடும் பாடலாகும்.
- மீன் பிடிக்க என்ன வேண்டும்?
- மீன் வலை ஒன்று.
- நல்லது நாம் அப்படியானால் மீன் வலை இழுப்போமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 2
- பாடலைப் பிள்ளைகளோடு தாளத்திற்கு ஏற்ப பாடிப் பயிற்சி அளித்தல்.
- மீன் வலை இல்லாது பிள்ளைகளுக்கு கை கால்களை அசைத்து வலை இழுப்பது போன்று பயிற்சியளித்தல்.

படி 3
- மீன் வலையைப் பிள்ளைகளுக்குக் கொடுத்து அதனால் மீன்பிடிக்கும் விதத்தைச் செய்து காட்டுதல்.
- பிள்ளைகள் எல்லோருக்கும் மீன்பிடிக்கச் சந்தர்ப்பம் அளித்தல்.
- ஆசிரியர் பிள்ளைகளோடு சேர்ந்து பாடலைப் பாடி வலை இழுக்கும் செயற்பாட்டைச் செய்வித்தல்.
- பிள்ளைகளைப் பலமுறை வலை இழுக்கும் செயற்பாட்டில் ஈடுபடுத்தல்.
- பிள்ளைகளை இரு குழுக்களாக வேறுபடுத்தி ஒரு குழுவுக்கு வலை இழுக்கவும் மற்றைய குழுவுக்கு பாடலைப் பாடவும் இடமளித்தல்.
- குழுக்களை மாற்றி மாற்றி இச்செயற்பாட்டைச் செய்வித்தல்.
- மாணவர்கள் கைதட்டுதல் மூலம் மகிழ்ச்சியை வெளிப்படுத்துதல்.

### 08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- பாடலைப்பாடும் போது கை தட்டுதல்.
- குழுச் செயற்பாட்டின் முடிவின்போது கை தட்டுதல்.
- பிள்ளையின் நடிப்புக்களுக்கு மிகவும் நன்று, அழகாய் இருந்தது என மதிப்பளித்தல்.

### 09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- மீன்வலை, சிறிய மீன்கள், தோரை, பாரை, ஹெலய்யா.
- ஏலேலோ, ஏலய்யா, வலை இழுத்தல்.
- பெரிய, சிறிய.

### 10. வேறு விடயங்கள்:

- வலை இழுத்து நடித்ததன் பின்பு பிள்ளைகளுக்கு ஒன்று சேர்ந்து பாடலைப் பாடுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்தல். இங்கே காட்டிய பாடலுக்கு ஆசிரியரின் விருப்பப்படி மேலதிக பகுதிகளைச் சேர்த்துக் கொள்வது பொருத்தமானதாகும்.

- வலை இழுக்கும் பல்வேறு சந்தர்ப்பங்களைச் சித்திரமாக வரைய பிள்ளைகளுக்கு வழிகாட்டுங்கள்.

- வருட நடுப்பகுதியில் மாணவர் கலா மன்றத்தில் வலை இழுக்கும் காட்சியொன்றை முறையாக ஒழுங்குபடுத்திச் செய்து காட்டுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5.17

## தேங்காய்ச் சிரட்டை பொய்க்கால் மனிதன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : உடல் சார் ஆற்றல்கள் விருத்தி.

02. தலைப்பு : சிரட்டைப் பொய்ப் பாதக்காரன்.

03. பிரதான இலக்கு : கை,கால் ஆகியவற்றின் தசைநார்களின் இயக்கத்திறனை விருத்தியுறச் செய்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- சிரட்டைப் பொய்ப் பாதக்காரன் எனும் எண்ணக்கருவை இனங்காண்பர்.

திறன்கள் :
- கயிற்றினால் முடிச்சுப்போடும் திறனைப் பெறுவர்.
- சிரட்டைப் பொய்ப் பாதங்களைப் பயன்படுத்தி நடக்கும் திறனைப் பெறுவர்.

பண்புகள் :
- சிரட்டைப் பொய்ப் பாதங்களைப் பாயன்படுத்தித் திரிவதன் மூலம் சந்தோசத்தைப் பெறுவர்.
- பொறுமையுடன் செயற்படுவதற்குப் பழகுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம்:
- ஓட்டையுள்ள சிரட்டைகள் இரண்டு, 60 அங்குலம் நீளமான கயிறு ஒன்று, ஓட்டை துளைப்பதற்கு ஆணி ஒன்று, கைமணி ஒன்று, லக்கர் அல்லது மை அல்லது பொருத்தமான நிறம் என்றவாறு பொருட்களைப் பெற்றுக் கொள்ளல்.
- சிரட்டை இரண்டை சுத்தம் செய்து, நிறம் பூசிக்கொண்டு வரும்படி பிள்ளைகளுக்குக் கூறுதல்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி - 1
- சிரட்டைகளினால் தயாரித்துக்கொண்ட உபகரணத்தின் கயிற்றைப் பெருவிரலில் இட்டு ஆசிரியர் வகுப்பறைக்கு வந்து, இது போன்ற சிரட்டைப் பொய்ப் பாதங்களைச் செய்து நாம் நடப்போமா, என வினவி, பிள்ளைகளின் விருப்பப்படி செயற்பாட்டில் ஈடுபடுவதற்குச் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுத்தல்.
- பிள்ளைகள் கொண்டுவந்த சிரட்டைகள் இரண்டையும் கையில் எடுக்குமாறு செய்து, ஆசிரியர் சிரட்டைகள் இரண்டிலும் ஓட்டைகள் துளைத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தேவையான அளவுக்குக் கயிற்றை வெட்டிக் கொண்டு ஓட்டைதுளைக்கப்பட்ட சிரட்டைகளில் இட்டு பெரிதாக முடிச்சொன்று போட்டுக் கொள்ளுங்கள். மற்றைய சிரட்டையையும் இவ்வாறு தயார் செய்து கொள்வதற்கு ஆசிரியர் உதவி செய்தல் வேண்டும்.

படி 2

- இவ்விதத்தில் தயார் செய்து கொண்ட சிரட்டைகள் இரண்டைத் தொடர்புபடுத்திச் செய்த கயிற்றைக் கால் பெருவிரல்களுக்குள் இட்டு மெதுவாகச் செல்வதற்கு வழிகாட்டுங்கள்.

- எல்லாப் பிள்ளைகளையும் திறந்த வெளி ஒன்றிற்குக் கூட்டிச் சென்று தனித்தனியாக சிரட்டைப் பொய்ப் பாதக்காரன் போல் செல்வதற்கு வழிகாட்டுங்கள். நடந்து செல்லும் போது இப்பாடலைப் பாடுவதற்கு ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள்.

அதோ வருகிறான் போலி பாதக்காரன்
மகிழ்வுடனே தாளத்துடன் நாம் பயணம் செல்கிறோம்.

- பாடலைப் பாடும் போது ஆசிரியர் கைமணியைத் தட்ட முடியும்.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- தனித் தனியாகப் பயணம் செய்யும் போது அடுத்த பிள்ளைகள் கைதட்டி சந்தோசத்தை வெளிப்படுத்தல்.

- உற்சாகப்படுத்துவதற்காக ஆசிரியர் மிக நன்று...... இன்னும் கொஞ்சம் போங்கள்....... போன்ற சொற்களைப் பாவித்து பிள்ளையை ஊக்கப்படுத்தல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- சிரட்டை, கயிறு, முடிச்சு, ஆணி.
- ஒன்று, இரண்டு.
- சிரட்டைப் பொய்ப் பாதக்காரன்.

**10. வேறு விடயங்கள்:**

- ஆசிரியரின் விருப்பப்படி பாடலுக்குப் புதிய வரிகளைச் சேர்த்துக் கொள்ளலாம்.

- சிரட்டைப் பொய்ப் பாதக்காரனின் சித்திரமொன்றை வரைவதில் பிள்ளைகளை ஈடுபடுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.18

## எங்கள் தோட்டத்தில் தேங்காய் பறித்துள்ளார்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : உடல் சார் ஆற்றல்கள் விருத்தி.

02. தலைப்பு : எங்கள் தோட்டத்தில் தேங்காய் பறிக்கப்பட்டுள்ளது.

03. பிரதான இலக்கு : இரு கைகளினதும் தசைநார்களின் இயக்கத்திறன் விருத்தியைப் பெற்றுக் கொடுத்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- தென்னை மரத்துடன் தொடர்பான பல்வேறு தகவல்களை அறிந்து கொள்வர்.

திறன்கள் :
- பாடும் திறனை விருத்தி செய்து கொள்வர்.
- நடிக்கும் திறனை விருத்தி செய்து கொள்வர்.

பண்புகள் :
- ஒத்துழைப்புடன் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு விருப்பத்தை ஏற்படுத்திக் கொள்வர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- தென்னை மரத்தினது படங்கள் சிலவற்றைச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1
- உயர்ந்த உயர்ந்த மரங்கள் இதோ
  நீண்ட நீண்ட ஓலை இதோ
  பழுத்துள்ள தேங்காய் பறித்து
  ஒன்று இரண்டு எண்ணுவோமே

- இப்பாடலைத் தாளத்திற்கு ஏற்ப வரிசை வரிசையாகப் பாடுதல். தாளத்திற்குக் கை தட்ட வழிசெய்தல்.

- பாடலிலுள்ள கருத்துக்கள் தொடர்பாக மாணவர்களோடு கதைத்தல், தென்னை மரம் பற்றிக் கதைப்பதுடன் காவோலை, பழுத்த தேங்காய் மரத்தில் இருந்தால், மரத்தின் அருகில் செல்வது அபாயமானது என்பதைக் கூறுங்கள்.

- மாணவர்கள் குழுக்களாகப் பிரிந்து வட்டமாக நிலத்தில் இருக்கச் செய்யுங்கள். தேங்காய் பறிக்கும் விளையாட்டை அறிமுகம் செய்யுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டி பாட்டி தேங்காய் ஒன்று பறிக்கவா
பாட்டன் ஏசுவார் நாய் குரைக்கும்
நெட்டி க்ரீங் க்ரீங் என்கிறது
அவ்வாறெனின் காய் ஒன்றைப் பறியுங்கள்.
டோன் டோன் டோன்

போன்றவாறு விநோதமாக விளையாடுவதற்கு சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுங்கள்.

படி 2
- பறித்த தேங்காய்களை உரிப்பது போல பாவணை செய்து காட்டுதல்
- தேங்காய் உடைப்பது போல பாவணை செய்து காட்டுதல்
- தேங்காய் திருவுதல் போல பாவணை செய்து காட்டுதல்
- தேங்காய் பிழிவது போல பாவணை செய்து காட்டுதல்
  கட்டிப்பால் பால் - தண்ணீர் பால் பால்
  இதோ நாய்க்கு தேங்காய்த் துருவல் //
- தாளத்திற்கு ஏற்ப பாடலைப் பாடி கருத்துக்களை முன்வைப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

படி 3
- தென்னை மரம் ஒன்றினது சித்திரம் ஒன்றை வரைவதற்குச் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுங்கள். அதை மதிப்பிடுங்கள்.

படி 4
- மாணவர் திறமை சம்பந்தமாக நேர்க்கணிய ஊக்குவிப்பை முன்வைத்தல், திறமை குறைந்த மாணவர்களுக்குப் பின்னூட்டல் வழங்குதல்.

## 08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- பங்கு பற்றிய பிள்ளைகளுக்கு மதிப்பளித்தல்.
- பங்குபற்றாத பிள்ளைகளுக்கு உற்சாகம் அளித்தல்.

## 09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- உயரத்துக்கு உயரம் , நீளத்துக்கு நீளம், முதிர்ந்த, தென்னையோலை, காய் பாட்டி, பாட்டன், நெட்டி, க்ரீங், க்ரீங், டோன், டோன், தேங்காய் மட்டை, தேங்காய்த் துருவுதல், தேங்காய் பிழிதல், கட்டிப்பால், தண்ணீர்ப்பால்
- ஒன்று, இரண்டு
- உயரத்துக்கு உயரம் , நீளத்துக்கு நீளம்

## 10. வேறு விடயங்கள்:

- ஆசிரியரின் விருப்பப்படி பாடல் அடிகளையும், செயற்பாடுகளையும் வித்தியாசப்படுத்திக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.19

## நாம் இப்படித்தான் மா இடிப்பது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : உடலியக்கத்திறன் விருத்தி

02. தலைப்பு : நாம் இப்படித்தான் மா இடிக்கிறோம்.

03. பிரதான இலக்கு : இரு கைகளினதும் தசை நார்கள் இயங்குவதற்கு வழியமைத்தல்

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் : • பாட்டுப் பாடும் திறனை விருத்தி செய்து கொள்வர்.

திறன்கள் : • நடிக்கும் திறனை வளர்த்துக் கொள்வர்.

பண்புகள் : • பங்கு பற்றும் திறனை வளர்த்துக் கொள்வர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு தனி செயற்பாடாகும்

06. முன் ஆயத்தம்:
- மா இடிப்பது தொடர்பான தெளிவான படங்கள்.
- மா இடிப்பதற்குத் தேவைப்படும் உபகரணங்கள் தொடர்பான படங்கள்.
- முதியோரின் உதவியுடன் செய்யும் இனிப்புப் பண்டங்கள்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- ஆசிரியர் பிள்ளைகளுக்கு கேட்கும் வண்ணம் மா இடிப்பது தொடர்பான பாடல் ஒன்றைப் பாடுதல்.
- மா இடிக்கும் விதத்தை நடித்துக் காட்டுதல்.

  இப்படித்தான் மா இடிக்கிறோம் - மா இடிக்கிறோம் மா இடிக்கிறோம்
  இப்படித்தான் மா இடிக்கிறோம் சின்ன கைகளால்.
- பிள்ளைகளுடன் மா இடிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை நடத்துதல்.
- ஆசிரியர் கீழ்வரும் வினாக்கள் சிலவற்றைக் கேட்டல் பொருத்தமானதாகும்.

  நீங்கள் வீட்டில் மா இடிப்பதைக் கண்டிருக்கிறீர்களா?
  வீட்டில் கூடுதலாக மா இடிப்பது யார்?
  இடித்த மாவினால் என்ன தயாரிக்கலாம்?
  மா இடிக்கத் தேவையான உபகரணங்கள் யாவை?
  இடித்த மாவினால் தயாரிக்கப்படும் உணவுப் பண்டங்கள் யாவை?
  மா இடித்த பின் செய்வது என்ன?(மா அரித்தல்)
- மா அரிப்பது சம்பந்தமாகப் பிள்ளைகளுடைய கருத்துக்களைக் கலந்துரையாடல் செய்தல்.
- மா அரிக்கத் தேவையான உபகரணம் எது?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இடித்த மாவினால் தயாரிக்கும் இனிப்புப் பண்டங்கள் யாவை?
- மா அரைக்கும் ஆலைகளில் மா அரைப்பதைக் கண்டிருக்கின்றீர்களா?
- இவை போன்ற வினாக்களுக்கு விடை அளித்ததன் பின் மா இடிப்பது தொடர்பான பிள்ளைகளுக்கு தெரிந்த எல்லாத் தகவல்களையும் கலந்துரையாடுங்கள்.

படி 2
- பிள்ளைகளோடு மேலேயுள்ள பாடலைப் பலமுறை பாடுதல்.
- பிள்ளைகளோடு திறந்த வெளிக்குச் சென்று பாடலைப் பாடுவதுடன் மா இடிப்பதை அபிநயத்துடன் செய்து காட்டுதல்.
- கீழுள்ள பாடலைப் பாடுவதுடன் மா அரிப்பதைச் செய்து காட்டுவர்.

  இப்படித்தான் மா அரிக்கிறோம். - மா அரிக்கிறோம்.
  மா அரிக்கிறோம்.
  இப்படித்தான் மா அரிக்கிறோம். - சின்னக் கைகளால்

படி 3
- ஆசிரியர் மா இடிப்பது தொடர்பாக பிள்ளைகளுக்கு அறிமுகம் செய்ய வேண்டிய சொற்களஞ்சிய அட்டவணை ஒன்றைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.

  -உரல், உலக்கை.
  -அரிதட்டு, வட்டில்.
  மாவால் தயாரித்த இனிப்புப் பண்டங்கள்.
- இச் சொற்களைச் சரியாக உச்சரிக்கச் செய்வதற்காகப் பிள்ளைகளோடு வாசித்தல்.
- வேறு சொற்கள் இருப்பின் அவற்றை அறிமுகம் செய்யுங்கள்.
- மா இடித்துத் தயாரித்த இனிப்புப் பண்டங்களின் படங்களைக் காட்சிப் படுத்துதல். ஒரே வகையான இனிப்புப் பண்டத்தில் பல வகையானவைகள் இருத்தல் வேண்டும். அதே போல் பிள்ளைகளுக்கு அவைகளைத் தெளிவு படுத்தி இனங்காணத்தக்கதாக இருக்க வேண்டும். பிள்ளைகளைக் குழுக்களாக வேறாக்கி அவற்றை வெவ்வேறாகத் தெரிவு செய்வதற்கு அறிவுறுத்துங்கள். உணவு வகைகளை வெவ்வேறாக இனங்காணச் செய்யுங்கள். படங்களில் உள்ள உணவு வகைகளை எண்ணுவதற்கு இடமளியுங்கள்.
- ஒன்று இரண்டு ............... one, two ............ .......... ............... எனக் களி மண்ணினால் செய்து கொண்டவைகளை எடுக்க முடியும்.

படி 4
- களி மண்ணிணால் கிளேயினால் உரல், உலக்கை போன்றவற்றை நிர்மாணித்துக் கொள்ளுதல்.
- இனிப்புப் பண்டம் செய்தல். (இனிப்புப் பண்டங்களின் வடிவத்தைப் பற்றிக் கதைத்தல்.)
- மா இடித்தல் சம்பந்தமான படங்களை வெட்டி ஒட்டுதல்.
- இனிப்புப் பண்டங்கள் சம்பந்தமாக உருவம் வெட்டி ஒட்டுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இடித்தல், அரித்தல் சம்பந்தமான சித்திரம் வரைதல்.
- வரைந்த சித்திரங்களை நிறம் தீட்டுதல்.
- இனிப்புப் பண்டங்களின் சித்திரங்களை வரைதல்.
- நிறம் தீட்டுதல்.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- பிள்ளை செய்கின்ற செயற்பாடுகளை மதித்தல்.
- பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- பிள்ளைகளுடைய செயற்பாட்டை வகுப்பில் காட்சிப்படுத்துதல்.
- பங்குபற்றும் திறனையும் ஆற்றலையும் விருத்தி செய்து கொள்வதற்காகக் கை தட்டுதல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- உரல், உலக்கை, அரிதட்டு, வட்டில், செய்த இனிப்புப் பண்டங்களின் பெயர்கள்.
- 1 , 2 , 3 , 4 , 5
- இனிப்புப் பொருள், சமையலறை உபகரணங்கள்.

10. வேறு விடயங்கள்:

- மா இடிப்பதற்காகத் தடி அல்லது கம்பு போன்றவற்றைப் பாவிக்க முடியும். அதுவும் பிள்ளைகளினுடைய பிரதேசம் பற்றிக் கவனம் எடுத்தல் வேண்டும்.

- வரையப்பட்ட சித்திரங்களைப் பிள்ளைகளினுடைய செயலடைவுக் கோவைகளில் கோவைப்படுத்தி வையுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.20

## ஊர்வலம் செல்வோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : உடல் சார் ஆற்றல்கள் விருத்தி.

02. தலைப்பு : ஊர்வலம் செல்வோம்.

03. பிரதான இலக்கு : உடலின் பல்வேறு அவயவங்களின் செயற்பாடுகளுக்கு பயிற்சி வழங்குதல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- ஊர்வலம் ஒன்றில் காணக்கூடிய கொடி, ஆலவட்டம், கசை, மேளம் போன்ற பல்வேறு பொருட்களை இனங்காண்பர்.

திறன்கள் :
- நடிக்கும் திறனை விருத்தி செய்து கொள்வர்.
- சித்திரம் வரையும் திறனை விருத்தி செய்து கொள்வர்

பண்புகள் :
- தேசிய கலாசார விடயங்களை மதிப்பதற்குப் பயிற்சி பெறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம்:
- கொடி, ஆலவட்டம், நெருப்புப் பந்துகள், மேளம், கசை, குடம் போன்ற வற்றைத் தயார் செய்து கொள்ளல்.
- (கசட்) ஒலிப்பதிவு நாடா ஒன்றில் பாடலைப் பதிவு செய்து வைத்தல் ஊர்வல ஒழுங்கமைப்புக்காக பெற்றோரின் உதவியைப் பெற்றுக் கொள்ளல்.
- ஊர்வலத்துக்குத் தேவையான பொருட்களைத் தயார் செய்தல்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1
- தான் கண்டுள்ள ஊர்வலம் பற்றி பிள்ளைகளுடன் கலந்துரையாடுதல். கொண்டு செல்லும் பல்வேறு பொருட்கள், நடிப்புக்கள் போன்றவை. நாமும் அவ்வாறே ஊர்வலம் ஒன்று போவோம்.?
- பாடசாலை முற்றத்தில் மேடை போன்று ஓரிடத்தில் பாய் விரித்துத் தயார் செய்து கொள்ளுதல்.

படி 2
- எல்லாப் பிள்ளைகளையும் அவ்வூர்வலத்தில் ஆயத்தம் செய்து அனுப்பக்கூடிய வகையில் வரிசைப்படுத்துதல். மேடை போல் தயார் செய்து கொண்டுள்ள இடமொன்றில் தமது நடிப்புத்திறன்களை வெளிக்காட்டுவதற்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்.

- ஒலிப்பதிவு நாடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சடபட சடபட - கசையொலி பரவுது,
  ஊர்வலம் அண்மையில் - வருவதைக் குறிக்குது.

- பந்து பந்து போல் - தீப்பந்தம் சுழலுது.
  ஒலி எங்கும் பரவுது. - இருளை நீக்குது

- ஊர்வல சத்தம் - எங்கும் பரவுது
  கொடியுடன் பிள்ளைகள் - முன்னே வருகுது.

- தொம் கித கித தோம் - பாதம் வைத்தே
  மேளதாளமுடன் - ஊர்வலம் வருகுது.

- சட்டை அணிந்து - பூவைச் சூடி
  செம்புக் குடத்துடன் - நடனம் ஆடியே

- தான தனா தந்தே - ஒலியை எழுப்பியே
  கோல் ஆட்டம் செய்து - நடனம் ஆடியே

- தாதுவை முதுகில் - வைத்தே யானையும்
  மெல்ல மெல்ல வரும் - எங்கும் அழகே

- தொம்கித தாளம் போட்டே
  சுற்றி சுற்றிக் கரணமிடும்
  மலை நாட்டு நடிகர் காண
  ஆசைவருகுது எமக்கு ஆசை வருகுது..

  அதன் பின்னே நிலமேயும்
  ஆடம்பர பாங்கினிலே
  சுற்றும் முற்றும் பார்த்து மெல்ல
  நடை பயிலுகிறார்

- காவடியைக் கழுத்தில் ஏந்தி
  அரோ ஹரா அரோ ஹரா
  ஆடி ஆடி ஊர்வலம் வருகுது.
  சின்னத் தங்கையே சின்னத் தம்பியே

படி 3

- ஊர்வலத்தில் பயணம் செய்தவர்கள் பற்றிப் பேசுதல்.
  கசையடிப்போர், தீப்பந்துகள், மேளங்கள், ஆலவட்டங்கள், செம்பு நடனம், கோலாட்டம், யானை, நிலமே, காவடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் சென்றது ................ இறுதியில் சென்றது .......
கசையடிப்போனுக்குப் பின்னால் சென்றது ...........
யானைக்குப் பின்னால் சென்றது ............
ஆலவட்டத்துக்கு முன்னால் சென்றது ............
(முன்பு, பின்பு, எண்ணக்கரு)

- தான் கண்ட ஊர்வலத்தில் மிகவும் விருப்பமான பகுதியை வரைவதற்கு ஈடுபடுத்துதல். பிள்ளைகளால் வரையப்பட்ட உருவங்களை ஊர்வலம் போன்று தயார் செய்து நிலத்தில் வைத்தல்.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- மதிப்பளித்தல், பாராட்டுதல்
- கைதட்டுதல்
- ஊர்வலம் சம்பவத்தை முறையாக சொன்னவருக்குப் பாராட்டுத் தெரிவித்தல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- கசை, கொடி, ஆலவட்டம், மேளம், ஊர்வலம் நடிப்பவன், பேழை, தீப்பந்து காவடி

10. வேறு விடயங்கள்:

- மைதானம் போன்ற இடம் ஒன்றில் பொருத்தமான முறையில் அம்மைதானத்தைச் சுற்றி ஊர்வலம் ஒன்று செல்ல ஒழுங்கமைப்புச் செய்து கொள்ள முடியும்.

- ஒரு முறை பயிற்றுவித்த இவ்வூர்வலத்தை இன்னொரு நாளில் தவணை மத்தியில் கலை நிகழ்வு ஒன்றுடன் ஒழுங்கமைப்புச் செய்து அதன் ஒரு அங்கமாக அரங்கேற்ற முடியும்

- அங்கு உங்கள் விருப்பப்படி உடைகள் போன்றவற்றைத் தயார் செய்து கொள்ள முடியும். அதிலும் வகுப்பறையில் முதற் சந்தர்ப்பத்தை செயற்படுத்தும் போது விஷேட உடைகளைத் தயார் செய்துகொள்வதற்குத் தேவையில்லை.

- இங்கு கூறப்பட்டுள்ள செயற்பாடுகளை வித்தியாசப்படுத்துதல். பாடல் அடிகளை கூட்டிக் குறைத்தல், தாளம் போடுவதற்கு ஏற்ற உபகரணங்களைப் பயன்படுத்துதல். பொருத்தமான நடிப்புப் பயிற்சி போன்றவைகளை ஆசிரியரின் விருப்பப்படி செய்து கொள்ள முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06

# தனி நபர் மற்றும் சமூக விருத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.1

# முன் பள்ளியின் வரவேற்பு வைபவம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. தலைப்பு : முன் பள்ளியின் வரவேற்பு வைபவம்

03. பிரதான இலக்கு : உணவு மேசையில் ஒரு குழுவாக இருந்து உணவு உட்கொள்ளும் விதத்தைப் பயிற்றுவித்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- பல்வேறு உணவு வகைகளை இனங்காண்பர்

திறன்கள் :
- உணவு உட்கொள்ளும்போது பல்வேறு உபகரணங்களை முறையாகப் பயன்படுத்தும் திறனைப் பெற்றுக் கொள்வர்.

பண்புகள் :
- உணவு உட்கொள்ளும்போது பின்பற்றப்பட வேண்டிய பழக்கவழக்கங்களை மதிப்பர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- உணவு மேசை, ஒரு மேசைப் புடைவை, இயற்கைப் பூச்சாடி, ஒரு சோற்றுத் தட்டு, இரண்டு கறித் தட்டுக்கள், பெரிய கரண்டிகள், சின்னக் கரண்டிகள், கைத்துடைப்பம், கை கழுவும் கோப்பை, தண்ணீர்க் குவளை போன்ற உபகரணங்களைச் சேகரித்துக் கொள்ளல். (அழகான, உடையாத உபகரணங்களைப் பயன் படுத்துவது பொருத்தமானது)
- சோறு, பருப்புக்கறி, கருவாடு, மீன் போன்ற வேறு கறிவகைகள்
- கீரைச் சுண்டல், வேறு மரக்கறி வகைகள், பழவகைகள், (பழுத்த வாழைப்பழம்) போன்றவற்றைச் சேகரித்துக் கொள்ளல். (இவ்வுணவு வகைகளை பிரதேசத்துக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளலாம்)
- இச்செயற்பாடு பற்றி பெற்றோருக்கு அறிவுறுத்தல்
- தேவையான உபகரணங்களையும் பொருட்களையும் அவர்கள் மூலமாகப் பெற்றுக்கொள்ளல்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- உணவு மேசையை ஒழுங்கு செய்தல்
- உணவுப் பாத்திரங்களை வைத்தல்
- தேவையான உபகரணங்களை வைத்தல் (மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப)

படி 2
- இன்று நாம் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து பகல் உணவு உண்போம்.
- அனைவரையும் உணவு உண்ண ஆயத்தப்படுத்தல்.
- ஆசிரியர் பிள்ளைகளுடன் உணவு மேசையில் அமருதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உணவு உண்ணமுன் தயாராகுதல்
- கைத்துடைப்பத்தை விரித்துக்கொள்ளல்
- கைகளைக் கழுவிக் கொள்ளல்
- உணவைப் பரிமாறிக்கொள்ளும்போது சோற்றைப் பெரிய கரண்டியால் தனது பீங்கானில் பரிமாறிக் கொள்ளல்
- சிறிய கரண்டியால் கறிகளைப் பரிமாறிக் கொள்ளல்
- ஆசிரியர் முன்மாதிரியாக நடந்துகொள்வார்
- பிள்ளைகளுக்குத் தனித்தனியாக தமது பீங்கானில் உணவைப் பரிமாறிக் கொள்ள வழிசெய்தல்

படி 3
- உணவு உண்ணும்போது
- வலது கையைப் பயன்படுத்தச் செய்தல்
- உணவுத் தட்டில் விரல் நுனிகளால் சோறு, கறி என்பவற்றை ஒரு பக்கத்திலிருந்து எடுத்து பிசைந்து கொள்ள வேண்டுமென்பதைக் காண்பித்தல்
- உண்ணும்போது சப்தம் வராமல் உணவை மெல்லுதல்
- உணவு உண்டபின் கை கழுவுதல், துடைத்துவிடுதல்
- நீர்க்குவளையைக் கையால் பிடித்து அருந்துதல்

படி 4
- உணவு உண்டபின் வாழைப்பழம் வழங்குதல்
- வாழைப்பழத்தோலைக் குப்பைக் கூடையில் இடுமாறு செய்தல்
- உணவு உண்டபின் தனது பீங்கானைக் கழுவுதல். துடைத்தல், மீள இருந்த இடத்தில் வைத்தல்
- ஆசிரியர் பிள்ளைகளுடன் இச்செயற்பாட்டில் ஈடுபடல் வேண்டும்

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- பிள்ளைகள் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளபோது அவர்களுக்கருகில் சென்று தேவையான தூண்டுதலை வழங்குதல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- பீங்கான், பெரிய கரண்டி, சிறிய கரண்டி, உண்ணல், பழவகை, பழக்கவழக்கம், நீர்க்குவளை
- பெரிய, சிறிய, உணவு மேசை, சடங்கு சம்பிரதாயம்

**10. வேறு விடயங்கள்:**

- பிள்ளைகள் வருகை தரும் முதல் நாளிலேயே அவர்களை வரவேற்பதை நோக்காகக் கொண்டு இச் செயற்பாட்டை ஒழுங்கு செய்தல் உசிதமானது.
- இவ்விழாவில் பெற்றோர்களையும் பங்கேற்கச் செய்ய முடியும். பெற்றோர்களை ஒருவரை ஒருவர் அறிமுகமாகிக் கொள்ள வழிசெய்தல், முன் பள்ளியின் செயற்பாடுகள் பற்றி பெற்றோர்களுக்கு அறிவுறுத்துதல் ஆகியவற்றுக்கு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.2

# நாம் எல்லோரும் நண்பர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. தலைப்பு : நாம் எல்லோரும் நண்பர்கள்.

03. பிரதான இலக்கு : பிள்ளைகளுக்கிடையில் நட்புறவை விருத்தி செய்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- நண்பர்களின் பெயர்களை ஞாபகத்தில் வைத்திருத்தல்

திறன்கள் :
- செவிமடுக்கும் திறனை விருத்தி செய்துகொள்வர்.
- திருத்தமான சொற்களைப் பயன்படுத்திப் பேசுவர்.

பண்புகள் :
- நட்புறவை மேலும் விருத்திசெய்து கொள்வர்.
- உணர்வுபூர்வமாக ஏனையோரின் கருத்துக்களைச் செவிமடுக்கப் பழகுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது இவ்விருவராகச் செயற்படும் ஒரு செயற் பாடாகும்.

06. முன் ஆயத்தம்:

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- பிள்ளைகளை இவ்விருவராகக் குழுக்களாக்குக.
- எதிரெதிரே இருவரையும் அமரச்செய்க. பின்னர் தனது பெயர், தான்விரும்பும் பெயர், தான் உண்ண விரும்பும் மிக விருப்பமான உணவுவகை, தான் அதிகமாக நேசிக்கும் நபர் போன்றவற்றை முன்னாலுள்ள நண்பனிடம் கூறச்செய்தல். தனது நண்பனின் அனைத்து தகவல்களையும் நன்கு செவிமடுக்குமாறு அறிவுறுத்துக.

படி 2
- முழு வகுப்புப் பிள்ளைகளையும் ஓரிடத்திற்கு அழைத்து தனது நண்பனைப் பற்றி அவன் தனக்குக் கூறிய தகவல்களை ஏனைய குழுக்களின் முன் முன்வைக்கச் செய்தல்.
- நட்புறவுத்தன்மை, மனப்பாங்கு விருத்தி, உணர்வுபாவம் போன்ற பண்புகள் பற்றி ஆசிரியை எளிமையான கருத்துக்களால் விளக்கிக் காட்டல் வேண்டும்.
- இவ்விதமாக முழுவகுப்பு பிள்ளைகளையும் பேச்சு செயற்பாட்டில் ஈடுபடுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- முதலிலேயே முன்வரும் பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- முன்வந்தவர்களை உற்சாகப்படுத்த கை தட்டுதல்.
- முன்வராதவர்கட்கு ஆர்வமூட்டுதல்.
- கருத்துக்களைக் கூறுவதில் இடர்படும் பிள்ளைகளுக்கு உதவுதல்.
- இயலாதவர்கட்கு ஆசிரியையின் உதவியுடன் இரண்டு வசனங்களையாவது ஒழுங்குபடுத்திக்கூற வாய்ப்பளித்தல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- மாணவர்களின் பெயர்கள்.
- நட்புறவுத்தன்மை

10. வேறு விடயங்கள்:

- அறிமுகமான பின்னர் அவரவர்களின் பொதிகளை எடுத்து உணவு வகைகளைப் பரிமாறிக்கொண்டு தேநீர் அருந்துவதற்கு ஏற்பாடு செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.3

## மத வழிபாட்டுத்தலம் செல்ல ஆயத்தமாவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. தலைப்பு : மத வழிபாட்டுத்தலம் செல்ல ஆயத்தமாவோம்.

03. பிரதான இலக்கு : யாதேனுமொரு விடயத்துக்கு ஏற்கனவே ஆயத்தமாக வேண்டியதன் அவசியத்தை அறிமுகஞ் செய்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- மத வழிபாட்டுத் தலத்திற்குப் போகும்போது ஆயத்தமாக வேண்டிய முறையை அறிந்து கொள்வர்.

திறன்கள் :
- கடதாசிப் பூக்கள் வெட்டும் திறனை விருத்தி செய்து கொள்வர்.

பண்புகள் :
- யாதேனுமொரு விடயத்துக்கு ஏற்கனவே ஆயத்தமாவதன் முக்கியத்துவத்தை மதிப்பர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஓர் ஒன்றிணைந்த செயற்பாடு.

06. முன் ஆயத்தம் :
- வெள்ளை, மஞ்சள் நிறப்பூக்கள், வெட்டப்பட்ட கடதாசிப் பூ மாதிரிகள் சில, இரண்டு பெரிய தட்டுக்கள், கடதாசிப் பூக்களை ஒட்டுவதற்காக டிமை கடதாசி, பசை, கம், கத்தரிக்கோல்

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- இப்பொழுது நாம் மத வழிபாட்டுத் தலத்திற்குப் போவதற்கே ஆயத்தமாகிறோம். முற்றவெளிக்குப் போவோம். (பல்வேறு சமயப்பிள்ளைகள் இருந்தாலும் அவர்களையும் பங்கேற்கச் செய்தல்.)
- மத வழிபாட்டுத் தலத்திற்குப் போகும்போது நாம் என்ன எடுத்துச் செல்ல வேண்டும்?
- நாம் இப்போது பூப்பறிக்கச் செல்வோம். (தயாராதல்) அதோ அதோ அழகான பூக்கள் மலர்ந்துள்ளன. என்னோடு பூப்பறிக்க வாருங்கள். (பூப்பறிக்கும் விதம்) பூப்பறிக்கும்போது கிளைகளை உடைக்கக் கூடாது.
- பறிக்கும் பூக்களைத் தட்டுக்களில் இடுங்கள். இதழ்கள் உடையும். மெதுவாகப் பூக்களைப் பறியுங்கள். உயரமான கிளைகளுக்கு மேலே பாயுங்கள்.
- பூக்களின் பெயர்களைக் குறிப்பிடல்.

  ஆ.... இதோ ஒரு வண்ணத்துப்பூச்சி..... நல்ல அழகானது.... வண்ணத்துப்பூச்சி எப்படிப் பறக்கின்றது?....... பிடிக்க நினைக்கின்றது..... அதோ மேலே செல்கிறது...... பிடிப்பதற்கு மேலே பாய்வோம்..... ஐயோ முடியாது..... பாவம் இல்லையா?........ வண்ணத்துப்பூச்சியின் சிறகு உடைந்தால் அது செத்துவிடும். எங்களுக்குப் பாவம் ஏற்படும். நாம் நல்ல பிள்ளைகள் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பூப் பறிப்போம். பூப்பறிப்போம். நிறைய பூக்கள் பறித்தோம். தண்ணீர் தெளிப்போமா? குழாயைத் திறவுங்கள். இறுக்கமாக இருக்கிறதா? உடையும் மெதுவாக. அதோ தண்ணீர் வருகிறது. தண்ணீர் தெளியுங்கள். குழாயை மூடுங்கள். பூத்தட்டை ஒரு பக்கத்தில் வைப்போமா? (பூத்தட்டை இரு கரங்களாலும் சுமந்து சென்றவண்ணம்)

  வண்ண வண்ண பூக்கள் - வடிவான பூக்கள்

  மணங் கமழும் பூக்கள் - மனதிற்கினிய பூக்கள்

படி 2

- இப்பொழுது வேறு என்ன எடுக்க வேண்டும்? தேங்காய் எண்ணெய், .... ஆ ...... போத்தலில் எண்ணெய் இல்லையா? போத்தலும் காசும் எடுத்துக்கொண்டு கடைக்குப் போவோமா? போத்தலையும் காசையும் கவனமாகப் பிடித்துக் கொள்ளுங்கள். இப்பொழுது போவோம். மகன் அதோ வீதியில் வாகனம் வருகிறது. வேகமாக செல்கிறது. நாம் இப்போது எந்தப் பக்கத்தால் போக வேண்டும்? வலப்பக்கம் பற்றிய விளக்கம். ஹா.... ஹா.... ஓடக் கூடாது. வாகனங்களில் மோதுவீர்கள். சரி. மெல்ல மெல்ல .... வலப் பக்கமாக ...... கவனமாகக் கடைக்குச் செல்வோம். அதோ ஒரு பேரூந்து வேகமாக வருகிறது. (சப்தம்) ஓரமாகுவோம். ஆ..... இதோ ஒரு தண்ணீர்க் குழி. இப்பொழுது என்ன செய்வோம்? ....... சேறுபடும்.... விழும்.... போத்தல் உடையும்.... காசு விழும்.... எனவே கவனமாக ஓரத்தால் செல்வோம். எண்ணெய், விளக்குத்திரி என்பவற்றை பூத்தட்டு உள்ள இடத்தில் வைப்போம்.

படி 3

- இப்பொழுது கொண்டு செல்லும் பொருட்கள் எல்லாம் தயாரா? அப்படியென்றால் மத வழிபாட்டுத் தலத்திற்குச் செல்லத் தயாராகுவோமா? நாம் சுத்தமாகிக் கொள்ள வேண்டும் தானே. இந்நேரம் குளிக்க முடியாதல்லவா? நாம் முகம் கழுவுவோம். சவர்க்காரம் பூசுவோம். கண் வேகுகின்றதா? அவசரமாக கண்களைக் கழுவுவோம். கை கால்களைக் கழுவுவோம்.
- ஈரத்தோடு ஓட வேண்டாம். என்ன நடக்கும்? வழுக்கி விழுமா? அதோ விழுந்திட்டார். அவசரமாக எழுப்புவோம். நொந்ததா?
- துவாயை எடுத்து துடைத்துக் கொள்ளுங்கள். ஆடை அணிந்து கொள்ளுங்கள். இந்த அழகான சட்டை நல்லதா? இல்லை இல்லை. எளிமையான வெள்ளை ஆடை அணிந்து கொள்ளுங்கள். தலையை வாருவோம். கொஞ்சம் பவுடர் பூசுவோம். இப்பொழுது கண்ணாடியில் அழகா என்று பாருங்கள். நல்ல அழகு. சுத்தமாயிருக்கிறது..
- எண்ணெய், பூக்கள், விளக்குத் திரி எடுத்துச் செல்வோம்.

படி 4

- இப்பொழுது நீங்கள் பூக்கள் பறித்தீர்கள் தானே. இந்தப் பெரிய தட்டு இரண்டிலும் அப்பூக்கள் உள்ளன.
- இது என்ன நிறப் பூ? மஞ்சள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இது என்ன நிறப் பூ? வெள்ளை
- இத்தட்டிலிருந்து விரும்பிய மூன்று நிறப் பூக்கள் எடுங்கள்.
- மகன் எடுத்த பூ வெள்ளை. மகன் எடுத்த பூ மஞ்சள்.
- நல்லது நாங்கள் மஞ்சள், வெள்ளை என இரண்டு குழுக்களாகப் பிரிவோம். எனது கையில் மூன்று வெள்ளைப் பூக்கள். எனது கையில் மூன்று மஞ்சள் பூக்கள்.
- நீங்கள் எடுத்த பூக்களைத் திருப்பி பெரிய தட்டில் போடுங்கள்.
- குழல் சத்தம் கேட்டதும் ஓடிப்போய் ஒரே நிறப் பூக்கள் இரண்டை எடுங்கள்.
- கொண்டு வந்த பூவின் நிறத்துக்கு ஏற்ப இரண்டு குழுக்களாக வேறாகுங்கள். (இவ்வாறு பல தடவைகள் நிறத்துக்கு ஏற்பத் தெரிவுசெய்தல்.)

படி 5

- நாம் இப்பொழுது ஒரு சிறிய சித்திரம் வரைவோம். வகுப்பறைக்குச் சென்று வழங்கப்பட்ட நிறத்தாளின் மேல் பூவை வைத்து சுற்றிலும் வெட்டி எடுப்பதில் ஈடுபடுத்தல்.
- வெட்டிய பூக்களை நிலத்தில் விரித்துள்ள கடதாசியில் ஒட்டச் செய்தல்.

### 08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக :

- அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றுகிறவர்களைப் பாராட்டுதல்.
- நடிப்பில் ஈடுபடுவதைப் பாராட்டுதல்.
- தெரிவு செய்வதில் இடர்படும் மாணவனுக்கு உதவுதல்.

### 09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- எண்ணெய், பூக்கள், மணம், தட்டு, போத்தல், மோட்டார் வண்டி, பேரூந்து, வாகனங்கள்.

  ஆயத்தம்

### 10. வேறு விடயங்கள்:

- மாணவர்களின் இனம் அல்லது சமயத்துக்கு ஏற்ப இச்செயற்பாட்டைப் பொருத்தமாக மாற்றிக் கொள்வது மிகவும் நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.4

# எங்கள் விளையாட்டு வீடு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. தலைப்பு : எங்கள் விளையாட்டு வீடு

03. பிரதான இலக்கு : குழுவாக இணைந்து ஒரு விளையாட்டு வீடு அமைத்தல்

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- விளையாட்டு வீடு என்னும் எண்ணக்கருவை அறிந்து கொள்வர்.

திறன்கள் :
- பல்வேறு கருவிகள், உபகரணங்களைப் பயன்படுத்தும் திறனைப் பெறுவர்.

பண்புகள் :
- குழுவாகச் செயற்பட்டு இன்புறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- விளையாட்டு வீடு அமைப்பதற்குத் தேவையான உபகரணங்கள். தூண்களுக்கான கம்புகள், கூரைக்கான கம்புகள், கூரை வேய்வதற்கான ஓலைகள், மெழுகுப் புடைவை, சிரட்டை, இலை வகைகள், சிறிய கற்துண்டுகள்
- வளர்ந்தோரின் உதவியுடன் தேவையான உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளல்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1
- மாணவர்களை பல குழுக்களாகப் பிரித்து பல விளையாட்டு வீடுகளை அமைப்பதில் ஈடுபடுத்தல்.
- ஆசிரியர் பிள்ளைகளுடன் விளையாட்டு வீடு பற்றிப் பேசுதல்.
- ஓர் இடத்தைத் தெரிவு செய்தல்.
- முன் பள்ளித் தோட்டத்தில் சமதரையான ஓர் இடத்தைத் தெரிவு செய்து கொள்ளல் பொருத்தமானது. இலகுவில் குழி தோண்டி தூண்களை நட்டக்கூடியதாக இருத்தல் முக்கியமானது.

படி 2
- விளையாட்டு வீட்டுக்குச் சேகரிக்கும் தூண்களை எண்ணுதல்.
- ஒன்று, இரண்டு, மூன்று எனவும்
- One, Two எனவும்
- எக, தெக, துன எனவும் எண்ணுதல்.
- கூரைக்குப் பயன்படுத்தும் கம்புகளை எண்ணுதல்.
- ஓலைகளை எண்ணுதல்.
- வளர்ந்தோரின் உதவியுடன் பல விளையாட்டு வீடுகள் நிர்மாணித்தல், குழிகள் தோண்டுதல், தூண்கள் நட்டுதல்
- ஒரு குழியில் ஒரு தூண் வீதம் பிள்ளைகளுக்கு இடச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 3 • பிள்ளைகள் ஒன்று சேர்ந்து ஒவ்வொரு வகையான விளையாட்டு உணவுகள் தயாரித்தல். (சிரட்டை, மணல், செங்கல் தூள், சூழவுள்ள மரங்களின் இலைகள் ஊடாக)

படி 4 • வீட்டைச் சுற்றியும் உள்ளேயும் கூட்டி சுத்தமாக வைத்திருத்தல். (சிறிய கூட்டுமாறு, தும்புக்கட்டை வழங்கி) பிள்ளைகளைக் கொண்டே செய்வித்தல்.

படி 5 • பிள்ளைகளை இரு குழுக்களாகப் பிரித்தல். ஒரு குழுவை வீட்டுக்கு வருகை தருகின்ற அதிதிகளாகவும் மற்றைய குழுவை வீட்டில் வசிப்பவர்களாகவும் நடிக்கச் செய்தல்.
- வீட்டிற்கு அதிதிகள் வருகை தரல்.
- அதிதிகள் வரும்போது பரிசில்கள் கொண்டுவரல்.
- பிள்ளைகளை அதிதிகளை வரவேற்கும் சம்பிரதாயங்களில் ஈடுபடுத்தல்.
- அதிதிகளை உபசரித்தல்.

படி 6 • விளையாட்டு வீட்டுக் காட்சியை வரைதல்.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக :

- பிள்ளைகள் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கும் வேளை அவர்களைப் பாராட்டுதல், அவர்களின் வேலையை மதித்தல். கூடியளவு ஊக்குவித்தல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- பரிசில், அதிதிகள், சம்பிரதாயங்கள்.
- 1 , 2 , 3 , 4 , 5
- ஒன்றிற்கு ஒன்று எண்களின் விளக்கம்

10. வேறு விடயங்கள்:

- கூரையை வேயும்போது அவ்வப் பிரதேசங்களில் செய்கின்ற முறைக்கேற்ப பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

  உதாரணம்:- வைக்கோல், இலைகள் பயன்படுத்தப் படுமாயின் அவற்றைப் பயன்படுத்தலாம்.

- முதியோரை கண்ணியப்படுத்தல், முதியோர் சொல்லுக்குக் கட்டுப்படுதல், விருப்பை ஏற்படுத்தல், மரியாதைப் பழக்கவழக்கங்களை செயற்படுத்துதல். சூழலை அவதானித்தல், இரசித்தல் போன்ற வற்றுக்கு சந்தர்ப்பம் வழங்குக.

- பிள்ளைகளின் சித்திரத்தை வகுப்பறையில் காட்சிப்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.5

# உடல் உறுப்புக்களை இனங்காண்போம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. தலைப்பு : உடல் உறுப்புக்களை இனங்காண்போம்.

03. பிரதான இலக்கு : உடலின் பல்வேறு உறுப்புக்களை இனங்காண வழிசெய்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- உடல் உறுப்புக்களைப் பெயரிடப் பழகுவர்.
- ஒவ்வொரு உறுப்புக்களாலும் ஆற்றப்படும் செயல்கள் வித்தியாச மானவை என அறிந்துகொள்வர்.

பண்புகள் :
- உடல் உறுப்புக்களை அறிவதன் மூலம் இன்பம் பெறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- பழங்கள், தாளக்கருவி அல்லது அதுபோன்ற ஒரு பொருளைப் பெற்றுக்கொள்ளல்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- பிள்ளைகளை வட்டமாக நிற்கச் செய்தல்.
- ஆசிரியர் முன் வந்து நடிப்பு வடிவில் முகத்தின் உறுப்புக்களை காட்டுதல். மாணவர்களிடமும் வினவுதல்.

ஆசிரியர் : இதோ என் தலை.
எங்கே உன் தலை?
பிள்ளைகள் : இதோ என் தலை.

ஆசிரியர் : இதோ என் கண்கள்.
எங்கே உன் கண்கள்?
பிள்ளைகள் : இதோ என் கண்கள்.

ஆசிரியர் : இதோ என் மூக்கு.
எங்கே உன் மூக்கு?
பிள்ளைகள் : இதோ என் மூக்கு.

ஆசிரியர் : இதோ என் காதுகள்.
எங்கே உன் காதுகள்?
பிள்ளைகள் : இதோ என் காதுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இதனைப் பல தடவை செய்து முகத்தின் உறுப்புக்களைப் பெயரிடுவர்.

படி 2 • ஆசிரியர் மீண்டும் முகத்தின் உறுப்புக்களைப் பற்றிக் கூறுதல்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | இதோ என் வாய். |
| | | எங்கே உன் வாய்? |
| பிள்ளைகள் | : | இதோ என் வாய் |
| ஆசிரியர் | : | இதோ என் பற்கள். |
| | | எங்கே உன் பற்கள்? |
| பிள்ளைகள் | : | இதோ என் பற்கள். |
| ஆசிரியர் | : | இதோ என் நாக்கு. |
| | | எங்கே உன் நாக்கு? |
| பிள்ளைகள் | : | இதோ என் நாக்கு. |

படி 3 • உடலின் ஏனைய உறுப்புக்கள் பற்றியும் அதேபோல் செய்து காட்டல்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | இதோ என் வயிறு. |
| | | எங்கே உன் வயிறு? |
| பிள்ளைகள் | : | இதோ என் வயிறு. |
| ஆசிரியர் | : | இதோ என் கைகள். |
| | | எங்கே உன் கைகள்? |
| பிள்ளைகள் | : | இதோ என் கைகள். |
| ஆசிரியர் | : | இதோ என் கால்கள். |
| | | எங்கே உன் கால்கள்? |
| பிள்ளைகள் | : | இதோ என் கால்கள். |

- இவ்வாறு உடல் உறுப்புக்களை இனங்காணல்.
- இறுதியில் எல்லா மாணவர்களும் தத்தமது உடல் உறுப்புக்களின் பெயர்களைக் கூற முன்வருதல்.
- கைதட்டிப் பாராட்டுதல்.

படி 4 • உடல் உறுப்புக்கள் ஒவ்வொன்றினாலும் ஆற்றப்படும் செயல்களை முன்வைத்தல். தான் செய்வதுபோல் மாணவர்களையும் செய்யுமாறு அறிவுறுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் : பிள்ளைகளுடன் தலையைத் தாழ்த்துதல்.
தலையைத் திருப்புதல்.
நீங்கள் என்ன செய்தீர்கள்?

பிள்ளைகள் : தலையை ஆட்டினோம். திருப்பினோம்.

ஆசிரியர் : பிள்ளைகளுடன் கண்ணைத் திறக்கிறார். மூடுகிறார்.
நீங்கள் என்ன செய்தீர்கள்? எவ்வாறு பார்த்தீர்கள்?

பிள்ளைகள் : கண்களைத் திறந்ததும் பார்த்தோம். மூடியதும் பார்க்க முடியவில்லை.
கண்களால் பார்க்க முடியும் என்பதை அறிந்து கொள்வர்.

ஆசிரியர் : தாளக்கருவியை ஒலிக்கச் செய்கிறார்.
பிள்ளைகளுக்கு காதுகளை மூடிக்கொள்ளச் செய்து மீண்டும் தாளக் கருவியை ஒலிக்கச் செய்கிறார்.

பிள்ளைகள் : காதுகளை மூடியவுடன் சப்தம் கேட்கவில்லை.
காதுகளால் சப்தத்தைக் கேட்க முடியும் என அறிந்து கொள்வர்.

- பிள்ளைகளுக்கு ஆசிரியர் பழத்துண்டுகளைச் சாப்பிடக் கொடுக்கிறார்.
  உங்கள் வாயால் என்ன செய்தீர்கள்?
  - பழம் சாப்பிட்டேனாம்.

  உங்கள் பற்களால் என்ன நடைபெற்றது?
  - கடித்துச் சாப்பிட முடிந்தது.

  உங்கள் நாவினால் என்ன நடைபெற்றது?
  - விழுங்க முடிந்தது.

  உங்களுக்குக் கதைக்கப் பயன்பட்டது எது?
  - நாக்கு

- இவ்வாறு வாயினால் நடைபெறும் செயல்களை வெவ்வேறாகக் கூற பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- நாம் உணவு உண்டால் வயிறு நிறையும்.
- கை தட்டுதல், கை கூப்பி வணங்குதல், உணவு உண்ணல், எழுதுதல் போன்றவற்றிற்கு பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பம் வழங்கல்.
- கைகளால் என்ன நடைபெற்றது என வினவி விடையைப் பெறுதல்.
  எழுத, கை தட்ட, பிடிக்க, கும்பிட முடிந்தது.
- பிள்ளைகளுடன் நடத்தல், ஓடுதல், பாய்தல்.
  இவற்றைச் செய்ய இரண்டு கால்களும் உதவின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இறுதியில் ஒவ்வொரு உடல் உறுப்புக்களாலும் ஆற்றப்படும் வேலைகளைப் பிள்ளைகளிடம் மீண்டும் வினவுதல்.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக :

- பிள்ளைகளே, இன்று நீங்கள் தத்தமது உடல் உறுப்புக்களை அறிந்து கொண்டீர்கள். அவற்றால் ஆற்றப்படும் செயல்களை அறிந்து கொண்டீர்கள். எல்லோரும் மிக நன்றாக விடை அளித்தீர்கள். என்று பாராட்டுதல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- முகம், வாய், பற்கள், மூக்கு. நாக்கு, வயிறு, கைகள், கால்கள்.

10. வேறு விடயங்கள்:

- பிள்ளைகளை இவ்விரண்டு பேர்களாக குழுக்களாக்கி இச்செயற்பாட்டில் ஈடுபடுத்தி இன்ப அனுபவத்தைப் பெற வழிசெய்தல்.

- மேற்கூறிய உடல் உறுப்புக்கள் தவிர்ந்த ஏனைய முழங்கால், முழங்கை போன்ற உறுப்புக்களையும் அறிந்துகொள்ள வழியேற்படும் வகையில் இச்செயற்பாட்டை விருத்திசெய்து கொள்வது பொருத்தமானது.

- முன்வைப்பதற்கு வேறொரு தாளத்தில் பாடக்கூடிய சிறிய பாடலை ஆக்கிக் கொள்ளவும் முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.6

# பலாப்பசைப் பிள்ளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. தலைப்பு : பலாப்பசைப் பிள்ளை

03. பிரதான இலக்கு : உடலின் பல்வேறு உறுப்புக்களை இனங்காண வழிசெய்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் : • மனித உடலின் பிரதான உறுப்புக்களைப் பெயரிடுவர்

திறன்கள் : • உடல் உறுப்புக்களின் கையாளு திறன்களை விருத்தி செய்து கொள்வர்.

பண்புகள் : • கதைகளைச் செவிமடுத்து இன்பம் பெறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் : • ஒரு பொம்மையை எடுத்து பலாப்பசைப் பிள்ளை போல் செய்து வைத்தல்

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1

- "இன்று நாம் கதை சொல்வோம்" என பிள்ளைகளை வட்டமாக நிற்கச் செய்தல்.
  நீங்கள் நரியாரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள் தானே,..... நரியார் எங்கே வாழ்கிறார்?...........
- ஒரு நாள் நரியாருக்கு நன்றாகப் பசித்தது. காட்டில் எல்லா இடங்களிலும் அலைந்தது........ இறுதியில் ஒரு முயல் கூட்டம் இருப்பதைக் கண்டது. மெல்ல மெல்ல நெருங்கி ஒரு முயலையாவது பிடித்துக் கொள்ளப் பார்த்தது. சரிவரவில்லை. நரியார் ஒழித்து ஒழித்து வருவதைக் கண்ட முயற் குட்டிகள் ஓடி ஒழிந்து கொண்டன. நரியாருக்குச் சரியான கோபம்.
- நரியார் யோசித்தார். நல்ல வேலை செய்ய வேண்டுமென்று நினைத்தார். பக்கத்திலுள்ள கிராமத்துக்குச் சென்ற நரிக்கு ஒரு பெரிய பலாப் பசைக் உருண்டை அகப்பட்டது. அதனை எடுத்துக்கொண்டு வந்த நரியார் ஒரு பலாப்பசைக் குழந்தை செய்தது. அக் குழந்தையை முயல்கள் விளையாடும் இடத்தில் வைத்துவிட்டு ஒழிந்து பார்த்துக் கொண்டிருந்தது.
- முயற்குட்டிகள் ஓடிப் பாய்ந்து விளையாட ஆரம்பித்தன. ஒரு முயற்குட்டி பலாப்பசைக் குழந்தையைக் கண்டது. அதனைக் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருந்தது. பின்னர் குழந்தையின் பெயர் என்ன என்று கேட்டது. பலமுறை கேட்டும் குழந்தை கதைக்கவில்லை. பலாப்பசைக் குழந்தைக்கு கதைக்கமுடியாதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரியாருக்கு சரியான கோபம். வலது கையால் குழந்தைக்கு ஓர் அடி அடித்தது. கை ஒரேயடியாக ஒட்டிக் கொண்டது. அதன் பின்னர் இடது கையாலும் ஓர் அடி அடித்தது.அக்கையும் ஒட்டிக்கொண்டது. பின்னர் வலது காலால் அடித்தது. அதுவும் ஒட்டிக்கொண்டது. இடது காலால் அடித்தது. அதுவும் ஒட்டிக் கொண்டது. தலையால் அடித்தது. அதுவும் ஒட்டிக்கொண்டது. அதன் பின்னர் வயிற்றால் அடித்தது. அதுவும் ஒட்டிக்கொண்டது. முயல் அதிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயற்சித்தது. முடியவில்லை. முயற்குஞ்சுக்கு சரியான துக்கம். அழத் தொடங்கியது. நான் இதைச் செய்யாமல் இதைப்பற்றி யோசித்து இருந்தால் இப்படி ஆகி இருக்கமாட்டாதே என்று நினைத்தது. அவ்வேளையில் நரி சிரித்துக்கொண்டு அருகில் வந்தது.

படி 2

- வலது கை, இடது கை என்ற எண்ணக்கரு மாணவர்களுக்கு விளங்கும் வகையில் இச் இச்செயற்பாட்டை மீண்டும் செய்க.
- மாணவர்களின் தலை, வலது கை, இடது கை, வலது கால், இடது கால், வயிறு போன்ற உறுப்புக்களை எல்லோருக்கும் தெரியும்படி காட்டுவதற்கு வழிகாட்டுக.

படி 3

- இக்கதையை விரும்பிய மாணவர்களுக்கு மீண்டும் கூற சந்தர்ப்பம் வழங்குக.
- பிள்ளைகளைப் பல குழுக்களாகப் பிரித்து பொம்மைப் பிள்ளைகள் சிலவற்றை வழங்கி, இச்செயற்பாட்டை மீண்டும் செய்யவழி செய்ய முடியும்.

### 08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக :

- உதாசீனமாக நடந்து கொள்ளும் பிள்ளைகளுக்கு தனிப்பட்ட முறையில் உதவுக.
- இடம், வலம் என்ற சொற்களைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு செயன்முறை சந்தர்ப்பங்களை வழங்குக.
- விசேட ஆற்றல்களை வெளிப்படுத்தும் பிள்ளைகளைப் பாராட்டுக.

### 09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- கை, கால், வயிறு, தலை
- உடலின் பல்வேறு உறுப்புக்கள்.

### 10. வேறு விடயங்கள்:

- பொம்மைக் குழந்தையை சித்திரமாக வரையுமாறு பிள்ளைகளை ஈடுபடுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.7

## ஒரு குருவிக் கூட்டம் வந்திருக்கின்றது













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. **தலைப்பு** : ஒரு குருவிக் கூட்டம் வந்திருக்கின்றது.

03. **பிரதான இலக்கு** : மகிழ்ச்சி, துக்கம், கோபம், புதுமை போன்ற பண்புகளை இனங்காண வழிசெய்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- சந்தர்ப்பத்துக்கேற்ற முகபாவனையை அறிந்து கொள்வர். உணர்ச்சி பூர்வமான சந்தர்ப்பங்களைக் கூறுவர்.

**திறன்கள்** :
- மகிழ்ச்சிகரமான முகத்துடன் செயற்படுவர். (வெளிப்படக்கூடிய அசைவுகள்) அபிநயத்துடன் நடிப்பர்.

**பண்புகள்** :
- எப்பொழுதும் மகிழ்ச்சியாகக் காணப்படுவர். ஏனையோரின் துன்பங்களின்போது உதவுவர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒன்றிணைந்த செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- மகிழ்ச்சி, துக்கம், கோபம், புதுமை என்பன வெளிப்படக்கூடிய படங்கள், சித்திரங்கள் பலவற்றைத் தயாரித்துக் கொள்ளல்.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

படி 1
- ஆசிரியர் மாணவருடன் சேர்ந்து அபிநயத்துடன் நிகழ்ச்சிகளை முன்வைத்தல். அதோ மகன், அழகான சின்ன குருவிக் குஞ்சுகள் கீச் கீச் என்று சந்தோசமாக விளையாடுகின்றன. நீங்களும் குருவிக் குஞ்சுகள் போல் சந்தோசமாக அங்குமிங்கும் பறந்து விளையாடுகிறீர்கள். இச்சிறிய பாடலைப் பாடிய வண்ணம்.....

  குருவிக் குஞ்சுக் கூட்டம் கூட்டம் - மகிழ்ச்சி தா தா தா

  இப்பொழுது நீங்கள் ஏன் மகிழ்ச்சி அடைந்தீர்கள்?
  தாம் ஆசைப்படும் ஒன்று கிடைத்ததால் தானே?
  இதோ பாருங்கள். இந்த முகமும் உங்கள் அழகான முகங்கள் போலவா?.... சிரிக்கிறார்கள்....... எங்களுக்கும் ஏதேனும் ஒன்று கிடைத்தால் இதுபோலவா? அதோ மகன் பெரிய பூனையொன்று ..... மியாவ், மியாவ் என்று வருகிறது. இப்பொழுது நீங்கள் குருவிக் குஞ்சுகள் தானே. என்ன நினைக்கிறீர்கள்?..... பொல்லாத ஒன்றை, பொல்லாத ஒருவரைக் கண்டால் பயம் ஏற்படும் தானே"

- ஆகையால் நீங்களும் இப்போது பயப்படுகிற மாதிரி செய்து காட்டுங்கள். சிறகுகளை மடக்கிக் கொண்டு நன்றாக சுருண்டு கொள்ளுங்கள். நடுங்குங்கள் சப்தம் போட வேண்டாம். (ஆசிரியர் நடித்த வண்ணம்) அதோ பூனை மெல்ல மெல்ல குருவிக் குஞ்சுகள் அருகில் வந்துவிட்டது. நன்றாக மூச்சுப் பிடித்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்ந்தவுடன் ஒரு குஞ்சைப் பிடித்துக் கொண்டது. (பிள்ளைகள் கத்துகிறார்கள்) தூர ஓடிவிட்டது.

- இது போலவா நீங்கள் பயந்தீர்கள்? பாருங்கள். கண்கள் பெரிதாகிவிட்டன. சிறகுகளை ஒடுக்கிக் கொண்டன. அப்படியாயின் மகனே நாங்கள் பயந்தாலும் இப்படித்தானே?
  வானம் முழங்கும் போது பயம்
  மின்னல் மின்னும் போது பயம்
  தந்தை ஏசுவார் என்று பயம்
  ஆசிரியர் ஏசுவார் என்று பயம்

- நாம் பயத்தைப் போக்குவோமா? நாம் சரியாக இருந்தால் சரியானதைச் செய்தால் பயப்படுவதில்லை. குருவிக் குஞ்சுகள் மரத்தின் மேலே இருந்திருந்தால் பூனை பிடிக்குமா? அப்படியாயின் நாம் சரியானதைச் செய்வோமா?

- இப்போது பூனை பாய்ந்து குருவிக் குஞ்சைப் பிடித்துக் கொண்டு போய்விட்டது தானே.

- இப்போது நீங்கள் குருவிக் குஞ்சுகள் தானே? என்ன நினைக்கிறீர்கள்?..... ஐயோ, பாவம். எங்களுக்கு ஒருவர் குறைந்து விட்டது. எங்களுக்கு சரியான துக்கம். ஏன் நாங்கள் துக்கப்படுகின்றோம்? எங்களில் ஒருவர் இல்லாத காரணத்தால். அப்படியாயின் நாங்கள் எல்லோரும் இப்போது துக்கப்படுவோம்,... எங்களுக்குத் துக்கம் வந்தால் என்ன செய்வோம்... அழுவோம்..... அப்படியாயின் கொஞ்சம் அழுவோமா?

- இதோ பாருங்கள் இந்தப் படத்தை அழும்போது பிள்ளைகளில் தென்படும் பண்புகள் பற்றிக் கதைத்தல்.

- நீங்கள் ஏதாவதொன்று கிடைக்காவிட்டால் அழுவீர்களா? அழுதால் குருவிக் குஞ்சு வருமா? இல்லை. ...... அப்படியாயின் நாமும் ஒன்று கிடைக்காவிட்டால் துக்கத்தைத் தாங்கிக் கொள்ளப் பழகிக் கொள்ளவேண்டும் சிலர் நண்பன் கோபித்தால் அழுகிறார்கள், அது நல்லதா? இப்பொழுது நீங்கள் பூனையோடு கோபித்தீர்களா? ஏன் கோபித்தீர்கள்? எங்களுக்கு கஷ்டமொன்றை ஏற்படுத்தினால் கோபம் வரும் தானே?

- இதோ இதைப் போலவா முகம். பாருங்கள். கண்ணைப் பெரிதாக்கிக் கொண்டு பொல்லாத முகம். இது போல ஆனால் நாங்களும் நோயாளி ஆகிடுவோம்.

- அப்படியாயின் நீங்கள் கோபம் எடுக்கவேண்டாம்......
  அம்மா ஏசினால் கோபம் எடுப்பீர்களா?
  அப்பா ஏசினால் கோபம் எடுப்பீர்களா?
  ஆசிரியர் ஏசினால் கோபம் எடுப்பீர்களா?
  நண்பர்கள் ஏசினால் கோபம் எடுப்பீர்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இவர்கள் எல்லோரும் ஏசுகிறதாக சொல்கிறீர்கள். அவர்கள் உங்களுக்கு நல்லதைத் தானே சொல்லித்தருகிறார்கள். இந்தப் பூனையும் அதற்கு பசி வந்துதானே குருவிக் குஞ்சைப் பிடித்துக் கொண்டது.

- அதற்கிடையில் பறந்து சென்ற குருவிக் குஞ்சு திரும்பவும் வருகிறது. சரியான புதினம்..... சரியான மகிழ்ச்சி. இப்பொழுது விபரத்தைக் கேளுங்கள். (ஆசிரியரிடம் கேள்வி கேட்கிறார்கள். பூனை உங்களை எப்படிப் பிடித்துக் கொண்டது? நீங்கள் எப்படித் தப்பினீர்கள்....?) நல்லது. இப்பொழுது குருவிக் குஞ்சு திரும்ப வந்து சேர்ந்ததாலே மிகுந்த மகிழ்ச்சி. இப்பொழுது நாங்கள் எல்லோரும் சேர்ந்து மீண்டும் மகிழ்ச்சி அடைவோம்.

  குருவிக் குஞ்சுக் கூட்டம் - மகிழ்ச்சி தா தா தா

படி 2
- நாம் ஒரு சிறிய கதை சொன்னோம் தானே. அந்தக் கதையில் வந்தவர்கள் யார்? பூனையும் குருவிகளும்
  மிருகங்கள் எத்தனை? ஒன்று, இரண்டு
  பூனை எப்படி நடக்கும் அதற்கு எத்தனை கால்கள்?
  குருவி எப்படி நடக்கும் அதற்கு எத்தனை கால்கள்?
  எது பறக்கும்?

படி 3
- பொருத்தமான முறையில் இச்செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கு பிள்ளைகளை நெறிப்படுத்துக.
- வகுப்பறைக்குச் சென்று பூனையையும் குருவியையும் வரைந்து நிறந் நீட்டுதல்.

### 08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- கதையை நடித்துக் காட்ட ஒன்றுசேரும்போது பாராட்டுதல். கை தட்டுதல்.
- பல்வேறு விரும்பிய பாத்திரங்களை ஏற்று அபிநயத்துடன் நடிப்பதற்கு மாணவர்களைத் தூண்டுதல்.

### 09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- மகிழ்ச்சி, துக்கம், கோபம், பூனை, குருவி, அழுகிறது, சிரிக்கிறது
- ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு
- பயம், மகிழ்ச்சி, கோபம், கெட்டகுணம்

### 10. வேறு விடயங்கள்:

- ஆசிரியரின் விருப்பப்படி பல்வேறு பண்புகளை முன்வைத்து, நடித்த வண்ணம் இந்த எண்ணக் கருக்களை முன்வைக்க முடியும்.
  உதா:- முகமூடி பயன்படுத்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.8

# இது எனது தாய் நாடு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. **தலைப்பு** : இது எனது தாய் நாடு

03. **பிரதான இலக்கு** : தாய் நாட்டின் மீது அபிமானத்தை ஏற்படுத்திக் கொள்ள உறுதுணை அளித்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- இலங்கையின் வரைபடத்தை அறிந்து கொள்வர்.

**திறன்கள்** :
- ஒரு தேசாபிமான பாடலைப் பாடும் திறனைப் பெறுவர்.

**பண்புகள்** :
- "இது எனது தாய் நாடு" "இது எனது தேசம்" போன்ற தேசாபிமானத்தை ஏற்படுத்திக் கொள்வர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- வெண்கட்டி, நிறமூட்டப்பட்ட தேங்காய்த் துருவல் போன்றவற்றைச் சேகரித்துக் கொள்ளல்.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி 1**
- "இந்த நாடு எனது நாடு - நான் பிறந்த நல்ல நாடு
  விளையும் வளரும் அழகு நாடு - எனது சொந்த தாய் நாடு

  என்ற பாடலைப் பாடிய வண்ணம் ஆசிரியர் வகுப்பறையில் நுழைதல்.
  மாணவர்களுடனும் பாடலைப் பாடுதல்.

**படி 2**
- இலங்கைப் படத்தை வெண்கட்டியால் நிலத்தில் பெரிதாக வரைதல்.
- நான்கு நிறங்களில் காய்ந்த தேங்காய்த் துருவலை தேவையான அளவு பிள்ளைகளுக்கு பகிர்ந்து கொடுக்கவும்.
- இலங்கைப் படத்தினுள் தேங்காய்த் துருவலைப் பரப்பி அலங்காரப் படுத்துவதற்கு அறிவுறுத்தல் வழங்குக.
- வெற்றுப் பின்னணி இல்லாதிருக்கும்படி இலங்கைப் படத்தைச் சுற்றி பிள்ளைகளைக் கை கோர்த்து வட்டமாக நிற்கச் செய்க.
- நாம் வாழும் நாட்டின் வடிவம் இவ்வாறுதான் என்பதை பிள்ளைகளுக்கு விளக்கிக் காட்டுக நாம் எல்லோரும் ஒற்றுமையாக இந்நாட்டில் வாழவேண்டும் என்பதை பிள்ளைகளுக்கு விளக்கிக் கூறுக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 3 • இலங்கைப் படத்தைச் சுற்றி நின்றுகொண்டு அங்க அசைவுகளுடன் பின்வரும் பாடலை பிள்ளைகளுடன் பாடுக.

இது எனது தாய் நாடு - நான் பிறந்த தாய் நாடு.
தாய் மீது நாம் அன்பு - நாட்டின் மீது நாம் அன்பு
ஒற்றுமை, சமாதானம் - மகிழ்வோடு நாம் வாழ்வோம்.
தாய் நாட்டை அழகுசெய்ய - சிறுவர் நாம் ஒன்று சேருவோம்.

- முன் பள்ளிப் பாடலையும் முன்வைக்க.
- எமது தாய்நாடு பற்றி பிள்ளைகளுக்கு மிக எளிமையாக விளக்குக. இலங்கையின் வடிவம் பற்றி எளிய விளக்கமொன்றை வழங்குக.
- சக வாழ்வு, ஒற்றுமை, சமாதானம் பற்றிய எண்ணக் கருக்களைப் புரிய வைக்க மிக எளிய உதாரணங்களைக் காட்டுக.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- அனைத்து செயற்பாடுகளின் இறுதியிலும் பிள்ளைகளைப் பாராட்டுக.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- தாய் நாடு, இலங்கை, நாடு
- எனது தாய் நாடு, இலங்கை, ஒற்றுமை

**10. வேறு விடயங்கள்:**

- ஆசிரியரின் விருப்பப்படி ஒரு பாடலை செயற்பாட்டுடன் இணைத்து ஆக்க பூர்வமான நடிப்பில் ஈடுபடுவதற்கு பிள்ளைகளைப் பழக்குக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.9

# அந்த மணம் இன்னும் எனக்கு ஞாபகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. **தலைப்பு** : அந்த மணம் இன்னும் எனக்கு ஞாபகம்.

03. **பிரதான இலக்கு** : ஐம்புலன்கள் சிலவற்றால் உணரக்கூடிய நாற்றம், மணம், சுவை போன்றவற்றைப் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொடுத்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- நாற்றம், மணம், சுவை போன்ற எண்ணக் கருக்களை அறிந்து கொள்வர்.

**திறன்கள்** :
- பாடலுடன் அங்க அசைவுகளை முன்வைக்கும் திறனைப் பெறுவர்.

**பண்புகள்** :
- செயற்பாட்டில் ஈடுபடும் விருப்பை வளர்த்துக் கொள்வர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- புளி, எலுமிச்சை, பழவகைகள், நெல்லி போன்ற ஔடதங்கள் சிலவற்றையும் நறுமணமுள்ள பூக்கள் சிலவற்றையும் சேகரித்துக் கொள்ளல்.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி 1**
- பிள்ளைகளை வகுப்பறைக்கு வெளியே கூட்டிச் செல்லல். மிகவும் சுத்தமான பூக்கள் நிறைந்த மரங்கள் செறிந்த ஒரு நீரோடை உள்ள இயற்கை அழகு நிறைந்த ஓர் இடமாயின் மிகவும் பொருத்தமானது.
- பிள்ளைகளைக் குழுக்களாகப் பிரித்து தெரிவுசெய்த ஒரு பிரதேசத்தினுள் சுதந்திரமாக நடமாட சந்தர்ப்பம் வழங்குக. ஆசிரியர் எல்லாக் குழுக்களிடையேயும் சென்று நன்கு அவதானித்தல் வேண்டும்.
- எல்லோரையும் அமைதிப்படுத்துக. இப்பொழுது நல்ல சுத்தமான காற்றை நுரையீரல் நிறையும் வண்ணம் நெஞ்சினுள் உட்சுவாசிக்குமாறு அறிவுறுத்துக. மெதுவாக அக்காற்றை வெளிவிடுமாறு அறிவுறுத்துக. பிள்ளைகளுக்கு தமது உடலிலுள்ள புலன்களைப் பற்றி சுருக்கமாக அறிமுகப்படுத்துக. இவ்வாறு பல தடவைகள் இச்செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

**படி 2**
- அதன் பின் தன்னால் முகரக்கூடிய மணத்தை நன்கு நுகருமாறு கூறுக. மரஞ்செடிகொடிகளின் மணம், பூக்களின் மணம், சூழலில் காற்றுடன் கலந்து வரும் மணம் என்பன. இவற்றை மூக்கின் அருகில் எடுத்துப் பார்க்க இடமளிக்க வேண்டாம். தமது மூக்கிற்கு உணரக்கூடிய அளவு மட்டும் நுகரும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுறுத்துக. இச்செயற்பாட்டின்போது தொடர்புபடுகின்ற புலன்களை விளக்கிக் கூறுக.

- மீண்டும் அனைவரையும் ஓரிடத்துக்கு அழைக்க. தமது மூக்கினால் நுகர்ந்த நறுமணத்தை இரு கண்களையும் மூடிக்கொண்டு மீண்டும் ஞாபகத்திற் கொண்டுவருமாறு அறிவுறுத்துக. ஒரு மலர்ந்த பூவின் நறுமணத்தை நுகர்ந்த விதத்தை முகபாவனையால் காட்டுமாறு கூறுக. பிள்ளைகளின் முகங்களின் பிரகாசத்தை அவதானிக்குக.

படி 3

- எடுத்துவந்த நெல்லி, பழங்கள் ஆகியவற்றை ஒன்றுவிதம் பிள்ளைகளின் கைகளில் வழங்குக. அவற்றைச் சுவைத்துப் பார்க்க இடமளிக்க. வாயிற்கும் நாக்கிற்கும் விளங்கும் சுவையை முகபாவனையால் காட்டுவதற்கு சந்தர்ப்பம் வழங்குக. சுவையை முகபாவனையால் காட்ட முடியும் என்பதைப் பிள்ளைகளுக்கு வலியுறுத்துக.

  கசப்பு மருந்து குடித்தல்
  ஒரு கிண்ணம் இனிப்புப் பானம் அருந்துதல்.
  புளி எலுமிச்சம்பழத்தை சாப்பிடுதல்

- போன்ற காரியங்களால் புலன்கள் உணரும் உணர்வை அபிநயம் மூலம் காட்டுவதில் ஈடுபடுத்துக.

## 08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- விருப்புடன் செயற்பாடுகளை முன்வைக்கும் பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- அவதானிப்பில் தூண்டுதலை ஏற்படுத்துவதற்காக பிள்ளைகளை உற்சாக மூட்டுதல்.
- செயற்பாடுகளை இரசனையுடன் முன்வைத்தல்.
- தேவையான சங்கீதம், தாளவாத்தியம் ஆகியவற்றை பெற்றுக் கொடுத்தல்.
- எல்லாப் பிள்ளைகளினதும் திறமைகளைப் பாராட்டுதல்.

## 09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- தலை, உப அங்கங்கள், கண்கள், காதுகள், இரு உதடுகள், மூக்கு, கண் இமை
- நாற்றம், மணம், இனிமை

## 10. வேறு விடயங்கள்:

- ஆசிரியரின் விருப்பப்படி பாடத்திற்காகப் பயன்படுத்தும் பொருட்களை பிரதேசத்துக்குப் பொருத்தமானதாக மாற்றிக்கொள்வது பொருத்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.10

# நாம் நல்ல பிள்ளைகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. தலைப்பு : நாம் நல்ல பிள்ளைகள்.

03. பிரதான இலக்கு : ஏனையோருக்குத் துன்பம் விளைவிக்காத வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதை தெளிவுபடுத்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :
பண்புகள் :
- ஒழுக்கமாக நடந்து கொள்ள வேண்டும் என்ற மனப் பாங்கை விருத்திசெய்து கொள்வர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் : சிறுவர் கதிரை அல்லது மேசை / வாங்கு ஒரு குழாயினால் தயாரிக்கப்பட்ட சிறிய வட்டம். (சுக்கானுக்காக)

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1
- சிறுவர் கதிரைகளை அவர்களின் உதவியுடன் வகுப்பறைக்கு வெளியே கொண்டு செல்லல்.
- அவற்றை ஒரு பேரூந்தின் ஆசன அமைப்பில் வைக்கச்செய்து அவர்களை உட்கார வைத்தல்.
- ஒரு பக்கத்தின் முன்னால் ஒரு கதிரையை வைத்து சுக்கானைக் கையில் கொடுத்து ஒரு பிள்ளையை உட்கார வைத்தல்.
- ஒரு பிள்ளையை நடத்துனராக அதன் அருகில் நிற்கச் செய்தல்.

படி 2
- ஒரு பேரூந்தின் ஒலியைப்போல் ஒலித்த வண்ணம் ஆசிரியர் முன்னால் வருதல்.
- இன்று நான் உங்களுக்கு பேரூந்தில் பயணஞ்செய்யும் விதத்தைக் கூறப் போகின்றேன். இப்போது நீங்கள் பேரூந்தில் பயணஞ் செய்யும் பயணிகள். நான் ஏனையோருக்குத் தொல்லை கொடுக்கும் விதத்தில் இதில் பயணஞ் செய்கிறேன். இனி நான் பயணஞ் செய்யும் விதம் பிழையானது என நீங்கள் எனக்குச் சொல்லித் தர வேண்டும். இதோ நீங்கள் இப்போது பேரூந்தில் அமர்ந்திருக்கிறீர்கள்.
- பின்னர் ஆசிரியர் பேரூந்தில் ஏறுவது போல் பாவனை செய்து அருகிலுள்ளவர்களின் மேனியில் விழுந்து ஏனையவர்களைக் கீழே விழுத்திக் கொண்டு பிள்ளைகளுக்கு முன்னால் வருகிறார். அப்பொழுது பிள்ளைகள் ஏன் சார் எங்களை விழுத்திக் கொண்டு போகிறீர்கள்? என வினவுவர்.
- அவ்வேளையில் என்னை மன்னியுங்கள். பேரூந்தில் ஏறும்போது ஏனையோருக்குத் தொல்லை கொடுக்காது ஏற வேண்டும் அல்லவா?
- தயவு செய்து எனக்கு இடமளியுங்கள் என்று கேட்டால் நீங்கள் எனக்கு இடம் தருவீர்கள் தானே. Excuse me என்றா சொல்வது? ஆம் சார் என்று பிள்ளைகள் கூறுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 3
- ஆசிரியர் பிள்ளைகளின் முன்னிலையில் ஒரு பிள்ளையுடன் உரத்த தொனியில் கதைத்துக்கொண்டு போகிறார். பிள்ளைகளுக்கு அவர்களின் காதுகளை மூடிக்கொள்வதைக் காட்டுமாறு அறிவுறுத்தல்.
- அதை ஒரு தவறான செயல் என அறிந்துகொண்டு என்னை மன்னியுங்கள். நான் கதைத்தது சப்தம் கூடவா? எனக்கூறி மெதுவாகக் கதைக்கிறார்

படி 4
- ஆசிரியர் சாரதிக்குத் தொல்லை கொடுக்கும் விதத்தில் அவர் வாகனத்தைச் செலுத்தும் வேளையில் கதைக்கிறார். அப்போது பிள்ளைகள் சாரதி மாமாவுடன் கதைக்க வேண்டாம் என ஆசிரியரிடம் கூறுகின்றனர்.
- அவ்வேளை ஆசிரியர் என்னை மன்னியுங்கள். வாகனம் போகும் போது சாரதியுடன் கதைப்பது நல்லதில்லை தானே என கேட்கிறார்.

படி 5
- பேரூந்திலிருந்து இறங்குவதாகப் பாவனை செய்து ஆசிரியர் மணியை (பாடசாலை மணியை) ஒலித்துக் கொண்டே இருக்கிறார். அவ்வேளை பிள்ளைகள் ஒரு தடவை மட்டும் மணியை அடியுங்கள் சார் எனக் கூறுகின்றனர்.
- மன்னியுங்கள் பிள்ளைகளே, பேரூந்தில் இருந்து இறங்கும் போது ஒரு முறை மட்டும் தான் மணியை ஒலிக்கவேண்டும் எனக்கூறி I am sorry எனக் கூறுகிறார். செயற்பாட்டின் முடிவின்போது நாம் இப்போது பேரூந்தில் செய்த பயணம் முடிந்துவிட்டது. இப்பொழுது நாம் வகுப்பறைக்குச் செல்வோம்.

### 08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக :

- பிள்ளைகள் மிகவும் வெற்றிகரமாக செயற்பாட்டைச் செய்தாகக் கூறி கை தட்டி பாராட்ட வேண்டும். அதன்பின் பிள்ளைகளின் உதவியுடன் உபகரணங்களை இருந்த இடங்களிலேயே வைக்கவேண்டும்.

### 09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- பேரூந்து, பயணிகள், சாரதி, நடத்துனர், தயவுசெய்து, மன்னிக்கவும், I am sorry, Excuse me.
- ஒன்று, இரண்டு
- பேரூந்து, சாரதி, பயணிகள்

### 10. வேறு விடயங்கள்:

- இச் செயற்பாட்டின் போது புகையிரதத்தில் போவது போலவும் பாவனை செய்து காட்டலாம். பிரதேசத்துக்குப் பொருத்தமான செயற்பாடு எது எனத் தீர்மானிக்க.

  இச்செயற்பாட்டில் பல்வேறு படிகளைக் காட்டும் படங்கள், சித்திரங்களைக் காட்சிப்படுத்துவது உங்கள் செயற்பாடுகளை வெற்றிகரமாகச் செய்வதற்கு உறுதுணையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.11

# மூத்தோர்களைக் கவனிப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. தலைப்பு : மூத்தோர்களைக் கவனிப்போம்.

03. பிரதான இலக்கு : மூத்தோர்களைக் கவனிக்கும் பண்பினை விருத்தி செய்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- மூத்தோர்கள் யார் என்பதை அறிந்து கொள்வர்.

பண்புகள் :
- அன்பு, கருணை, இரக்கம் போன்ற பண்புகளை மதிப்பர்.
- மூத்தோர்களுக்கு மரியாதை செலுத்தும் பழக்கத்தைப் பெற்றுக் கொள்வர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- அம்மா அப்பாவுக்கு மரியாதை செலுத்துவதைக் காட்டும் படம்
- பாட்டனையும் பாட்டியையும் குளிப்பாட்டும் காட்சி
- முதியவர் ஒருவருக்கு பாதையைக் கடக்க ஒரு பிள்ளை உதவும் சித்திரம்.
- நோயினால் கட்டிலில் படுத்திருக்கும் ஒரு முதியவருக்கு அருகில் சென்று உணவூட்டும் படம்.
- ஒரு காலில்லாத ஒருவர் சக்கர நாற்காலியில் பாதையில் செல்லும்வேளை அதைத் தள்ளுவதற்கு ஒரு பிள்ளை உதவும் படம்
- தனது தாய் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துவரும் போது பிள்ளையும் ஒரு சிறிய வாளியில் தண்ணீர் எடுத்துவரும் காட்சி என்ற வகையில் தயாரித்த பல சித்திரங்களை ஆயத்தமாக வைத்துக் கொள்ளல்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- ஆசிரியர் வயது முதிர்ந்த (பாட்டி, பாட்டன் ஆயின் மிகவும் பொருத்தமானது) ஒருவரைப்போல் பாவணை செய்து வகுப்பறைக்குள் வருதல்.
- தயாரித்த அட்டைகளைப் பிள்ளைகளுக்குக் காண்பித்து அச் சித்திரங்களை அறிந்து கொள்ள இடமளித்தல், சித்திரங்கள் தொடர்பாக பிள்ளைகளின் கருத்துக்களைக் கேட்டு அறிந்து கொள்வதனூடாக பாடத்திற்குப் பிரவேசித்தல்.

படி 2
- மூத்தோரைக் கவனித்தலும் அதன் முக்கியத்துவமும் என்பது பற்றி ஒருகலந்துரையாடலை நடத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மூத்தோர்கள் யார் யார் என்பதை அறிமுகப்படுத்தல். அதாவது அம்மா, அப்பா, பாட்டி, பாட்டன், மாமி, மாமா, சிற்றப்பா, சின்னம்மா, அக்கா, அண்ணா என்ற வகையில்.
- மூத்தோரைக் கவனிக்கும் விதத்தினை விவரித்தல்
- மூத்தோரைப் பிள்ளைகள் கவனிக்கும் விதத்தை விசாரியுங்கள். அனுபவங்களைக் கூறுவதற்கு இடமளியுங்கள்.

படி 3
- மூத்தோரைக் கவனிக்கின்ற மரியாதை செலுத்துகின்ற தன்மைகளை விருத்தி செய்யக்கூடிய செயற்பாடுகளைக் கூடிய அளவு ஏற்பாடு செய்து அவற்றைப் பின்பற்றுவதற்கு வழியமைத்தல்.
- உதாரணம்: முதியவர் ஒருவருக்குப் பேரூந்தில் ஆசனத்தை வழங்கிக் கவனிப்பதைப் பாவணை செய்து காட்டல்.
- பாடசாலை விட்டு பெற்றோர்களுடன் வீடு செல்லும்போது பொருட்களை, பைகளை எடுத்துச் செல்வதற்குப் பெற்றோர்களுக்கு உதவி செய்தல்.
- மூத்தோருடன் மரியாதையாகப் பேசுவதற்குப் பழகுதல்.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக :

- கருத்துக்களை முன்வைக்கும்போது பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- கருத்துக்களை முன்வைப்பதற்கு முயற்சிப்பவர்களுக்கு உதவுதல்.
- பேசாதிருக்கும் பிள்ளைகளுக்குக் கருத்துக்களைக் கூற வழிகாட்டல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- பாட்டி, பாட்டன், பூட்டன், பூட்டி, மாமி, மாமா, அண்ணா, அக்கா
- கவனித்தல், மரியாதை செய்தல், முதியோர்.

10. வேறு விடயங்கள்:

- ஆசிரியரின் விருப்புப்படி பல்வேறு சந்தர்ப்பங்களை, செயற்பாடுகளை ஏற்படுத்தி மூத்தோரைக் கவனிப்பது பற்றிய தெளிவைப் பெற்றுக் கொடுத்தல் பொருத்தமானது.
- ஒரு முதியோர் இல்லத்திற்குப் பிள்ளைகளை அழைத்துச் செல்வதிலும் ஈடுபடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.12

## குளம், குட்டை, ஓடை வற்றியுள்ளன.

### அவற்றைக் காணப் போவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. தலைப்பு : குளம், குட்டை, ஓடை வற்றியுள்ளன. அவற்றைக் காணப் போவோம்.

03 பிரதான இலக்கு : சுற்றாடல், விலங்குகள் பற்றிய விடயங்களை விளங்கிக் கொள்ளும் நோக்கில் அவதானிப்புச் சுற்றுலா ஒன்றில் பிள்ளைகளைப் பங்கேற்கச் செய்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :

ஆற்றல்கள் :
- காலநிலை மாற்றம் சுற்றாடலிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை அறிந்துகொள்வர்.

பண்புகள் :
- பிராணிகளிடத்தில் கருணை காட்டும் பழக்கத்தைப் பெறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஓர் அவதானிப்புச் சுற்றுலா.

06. முன் ஆயத்தம்:
- வற்றிய ஒரு குளத்தின் காட்சியும் ஒரு மீனின் கண்களிலிருந்து கண்ணீர் வடியும் படமும்
- பிள்ளைகளுக்கான ஒரு மென் ஆகாரம்.
- தண்ணீர்
- தலைக் கவசங்கள்.
- பெற்றோர்களுடன் கலந்துரையாடி சுற்றுலாவை ஒழுங்கு செய்தல்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1
- படமொன்றைக் காட்டி இதில் யார் உள்ளார்கள்?
  இவர் என்ன செய்கிறார்?
  ஏன் இவர் (மீன்) அழுகிறார்?
  என்றவாறு வினாக்களை வினவுதல்.
  ஒரு குளத்தில் நீர் வற்றிய விதத்தையும் பின்னர் ஏனைய மிருகங்கள் அக் காட்டினை விட்டு நீர் உள்ள இடத்தைத் தேடிச் சென்றதையும் தொடர்புபடுத்திக் கூறப்படும் கதை ஒன்றைச் சொல்லிக் கொடுப்போம்.
  உதா:- கொக்கும், நீர் வற்றிக்கொண்டு செல்கின்ற ஒரு குளத்தின் மீன்களும் நண்டுகளும் பற்றிய கதை.

- குளத்தின் நீர் வற்றியபின் நிலம் வெடித்துள்ள விதம், கற்கள் வெளியே தெரிய சேற்று நீர் குளத்தின் நடுவே எஞ்சியுள்ள விதம், எருமைகள் குளத்தின் நடுவே சேற்றைக் குளித்துக்கொண்டு படுத்துள்ளவிதம், குளத்திலிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமரைப் பூக்கள் இல்லாதிருத்தல், சூழவுள்ள மரங்கள் காய்ந்து சில பட்டுப்போய் உள்ள விதம், குளத்திலிருந்து நீரைப் பெற்ற சூழவுள்ள வயல்கள் இறந்து போயுள்ள விதம் என்பன பற்றிப் பிள்ளைகளுடன் கலந்துரையாட முடியும்.

படி 2
- மறுநாள் இவ்வாறான ஓர் இடத்தைப் பார்வையிடச் செல்லும் ஒரு சுற்றுலாவை ஏற்பாடு செய்வதாகக் கூறுதல்.
- சுற்றுலாவில் பெற்றோர்களையும் சேர்த்துக் கொள்க.
- அவதானிக்கவேண்டிய இடங்களை விவசாயிகளிடமிருந்தும் கிராம விதானை களிடமிருந்தும் வேறு நபர்களிடமிருந்தும் அறிந்து கொள்ளல்
- அவ்விடயங்களைப் பிள்ளைகளுக்கு விளங்கும் மொழியில் விளக்குதல் வேண்டும்.
- நீர் எமக்கு மிகவும் முக்கியமானது எனவும், அதனை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தி விளக்கமளித்தல்
- சூழலில் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றியும் கலந்துரையாட முடியும்.
- இச்செயற்பாட்டிற்கு கோடை காலத்தைத் தெரிவுசெய்து கொள்க.
- அவதானிப்பு முடிவுற்றதும் அவ்விடத்திலேயே இவ்வாறான ஒரு பாடலைப் பாடச்செய்க.

மழையை இறைவா பொழிவிப்பாய்
குளங்கள் நிறைய பொழிவிப்பாய்
சிறிய மீன்கள் சுகமாய் வாழ
மரங்கள் செடிகள் உயிரைப் பெறவே

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- வினாக்கள் தொடுக்கின்ற, கருத்துக்களை முன்வைக்கின்ற பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- சுற்றுலாவின்போது ஏனையோருக்கு உதவி செய்த, ஒத்துழைப்புடன் செயற் பட்ட பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- நீர், உணவு போன்றவற்றைப் பகிர்ந்து அருந்துகின்ற மாணவர்களைப் பாராட்டுதல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- கண்ணீர், கொக்கு, குளம், குட்டை
- கோடை, சுற்றுலா

**10. வேறு விடயங்கள்:**

- இவ்வுத்தேச சுற்றுலா செயற்பாடுகளைப் பிரதேசத்துக்கும் காலத்துக்கும் பொருந்தும் வகையில் ஆசிரியர் மீளமைத்துக் கொள்ளல் பொருத்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.13

## தானம் வழங்குவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை :** தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. **தலைப்பு :** தானம் வழங்குவோம்

03. **பிரதான இலக்கு :** சமூக அபிவிருத்திச் செயல்களில் பிள்ளைகள் ஈடுபட ஆசையை ஏற்படுத்தல்

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள் :**
- தானம் பற்றிய எண்ணக்கருவை விளங்கிக் கொள்வர்.

**பண்புகள் :**
- ஏனையோருடன ஒத்துழைத்துச் செயற்பட பழகிக் கொள்வர்.

05. **செயற்பாட்டின் தன்மை :** இது செயன்முறைச் செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம் :**
- பூத்தானம், இனிப்புப் பண்ட தானம், கோப்பி தானம், குளிர்பான தானம், அன்னதானம் என்றவாறு. முன் தினத்தில் தெரிவுசெய்த தானத்திற்குத் தேவையான பொருட்களைத் தயார்செய்துகொண்டு வருமாறு பிள்ளைகளுக்கு அறிவுறுத்துக.
- தெரிவு செய்துகொண்ட தானத்துக்குப் பொருத்தமான பொருட்களைத் தயார் செய்துகொள்க.
- தானம் வழங்குவது பற்றி பிள்ளைகளுடன் கலந்துரையாடல். இது விசேட சமய தினங்களில் செய்கின்ற ஒன்று என்பதையும் இதனூடாகக் கருணை, இரக்கம், சமய ஆசாரம் போன்ற பண்புகளைப் பெற்றுக் கொள்ளும் விதம் பற்றியும் எளிய நடையில் கலந்துரையாடுக. பிள்ளைகளின் கருத்துக்களையும் வினவுக.
- பிள்ளைகள் கண்டுள்ள தானங்கள் பற்றி வினவுக. அவற்றில் ஒன்றை வகுப்பறையில் முன்வைப்பதற்குத் தெரிவுசெய்து கொள்க.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி 1**
- வகுப்பு மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரிக்குக.
  1. தானப் பொருட்களுக்குப் பொறுப்பான குழு
  2. உபசரிப்பு நடவடிக்கைகளுக்கான குழு
  3. தானத்திற்கு வருகை தரும் குழு
- தானம் நடைபெறும்போது பிள்ளைகளைச் சுதந்திரமாக இயங்குவதற்கு அறிவுறுத்துக.

  மாமி, மாமா, அண்ணா, அக்கா, தங்கை என்றவாறு விளிக்கச் செய்தல், மரியாதையாகப் பேசுவதற்குத் தூண்டுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 2 • தான உபசரிப்பு நடவடிக்கைகளைச் செய்தல், உபசரிப்பை அனுபவித்தல், நன்றி தெரிவித்தல் போன்ற சந்தர்ப்பங்கள் பற்றி பிள்ளைகளுக்கு அறிவுறுத்தல், அவர்களுடன் சேர்ந்து செயற்படல் ஆசிரியரால் செய்யப்பட வேண்டியவை.

படி 3 • வகுப்பிலுள்ள எல்லோரும் இணைந்து,

சிறுவர் எங்கள் ஒற்றுமை
சிறுவர் எங்கள் மனிதமே
சிந்தை கொண்டு வருகவே
தானம் தன்னை ஏற்கவே

அபிநயத்துடன் பாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குக.

படி 4 • செயற்பாடு முடிவுற்றதும் அதற்குப் பயன்படுத்திய உபகரணங்கள், பொருட்களை அகற்றி அவ்விடத்தைச் சுத்தஞ் செய்யுமாறு அறிவுறுத்துக.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக :

- நன்கு உரையாடிய பிள்ளைகளைப் பாராட்டுக.
- முன்வந்தவர்களைக் கைதட்டி பாராட்டுதல்.
- முன்வருவதற்குப் பின்தங்கும் பிள்ளைகளை ஊக்குவித்தல்.
- கருத்துக்களை முன்வைப்பதில் பலவீனமான பிள்ளைகளுக்கு உதவுதல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- மாமி, மாமா, அண்ணா, அக்கா, நன்றி.
- தானம், சமய தினம், ஒற்றுமை, கருணை, அன்பு, சமய ஆசாரம்.

10. வேறு விடயங்கள்:

- பிரதேசத்துக்கும் காலத்துக்கும் பொருந்தும் வகையில் கிடைக்கக் கூடிய வளங்களைக் கருத்திற்கொண்டு செய்யவேண்டியது யாது என்பதைத் தீர்மானிப்பது பொருத்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.14

## எங்கள் ஊர் பாதையை அமைப்போம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. தலைப்பு : எங்கள் ஊர் பாதையை அமைப்போம்.

03. பிரதான இலக்கு : பொது வேலைகளில் ஒத்துழைப்புடன் செயற்படத்தூண்டுதல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- பாதை அமைக்கும்போது பயன்படுத்தும் உபகரணங்களை இனங்காண்பர்.

திறன்கள் :
- பின்பற்றிச் செய்யும் திறன்களை விருத்திசெய்து கொள்வர்.

பண்புகள் :
- ஒத்துழைப்புடன் செயற்படும் பயிற்சியைப் பெறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- அடுத்த செயற்பாடு பற்றி பிள்ளைகளுக்கு அறிவுறுத்தல்.
- மாதிரிப் பொருட்களைச் சேகரித்துக் கொள்ளல்

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- வகுப்பு மாணவர்களை திறந்தவெளிக்கு அழைத்துச் செல்க.

அதோ அதோ கறையான் கூட்டம் புற்று கட்டுது
இதோ இங்கு எறும்புக் கூட்டம் குகை அமைக்குது.
சின்னஞ் சிறிய அவை பெரிய வேலைகள் செய்யும்.
சிறுவர் நாமும் ஒன்று சேர்ந்து ஊரை அமைக்கிறோம்.

பாடலைப் பாடியவண்ணம் ஆசிரியர் பாடத்தைத் தொடங்குகிறார். சிறியவர் ஆனாலும் ஒரு குழு ஒன்று சேர்ந்தால் எந்த வேலையையும் செய்யமுடியும் எனவும், இன்று நாம் குழுவாக ஒன்று சேர்ந்து எங்கள் ஊரின் பாதையை அமைக்க ஆயத்தமாவோம் என்றும் பிள்ளைகளைத் தூண்டுதல்.

படி 2
- பிள்ளைகளை சிறிய குழுக்களாகப் பிரித்தல்.

குழு 1. மண்வெட்டியால் வேலை செய்யும் விதம்
குழு 2. வீல்பரோ மூலம் மண், கல் கொண்டுசெல்லும் விதம்.
குழு 3. பாதையைப் பலப்படுத்தும் இயந்திரத்தை ஓட்டிச் செல்லல்.

மாதிரிப் பொருட்கள் ஊடாக மேற்கூறிய செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மேற்கூறிய எல்லா செயற்பாடுகளையும் அபிநயத்துடன் முன் வைப்பதற்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்குதல்.

படி 3
- பிள்ளைகளைப் படிப்படியாக செயற்பாடுகளில் ஈடுபடுத்துக. கஷ்டப்பட்டு வேலைசெய்கின்ற போது சில பிள்ளைகள் சிற்றுண்டியும் தேநீரும் எடுத்துவந்து அவர்களுக்கு உபசரிக்கும் விதத்தைப் பாவனை செய்வித்தல்.

படி 4
- பாடப் பிரவேசத்தின்போது பாடிய பாடலை வகுப்பு மாணவர் எல்லோருடனும் இணைந்து பல தடவை பாடுதல். அதற்கேற்ப அங்க அசைவுகளுக்கு இடமளித்தல்.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக :**

- திறமையாக செயற்பாடுகளை முன்வைக்கும் பிள்ளைகளைப் பாராட்டுக.
- ஏனைய பிள்ளைகளை ஊக்குவிக்குக.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- மண்வெட்டி, வீல்பரோ, பலப்படுத்தும் இயந்திரம், இசை, எறும்பு, கூட்டம், குகை, கறையான்கள், புற்று
- வேலை செய்கிறார், ஒத்துழைப்பு

**10. வேறு விடயங்கள்:**

- குழுக்களைப் பிரித்தல், செய்யப்படவேண்டிய வேலைகள் ஆகியவற்றை ஆசிரியரின் விருப்பப்படி மாற்றிக்கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.15

# எங்கள் வகுப்பை அழகுபடுத்துவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. **தலைப்பு** : எங்கள் வகுப்பை அழகுபடுத்துவோம்

03. **பிரதான இலக்கு** : வகுப்பறையை சுத்தமாகவும் அலங்காரமாகவும் வைத்திருக்க மாணவர்களை ஈடுபடுத்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- வகுப்பறையைச் சுத்தம் செய்யும் நுட்பங்களை அறிந்துகொள்வர்
- வகுப்பை அலங்காரமாக்கும் உத்திகளை இனங்காண்பர்.

**திறன்கள்** :
- உபகரணங்களைப் பயன்படுத்தப் பழகுவர்.

**பண்புகள்** :
- சுத்தமாக இருப்பதை மதிப்பர்.
- வகுப்பை அலங்காரப்படுத்தி இன்பம் அடைவர்

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :

**வகுப்பறையைச் சுத்தம் செய்யத் தேவையானவைகள்.**
- தும்புத்தடி
- தூசுகளைத் துடைப்பதற்குத் தூசு துடைப்பம்

**வகுப்பை அலங்காரமாக வைப்பதற்குத் தேவையானவைகள்.**
- நிறக்கடதாசித் துண்டுகள் (3 செ.மீ. அகலம், 18 செ.மீ. நீளம்)
- ஒரு கத்தரிக்கோல்
- கறுப்புக் கடதாசி
- நிறந் தீட்டுவதற்கான படங்கள். (வண்ணத்துப் பூச்சி, மீன்கள், பூக்கள்)
- பெஸ்டல்
- பசை

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி** 1
- வகுப்பிலுள்ள நீங்கள் உங்களை நல்ல பிள்ளைகள் என்று சொல்வதை விரும்புகிறீர்களா? விருப்பம் தானே? எமது வேலைகளைச் சுத்தமாகச் செய்து, நாம் இருக்கும் இடத்தை அழகாக வைத்திருந்தால்தான் எல்லோரும் எம்மை நல்லவர்கள் என்று சொல்வார்கள்.

- நாம் குழுக்களாகப் பிரிந்து சுத்தஞ் செய்வதில் ஈடுபடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 2 • ஒரு குழு மேசைகளிலுள்ள தூசுகளைத் துடைத்து விடுங்கள்.அடுத்த குழு கதிரைகளிலுள்ள தூசுகளைத் துடையுங்கள். மற்றைய குழு புத்தகத் தட்டை ஒழுங்குபடுத்தித் தூசு துடையுங்கள். அடுத்த குழு கூட்டுங்கள். குப்பைகளைப் பெட்டியில் போடுங்கள். பிள்ளைகள் அறிவுறுத்தல்களுக்கேற்ப செயற்படுகிறார்கள்.

படி 3 • கூட்டி முடிந்தபின் வகுப்பறையில் படங்களைத் தொங்கவிடுவோம். யார் இப்போது படம் வரைவது?

• இந்தக் குழு பூக்களுக்கு நிறந்தீட்டுங்கள். அடுத்த குழு வண்ணத்துப் பூச்சுகளுக்கு. மற்றைய குழு மீன்களுக்கு.

• நிறந்தீட்டி முடிந்தபின் அவற்றைக் கறுப்புக் கடதாசியில் வேறு வேறாக ஒட்டுதல். (பிள்ளைகளுக்கு ஒட்டுவதற்கு இடமளிக்க) பிள்ளைகளைப் பாராட்டுதல். அவற்றைச் சுவர்களில் ஒட்டுதல்.

படி 4 • பிள்ளைகள் எல்லோருக்கும் சவ் கடதாசி பகிர்தல். சங்கிலி செய்தல். (ஆசிரியர் சங்கிலிகள் இரண்டைச் செய்தல்) சங்கிலி செய்தபின் ஒவ்வொன்றாக இணைத்தல்.

• நீளமான, கட்டையான சங்கிலிகளைத் தெரிவுசெய்தல். ஒரு பாடலைப் பாடியபின் சங்கிலிகளைப் பயன்படுத்தி வகுப்பறையை அலங்கரித்தல்.

படி 5 • வகுப்பை அழகு படுத்தியமைக்கு நானும் உங்களுக்கு நன்றி தெரிவிக் கிறேன். பின்வரும் பாடலை இருதடவைகள் பாடுதல்.

வண்ண வண்ண கடதாசி கொண்டு வந்தோமே
ஒன்றை ஒன்று இணைத்து இங்கே சங்கிலி செய்தோம்
நீள சங்கிலி செய்தோம்
கட்டை சங்கிலி செய்தோம்
ஒன்றாக கோர்வை செய்து
வகுப்பை நாம் அலங்கரித்தோம்.

பாடலைப் பாடியபின் எல்லோரையும் பாராட்டுதல்.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- பாராட்டுதல்.
- கை தட்டுதல்.
- இயலாதவர்கட்கு உதவுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- தும்பத்தடி, தூசு துடைப்பம், மீன்கள், வண்ணத்துப்பூச்சி, பூக்கள், கடதாசி, நிறம்.
- ஒன்று, இரண்டு
- நீளம், கட்டை, சங்கிலி.

**10. வேறு விடயங்கள்:**

- வகுப்பைச் சுத்தம் செய்து அலங்கரிப்பதற்கு உத்தேச செயற்பாடுகளைப் போலவே வேறு விடயங்களையும் செயற்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.16

## ஒரு பாதை இருந்தால் மிகவும் நல்லது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. தலைப்பு : ஒரு பாதை இருந்தால் மிகவும் நல்லது.

03. பிரதான இலக்கு : ஒரு சமூகத் தேவை என்ற வகையில் பாதைகள் அமைப்பதில் கவனஞ் செலுத்த வைத்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :

ஆற்றல்கள் :
- சமூகத் தேவைகளுக்குப் பொருந்தும் வகையில் உரிய செயலொழுங்குகளைத் திட்டமிடும் ஆற்றலை விருத்தி செய்து கொள்வர்.

பண்புகள் :
- ஒன்றிணைந்து செயற்படுவதை மதிப்பர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- பிரிஸ்டல் அட்டையினால் தயாரிக்கப்பட்ட சிறிய மாதிரி வீடுகள் சுமார் 15
- நன்கு காயவைத்து மஞ்சள், ஊதா நிற சாயமிட்ட தேங்காய்த் துருவல். கதைக்குத் தேவையான விசேட சந்தர்ப்பங்களுக்கான படங்கள்.
- பாடசாலைத் தோட்டத்தில் ஓர் இடத்தைத் தெரிவு செய்து, ஒரு சிறிய கிராமம் போன்று மாதிரி வீடுகளை வைத்தல்.
- பிள்ளைகளுக்குக் கடலை போன்ற ஒரு வேளை உணவு, பீங்கான்கள், தண்ணீர், கை கழுவுவதற்கான பாத்திரங்கள்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- நீங்கள் கதை கேட்க விருப்பம் தானே?
- நிசாந்தி என்ற ஒரு சிறிய சிறுமி வெகு தொலைவிலுள்ள கிராமம் ஒன்றில் வாழ்ந்து வந்நாள். (படத்தைக் காட்டுதல்) அவள் சிறியவளானாலும் மிகவும் சுறுசுறுப்பானவள். முயற்சியுடையவள்.
- நிசாந்தி சிலவேளைகளில் வீட்டிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கும் போது தபாற்கார மாமா போவதைக் காண்பாள். அவர் ஊரிலுள்ளோர்களின் கடிதங்களை கடை முதலாளியிடம் கொடுப்பார். ஊர்மக்கள் கடைக்கு சாமான் வாங்கப்போனால் அவரவர்களின் கடிதங்களைக் கொடுப்பார். ஊருக்கு சரியான ஒரு பாதை இல்லாத காரணத்தினாலேயே தபாற்கார மாமா வீடுகளுக்குப் போகாமலிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நிசாந்திக்கு ஞாபகம் வந்தது. ஒரு நாள் அவள் பக்கத்து ஊரிலுள்ள பெரிய மாமி வீட்டுக்குச் சென்ற நாட்களில் ...... மணிச் சத்தம் கேட்டபோது அவள் ஆச்சரியப் பட்டாள். தபாற்கார மாமா மிதிவண்டியில் வீட்டுவாசலுக்கே வந்து கடிதம் கொடுக்கின்றார்.

- இன்று அப்பா வந்தால் சொல்ல வேண்டும். எங்கள் தபாற்கார மாமாவுக்கும் மிதிவண்டியில் வந்து வீடுவீடாகக் கடிதம் பங்கிட பாதை அமைத்துக் கொடுக்கும்படி. ஒற்றையடிப் பாதைகளில் மாமாவுக்கு வருவது கஷ்டம் தானே.

- அப்பா எங்கள் ஊர் மக்கள் நல்ல ஒற்றுமையாக வாழ்கிறார்கள் தானே? என்று நிசாந்தி கேட்டாள். ஆம் மகளே. ஊர் மக்கள் ஒற்றுமை தான். அப்படியாயின் அப்பா நாம் எல்லோரும் சேர்ந்து ஊரில் பாதையொன்றை அமைப்போமே என நிசாந்தி கூறினாள்.

- ஊரிலுள்ள ஒரே கடையில் எல்லோரும் சேர்ந்து இதைப் பற்றிக் கதைத்தார்கள். அதிமானோர் மிகவும் விரும்பினார்கள். நாம் நாளைக்கே வேலையைத் தொடங்குவோம் என முதலாளியும் கூறினார். எனது கணக்கில் எல்லோருக்கும் சாப்பாடு. முதலாளி தேநீர் தருவதாகச் சொன்னார்.
  நிசாந்திக்கு சரியான சந்தோசம்.

- மறுநாள் அதிகாலையில் ஊரிலுள்ள சிறியோர், பெரியோர் எல்லோரும் ஊருக்குப் பாதை அமைக்க ஓரிடத்தில் ஒன்று கூடினார்கள். இப்பொழுது நீங்களும் விருப்பமா அவர்களுக்கு உதவி செய்ய?

படி 2

- நாமும் ஊருக்குப் போவோம். பிள்ளைகளை அழைத்துக் கொண்டு ஏற்பாடு செய்த இடத்துக்குப் போதல். வீட்டைச் சுற்றித் துப்பரவு செய்தல், இலைகளைப் பொறுக்கி வீசுதல், புற்செடிகளை அகற்றுதல்.

- ஒரு குழுவுக்கு 4 வீடுகள் வீதம் ஒப்படைத்து ஒரு வீட்டுக்கு ஒரு பாதை வீதம் ஒரு தடியால் குறித்தல். அவற்றைப் பிரதான பாதையுடன் இணைத்தல். பிள்ளைகள் அவற்றை அடையாளமிட்டு முடித்தபின் மஞ்சள் நிற தேங்காய்த் துருவலை முதலில் இடுமாறு அறிவுறுத்தல்.

படி 3

- வேலை நடைபெறும் வேளையில் கைகளை நன்கு கழுவிக் கொண்டு உணவு உண்ண வருமாறு அழைப்பு விடுத்தல். எல்லாப் பிள்ளைகளும் உணவைப் பகிர்ந்து கொண்டு உண்கின்றனர். மீண்டும் வேலையில் ஈடுபடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அதன்பின் பாதைகளில் ஊதா நிற தேங்காய்த் துருவலை இடுமாறு அறி வுறுத்தல்.

- பாதையை அமைத்து முடிந்தபின் கைதட்டி மகிழ்ச்சி தெரிவித்தல்.

- ஒரு பாடலைப் பாடுதல்.( ஆசிரியர் பல தடவை பாடுதல்)

ஊருக்கு வர பாதை அமைத்தோம் //
நாம் ஊருக்கு வர பாதை செய்தோம் //

ஒன்றுபட்டு வேலை செய்து
சிறிய கைகளால்
நாம் ஊருக்கு வர பாதை செய்தோம் //

படி 4 • மீண்டும் வகுப்புக்குச் செல்லல். பிள்ளைகளைப் பாராட்டுதல், ஒரு சித்திரம் வரையச் செய்தல். எங்கள் ஊர் சித்திரத்தைப் புகழ்தல்.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக :**

- பாராட்டுதல். மிக நன்று, Very good, கை தட்டுதல் போன்ற பல உத்திகளைப் பின்பற்ற முடியும்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- கடை, நிசாந்தி, தபாற்கார மாமா, பாதை, உணவு, முதலாளி, கிராமம், ஒற்றுமை, மிதிவண்டி, மணி, பாதைகள், அறிவுறுத்தல்கள்.

**10. வேறு விடயங்கள்:**

- இவ்வாறான வேறு சிரமதானங்கள் பற்றி மாணவர்களின் கருத்துக்களை அறியுங்கள்.
- பிள்ளைகளின் சம்மதத்துடன் அதனைச் செயற்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.17

## வகுப்பறைக் கூட்டம் ஒன்றை நடாத்துவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. தலைப்பு : வகுப்பறைக் கூட்டம் ஒன்றை நடாத்துவோம்.

03. பிரதான இலக்கு : வகுப்பில் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டு செயற்பட சந்தர்ப்பம் வழங்குதல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- நிகழ்வுகளை ஒழுங்குமுறையில் அமைக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்வர்.
- சொற் களஞ்சியத்தை விருத்தி செய்து கொள்வர்.

திறன்கள் :
- பாடும் திறனைப் பெறுவர்.
- கதை கூறும் திறனைப் பெறுவர்.
- பல்வேறு பாத்திரமேற்று நடிக்கும் திறனைப் பெறுவர்.

பண்புகள் :
- சபைக் கூச்சத்தைத் தவிர்ந்து கொள்வர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது அனைவரும் கலந்து கொள்ளும் ஒரு செயற் பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- ஒரு தடியில் ஒரு சிரட்டையைக் கட்டி ஒரு மைக்ரோபோனைத் செய்து கொள்ளல்.
- அதனை முற்றத்தில் ஒரு மரத்தின் கீழ் வைத்தல்.
- சிறுவர் கதிரைகள் இருப்பின் அம்மர நிழலில் வட்ட வடிவில் வைத்தல். அல்லது பிள்ளைகளைத் தரையில் உட்கார வைத்தல்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- ஒரு வகுப்பறைக் கூட்டத்தை நடாத்துவதற்காக ஆசிரியர் மைக்ரோபோனைப் பயன்படுத்தி பிள்ளைகளுக்கு அழைப்பு விடுத்தல்.
- அறிவிப்பாளர் நடவடிக்கைகளுக்குப் பிள்ளைகளைப் பழக்குதல்.

படி 2
- வகுப்பறைக் கூட்டத்தை ஆரம்பிக்க சமய ஆராதனை செய்வித்தல்.
- அறிவிப்பாளர் ஒரு நண்பனை ஒரு பாடல் பாடுமாறு அழைப்பு விடுத்தல். (முதலில் தன்னை அறிமுகப்படுத்தி, பின் பாடுமாறு பிள்ளைகளுக்கு அறிவுறுத்தல்)
- எல்லா மாணவர்களும் கை தட்டி முன்வந்த மாணவனை உற்சாகப் படுத்தல்.
- ஆசிரியர் இன்னொரு அறிவிப்பாளரை முன்னிற்கச் செய்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இவ்வாறு வகுப்பறைக் கூட்டத்தை நடாத்திச் செல்வதற்கும் மாறி மாறி அறிவிப் பாளராகச் செயற்படுவதற்கும் இடமளித்து ஆசிரியர் அவதானித்துக் கொண் ” டிருத்தல்.
- இவ்வாறு எல்லா மாணவர்களையும் ஏதாவதொன்றில் ஈடுபட வைத்தல் வேண்டும்.
- இறுதியில் கூட்டத்தில் பங்கேற்று ஒவ்வொரு காரியங்களில் ஈடுபட்ட நண்பர் களுக்கு நன்றி தெரிவிக்குமாறு ஒரு மாணவனை ஈடுபடுத்த வேண்டும்.

படி 3 • கூட்டத்தை முடிப்பதற்கு அனைவரும் மைக்ரோபோனின் அருகில் நின்று ஆசிரியருடன் தேசிய கீதத்தின் ஒரு பகுதியைப் பாடுதல்.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- பலவீனமான பிள்ளைகளுக்கு விசேட பயிற்சியைப் பெற்றுக் கொடுக்க.
- பிள்ளைகளைப் பாராட்டுவதற்காக “நீங்கள் எல்லோரும் நல்ல கெட்டிக்காரர்கள், எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. நான் உங்களுக்கு கை தட்டி உற்சாகமூட்டுகிறேன்” என்று பிள்ளைகளுடன் கை தட்டுதல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- மைக்ரோபோன், பாடல்கள், கதைகள், விடுகதைகள், வகுப்பறைக் கூட்டம், அறிவிப்பாளர்.

10. வேறு விடயங்கள்:

- வகுப்பறைக் கூட்டத்துக்கு பிள்ளைகள் முன்வைக்கும் பல்வேறு அங்கங்களை மாணவர்களின் ஆற்றல்கள், திறன்களுக்கேற்பத் தீர்மானிக்குக.
- பாடல், நடிப்பு, பேச்சு போன்ற பல்வேறு திறன்களை ஒன்றாகவும் தனித்தனியாகவும் முன்வைக்குமாறு செய்க.
- சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் பழக்குவதற்கு முயற்சிக்குக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.18

## நாம் மரக்கறி, பழ சந்தை ஒன்றை அமைப்போம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. தலைப்பு : நாம் மரக்கறி, பழ சந்தை ஒன்றை அமைப்போம்

03. பிரதான இலக்கு : வியாபார சந்தை போன்ற சமூக தேவைகள் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொடுத்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- மரக்கறி, பழ வகைகளை இனங்காணும் ஆற்றலைப் பெறுவர்.

திறன்கள் :
- தராசில் நிறுத்தல், அளத்தல் செய்யும் திறனைப் பெறுவர்.

பண்புகள் :
- ஒன்றிணைந்து ஒரு வேலையில் ஈடுபடும் பழக்கத்தைப் பெற்றுக் கொள்வர்.
- பொறுப்புக்களை ஏற்கும் ஆற்றலை விருத்தி செய்து கொள்வர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- பாய், சாக்கு, சிறிய மேசைகள் இரண்டுவீதம்
- கடதாசிப் பைகள்
- தராசு
- மரக்கறிகள்
  - ★ இரண்டு கீரைக் கட்டுகள்(இரு வகைகளில்)
  - ★ பாகற்காய்
  - ★ வெண்டிக்காய் போன்ற மரக்கறி வகைகள் சில.
- பழங்கள்

  மாம்பழம், வாழைப்பழம், பப்பாசிப்பழம் போன்றவை
- கடதாசியால் தயாரிக்கப்பட்ட நாணயத் தாள்கள்.
- தராசுக்காக,
  - ★ அஸ்ரா வெற்றுக் கோப்பைகள், சிரட்டைகள்
  - ★ ஒரு கயிறு
  - ★ ஒரு தடி
- விலைப்பட்டியல் தயாரித்தல் போன்ற பல்வேறு காரியங்களில் ஈடுபட்டு சந்தையை நடத்துவதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல்.
- ஆசிரியர் பிள்ளைகளுடன் இரண்டு தராசுகளைத் தயாரித்தல்
- நாணயத் தாள்களைக் கடதாசியால் தயாரித்தல்.
- சந்தை நடைபெறும் இடத்தைத் தயார் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- நாம் இன்று ஒரு சந்தை அமைப்போமா?
வாருங்கள் வாருங்கள் நாம் மரக்கறி, பழ சந்தை அமைப்போம் என ஆசிரியர் மாணவர்களுடன் செயற்படுவதற்குத் தயாராகுதல்.
பிள்ளைகளைக் குழுக்களாகப் பிரித்தல்.
குழுக்களுக்கு வேலைகளை ஒப்படைத்தல்.

படி 2
- ஒரு குழுவை பழம் விற்கவும் அடுத்த குழுவை மரக்கறி விற்கவும் ஈடுபடுத்தல். ஏனைய குழுக்களை விலைக்கு சாமான் வாங்குவோராகச் செயற்பட வைத்தல்.

- மரக்கறி விற்கும் குழு:
    - ★ இடத்தைத் தயார் செய்தல்.
    - ★ சாக்கு, பாய் மேசைமேல் மரக்கறிகளை ஒழுங்குபடுத்தி வைத்தல்.
    - ★ அவற்றின் விலைப்பட்டியலை வைத்தல்.
    - ★ தராசை ஒரு பக்கத்தில் வைத்தல்.

- பழங்கள் விற்கும் குழு:
    - ★ இடத்தைத் தயார் செய்தல்.
    - ★ சாக்கு, பாய் மேசைமேல் மரக்கறிகளை ஒழுங்குபடுத்தி வைத்தல்.
    - ★ அவற்றின் விலைப்பட்டியலை வைத்தல்.
    - ★ தராசை ஒரு பக்கத்தில் வைத்தல்.

படி 3
- இவ்வேலைகளின்போது எல்லாப் பிள்ளைகளினதும் உதவியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
- ஏனைய குழுக்கள் ஒரு பையும் பணமும் எடுத்துக்கொண்டு சந்தைக்கு வருகிறார்கள்.

பழ வியாபாரி : வாருங்கள் வாருங்கள் புதிய பழங்கள், எடுங்கள் எடுங்கள்,...... நன்றாகப் பழுத்தவை. சுவையானது சுவையானது. இலாபம், எடுங்கள்.

சாமான் வாங்குபவர் :
- எனக்கு இரண்டு மாம்பழங்கள் தாருங்கள்.
- எவ்வளவு?
- இதோ பணம்

வியாபாரி :
- இதோ மீதிப் பணம்.

இவ்விதம் பழங்களை விற்கவும் வாங்கவும் பிள்ளைகளை ஈடுபடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரக்கறி வியாபாரி : புதிய மரக்கறி இருக்கிறது.
கீரை வகை இருக்கிறது.
கத்தரிக்காய், வெண்டிக்காய்
இலாபம் இலாபம்.

வாங்குபவர் : எனக்கு வல்லாரை ஒரு கட்டு தாருங்கள்.
இன்னும் வெண்டிக்காய் 500 கிராம் தாருங்கள்.

இன்னொரு வாங்குபவர் : எனக்கு பாகற்காய் 250 கிராம் தாருங்கள்.

வியாபாரி : இதோ நிறுத்துவிட்டேன். எடுங்கள்.
இரண்டிற்கும் ரூபா 20 தாருங்கள்.
மிகுதிப்பணம் இதோ எடுங்கள்.
இவ்விதம் சந்தையில் பொருட்களை விற்றல் வாங்குதல் செயற்பாட்டைச் செய்தல்.

படி 4 • சந்தை மூலம் பிள்ளைகள் கற்றவை பற்றிக் கலந்துரையாடல்.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- வியாபாரிகளாகச் செயற்பட்ட பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- சாமான்கள் வாங்கிய பிள்ளைகளையும் பாராட்டுதல்.
- இதுபோன்றே வேறு பொருட்களுக்கான சந்தையை வேறொரு தினத்தில் நடத்த உற்சாகப்படுத்தல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- சந்தை, மரக்கறி, பழங்கள்.
- மாம்பழம், வாழைப்பழம், பப்பாசிப்பழம்
- வல்லாரை, பொன்னாங்கன்னி, வெண்டிக்காய், கத்தரிக்காய், பாகற்காய்.
- தராசு, பணம்.
- விலை, விற்றல்.
- ரூபா 02, 05, 10, 20, 50, 100
- நிறை, கிராம், கிலோ
- சந்தை, விலை, நிறை, கொடுக்கல் வாங்கல்.

10. வேறு விடயங்கள்:

- பிரதேசத்துக்கு, காலத்துக்கு, வசதிகளுக்குப் பொருந்தும் வகையில் சந்தையில் வைக்கவேண்டிய பொருட்களை ஆயத்தம் செய்து கொள்வதற்கு ஆசிரியர் திட்டமிடல் வேண்டும்.
- பிள்ளைகளிடையே சென்று பல்வேறு பொருட்களை, பல்வேறு அளவுகளில் பல விலைகளுக்குக் கொள்வனவு செய்யப் பழக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.19

# அன்பும் கருணையும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. தலைப்பு : அன்பும் கருணையும்

03. பிரதான இலக்கு : குடும்பம் பற்றிய எண்ணக்கருவை பிள்ளைகளிடையே விருத்திசெய்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் : • கதைகளைக் கட்டியெழுப்பும் ஆற்றலை வளர்த்துக் கொள்வர்

பண்புகள் : • பிராணிகளிடத்தில் அன்பும் கருணையும் காட்டும் பழக்கத்தைப் பெற்றுக்கொள்வர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஓர் ஒருங்கிணைந்த செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் : • ஓர் அணில் குஞ்சு பழம் தின்றுகொண்டிருக்கும் படம் ஒன்றைத் தயார் செய்துகொள்ளல்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1

- பழம் ஒன்றைத் தின்றுகொண்டிருக்கும் ஓர் அணில் குஞ்சின் அழகை ஓரளவு பெரிய படமொன்றின் மூலம் காட்டி, "இன்று நாம் சிறிய அணில் குஞ்சின் உயிரைக் காப்பாற்றிய விதத்தை ஒரு சிறிய கதை மூலம் கேட்டுத் தெரிந்து கொள்வோம்" எனக் கூறி பிள்ளைகளுடன் கதையை ஆரம்பித்தல்.

- ஆசிரியர் அணில் குஞ்சின் கதையை ஆரம்பித்தல். பிள்ளைகளே எங்கள் தோட்டத்தில் ஜம்பு மரத்தில் கிளைக்குக் கிளை தாவி விளையாடும் சிறிய அணில் குஞ்சொன்று இருந்தது. இந்த அணில் குஞ்சை யார் அன்புடன் வளர்ப்பது? பிள்ளைகள் பல விடைகளைக் கூறுவார்கள். அணில் தாய், அணில் அப்பா, மாமி, மாமா என்ற வகையில் குடும்ப உறவு முறைகளை அறிமுகப்படுத்தி குடும்பம் பற்றிய எண்ணக் கருவை விளக்குதல்.

படி 2

- சிறிய அணில் குஞ்சு சந்தோசத்துடன் இருந்தது ஏன்? அதற்கு சாப்பிட ஜம்பு, கொய்யா, கூழான் பலா, வருக்கை பலா மரங்களில் நிறைந்து காணப்பட்டன. அதனைப் பார்த்துக்கொள்ள, அதற்கு அன்பு காட்ட பாட்டி, பாட்டன் என உறவினர்கள் அநேகம்பேர் இருந்தார்கள். அதற்கு விளையாட நண்பர்களும் இருந்தார்கள். இவ்வாறு ஒற்றுமையாக இருப்பதன் நன்மையை விளக்கி கதையைக் கட்டியெழுப்பி ஆரம்பிக்க.

- இந்த அணில்குஞ்சு வசித்த தோட்டத்தில் உள்ள வீட்டில் மிகவும் இரக்கமுள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மகனும் ஒரு மகளும் இருக்கிறார்கள். அவர்களும் இந்த சிறிய குஞ்சுடன் மிகவும் இரக்கம். ஒவ்வொரு நாளும் காலையில் அம்மா ஜம்பு மரத்தில் வைத்துள்ள தட்டில் சோறு, வாழைப்பழம் போன்ற பழங்களை வைப்பார். அதனால் அணில் குடும்பத்தில் உள்ள எல்லோரும் இவ்வீட்டில் உள்ளவர்களுடன் நெருங்கிய நண்பர்கள். அவர்களுக்கு ஒருவரும் பயமில்லை. நாம் மிருகங்களுக்கு உணவு கொடுக்க வேண்டும். அவற்றை அன்புடன கவனிக்கவேண்டும்.

- ஒரு நாள் அணில் குஞ்சு அம்மாவுடன் சந்தோசமாகப் பாய்ந்து பாய்ந்து விளையாடிக் கொண்டிருக்கும்போது திடீரென்று மரத்திலிந்து கீழே விழுந்தது. ஐயோ அந்நேரமே அவ்வீட்டிலிருந்த கிடீ அதன் பின்னால் விரட்டியது. இதைக் கண்ட அவ்வீட்டிலுள்ள சின்ன மகன் கிடீயை பயமுறுத்தி விரட்டினான். சின்ன அணில் குஞ்சு நடுங்கி நடுங்கி சின்ன மகனைப் பார்த்தது. அணில் குஞ்சின் கால் நிலத்தில் பட்டு அதன் அம்மாவிடம் ஓட முடியாது. இந்த சின்ன மகன் டிங் டிங் என அழும் அணில் குஞ்சைக் கையில் எடுத்தான். குஞ்சு பயந்து மீண்டும் அழ ஆரம்பித்தது,

- இக்குழப்பத்தைக் கேட்ட மகனின் அம்மா அவசரமாகத் தோட்டத்துக்கு ஓடி வந்தார். மகனின் கையில் இருந்த அணில் குஞ்சைக் கண்டு மிகவும் கவலைப்பட்டார். அம்மா கண்டார். அணில் குஞ்சின் அம்மா, அப்பா, உறவினர்கள் குழப்பமடைந்து மரத்தில் ஓடி ஓடி சத்தமிடுகிறார்கள். சின்ன மகனுக்கும் மிகவும் கவலை. பிறகு அம்மா சொன்னார் நாம் இந்த அணில் குஞ்சை அதன் அம்மாவிடம் கொடுப்போம் என்று. அப்போது அம்மா, அப்பா அதனை அன்புடன் பார்த்துக்கொள்வார்கள். காயத்தையும் சுகப்படுத்துவார்கள் என்று அம்மா சொன்னார்.

- சின்ன மகனும் மகளும் சின்ன அணில் குஞ்சை அன்புடன் தடவி, மிகவும் துக்கத்துடன் அம்மாவுடன் சேர்ந்து மரத்தின் மேல்வைத்தார்கள். அணிலின் தாய் ஓடி வந்தது. குஞ்சை அணைத்துக் கொண்டது. உறவினர்கள் எல்லோரும் டிங் டிங் என சின்ன மகனுக்கும் மகளுக்கும் அம்மாவுக்கும் நன்றி தெரிவித்தனர்.

- சின்னப் பிள்ளையின் கருணை, அன்பு காரணமாகவும் அம்மாவின் நல்ல குணத்தினாலும் அந்த அணில் குஞ்சு உயிர் தப்பியது. இவ்வாறு பிள்ளைகளுடன் கதையைக் கட்டியெழுப்பல்.

படி 3

- இக்கதையைப் பிள்ளைகள் பலரை வைத்து மீண்டும் மீண்டும் கட்டி யெழுப்புக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 4 • இக்கதையில் மனதைக் கவர்ந்த ஒரு பகுதியை சித்திரமாக வரைந்து முன்வைக்க சந்தர்ப்பமளிக்குக.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- கதையை மிகவும் உருக்கமாக பிள்ளைகளுடன் சேர்ந்து உருவாக்குக.
- இடைக்கிடை வினாக்களை வினவி, எல்லாப் பிள்ளைகளிடமிருந்தும் கதைக்குத் தேவையான தகவல்களைப் பெறுக.
- கதைச் சுருக்கத்திலிருந்து ஒழுக்கம் தொடர்பான கருத்துக்களைப் பிள்ளைகளிடமிருந்து பெற்றுக்கொள்க.
- உணர்வுபூர்வமான சந்தர்ப்பங்களில் பிள்ளைகளின் மனம் அமைதியுறும் வகையில் கதையை எடுத்துச்செல்க.
- உறவினர்கள் பற்றிய எண்ணக்கரு வெளிப்படும் வகையில் பிள்ளைகளில் மனப்பாங்கு விருத்தியுறும் விதத்தில் கருத்துக்களைத் தொகுத்துக் கொள்க.
- கதைக்கு உற்சாகத்துடன் கருத்துக்களை முன்வைக்கும் பிள்ளைகளை ஊக்குவிக்குக.
- எல்லாப் பிள்ளைகளையும் கதையைக் கட்டியெழுப்புவதில் தொடர்பு படுத்திக் கொள்க.
- அன்பு, கருணை போன்ற எண்ணக் கருக்களை நன்கு தெளிவு படுத்துக.
- சித்திரம் வரைவதற்குப் பிள்ளைகளைத் தூண்டுக. பாராட்டுக. அவர்களின் முன்வைப்புக்களையும் மதிக்குக.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- உறவினர்கள், அம்மா, அப்பா, மாமி, மாமா, பாட்டி, பாட்டன்.
- குடும்பம், உயிர்களிடத்தில் கருணை.

**10. வேறு விடயங்கள்:**

- பிள்ளைகளின் சித்திரங்களை பாராட்டுக. காட்சிப்படுத்துக.
- செயலடைவுக் கோவையில் சேர்த்துக்கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.20

# நாற்று நடுவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. **தலைப்பு** : நாற்று நடுவோம்

03. **பிரதான இலக்கு** : நாற்று நடுவதின் முக்கியத்துவத்தை பிள்ளைகளுக்கு விளக்குதல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- பல்வேறு நாற்று வகைகளை அறிந்து கொள்வர்.

**திறன்கள்** :
- ஒரு நாற்றைக் கவனமாகப் பராமரிப்பதற்குப் பழகுவர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம் :**
- நாற்று நடுவதற்குத் தேவையான வெற்றுத் தயிர்ச் சட்டிகள், அஸ்ரா கோப்பைகள், வெற்று டின்கள், யோகட் கோப்பைகள் போன்றவற்றைத் திரட்டிக் கொள்ளுதல்.
- நாற்று நடும் விதம், அதனைப் பராமரிக்கும் விதம், நாற்று வளர்ந்த பின் பயன்படுத்தும் விதம் பற்றித் தெளிவுபடுத்துகின்ற படங்களைத் தயார் செய்து கொள்ளவேண்டும்.
- கன்றுகளை நாட்டுவதற்கு பாத்திகளைத் தயாரிப்பதற்காக ஓர் இடத்தைத் தெரிவு செய்தல். பல்வேறு நாற்றுக்களைக் கொண்டு வருமாறு பிள்ளைகளுக்கு அறிவுறுத்தல்.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி 1**
- பயனுள்ள கன்றுகள் பலவற்றை வகுப்பறையில் காட்சிப் படுத்தல். அவற்றை அறிந்து கொள்ளல்.
- பல்வேறு கன்றுகள் மூலம் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் கிடைக்கின்ற பயன்கள் பற்றிக் கலந்துரையாடல்.
- இலைகளைத் தடவிப்பார்த்து அவற்றை அறிந்து கொண்டு அளவு, வடிவம், கடினம், மென்மை போன்றவற்றை அறிந்து கொள்ள பிள்ளைகளுக்கு சந்தர்ப்பங்களை வழங்குதல்.

**படி 2**
- பிள்ளைகளை குழுக்களாக்குதல்.
- ஒவ்வொரு குழுக்களுக்கும் வெவ்வேறு கன்றுகளைப் பெற்றுக் கொடுத்து அவற்றை இனங்காணச் செய்தல்.
- அக்கன்றுகளை நாட்டுவதற்கு ஓர் இடத்தைத் தெரிந்து நாட்டுதல்.
- இவ்வாறு கடுகு விதைகள் போன்றவற்றை யோகட் கோப்கைளிலும், போஞ்சி, பயற்றங்காய் விதை, பயறு, கற்றாளை போன்ற கன்றுகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டின்களிலும், சின்ன வெங்காயம், வல்லாரை, முளைக் கீரை, கிழங்கு வகைகள், போன்றவற்றை மிளகாய்ப் பாத்திகளிலும், கறிவேப்பிலை போன்ற கன்றுகளை பைக்கற்றுகளிலும், பாத்திகளிலும், தேங்காய் மட்டைக் குவியல்களில் பச்சை இஞ்சியையும் நாட்டுவதற்கு வழி செய்க. (இங்கு பிரதேசத்துக்கு ஏற்ப பல்வேறு கன்றுகளைத் தெரிவு செய்ய முடியும்)

படி 3
- இங்கு பிள்ளைக்கு, வேகமாக, மெதுவாக வளரும் மரங்கள் எவை என கன்று வளர்வதற்கு ஆரம்பிக்கும் நாளிலிருந்து அவதானிக்க முடியும். (விதையினால், கிழங்கினால் கன்றுகள் வளரும் விதம்)
- கன்றுகளை நட்டியபின் அவற்றுக்குப் போதுமானளவு நீர் ஊற்றச் செய்தல் வேண்டும். வெயில் படுமாறு கன்றுகளை வைத்தல், பசளை இடுதல் போன்ற வற்றில் பிள்ளைகளை ஈடுபடுத்துக.
- பிள்ளைகள் நாட்டிய கன்றுகள் வளரும்போது அவற்றுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் பிராணிகள் எவை? பாதிப்பை ஏற்படுத்தாத பிராணிகள் எவை எனச் சொல்லிக் கொடுக்கவேண்டும்.

## 08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- கன்றுகளை இனங்காணும் பிள்ளைகளை ஊக்குவித்தல்.
- கன்றுகளை நட்ட முயற்சிக்கின்ற பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- கன்றுகளைப் பராமரிக்கும் பிள்ளைகள் பற்றிப் புகழ்ந்து கதைத்தல்.
- பின்தங்கிய பிள்ளைகளை ஊக்குவித்தல்.

## 09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- கன்றுகள், பாத்தி, வளர்கிறது, முளைக்கிறது, போஞ்சி, பயற்றங்காய், பயறு, கற்றாளை, டின்கள், கறிவேப்பிள்ளை, இஞ்சி, வல்லாரை, முளைக்கீரை, கிழங்கு வகை, தேங்காய் மட்டைகள், கன்றுகள் வளர்தல்

## 10. வேறு விடயங்கள்:

- தமது பிரதேசத்துக்கு ஏற்ற வகையில் கன்றுகளையும் விளை நிலத்தையும் தெரிவு செய்து கொள்ள முடியும்.
- தேவைப்படின் பெற்றோர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்க.
- பெற்றோர்களின் உதவியுடன் தமது வீடுகளிலும் கன்றுகளை நாட்டும் நடவடிக்கைகளில் பிள்ளைகளை ஈடுபடத் தூண்டுக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.21

# எங்கள் உறவினர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. **தலைப்பு** : எங்கள் உறவினர்கள்

03. **பிரதான இலக்கு** : தேசிய கலாசார அங்கம் பற்றிய பரிச்சயத்தைப் பெற்றுக் கொடுத்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- சிற்றூண்டி வகைகளின் பெயர்களைக் கூறும் ஆற்றலைப் பெறுவர்.
- தமது உறவினர்களை அறிந்து கொள்ளும் ஆற்றலைப் பெறுவர்.

**திறன்கள்** :
- பல்வேறு செயற்பாடுகளைப் பின்பற்றும் திறனைப் பெற்றுக் கொள்வர்.

**பண்புகள்** :
- தேசிய கலாசார அங்கங்களை முக்கியமாகக் கருதும் பண்பினைப் பெறுவர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- களிமண், விளையாட்டு வீட்டுக்குத் தேவையான பொருட்கள், நிறமூட்டப்பட்ட மாப்பசை

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி 1**
- அம்மா, மாமி, பாட்டி போன்று உடையணிந்த பிள்ளைகள் குழு களிமண்ணை உருண்டையாக்கி பல்வேறு வடிவிலான சிற்றுண்டிகளைத் தயாரிப்பர். (பலகாரம், அதிரசம், பொரி உருண்டை போன்றவை) அப்பா, தம்பி, மாமா, பாட்டன், சிற்றப்பா பாத்திரங்களாக உடை அணிந்த குழுவினரும் இருப்பர்.
- புது வருடப் பிறப்புக்கு பலகாரங்கள் செய்து உறவினர் வீடுகளுக்குச் செல்வதற்கு தயாராவதை நடிப்பின்மூலம் முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கல்.
- ஏற்கனவே அமைத்துள்ள விளையாட்டு வீட்டில் பிள்ளைகள் மாவு இடித்தல்.
- பலகாரம் செய்கிறார்கள். பொரி உருண்டை, அதிரசம் போன்றவற்றைக் களிமண்ணினால் தயாரிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 2

- வீட்டில் அம்மா, அப்பா, பாட்டன், பாட்டி, பிள்ளைகள் உடையணிந்து தீன்பண்டப் பெட்டியைத் தலையில் வைத்துக்கொண்டு ஏனைய விளையாட்டு வீடுகளுக்குச் செல்லல்.

- பின்வரும் பாடலைப் பாடி நடிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குக.

  1. திருநாள் வந்தது எமக்கு - திருநாள் வந்தது
     சின்ன தங்கை தம்பி வாங்க - திருநாள் வந்தது

  2. பலகாரம் பலவகையாய் சுவையாய் செய்தோம்
     உறவினர்கள் வீட்டுக்கு நாம் எடுத்தே செல்வோம்

- பாடலைப் பாடி நடித்தவாறு உறவினர் வீட்டுக்குள் புகுதல்.

- மாமி, மாமா, சிற்றப்பா, பாட்டி, பாட்டன் ஆகியோருக்கு பிள்ளைகள் எல்லோ ரும் உறவினர்களை அறிமுகப்படுத்தி மரியாதை செய்தல்.

- வீட்டில் தேநீர் உபசாரமளித்து முதியோரை கண்ணியப்படுத்தல்.

- தமது கிட்டிய உறவினர்களை அறிமுகப்படுத்தல்.

படி 3

- பெருநாட்களின்போது விளையாடும் விளையாட்டுக்கள் பற்றி அறிமுகப்படுத்தி, இரு வீடுகளும் இணைந்து சிறு சிறு விளையாட்டுக்களில் ஈடுபட ஆசிரியர் பிள்ளைகளுக்கு அறிவுறுத்தல் வழங்க முடியும்.
  ஊஞ்சல் ஆடுதல்.
  சீப்பு ஒளித்தல்
  ஆடுகளைத் தின்னல்
  கிட்டிப்புள் அடித்தல்
  கிளித்தட்டு
  (இவற்றை நேரத்துக்கு ஏற்பத் திட்டமிட்டு பாடத்தைத் தொடர்ந்து நடாத்திக் கொண்டு செல்லும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வது மிகவும் நல்லது.)

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- தாயின் பாத்திரமேற்பதற்குத் தேவையான முகமூடி அமைத்தல்.

- குடும்பத்தின் அனைவரையும் பாத்திரங்களாகப் பெயரிட்டு பிள்ளைகளைப் பிரித்துக் காட்டல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அவர்களின் நடிப்பைப் பாராட்டுதல்.

- தயாரித்த சிற்றுண்டிகள் பற்றிக் கலந்துரையாடல். அவற்றைத் தயாரிக்கும்போது வடிவம், அளவு பற்றிப் பிள்ளைகளுக்கு விளக்கி, அவற்றைத் தயாரிக்கப் பயன்படுத்தும் பொருட்களை அறிமுகப்படுத்தி, பண்புகளையும் சுவையையும் வர்ணித்தல்.

- தமது உறவினர்களுக்கு அன்பு, ஆதரவு காண்பிப்பது பற்றி பிள்ளைகளைப் பாராட்டி, உறவினர்களின் குணத்தை மெச்சுதல்.

- அப்பாத்திரங்களை ஏற்று நடித்த பிள்ளைகளைப் பாராட்டுதல்.

### 09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- பல்வேறு உணவு வகைகளின் பெயர்கள்.
- உறவினர்கள், உறவினர் வீடுகளுக்குச் செல்லுதல்.

### 10. வேறு விடயங்கள்:

- பாடலைப் பொருத்தமான முறையில் மாற்றியமைத்துக் கொள்வது பொருத்தமானது.

- சில விளையாட்டுக்கள் மட்டும் இங்கு குறிப்பிடப்பட்டிருந்தாலும் பிரதேசத்துக்கும் காலத்துக்கும் பொருத்தமான விருப்புக்குரிய விளையாட்டுக்களை விருத்தியுறச் செய்வது பொருத்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.22

## மணக்கிறது - மிகுந்த மகிழ்ச்சி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. **தலைப்பு** : மணக்கிறது - மிகுந்த மகிழ்ச்சி

03. **பிரதான இலக்கு** : ஒரு குழுவாக மேசையில் உணவு உண்பதைப் பழக்குதல்

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**
**ஆற்றல்கள்** :
- மணத்தை அறிந்து கொள்ளும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- சில அன்னாசித் துண்டுகள்
- வாழைப் பழங்கள் சில
- அரளிப் பூ, மல்லிகைப் பூ போன்ற பூக்கள் சில.
- மேற்பக்கம் துளையிட்ட காட்போட் பெட்டிகள் சில மேற்கூறிய பொருட்களைச் சேகரித்து ஒரு பெட்டியில் இட்டு மூடி ஆசிரியர் மேசையில் வைக்க. பிள்ளைகளுக்குத் தென்படாதவாறு வைக்க. ஒன்றை மட்டும்
- வெற்றுப் பெட்டியாக வைக்க.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி 1**
- வெற்றுப் பெட்டியைக் கீழே போடுமாறு பிள்ளைகளுக்குக் கூறுக. அதைப் பற்றி ஏதாவது கூற முடியுமா எனக் கேட்க.
- அன்னாசித் துண்டுகள் உள்ள பெட்டியைப் பிள்ளைகளுக்கு வழங்கி அதன் துளை ஊடாக மூக்கை வைத்து முகர்ந்து அதில் என்ன இருக்கிறது எனப் பார்க்குமாறு செய்க.
- அடுத்து பூக்கள் உள்ள பெட்டியை வழங்கி, மூக்கால் உணர்ந்த மணத்தைப் பற்றி வினவுக. விடையளிக்கச் செய்க.
- அதன் பின் வாழைப்பழம் உள்ள பெட்டியை முகர்ந்து பார்க்கச் செய்க. கேள்வி கேட்டு விடையைப் பெறுக.
- அடுத்து மல்லிகைப் பூ உள்ள பெட்டியை முகர்ந்து பார்க்கச் செய்க. வினாத் தொடுத்து விடையைப் பெறுக.
- இச்செயற்பாட்டை முதலில் முகர்ந்து பார்த்த பிள்ளைகளுடன் ஏனைய பிள்ளைகளைக் கதைக்கவிடாமல் வைத்துக்கொண்டு செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நாம் இன்று எத்தனை வகையான மணங்களை முகர்ந்தோம் எனப் பார்ப்போம் எனக்கூறி பிள்ளைகளுக்கு ஞாபகமூட்டல்.

- பெட்டிகளில் இருந்த பொருட்களைக் காட்சிப்படுத்தி, அவற்றின் மணம் பற்றிப் பிள்ளைகளுடன் கலந்துரையாடுக.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- சரியான விடை கூறும் பிள்ளைகளைப் பாராட்டுதல். மதித்தல், கைதட்டுதல்.
- விடையளிக்காத பிள்ளைகளுக்கு உதவுதல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- பெட்டி, அன்னாசி, மணம், வாழை, அரளிப் பூ, மல்லிகைப் பூ,
- ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு.
- மணம், பூ வகை, பழ வகை.

10. வேறு விடயங்கள்:

- பிரதேசத்திலிருந்து பெறக்கூடிய பொருட்களை இதற்குப் பயன்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.23

# மரஞ் செடி கொடிகளின் மீது அன்பு கொள்வோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. **தலைப்பு** : மரஞ் செடி கொடிகளின் மீது அன்பு கொள்வோம்.

03. **பிரதான இலக்கு** : சூழலை விரும்பும் பழக்கத்தை ஏற்படுத்துதல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- எமது பிரதேசத்தில் பல்வேறு மரங்கள் உண்டு என அறிந்து கொள்வர்.
- மரங்களின் விசேட பண்புகளை அறிந்து கொள்வர்.

**திறன்கள்** :
- தாளத்துக்கேற்ப அங்க அசைவுகளில் ஈடுபடும் திறனை வளர்த்துக் கொள்வர்.

**பண்புகள்** :
- சூழலைப் பாதுகாப்பதற்கான விருப்பை வளர்த்துக் கொள்வர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஓர் ஒன்றிணைந்த செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- ஒரு மேளம், அழகான சூழல், மரங்களை வெட்டியுள்ளபோது உள்ள சூழல் போன்ற படங்கள், சித்திரங்கள் சில.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள் :**

**படி 1**
- விளையாட விருப்பமா? இன்றும் ஒரு சின்ன விளையாட்டு விளையாடுவோம். முற்றத்துக்கு அழைத்துச் செல்லல்.
- எங்களைச் சுற்றி என்ன காணப்படுகின்றது? நாமும் மரங்கள் ஆவோம் நீங்கள் தான் மரங்கள், பிள்ளைகள் விரும்பும் விதத்தில் ஒவ்வொரு இடத்தில் நிற்கச் செய்தல். தமக்கு விருப்பமான ஒரு பெயரை வைத்துக்கொள்ளுமாறு கூறுதல். நான் மா மரம்.....

**படி 2**
- இந்த மரங்கள் எல்லாம் ஒரே மாதிரியானதா எனப் பார்ப்போம். நீங்கள் மரங்களைக் கண்டிருக்கிறீர்கள் தானே. சொல்லுங்கள் பார்ப்போம். மரக்குற்றி பெரியது. சிறியது. உயரமானது. கட்டையானது. கிளைகள் அதிகம்..... விடைகள் கிடைக்கும்.
- பிள்ளைகள் தாம் என்ன மரம்? மரக் குற்றி எப்படியானது? கிளைகள் எப்படி? தாம் விரும்பியபடி கருத்துக்களைக் கூறுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எல்லாப் பிள்ளைகளினதும் கருத்துக்களின் பின் நாம் உயரமான கட்டையான மரங்களைத் தேடுவோம். இந்த மரம் உயரமானது. இந்த மரம் கட்டையானது. இவ்விரு மாணவர்களாக எடுத்து உயரம், கட்டை என்ற கணித எண்ணக் கருவை வழங்குதல். நான் உயரம். நான் கட்டை. கருத்துக் கூறல். பருத்த, மெலிந்த போன்ற பண்புகளையும் அறிமுகப்படுத்த முடியும்.

- ஆசிரியர் உயரம் என்றதும் கைகளை மேலுயர்த்தி உயரத்தைக் காட்டு வதையும் கட்டை என்றதும் கட்டையாகக் காட்டுவதையும் ஒரு விளையாட்டாகச் செய்தல். செவிமடுத்து துலங்காவிடின் அவர்களின் துலங்கலைப் பெற்றுக் கொள்ள கை தட்டி வெற்றியைப் பாராட்டுதல்.

படி 3
- அதன்பின் பிள்ளைகளைத் தாம் விரும்பும் விதத்தில் மீண்டும் மரங்களாக நிற்கச் செய்து பாடலொன்றைக் கேட்பதில் ஈடுபடுத்திப் பாடச்செய்தல்.

  காற்று வீசி அடிக்குது - இலைகள் தாளம் போடுது
  வண்ண வண்ண வண்டுகள் - பூவில் பாணி அருந்துது
  குருவிக் கூட்டம் வருகுது - பழங்கள் சுவைத்து உண்ணுது
  அழகு மிக்க மரமும் செடியும் - மனதுக்கினிமை தருகுது.

- பாடலைப்பாடி நடிப்பில் ஈடுபடல்.

படி 4
- அதோ ஒரு கெட்ட மாமா வந்து எல்லா மரங்களையும் வெட்டுகிறார். (பாவணை செய்தல்) மரங்கள் வெட்ட வேண்டாம் என அழுகின்றன.

- தேன் அருந்த வரும் வண்டுகள் அழுகின்றன. அவ்விடத்துக்கு விளையாட வரும் பிள்ளைகள் நிழலில்லை வியர்க்கிறது என அழுகின்றனர்.

- மரம் வெட்டுவதால் ஏற்படும் பாதிப்புக்களைப் பிள்ளைகளுக்கு விளக்குதல். நாம் மரஞ்செடிகளில் அன்புகாட்ட வேண்டும் என்பதைப் புரியவைத்தல். பராமரிக்க வேண்டிய விதம் - நீர் ஊற்றுதல், பசளையிடுதல் முக்கியம் என விளக்குதல்.

படி 5
- தாம் கண்ட மரங்கள், வண்ணத்துப் பூச்சிகள், குருவிகள் போன்றவற்றை வரையச் செய்தல். நான் கண்ட சூழல் அலங்காரம் சித்திரக் கண்காட்சி நடத்துவோம் எனக் கூறி சித்திரங்களைப் பார்வையிடச் செய்தல்.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- பாராட்டுதல்.
- கை தட்டுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நன்றாகத் தாளத்தில் ஈடுபடும் பிள்ளைகளைப் புகழ்தல்.
- ஆக்கங்களைக் காட்சிப்படுத்தச் செய்தல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- பெரியது, மெல்லியது, அதிகம், வண்ணத்துப் பூச்சி, குருவி
- உயரம், கட்டை
- மரஞ்செடிகள், சூழல், அலங்காரம்

10. வேறு விடயங்கள்:

- ஆசிரியரின் விருப்பப்படி மரங்கள், மரம் வெட்டுபவர்கள், நீர் ஊற்றுபவர்கள் போன்ற பாத்திரங்களுக்குப் பிள்ளைகளைத் தெரிவு செய்து ஏற்கனவே ஒழுங்கு செய்துள்ள விசேட உடைகளை அணிவித்து இந்நிகழ்வை ஒரு நாடக வடிவில் முன்வைப்பதும் மிகவும் பொருத்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.24

# நாம் வழிபாட்டுத் தலத்திற்குச் செல்வோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**01. பிரதான துறை :** தனி நபர் மற்றும் சமூக விருத்தி

**02. செயற்பாடு :** நாம் வழிபாட்டுத் தலத்திற்குச் செல்வோம்.

**03. பிரதான இலக்கு :** மத வழிபாட்டுத் தலமொன்றில் செயற்பட வேண்டிய விதத்தைப் புரிய வைத்தல்.

**04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள் :**
- சமய அனுஷ்டானம் பற்றிய விடயங்களை விளங்கிக் கொள்வர்

**திறன்கள் :**
- இறை வணக்கம் செய்யும் பழக்கத்தைப் பெறுவர்.

**பண்புகள் :**
- சமய நடவடிக்கைகளில் விருப்புடன் பங்கேற்கத் தூண்டப்படுவர்

**05. செயற்பாட்டின் தன்மை :** இது ஒரு குழு செயற்பாடாகும்.

**06. முன் ஆயத்தம் :**
- வழிபாட்டுத்தலம் செல்லத் தேவையானவைகள்.
- அவற்றை ஏற்பாடு செய்துகொண்டு வருமாறு அறிவுறுத்தல்.
- பொருத்தமான உடையுடன் வருமாறு அறிவுறுத்தல்.
- அண்மையிலுள்ள வழிபாட்டுத்தலமொன்றைத் தெரிவு செய்து அதன் பூசகருக்கு முன்னரே அறிவித்தல்.
- வழிபாட்டுத் தலம் செல்வதன் முக்கியத்துவம் பற்றி பிள்ளைகளுடன் கலந்துரையாடல்.
- அதற்கு பின்வரும் வினாக்களை வினவி கலந்துரையாடலாம்.
  நீங்கள் வீட்டில் அம்மாவுடன் வழிபாட்டுத் தலம் போகிறீர்களா?
  அதிகமாக எந்த நாட்களில் நீங்கள் போவீர்கள்?
  போகும் போது என்ன எடுத்துச் செல்வீர்கள்?
  போகும்போது என்ன நிற உடை அணிவீர்கள்?
  அங்கு போய் என்ன செய்வீர்கள்?
  அங்கு யார் இருக்கின்றார்கள்?

**07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி 1** • பிள்ளைகள் கொண்டுவந்தவற்றை எண்ணுதல். (பூத் தட்டுக்கள் போன்றவை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அவற்றை ஒவ்வொரு பிள்ளைகளிடமும் பகிர்ந்து கொடுத்தல்.
  அமைதியாகச் செல்லுமாறு அறிவுறுத்தல்.
  அங்கு நடந்துகொள்ளும் விதத்தைச் சொல்லிக் கொடுத்தல். (விளையாடக் கூடாது, சப்தமிட்டுப் பேசக்கூடாது, அங்குமிங்கும் பாய்ந்து ஓடக் கூடாது என்றவாறு)
  பாதணிகளைக் கழற்றிவிட்டுச் செல்லுமாறு அறிவுறுத்தல்.
  இப்பயணத்தின்போது முதியவர்களையும் பங்கேற்கச் செய்யலாம்.
  வழிபாட்டுத்தலம் தொடர்பான ஒரு கதையைச் சொல்லிக் கொடுத்தல்.
  வழிபாட்டுத்தலம் பற்றிய ஒரு கவிதையைச் சொல்லிக் கொடுத்தல்.

  தினமும் இறையை வழிபட
  வழிபாட்டுத் தலம் செல்வோம்
  வெள்ளை நிற உடையணிந்து
  இனிதே நாங்கள் வழிபடுவோம்.

- அங்கு பயன்படுத்தப்படும் புதுச் சொற்களைப் பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்தல். (இது சமயத்துக்குச் சமயம் வித்தியாசப்படும்)

படி 2

- ஆசிரியர், முதியோர்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து சமய அனுஷ்டானங்களை பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்தி செய்தல்.

- பிள்ளைகளுடன் வழிபாட்டுத் தலத்தினுள்ளே ஆராய்ந்து பார்த்தல்.

- வழிபாட்டுத்தல பூமியை ஆராய்ந்து பார்த்தல்.

- அங்குள்ளவைகள் பற்றிப் பிள்ளைகளுடன் கதைத்தல்.

- பூக்களுக்குத் தண்ணீர் தெளிக்குமாறு அறிவுறுத்தல்.

- மதகுரு கூறித்தருபவற்றைத் திருத்தமாக உச்சரித்துக் கூறுதல்.

## 08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- வழிபாட்டுத்தலம் பற்றிய சகல விபரங்களையும் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்தல். அங்கு நடந்துகொள்ளும் விதத்தை அவதானித்துப் பாராட்டுதல்.

- முதியோருக்கு மரியாதை செய்தல், மதகுருவுக்கு மரியாதை செய்தல் ஆகியவற்றில் விருப்பை ஏற்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒழுக்க சீலங்களையும் பழக்க வழக்கங்களையும் செயற்படுத்த சந்தர்ப்பம் வழங்கல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- வழிபாட்டுத்தலம், வழிபடுதல், அனுஷ்டானம், மரியாதை.

- 1, 2, 3, 4, 5

- கோயில், மரியாதை செய்தல், நன்மை செய்தல்.

**10. வேறு விடயங்கள்:**

- இதனை ஒரு சுற்றுலாவாக ஒழுங்கு செய்து முழு நாளும் ஈடுபடுவது பொருத்தமானது.

- வழிபாட்டுத் தலம் பற்றிய விடயங்களைச் சொல்லிக் கொடுத்தல். ஆராதனைகளைப் பழக்குதல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் இக்கற்றல் நிகழ்வை ஒழுங்கு செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

- வழிபாட்டுத்தலம் சென்றமை, அங்கு கண்டவைகள், அங்கு செய்தவைகள், எமது பாடசாலை மதகுரு போன்ற சித்திரங்களை அடுத்த நாள் வரையச் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.25

# பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. **தலைப்பு** : பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிவோம்

03. **பிரதான இலக்கு** : கீழ்ப்படிவதன் முக்கியத்துவத்தை புரியவைத்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- ஒரு கதையை ஒழுங்கு முறையில் கட்டியெழுப்புவர்.

**திறன்கள்** :
- பிராணிகளின் பயண முறையை அடியொற்றிச் செல்லும் பழக்கத்தைப் பெற்றுக்கொள்வர்.

**பண்புகள்** :
- கீழ்ப்படிதல் முக்கியமான ஒரு பண்பு என்பதை ஏற்றுக்கொள்வர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- பூனையினதும் தாராவினதும் படங்களை வரைவதற்குத் தேவையான மாதிரி கடதாசி அச்சுக்கள்
- கதைக்குப் பொருத்தமான சித்திரங்களை ஒழுங்கு செய்தல்.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள் :**

**படி 1**
- இன்று அம்மா அப்பாவிடம் முகமன் கூறி பாடசாலைக்கு வந்த நல்ல பிள்ளைகள் யார்? என்றவாறு ஆரம்பித்து கதையைக் உருவாக்குதல்.
- தொலைக்காட்சி கதையொன்றை பார்க்கச் செய்தல். (உரையாடல் மூலம்) அழகான ஒரு தாராக் குடும்பம் இருந்தது. படத்தைக் காட்டுதல். (தாரா அம்மா, தாரா அப்பா, தாரா குஞ்சுகள்) இக்குடும்பம் மிகவும் மகிழ்ச்சியுடனும் ஒற்றுமையுடனும் வாழ்ந்து வந்தன.
  டக் டக் டக் தாரா குஞ்சு - அழகு மிகுந்த தாரா குஞ்சு
  மெல்ல செல்லும் தாரா குஞ்சு - குவெக் குவெக் குவெக்
- இப்பாடலை பாடச்செய்தல். தாரா குஞ்சுகள் போல் நடக்கச் செய்தல்.

**படி 2**
- இக்குஞ்சுகள் அம்மா அப்பாவுடன் சென்றுதான் உணவு தேடும். அவற்றில் ஒரு குஞ்சு கீழ்ப்படிவதில்லை. பெற்றார் சொல் கேட்பதில்லை. உண்ணக் கொடுத்தாலும் சண்டை பிடிக்கும். குளிக்கப் போனாலும் நீருக்குள் நீண்ட நேரம் நிற்கும். அம்மாவும் அப்பாவும் அதைப்பற்றி மிகுந்த துக்கத்துடன் இருந்தார்கள்.
- ஒரு நாள் காலையிலேயே இக்குடும்பம் உணவு தேடிச் சென்றது. அப்போது தூரத்தில் ஒரு பெரிய பூனை வருவதைக் கண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அம்மாவும் அப்பாவும் குஞ்சுகளுக்கு, அதோ பூனை வருகிறது. கவனமாக இருங்கள் என்று கூறின. எல்லாக் குஞ்சுகளும் அம்மா அப்பாவுடன் ஒளிந்து கொண்டன. குழப்படியான குஞ்சு நான் பயமில்லை. நான் பயமில்லை என்று தனியாக ஓடத்துவங்கியது.

- இதைப் பார்த்துக் கொண்டிருந்த எல்லோரும் குவெக் குவெக் என அழத் தொடங்கின. அப்பா ஒரு தந்திரம் செய்ய வேண்டுமென்று யோசித்து சத்த மிட்டுக்கொண்டு ஒரேயடியாக பூனையை நோக்கிப் பாய்ந்து ஓடத் தொடங் கியது.

- அப்போது பூனை நினைத்தது. இது என்னைப் பிடிக்கத்தான் வருகுது.என்று பயந்து திரும்பிப் பார்க்காமல் ஓடியது. தாரா குஞ்சு நன்றாகப் பயந்து அப்பாவிடம் வந்து ஒளிந்து கொண்டது.

- அம்மா அப்பாவிடம் சென்ற தாரா குஞ்சு நான் இனி ஒரு நாளும் அம்மா அப்பாவுக்குக் கீழ்ப்படியாமல் இருக்க மாட்டேன் என்று கெஞ்சி மன்னிப்புக் கேட்டது. எல்லோரும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

- சின்ன தாரா குஞ்சு நல்ல குஞ்சாக மாறியது. எல்லோரும் சந்தோசத்துடன் பாட்டுப்பாடி ஆடத்தொடங்கின.

  அப்பா எங்கள் தங்கம் - அம்மா எங்கள் தங்கம்
  கீழ்படிய பழகி விட்டால் - நாங்கள் எல்லோரும் தங்கம்

படி 3

- கதையூடாக வாய்மொழி வினாக்கள் வினவுதல்.
  கதையில் யார் இருந்தார்கள்?
  குழப்பமான குஞ்சின் பெயர் என்ன?
  அக்குஞ்சு யாருக்குப் பயந்தது?
  அதனைப் பாதுகாத்தது யார்?
  எவ்வாறு பாதுகாத்தது?
  அக்குஞ்சு நல்ல குஞ்சாக மாறியதா?
  நீங்கள் நல்ல கீழ்படிவுள்ள குஞ்சாகவா அல்லது
  கெட்ட குஞ்சாகவா மாற விரும்புகிறீர்கள்?

- விரும்பிய பிள்ளைக்கு கதையைக் கூற சந்தர்ப்பமளித்தல்.

- பிள்ளைகள் மீது பெற்றோர்கள் அன்பு காட்டுகிறார்கள் எனவும் கீழ்படிந்து வாழ்தல் நல்ல பிள்ளையின் பண்பு எனவும் தெளிவுபடுத்தல்.

- எண்ணுவதில் ஈடுபடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய தாராக்கள் எத்தனை?
சிறிய தாராக்கள் எத்தனை?

- பெரிய, சிறிய தாராக்களின் மாதிரி அச்சுக்களை இரண்டு பெட்டியில் வைத்தல்.

படி 4
- ஒரு பெரிய தாராவை எடுங்கள். கடதாசியில் பெரிய தாராக்களை வரையக் கொடுத்தல்.
- ஒரு சிறிய தாராவை எடுங்கள். முன்பு போல் வரைதல்.
  அழகாக நிறந்தீட்டுவோம்.
- தூரத்தில் ஒரு பூனை வருகிறது. வரைவோமா?
- மாதிரி அச்சைப் பயன்படுத்தி பூனையை வரையச் செய்தல்.
- தாராக்கள் உள்ள இடத்தில் தண்ணீர் மாதிரி தென்பட நீல நிறம் பூசுவோம்.
- பூனை உள்ள இடத்துக்குப் பச்சை நிறம் தீட்டுவோம். (புல்)
- அழகாக நிறந்தீட்டப் பழக்குதல்.
- பாட்டொன்று பாடி ஆடுவோம்.

  சொண்டு மஞ்சள் தாரா - மேனி வெள்ளை தாரா
  அழகு மிக்க தாரா - குவெக் குவெக் தாரா
  குளிர்ந்த நல்ல நீரில் - மிதக்கும் அழகு வள்ளம்
  போல நீந்திச் செல்லும் - அழகு மிக்க தாரா

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- கதையைச் சொல்ல முன்வரும் பிள்ளைகளைப் பாராட்டுதல்
- பெரிய, சிறிய என எண்ணிக் கூறிய பிள்ளைகளைப் பாராட்டுதல்
- எல்லாப் பிள்ளைகளையும் கை தட்டி மகிழ்வித்தல்

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- கீழ்ப்படிவுள்ள, தாரா, அன்பு, மகிழ்ச்சி,
- பெரிய, சிறிய, கீழ்படிதல்

**10. வேறு விடயங்கள்:**

- பிள்ளைகளை இரண்டு மூன்று குழுக்களாகப் பிரித்து இந்நிகழ்வை வெவ்வேறாக நடிப்பதற்கு இடமளிக்க.
- வரைந்த சித்திரங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்துக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.26

# மனிதர்கள் பல்வகையினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. தலைப்பு : மனிதர்கள் பல்வகையினர்.

03. பிரதான இலக்கு : எமது சமூகத்தில் பலவேறு இனத்தவர்கள் வாழ்கிறார்கள் என்பதை விளங்கவைத்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- இனங்களுக்கிடையிலான பல்வேறு வேறுபாடுகளை அறிந்து கொள்வர்.

பண்புகள் :
- பல் இனத்தவர்களின் சடங்கு சம்பிரதாயங்கள், மொழி, ஆடை அணிகள் போன்ற வித்தியாசங்களை மதித்தல்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஓர் ஒருங்கிணைந்த செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- பல் இனத்தவர்களின் படங்கள் கொண்ட அட்டைகள்.
- பல் இனத்தவர்களுக்குப் பொருந்தும் உடைகள்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- அட்டைகளை வெவ்வேறாகப் பிள்ளைகளுக்குக் காட்டுதல்.
- பட அட்டைகளைக் காட்டியபடி அவர்களைப்பற்றி பிள்ளைகளுடன் கதைக்க.

  உதா:- முஸ்லிமைப்போல் அணிந்துள்ள ஒரு படத்தைக் காட்டி, அது யார் என்று வினவி பிள்ளைகளுடன் பேசுதல். கூடியளவு வினாக்கள் வினவி இது பற்றிப் பிள்ளைகளுடன் கலந்துரை யாடுக. அவர்கள் முஸ்லிம்கள் என்பதைப் பிள்ளைகளுக்குத் தெளிவுபடுத்துக.
- இவ்வாறு எல்லா அட்டைகளிலுமுள்ள இனத்தவர் பற்றி பிள்ளைகளுக்குத் தெளிவுபடுத்துக.
- அவர்களின் உடைகளிலுள்ள மாற்றங்களைப் பிள்ளைகளுக்குத் தெளிவுபடுத்துக.
- சிங்களவர்கள் புத்த கோயிலுக்கும் தமிழர்கள் கோயிலுக்கும் முஸ்லிம்கள் பள்ளிக்கும் போவதை பிள்ளைகளுடன் கதைக்க.
- வகுப்பிலுள்ள பல்லின மாணவர்களிடமிருந்து கருத்துக்களை அதிகமாகப் பெற்றுக்கொள்க.

படி 2
- வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களையும் குழுக்களாகப் பிரித்தல்.

  இந்தக் குழு - முஸ்லிம்
  இந்தக் குழு - தமிழ்
  இந்தக் குழு - சிங்களம்
  இந்தக் குழு - பேர்கர் என்றவாறு பெயரிடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 3 • வளர்ந்தோரின் உதவியுடன் அந்தந்தக் குழுக்களிலுள்ள பிள்ளைகளை அந்தந்த இனத்தவர் போல் அணிவித்தல். ஆசிரியர் பாடசாலைத் தோட்டத்துக்கு அழைத்துச் சென்று உடைக்கேற்ப பிள்ளைகளை வெவ்வேறாக வட்டமாக குழுக்களாக நிறுத்துதல். ஆசிரியர் அட்டையைக் காட்டியவுடன் அந்த இன உடையுடன் உள்ளவர்கள் ஆசிரியருக்கு அருகில் ஓடிவர வேண்டும்.

படி 4 • ஏனைய பிள்ளைகளிடம் இது யார் என வினவுதல்.

உதா :- தமிழரின் உடை அணிந்துள்ளவர்களைத் தமிழர் எனக் கூறச் செய்தல்.

முஸ்லிம்களின் உடை அணிந்துள்ளவர்களைத் முஸ்லிம் எனக் கூறச்செய்தல்.

சிங்களவரின் உடை அணிந்துள்ளவர்களைச் சிங்களவர் எனக் கூறச் செய்தல்.

படி 5 • எல்லாப் பிள்ளைகளும் கைகளைப் பிடித்தபடி வட்டத்தைச் சுற்றிச் சென்று பின்வரும் பாடலைப் போன்ற ஒரு பாடலைப் பாடச் செய்தல்.

உலகிலே நாம் ஒரே தாயின்
பிள்ளைகள் ஆவோமே
வாதமில்லா பேதமில்லா
அழகிய உலகம் நாளை மலர்வாயே

## 08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக :

- எல்லா மாணவர்களையும் செயற்பாட்டில் பங்கேற்கச் செய்தல்.
- அவர்களின் செயற்பாடுகளைப் பாராட்டுதல்.

## 09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- முஸ்லிம், தமிழ், சிங்களம்
- இனம், மதம்

## 10. வேறு விடயங்கள்:

- எல்லாப் பிள்ளைகளுக்கும் பல் இன உடைகளைத் தேடிக்கொள்வது கடினமாகும். எனவே ஒரு சில உடைகளை மட்டும் தேடிக் கொண்டு செயற்பாட்டை ஒழுங்கு செய்யமுடியும்.
- இனம் மாறுபடும்போது மொழியும் மாறுபடும் என்பதை ஒரு செயற்பாட்டின் மூலம் காட்டலாம்.
- உடையினால் மட்டுமல்ல. பல் இனத்தவரின் உணவு வகை, மதகுருமார், ஆராதனைகள் போன்றவற்றைக் காட்டும் படங்களைப் பயன்படுத்தி, செயற்பாட்டை ஆசிரியரின் விருப்பப்படி இரசனை உள்ளதாகக் அமுல் நடத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.27

## எங்களைச் சூழவுள்ள சுற்றாடல் மிகவும் அழகானது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. **தலைப்பு** : எங்களைச் சூழவுள்ள சுற்றாடல் மிகவும் அழகானது

03. **பிரதான இலக்கு** : சுற்றாடலின் அழகை புரியவைத்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- சுற்றாடலில் உள்ள வடிவான பொருட்களைப் பெயரிடுவர்.

**திறன்கள்** :
- தாளத்திற்கேற்ற அசைவுகளைப் பழகுவர்.

**பண்புகள்** :
- தனது வீட்டில் ஒரு பூக்கன்றை, ஒரு பழக்கன்றை நடுவதற்கு திடசங்கற்பம் செய்து கொள்வர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- ஒரு பூச்சாடி, பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பூக்கிளைகள்.
- சுற்றாடலின் அழகை வெளிப்படுத்தும் சித்திரங்கள்.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி 1**
- ஆசிரியர் ஏற்கனவே தயார் செய்து வைத்துள்ள காம்புடனான ஒரு பூக்கிளையை எடுத்துக்கொண்டு பிள்ளையிடம் போய் அதனை அவனுக்கு வழங்கி காலை வணக்கம் கூறுதல். இவ்வாறு வகுப்பிலுள்ள எல்லாப் பிள்ளைகளையும் பூக்கிளை வழங்கி, மிகவும் அன்புடன் வரவேற்றல்.

- அப்பூக் கிளையுடன் ஒவ்வொரு பிள்ளையையும் ஆசிரியர் மேசைக்கருகில் அழைத்து மேசையின்மீது வைத்துள்ள பூச்சாடியைப் பூக்களினால் நிரப்புதல். (எல்லோரினதும் பூக்களை வைக்கக்கூடிய பெரிய பூச்சாடியைத் தேடிக்கொள்ள வேண்டும்.) ஆசிரியருக்கு சுப காலை வந்தனம் கூறி பூக்கிளையைப் பூச்சாடியில் இட்டு எல்லா பிள்ளைகளும் அதனை அலங்காரமாக அமைத்தல். நல்ல கலை வடிவில், குழப்பமின்றி ஒற்றுமையாக பூச்சாடியை அமைக்குமாறு அறிவுறுத்துக.

- பின்னர் அமைக்கப்பட்ட அலங்கார பூச்சாடியைக் காட்டி, இன்று பூச்சாடியை அலங்காரமாக அமைத்தது யார்? என வினவுதல். பிள்ளைகள் "நாங்கள்" என விடையளிப்பர். அப்படியாயின் நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து இன்றைய நாளையும் அழகான நாளாக ஆக்கிக் கொள்வோம் என ஒரு சிறிய கலந்துரையாடலை ஆரம்பித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 2
- எமது சுற்றாடல் மரஞ் செடி கொடிகள், பூக்கள், சின்ன சின்ன குருவிகள், நீரோடைகள், ஆறுகள் காரணமாக அலங்காரமாவதாகக் கலந்துரையாடல் மூலம் பிள்ளைகளுக்கு விளக்குதல். அதே போல் அந்த அழகான சூழலை மேலும் அலங்காரப்படுத்துவதற்கு நாம் எல்லோரும் ஒன்றுபட வேண்டும் என்ற கருத்தை முன் வைத்தல்.

- தமது வீட்டு முற்றத்தில் அலங்காரப் பூக்கள், பழங்கள், காய்கறிகள் வளர்த்தல். அவற்றை அன்புடன் பராமரித்தல், அத்தியாவசியமானளவு மட்டும் பூக்கள் பறித்தல், மரங்களின் கிளைகளை வெட்டாதிருத்தல், அடுத்தவரின் பூந்தோட்டத்தில் பூப்பறிக்காதிருத்தல், நீங்கள் வரும் சூழலில் பூக்கள் இருந்தால் அவற்றைப் பார்த்து சந்தோசமடைதல், தோட்டத்துக்கு தேன் அருந்த வரும் சின்னக் குருவிகள் மீது அன்பும் கருணையும் காட்டுதல், வளர்ந்தோருடன் சூழலை அலங்காரஞ் செய்வதற்கு பிள்ளைகளின் உள்ளங்களைத் தூண்டுதல் போன்றவற்றை ஆசிரியர் மிகவும் அன்புடன் விளக்கிக் கூறுதல். (இதற்காக சித்திரங்கள், படங்களைப் பயன்படுத்துக)

- இறுதியில் பின்வரும் பாடலைப் பாடி பிள்ளைகளுடன் நடிப்பில் ஈடுபடுக.

  எங்கள் வீட்டு முற்றம் எங்கும்
  மலர்ந்த ரோசாப் பூக்கள் அதிகம்
  பூக்கள் மலர்ந்து மரங்கள் நிறைந்து
  மணம் வீசும் நல்ல அழகு

  குருவிகளின் இனிய கீதம்
  காலை நேரம் காதில் கேட்கும்
  சூரியனும் உதித்து எங்கும்
  ஒளியைப் பாய்ச்சி நிற்குது பார்

- கை தட்டி, மாதிரிக் கருவிகளைப் பயன்படுத்தி, முற்றத்திலே இருந்து மகிழ்ச்சியுறும் விதத்தில் செயற்பாட்டில் ஈடுபடுக.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- எல்லா மாணவர்களினதும் உள்ளத்தைத் தொடும் வகையில் மென்மையாகக் கதைத்துக் கலந்துரையாடல்.

- தனக்கருகில் வரும் பிள்ளையை அன்பாக விளித்து, அவனின் செயற்பாடுகளுக்கு உதவுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இனிமையான குரலில் பாடலைப்பாடி மாணவர்களுக்கு இன்பம் கிடைக்கும் வகையில் முன்வைத்தல்.

- செயற்பாடுகளின்போது ஆசிரியரும் பிள்ளைகளுடன் பங்கேற்றல்.

- எல்லாப் பிள்ளைகளினதும் செயற்பாடுகளைப் பாராட்டுதல், மதித்தல்.

- ஏனையவர்களிடத்தில் வர்ணித்தல், பெற்றோருக்குப் பிள்ளைகளின் திறமைகளை அறிமுகப்படுத்தல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:
- பூச்சாடி, ரோசாப் பூக்கள், இனிய கீதம், அதிகாலை
- பிராணிகளிடத்தில், மனிதர்களிடத்தில் போல சுற்றாடலிலும் அன்பு செலுத்தல்.

10. வேறு விடயங்கள்:
- பிராணிகளுக்கு, குருவிகளுக்கு போலவே சூழலிலுள்ள மரஞ்செடி கொடிகளில், பூக்களில் அன்பு காட்ட வேண்டும் என்பதை விளக்குதல்.
- பாடலை, நடிப்பை ஆசிரியருக்குத் தேவையான வகையில் வளப்படுத்திக் கொள்வது பொருத்தமானது.
- அழகான சூழலை சித்திரமாக வரையச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.28

## பெறுமதி மிக்க மாணிக்க முத்து ஆகட்டும் ஒற்றுமை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. தலைப்பு : பெறுமதிமிக்க மாணிக்க முத்து ஆகட்டும் ஒற்றுமை.

03. பிரதான இலக்கு: ஒற்றுமையே பலம் என்பதை விளக்குதல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- ஒற்றுமை என்ற எண்ணக்கருவை விளங்கிக் கொள்வர்.

திறன்கள் :
- சத்தத்துக்கேற்ப செயற்பாடுகளில் ஈடுபடும் திறனை வளர்த்துக் கொள்வர்.

பண்புகள் :
- ஒன்றுபடுதல், ஒற்றுமை, சமாதானம் பற்றிய கருத்துக்களை மதிப்பர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- ஒற்றுமையை வெளிப்படுத்துகின்ற சில சித்திரங்கள்
- ஏற்கனவே தயாரித்துக்கொண்ட மாதிரி இசைக் கருவிகள்.
- ஈர்க்கில் துண்டுகள், பென்சில்கள், பேனைகள், சப்பாத்து

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- பிள்ளைகளை வெளியே அழைத்துச் செல்க. மைதானத்தில் நீளமான கோடு போல் பிள்ளைகளை நிற்குமாறு அறிவுறுத்துக. ஒரு கோடுபோல் கைகளைக் கட்டிக் கொண்டு எல்லோரும் வரிசையாக நிற்பதற்கு இடமளிக்குக. வகுப்பிலுள்ள எல்லோரும் ஒன்றுபட்டதால் நீண்ட ஒரு கோட்டை ஆக்கக்கூடியதாக இருந்தது. என்பதை மிக எளிய நடையில் விளக்குக. (வகுப்பறையில் பென்சில்களை ஒன்று சேர்த்து வரிசையாக வைத்தல், சப்பாத்துக்களை ஒன்று சேர்த்து ஒரு கோட்டை உருவாக்கல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுத்துக.)

- மைதானத்தில் செல்லும் ஓர் எறும்புக் கூட்டம், சுறுசுறுப்பாகப் புற்றுக் கட்டுகின்ற கறையான்கள் கூட்டம், வானத்தில் பறக்கும் பறவைக் கூட்டம் போன்றவற்றைக் காண்பித்து ஒற்றுமை பற்றிய கருத்துக்களை முன்வைத்தல்.

- ஓர் ஈர்க்கிள் துண்டை ஒரு பிள்ளைக்குக் கொடுத்து உடைக்கச் சொல்லுதல்.

- பிள்ளை உடைத்துக் காட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பல ஈர்க்கிள் துண்டுகளைச் சேர்த்து ஒரு பிள்ளைக்கு உடைக்குமாறு சொல்லுதல்.

- அது கடினமான ஒரு செயல் என விளக்குக.

- இவ்வாறு தனித்தனி ஒன்றைச் செய்வதைவிட அனைவரும் ஒன்று சேர்ந்தால் பெரிய பலம் கிடைக்கும் என்பதை விளக்குதல்.

**படி 2**

- ஒற்றுமை பற்றிப் பாடக்கூடிய ஒரு சிறிய பாடலை முன்வைத்தல்.

சின்ன சின்ன எறும்புக் கூட்டம் வரிசையில் போகும்
சின்ன கறையான் கூட்டம் மண்ணை எடுத்தே செல்லும்
இவை எல்லாம் ஒன்று சேர்ந்து வீட்டைக் கட்டும்
சிறுவர் நாங்கள் ஒன்று சேர்ந்து உலகை வெல்வோம்

பாய்ந்து பாய்ந்து முயல் கூட்டம் போகுது பாராய்
சின்ன சின்ன குருவிக் கூட்டம் பறக்குது பாராய்
வண்ண வண்ண வண்ணத்துப் பூச்சிகள் பாராய்
சூழல் அழகு வாய்ந்து நன்கு மணக்குது பாராய்

- வண்ணத்துப் பூச்சிகள், குருவிக் கூட்டங்கள், எறும்புக் கூட்டம், ஒரு முயற் குட்டி என்ற வகையில் பிள்ளைகளைக் குழுக்களாகப் பிரிக்குக.

- ஆசிரியர் பாடலைப் பாடும் போது பிள்ளைகளை நடிக்குமாறு அறிவுறுத்துக

- பிள்ளைகளைப் பாடிக் கொண்டே நடிக்குமாறு அறிவுறுத்துக. (பாடலைப் போன்றே சிறிய கதையையும் இச்செயற்பாட்டில் பயன்படுத்த முடியும்)

- தயாரித்த இசைக் கருவிகளைப் பயன்படுத்தி ஒரு குழுவைப் பாடச்செய்க.

- ஒரு குழுவை நடிப்பில் ஈடுபடுத்துக.

- ஆசிரியர் தாளவாத்தியத்தோடு எல்லா சந்தர்ப்பங்களிலும் தேவையான வழிகாட்டல்களை வழங்குக.

- தனித்து இயங்குவதை விட குழுவாக இயங்குவதால் பலம் கூடும் என்பதை விளக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நன்கு செவிமடுக்கப் பழக வேண்டும் என்பதை விளக்குதல்.
- ஏனையோரின் கருத்துக்களை மதித்து நடக்கப் பழக்குதல்.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- முன்வந்தவர்களைப் பாராட்டுதல்.
- திறமையாகச் செயற்படும் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்குதல்.
- ஒவ்வொருவருக்கும் தத்தமது நற்பண்புகளைக் கூறுவதற்கு சந்தர்ப்பம் வழங்குதல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- கூட்டம், வரிசை, குட்டிகள், மணம்
- ஒன்று, இரண்டு
- ஒற்றுமை, பலம்

10. வேறு விடயங்கள்:

- பாடசாலைக்கு, குழுவுக்கு, பிரதேசத்துக்கு பொருந்தும் வகையில் செயற்பாட்டை ஒழுங்கு செய்து கொள்ள முடியும்.
- ஒற்றுமையை வெளிப்படுத்தும் சித்திரம் வரைவதில் பிள்ளைகளை ஈடுபடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.29

## கடிதம் விநியோகிப்போன் (தபாற்காரன்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. தலைப்பு : கடிதம் விநியோகிப்போன்

03. பிரதான இலக்கு : கடிதம் விநியோகிப்போனின் பொறுப்புக்களை அறிமுகப்படுத்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- கடிதம் ஒன்றின் முகவரியை வாசிக்கப் பழகுவர்.
- 1 முதல் 10 வரை எண்ணுவர்.

பண்புகள் :
- பல்வேறு நபர்களுக்கு, இனத்தவர்களுக்கு மரியாதை செய்யத் தூண்டப்படுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- பயன்படுத்திய கடித உறைகள், தபால் அட்டைகள், முத்திரை, வெசக் அட்டைகள், நத்தார் அட்டைகள் போன்றவற்றைச் சேகரித்துக்கொள்ளல்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- கடிதம் விநியோகிப்போனின் சித்திரமொன்றை வரைந்து கொள்ளல்.
- பிள்ளைகளுக்குக் கடிதம் விநியோகிப்போனின் சித்திரத்தைக் காட்டி அது யார் என வினவுதல்.
- பிள்ளைகளுடன் கடிதம் விநியோகிப்போனைப் பற்றிக் கலந்துரையாடல்.
- அதன்போது பிள்ளைகள் கடிதம் விநியோகிப்போனைப் பற்றிப் பெற்றுள்ள எல்லா அனுபவங்களையும் கலந்துரையாடுக. அதற்கு பிள்ளைகளைத் தயார்படுத்துவதற்கு முன் பின்வருவன போன்ற வினாக்களை வினவுவது பொருத்தமானது.

  உதாரணம்:-

  நீங்கள் தபால் மாமாவைக் கண்டிருக்கிறீர்களா?
  அவரை எங்கே கண்டிருக்கிறீர்கள்?
  தபால் மாமா உங்கள் வீட்டுக்கும் வருகிறாரா?

- கலந்துரையாடல் முடிவில் ஏதாவது தகவல்கள் முன் வைக்கப்படாவிடின், அதற்கேற்ற வினாக்களை முன் வைக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆசிரியர் கடிதம் விநியோகிப்போனைப் பற்றிக் கலந்துரையாடும் போது பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்திய சொற்களைத் திருத்தமாக உச்சரித்து அவற்றின் கருத்து புலப்படும் வகையில் பயன்படுத்தி புதிய சொற்கள் இருப்பின் அவற்றையும் அறிமுகப்படுத்தல் வேண்டும்.

  உதாரணம்:- முத்திரை, கடித உறை, தபால் அட்டை, தந்தி, தபாற் கந்தோர்.

**படி 2**

- வகுப்பறைப் பிள்ளைகளிடம் பழைய கடித உறைகள், முத்திரைகள், தபால் அட்டைகள், வெசக் அட்டைகள், நத்தார் அட்டைகள் போன்றவற்றை வளர்ந்தோரின் உதவியுடன் எடுத்துவருமாறு கூறல்.
- கடித உறைகள், முத்திரைகள், தபால் அட்டைகளை வெவ்வேறாக எண்ணுமாறு செய்தல்.
- தபால் மாமா பாதையில் விழுந்து, கடிதங்கள் எல்லாப் பக்கமும் சிதறியுள்ளன. அவருக்கு உதவ நாம் என்ன செய்ய வேண்டும்?
- பிள்ளைகளுடன் கதைத்தல்.
- இவ்வாறான வினாக்கள் நல்ல பழக்கங்களை ஏற்படுத்துவதற்காகச் செய்யும் ஒரு கலந்துரையாடலின் ஆரம்பமாகும்.
- தபாற்காரனின் சித்திரம் வரைதல்.
- சித்திரத்தின் பகுதிகளைப் பூரணப்படுத்தல்.
- சித்திரத்துக்கு நிறந்தீட்டுதல்
- களி, கிளே, மாவு ஆகியவற்றால் கடித மாமாவின் உருவைச் செய்தல்.
- அவர் பயன்படுத்துபவற்றை ஆக்கல்
- ஒரு கதையைச் சொல்லிக் கொடுத்தல். (கடித மாமாவைப் பற்றி)
- ஒரு பாடலைச் சொல்லிக் கொடுத்தல்.
- பிள்ளைகளுடன் பாடுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிங் டிங் அடித்து
சைக்கிள் ஏறி
கடித மாமா வாறார்
எங்கள் கடிதம் தாரார்.

படி 3 • ஒரு பிள்ளை தபாற்காரன் போல் உடையணிந்து ஒரு பிள்ளைக்கு ஒரு கடிதம் வீதம் பகிர்தல்.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- முன்வரும் பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- முன்வரும் பிள்ளைகளைக் கை தட்டி உற்சாகப்படுத்தல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- கடித உறைகள், முத்திரைகள், தபால் அட்டைகள், தபாற் கந்தோர்.
- 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10
- தெரிவு செய்தல், தபாற் கந்தோர்

**10. வேறு விடயங்கள்:**

- பிள்ளைகளுடன் தபாற் கந்தோரைப் பார்க்கச் செல்லுதல் போன்ற செயற்பாட்டை ஒழுங்கு செய்ய முடியும்.
- ஆசிரியரின் விருப்பப்படி ஒரு கதையை, ஒரு கவிதையை, ஒரு பாடலை ஆக்கி பாடத்திற்குப் பயன்படுத்துவது பொருத்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.30

## மீன் மாமா இதோ வந்துள்ளார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. **தலைப்பு** : மீன் மாமா இதோ வந்துள்ளார்

03. **பிரதான இலக்கு** : மீன்காரனையும் அவனது பொறுப்புக்களையும் பற்றி விளக்குதல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- கடல் மீன் விற்பனை போன்ற எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வர்.

**பண்புகள்** :
- பல்வேறு நபர்களுக்கு, தொழில்களுக்கு மரியாதை செய்யத் தூண்டப்படுவர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- பல்வேறு விதத்தில் மீன் வியாபாரம் செய்பவர்களைத் தெளிவாக விளக்கும் சித்திரங்களும், பல்வேறு மீன்வகைகளைக் கொண்ட படங்களும்.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி 1**
- ஆசிரியர் மீன்காரனைப்பற்றி ஒரு பாடலைப் பாடுதல். பிள்ளைகளுக்கு அதனைச் செவிமடுக்கச் செய்தல்.
- மீன்காரனையும், அவனைப் பற்றி பிள்ளைகள் பெற்றுள்ள அனுபவங்களையும் கலந்துரையாடல்.

  நீங்கள் மீன்காரனைக் கண்டிருக்கிறீர்களா?
  எங்கே கண்டீர்கள்?
  அவர் என்ன உடை அணிந்திருக்கிறார்?
  அவர்கள் எதனில் மீனை எடுத்துக்கொண்டு செல்வார்கள்?
- நாம் மீன்காரனை மீன் மாமா என்று சொல்கிறோம் தானே?
- இவ்வாறான வினாக்களுக்கு விடைகளைப் பெறுவதன் மூலம் கலந்துரையாடுக. இக்கலந்துரையாடலின் இறுதியில் யாதேனும் தகவல்கள் விடுபட்டிருந்தால் பொருத்தமான வினாக்கள் வினவி அவற்றை முன் வைக்க.
- ஆசிரியர் பல்வேறு மீன்வகைகளின் படங்களைக் காட்டி, அவற்றின் பெயர்களைப் பிள்ளைகளுக்குக் கேட்குமாறு கூறுதல்.

  உதாரணம் :- சுறா, பாரை, நெத்தலி, சீலா
- மீண்டும் பிள்ளைகளுடன் கூறுதல்.
- மீன் வியாபாரி பயன்படுத்தும் பொருட்களையும் முன்பு போல் படங்களைக் காட்டி, பிள்ளைகளுடன் கதைத்தல்.

  உதாரணம்:- பெட்டி, தராசு, பாரை, நெத்தலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மீண்டும் பிள்ளைகளுடன் கூறுதல்.
- மீன்களை விபரிக்கும் சொற்கள்,
  உதாரணம்:- புதிய, ஐஸ் மீன்
- மீன்களைப் பெற்றுக்கொள்ளும் இடங்கள்.- கடல், குளம் தொடர்பாகப் பிள்ளைகளுடன் கதைத்தல்.

படி 2

- பல்வேறு வகையில் மீன்விற்பவர்களின் பல சித்திரங்களைத் தயாரித்துக் கொள்க. ஒரு வகையில் பல இருத்தல் வேண்டும். (இப்படங்களைப் பிள்ளைகளையும் இணைத்துக் கொண்டு சேகரிக்கலாம். பெற்றோர்களின் உதவியுடன் வீட்டிலிருந்தும் இவற்றைத் தேடிக் கொண்டு வர அறிவுறுத்தலாம்.)
- எண்ணுதல். ஒவ்வொரு வகையையும் வெவ்வேறாக
- அதே போன்று அச்சித்திரங்கள் முன் பள்ளிப்பருவப் பிள்ளைகளால் தெளிவாக வேறுபடுத்தி இனங்காணக் கூடியதாக இருத்தல் வேண்டும். அப்படங்களைக் கலந்து பிள்ளைகளுக்குக் கொடுத்துத் தெரிவு செய்யுமாறு அறிவுறுத்துக. அதன்பின் அவற்றை வேறு வேறாக அறிமுகப்படுத்துக.
- மீன்காரனால் எமக்கு ஏற்படும் பயன்களை விளக்கிக்கூறி, அவர்களின் முக்கியத்துவத்தைக் கதை மூலம் விளக்குதல்.
- இதன் மூலம் அவர்கள் எமது சமூகத்தின் ஒரு பிரிவினர் எனவும் ஏனையவர்களைப்போல் அவர்களையும் மதிக்க வேண்டும் எனவும் புரியவைத்தல்.
- மீன்காரர்கள் எப்பொழுதும் மீன்களைக் கையால் பிடிக்கின்றார்கள் எனவும் மீன்களை வெட்டுவதால் அவர்களின் கைகள் அசுத்தமாகின்றன எனவும் புரியவைத்தல். எனினும் வியாபாரம் முடிந்தபின் குளிப்பதால், சவர்க்காரம் பூசி கைகளைக் கழுவுவதால் அவர்கள் சுத்தமாக இருக்கின்றார்கள் எனவும் பிள்ளைகளுடன் கதைத்தல் வேண்டும். (சுத்தமாக இருப்பதன் முக்கியத்துவத்தை நட்புறவாடல் மூலம் விளக்குதல்)
- மீன்காரர்கள் எப்போதும் சுறுசுறுப்பானவர்கள் எனவும் அவர்களின் உடற்பயிற்சி காரணமாக சுறுசுறுப்பாகவும் கலந்துரையாடி, உடற்பயிற்சியின் முக்கியத்துவத்தை பிள்ளைகளுடன் கதைக்க முடியும்.

படி 3

- மீன்காரனை வரைதல்.
- ஆசிரியர் வரைந்து தரும் சித்திரத்துக்கு நிறந்தீட்டுதல்.
- சித்திரப் பகுதிகளை ஒழுங்குபடுத்துதல் போன்ற செயல்களில் பிள்ளைகளை ஈடுபடுத்த முடியும்.
- களிமண், கிளே ஆகியவற்றால் மீன்காரர்கள், மீன்களை செய்தல்.
- மீன்களின் படங்களை வெட்டி ஒட்டுதல்.

படி 4

- மீன்காரனைப்போல் நடித்தல்.
- ஒரு நாணயத்துக்கு ஒரு மீன் வீதம் விலை கொடுத்து வாங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மீன்காரனைப் போல் அணிந்து கொண்டு, அவனைப்போல் நடமாடிக் கொண்டு இப்பாடலைப் பாடமுடியும்.

  காவு தடியில் மீன் நான் கொண்டு வந்தேனே
  சுறா சூரை பாரை மலிவு விலையில் தாறேன்

- இவ்வாறு பல்வேறு மீன்காரர் போல் நடித்துக் காட்ட முடியும்.

  சுறா சூரை பாரை மீன்கள் மீன் பலகையில்
  சுவை குணம் நல்ல மலிவு தூய நிறையில்
  வாங்க வாங்க புதிய மீனை வந்து எடுங்கள்
  இவர்தான் மீன் மாமா மாமா மாமா

- மீன் ஒரு போஷணை மிக்க உணவு எனப் பிள்ளைகளுடன் கதைத்தல்.
- கருவாடு, மாசி, நெத்தலி என்பன மீன்களிலிருந்து பெறப்படுகின்றன என்பதை விளக்குக.
- அவற்றின் போஷணைத் தன்மை பற்றியும் கூறுக.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- பிள்ளைகள் செய்யும் செயற்பாடுகளை மதித்தல்.
- பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- வரைந்த சித்திரங்களைக் காட்சிப்படுத்தல், பழைய சித்திரங்களுக்குப் பதிலாகப் புதிய சித்திரங்களை வைத்தல், பழைய சித்திரங்களைக் கோவையில் சேகரித்துவைத்துக் கண்காட்சி நடாத்துதல்.
- பிள்ளையின் சகல செயற்பாடுகளையும் கண்காட்சியின்போது முன்வைத்தல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- மீன்களின் பெயர்கள், கடல், குளம், காவுதடி, தராசு, புதிய மீன், ஐஸ் மீன்.
- 1, 2, 3, 4, 5.
- கடல், தராசு, வியாபாரம்.

**10. வேறு விடயங்கள்:**

- ஆசிரியரின் விருப்பின்படி இக்கற்றல் நிகழ்வை நாடகமாக முன்வைக்க மீளமைத்துக்கொள்ளல் பொருத்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.31

# சின்ன விவசாயி மிகவும் சிறப்பானவர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. தலைப்பு : சின்ன விவசாயி மிகவும் சிறப்பானவர்.

03. பிரதான இலக்கு : விவசாயத்தைப் பற்றிய நேர்க்கணிய மனப்பாங்கை ஏற்படுத்தல்

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- விவசாயத்தின்போது பயன்படுத்துகின்ற பல்வேறு ஆயுதங்கள், பிரயோகங்களை அறிந்துகொள்வர்.

திறன்கள் :
- விவசாயத்தின்போது செய்கின்ற பல்வேறு செயல்களை அங்க அசைவின் மூலம் காட்டுகின்ற பயிற்சியைப் பெறுவர்.

பண்புகள் :
- பல்வேறு நபர்களை மதித்து நடக்கத் தூண்டப்படுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- விவசாயம் தொடர்பான பல்வேறு சந்தர்ப்பங்களைக் காட்டுகின்ற படங்கள்.
- சில மரக்கறிகளும் பழவகைகளும்

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- ஒரு பிள்ளையை விவசாயியைப் போல் வேடந்தரிக்கச் செய்து, மண்வெட்டியைக் கையில் கொடுத்து வகுப்பறைக்கு அழைத்து வரல்.
- பிள்ளைகளுடன் விவசாயியைப் பற்றி ஒரு கலந்துரையாடலை மேற்கொள்க.
- பிள்ளைகளிடம் படங்களைப் பகிர்ந்தளித்து, அது பற்றி பிள்ளைகள் - பிள்ளைகளுக்கிடையில் கதைப்பதை ஆசிரியர் நன்கு செவிமடுக்க வேண்டும்.
- கலந்துரையாடலின்போது பிள்ளைகளிடம் பின்வரும் வகையிலான வினாக்களை வினவ முடியும்.

  நீங்கள் விவசாயிகளைக் கண்டிருக்கிறீர்களா?
  எங்கே கண்டிருக்கிறீர்கள்?
  அவர்கள் என்ன செய்கிறார்கள்?
  அவர்கள் என்ன உடை உடுக்கிறார்கள்?
  அவர்கள் எவற்றைப் பயிர் செய்கிறார்கள்?

- இது தொடர்பாகப் பிள்ளைகளுக்குத் தெரிந்த சகல தகவல்களையும் கலந்துரையாடுக. ஏதாவது தகவல்கள் விடுபட்டிருந்தால் பொருத்தமான வினாக்கள் வினவி அவற்றை வெளிக்கொணர்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விவசாயியைப் பற்றி ஒரு எளிய பாடலைப் பாடுதல்.

  மண்வெட்டி எடுத்தே - நான்
  வயலுக்குப் போவேன்
  வயலை உழுதே - நான்
  நெல் விதைப்பேனே.
- இதனை ஆசிரியருடன் பல தடவை பாடிய பின் பிள்ளைகளுக்குத் தனியாகப் பாட முடியும்.
- அதே போன்ற வேறொரு பாடல் கீழே காணப்படுகிறது.

  துடிதுடிப்பு மிக்கவராம் - சுறுசுறுப்பு மிக்கவராம்
  இதோ இந்த விவசாயி - வயல் நோக்கி விரைகின்றார்
- இதனை மேலும் விரிவாக்கி பாடமுடியும்.

படி 2

- பாடலைப் பாடி ஒரு சின்ன விவசாயியைப் போல் நடித்தல்
- பிள்ளைகளைப் பாடசாலைத் தோட்டத்துக்கு அழைத்துச் சென்று, வட்டமாக நிறுத்தி, வட்டத்தைச் சுற்றி பாடலைப் பாடிக்கொண்டு விவசாயியைப் போல் நடிப்பதற்கு சந்தர்ப்பமளிக்குக.
- இதில் எல்லா மாணவர்களையும் ஈடுபடுத்துக.
- விவசாயி பயிர் செய்வதைப் பற்றிக் கதைத்தல்(விஷேசமாக நெற்பயிர்)
- நெற்பயிர்ச் செய்கை செய்யும் விதம் பற்றிக் கதைத்தல்.
- வயலில் வேலை செய்யும் விதம், உழும் விதம், நெல் விதைக்கும் விதம், அறுவடை செய்யும் விதம், நெல்லை உறைகளில் இட்டு தலையில் சுமந்து கொண்டு செல்லும் விதம் என்பவற்றை நடித்துக் காட்ட சந்தர்ப்பமளிக்குக.
- நெல்லிலிருந்து அரிசியையும், அரிசியிலிருந்து சோற்றையும் பெறும் விதத்தையும் கலந்துரையாட முடியும்.

படி 3

- விவசாயி பயிர் செய்யும் வேறு பயிர்கள் பற்றிக் கதைத்தல் மரக்கறிகள், பழவகைகள்
- இதனோடு தொடர்பான அநேகமான விடயங்களை செயற்பாடுகள் (நடிப்பு) மூலம் பிள்ளைகளிடத்தில் உறுதிப்படுத்துக. பிள்ளைகள் மூலம் மரக்கறி, பழவகைகளின் படங்களைப் பெற்றுக்கொள்ளல்.
- அவற்றை வெவ்வேறாக எண்ணச் செய்தல்.
- ஒன்று, இரண்டு..... எக்க, தெக்க,.... என்றவாறு படங்களைக் கலந்து கொடுத்து, குழு ரீதியில் வெவ்வேறாக எண்ணச் செய்தல்.
- மரக்கறி, பழவகைகளின் வடிவங்கள் பற்றிக் கதைத்தல்.
- படங்களை அல்லது உண்மைப் பொருட்களை வடிவத்திற்கு ஏற்ப நீளமானது, கட்டையானது எனத் தெரிவுசெய்தல்.
- அவற்றினால் கிடைக்கும் போஷணை பற்றிக் கதைத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 4
- விவசாயி தொடர்பான சித்திரம் வரைதல்.
- சித்திரத்துக்கு நிறந்தீட்டுதல்.
- சித்திரங்களின் பகுதிகளை ஒழுங்குபடுத்தல்.
- கிளே, களிமண் ஆகியவற்றால் விவசாயி போல் வனைதல்.
- மரக்கறி, பழவகைகளை வனைதல்.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- பிள்ளைகளின் திறமைகளை மதித்தல்.
- பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- பிள்ளைகளின் ஆக்கங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்தல்,

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- விவசாயி, மரக்கறிகள், பழங்கள், நெல், அரிசி
- 1, 2, 3, 4, 5.
- நீளம், கட்டை
- வடிவம்

10. வேறு விடயங்கள்:

- பழைய ஆக்கங்களைக் கோவைப்படுத்தி வைத்து விட்டு புதிய ஆக்கங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்தல்.
- எல்லா ஆக்கங்களையும் சேகரித்துக் காட்சிப்படுத்தல்.
- எல்லாப் பிள்ளைகளையும் விவசாயியைப்போல் நடிக்க சந்தர்ப்பமளித்தல்.
- பாடலை ஆசிரியரின் விருப்பப்படி விருத்திசெய்து கொள்ளல்.
- விவசாயத்தின்போது பயன்படுத்தும் பல்வேறு பொருட்களை, பிரயோகங்களை (கலப்பை, களம்) அறிமுகப்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.32

## பழங்கள் விற்கும் அம்மா இதோ வந்திருக்கிறார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. தலைப்பு : பழங்கள் விற்கும் அம்மா இதோ வந்திருக்கிறார்.

03. பிரதான இலக்கு : பழங்களைச் சாப்பிடுவதுபற்றி பிள்ளைகளுக்கு விளக்குதல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- பல்வேறு பழங்களின் பெயர்களை அறிந்துகொள்வர்

பண்புகள் :
- பல்வேறு நபர்களை, தொழில்களை மதித்து நடக்கத் தூண்டப்படுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- பழவகைகளின் தெளிவான படங்கள்.
- உண்மையான பழவகைகள்

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- பழங்கள் விற்கும் அம்மா பற்றிய ஒரு பாடலைப் பிள்ளைகளுக்குச் செவிமடுக்கச் செய்தல்.

  தட்டு நிறைய பழம் - கொய்யா, வாழை, தோடை
  பழுத்த நல்ல பழம் - விற்கும் அம்மா கொண்டு வந்தார்

- பிள்ளைகளுடன் பழங்கள் விற்கும் அம்மாவைப் பற்றி ஒரு கலந்துரையாடலை மேற்கொள்க.

- கலந்துரையாடலின்போது பிள்ளைகளிடம் பின்வரும் விதத்திலான வினாக்களை வினவ முடியும்.

  நீங்கள் பழங்கள் விற்கும் அம்மாவைக் கண்டிருக்கிறீர்களா?
  எங்கே கண்டிருக்கிறீர்கள்?
  அவர் என்ன உடை உடுத்திருக்கிறார்?
  அவர் என்ன விற்கின்றார்?

- இது தொடர்பாகப் பிள்ளைகளுக்குத் தெரிந்த சகல தகவல்களையும் கலந்துரையாடுக. ஏதாவது தகவல்கள் விடுபட்டிருந்தால் பொருத்தமான வினாக்கள் வினவி அவற்றை வெளிக்கொணர்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 2
- ஆசிரியர் பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்தவேண்டிய சொற்களின் பட்டியலைத் தயாரித்தல்.

- உண்மைப் பழங்களை அல்லது அவற்றின் படங்களைக் காட்டி பெயர்களைத் திருத்தமாக உச்சரிக்கச் செய்து, உரத்த தொனியில் கூறுவதற்குப் பிள்ளைகளைப் பழக்குக.

- பழங்களை விஷேடித்துக் கூறும் சொற்கள். பச்சை, பழுத்த, அழுகிய என்பன போன்ற சொற்கள்.

- கருத்துத் தெளிவாகப் புலப்பட அச்சொற்களைப் பயன் படுத்துக.

- வேறு சொற்கள் இருப்பின் அவற்றையும் அறிமுகப் படுத்துக.

- பல்வேறு பழவகைகளின் சரியான தெளிவான படங்கள் சிலவற்றைத் தயார் செய்து கொள்க

- ஒரு வகையில் பலபடங்கள் இருத்தல் வேண்டும்.

- அப்படங்கள் பிள்ளைகளால் தெளிவாக வேறுபடுத்திக் காணக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

- பிள்ளைகளைக் குழுக்களாகப் பிரித்து, படங்களைக் கலந்து வைத்து, வெவ்வேறாகத் தெரிவு செய்யுமாறு அறிவுறுத்துக. பின் ஒரே வகையான பழங்களை ஒன்று, இரண்டு..... one, two .... எக்க, தெக்க ..... என்றவாறு எண்ணச் செய்க.

படி 3
- பழங்களைச் சித்திரமாக வரைதல், சித்திரங்களைப் பூரணப்படுத்தல், பகுதிகளை ஒழுங்குபடுத்தல், நிறந்தீட்டுதல், களிமண், கிளே ஆகியவற்றால் பழங்களை ஆக்குதல்.

- பழங்களைத் தயாரித்து, ஒரு பழத்தட்டை ஆக்குதல்.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- பிள்ளைகளின் செயற்பாடுகளை மதித்தல்.
- பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- பிள்ளைகளின் ஆக்கங்களைக் காட்சிப்படுத்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- பல்வேறு பழவகைகளின் பெயர்கள்
- 1, 2, 3, 4, 5.
- பழங்கள்

10. வேறு விடயங்கள்:

- வளர்ந்தோரின் உதவியுடன் பிள்ளைகளையும் இணைத்துக் கொண்டு, பழங்களைக் கழுவி, தோல் நீக்கி, பழப்பாகு செய்து, அவர்களுக்கு வழங்குதல்.

- ஒரு பிள்ளைக்கு ஒரு கோப்பையும் ஒரு கரண்டியும் வழங்குதல்.

- பழங்களை வெட்டும்போது கத்தியைப் பயன்படுத்த சந்தர்ப்பம் வழங்குக. கவனமாக செயற்படுமாறு வலியுறுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.33

# ஒற்றுமையும் மகிழ்ச்சியும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**01. பிரதான துறை :** தனி நபர் மற்றும் சமூக விருத்தி

**02. தலைப்பு :** ஒற்றுமையும் மகிழ்ச்சியும்

**03. பிரதான இலக்கு :** ஒரு கூட்டமாக, குழுவாக செயற்படப் பழக்குதல்.

**04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள் :**
- பல்வேறு பொருட்களை அறிந்து கொள்வர்.

**திறன்கள் :**
- கத்தரிக்கோல் போன்ற சிறிய உபகரணங்களைப் பயன்படுத்தப் பழகுவர்.

**பண்புகள் :**
- பொருட்களைப் பரிமாறிக்கொண்டு குழுவாக வேலை செய்வதற்கான ஊக்கத்தை விருத்தி செய்து கொள்வர்.

**05. செயற்பாட்டின் தன்மை :** இது ஒரு குழு செயற்பாடாகும்.

**06. முன் ஆயத்தம் :**
- பல்நிற சவ் கடதாசிகள்.
- பலூன்
- நூல்
- கத்தரிக்கோல்
- பசை ஒட்டுநாடா
- பஞ்சு
- ஈர்க்கு
- ஸ்டொகினெட் துணி
- ஒரு காய்ந்த கிளை
- மணல் நிறைத்த ஒரு பாத்திரம்

**07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

படி 1 • சின்ன சின்ன கறையான்கள்
வரிசை வரிசையாக சேர்ந்து
பெரிய வீடு கட்டுது
இதோ இதைப் போலவே

சிறுவர் நாமும் ஒன்று சேர்ந்து
கறையான்கள் போலவே
வேலை செய்து நாட்டை வளர்ப்போம்
ஒற்றுமையாய்க் கூடியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இப்பாடலைப்பாடி ஆசிரியர் ஒற்றுமையாக செயற்படுவதன் முக்கியத்துவம் பற்றி பிள்ளைகளுடன் கலந்துரையாடல்.

படி 2

- பிள்ளைகளை மூன்று குழுக்களாகப் பிரித்தல்.

குழு இல 1 : இற்கு சவ் கடதாசி, கத்தரிக்கோல், கம் என்பவற்றை வழங்கல்.

குழு இல 2 : இற்கு, ஈர்க்கு, பஞ்சு, பசை ஒட்டுநாடா, ஸ்டொகினெட் என்பவற்றை வழங்கல்.

குழு இல 3 : இற்கு, பலூன், நூல், கத்தரிக்கோல், சவ்கடதாசி, ஒரு பிளடிக்னம் பேனை வழங்குதல்.

- ஒவ்வொரு குழுவிடமும் சென்று ஆக்கங்களைத் தயாரிக்கும் விதம் பற்றி அறிவுறுத்தல்.

- குழு இல - 1. நிற சவ் கடதாசிகளை கீலங்களாக வெட்டி, சங்கிலிபோல் பசையால் ஒட்டி, அலங்கார ஆக்கமொன்றைச் செய்க.

- குழு இல - 2. பஞ்சை வட்டமாக்கி, ஸ்டொகினெட் துணியைச் சுற்றி, ஈர்க்கு நுனியில் வைத்து, நூலால் கட்டுக. பசை ஒட்டு நாடாவை ஈர்க்கு முழுவதும் சுற்றிப் பூர்த்தி செய்க.

- குழு இல - 3. பலூனை ஊதி கட்டிக்கொள்க. அதன்பின் ஒரு நீளமான நூலைக் கட்டிக்கொள்க.

- இவ்வாறு தயாரித்த பலூனை, கட்டியுள்ள நூலினூடகப் புகுத்தி, வெட்டிக்கொண்ட சவ் கடதாசியின் தலைமயிர் போன்ற ஒரு தாளையும் புகுத்துக. பின் பிளடிக்னம் பேனையால் கண், மூக்கு, வாய் என்பவற்றைக் குறிக்குக.

- வகுப்பறை நடுவில் மண் நிரப்பிய பாத்திரத்தை வைத்து காய்ந்த கிளையை நட்டுக.

- எல்லாக் குழுக்களும் செய்த ஆக்கங்களை அதில் தொங்கவிடுமாறு அறிவுறுத்துக.

- தாம் செயற்பட்ட இடங்களைச் சுத்தம் செய்யுமாறு அறிவுறுத்துக. கடைசியாக ஆரம்பத்தில் பாடிய பாடலைப் பாடி பிள்ளைகளுடன் நடிக்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. **மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- தயாரித்த சிறு ஆக்கங்களைப் பிள்ளைகளுக்குக் காட்டுதல்
- சிறு பிள்ளைகளுக்கு சின்ன சின்ன வேலைகளைச் செய்யும் ஆற்றல்கள் உள்ளன என அவர்களை மதித்து, பாராட்டி, ஒரு கலந்துரையாடலை நடத்துதல்.
- பல்வேறு உபகரணங்களைப் பயன்படுத்த சந்தர்ப்பம் வழங்குதல்.
- பிள்ளைகள் விரும்பும் பல்வேறு ஊடகங்களை அறிமுகப்படுத்தல்.
- தயாரித்த ஆக்கங்களை மதித்தல்.
- பிள்ளைகள் விரும்பும் நிறங்களைப் பயன்படுத்தவிடல்.
- பிள்ளைகளுக்கு ஓர் இன்ப அனுபவம் கிடைக்கும் வகையில் பாடலை முன்வைத்தல்.
- முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் சங்கீத உபகரணங்களை அல்லது மாதிரி உபகரணங்களை இசைப்பதற்கும் நடிப்பதற்கும் பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பமளித்தல்.
- எல்லாப் பிள்ளைகளையும் மதித்து, பாராட்டி வகுப்பறைக்கு முன் வரவழைத்து விஷேடமாக அறிமுகஞ் செய்தல்.

09. **கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- கறையான், புற்று
- ஒற்றுமை

10. **வேறு விடயங்கள்:**

- இவ்வாறான பல மரங்களைத் தயாரிப்பதில் பிள்ளைகளை ஈடுபடுத்துக.
- கவனமாக உபகரணங்களைப் பயன்படுத்துமாறு வலியுறுத்துக.
- இவ்விசித்திரமான மரத்தைத் தயாரிப்பதற்கு ஆசிரியரின் விருப்பப்படி வேறு ஒரு கற்றல் நிகழ்வை ஒழுங்கு செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.34

# நாம் எல்லோரும் மிகவும் திறமையானவர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தனி நபர் மற்றும் சமூக விருத்தி

02. தலைப்பு : நாம் எல்லோரும் மிகவும் திறமையானவர்கள்.

03. பிரதான இலக்கு : பிள்ளைகளிடம் பல்வேறு திறமைகள் உள்ளன என்பதை விளக்குதல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் : • பல்வேறு திறமைகளைக் குறிப்பிடுவர்.

திறன்கள் : • ஆடல் பாடல் திறன்களை விருத்தி செய்து கொள்வர்.

பண்புகள் : • திறமைகளை மதிக்கும் பழக்கத்தைப் பெறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் : பிள்ளைகள் எல்லோரையும் வட்டமாக நிற்கச் செய்தல். இதனை வகுப்பறைக்கு வெளியே செய்வது மிகவும் பொருத்தமானது.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1

- ஆசிரியர் வட்டமாக நின்றுள்ள ஒரு பிள்ளையை நடுவிற்கழைத்தல். அதன் பின் அப்பிள்ளையை மதிப்பீடு செய்தல்.
  உதாரணம்:- எனது வகுப்பில் ஆடுவதில் மிகவும் கெட்டிக்காரி

- அதன் பின் சுற்றிலுமுள்ள பிள்ளைகள் சப்தமிட்டு நடுவிலுள்ள பிள்ளையைப் பார்த்து, "எங்கள் வகுப்பில் ஆடுவதில் நல்ல கெட்டிக்காரி" என்று கூறுவர். பின் நடுவிலுள்ள பிள்ளை வரிசையில் சேர்ந்து கொள்ள வேறொரு பிள்ளை நடுவிற்கு வரும். அதன்பின் பிள்ளைகளின் திறமைகளை இனங்கண்டு, அவர்களிடையே விருத்தியுறச் செய்ய வேண்டிய திறமைகளை மனதிலே பதித்துக்கொண்டு, வர்ணனை வசனங்கள் மூலம் மதிப்பீடு செய்க.

உதாரணம்:- "எனது வகுப்பில் ஓடுவதில் நல்ல கெட்டிக்காரன்"
"எனது வகுப்பில் இரக்கமுள்ளவன்"
"பிள்ளைகள்"
"தாசன் அழகான சித்திரம் வரைபவன்"
"எனது வகுப்பின் பாடகி வசந்தி"
"சுத்தமான ஆடை அணிவது நீங்கள்"
"நீங்கள்தான் நாள் தவறாமல் பாடசாலைக்கு வருகை தருபவர்"
"இவர்தான் வகுப்பறையில் பூச்சாடியை அழ்காக வைப்பவர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- என்றவாறு பிள்ளைகளின் திறமைகளை வெளிப்படுத்தி, ஆசிரியர் நடுவிலுள்ள பிள்ளை பற்றி வர்ணிக்குக. சுற்றிலுமுள்ள பிள்ளைகள் அவ்வசனத்தை நடுவிலுள்ள பிள்ளையைப் பார்த்துக் கூறி புகழ்வார்கள்.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- முன்வரும் பிள்ளைகளைப் பாராட்டுக.
- முன்வந்து நிற்பவர்களைக் கை தட்டி உற்சாகப்படுத்துக.
- பின்தங்கிய பிள்ளைகளை நன்கு மதித்து ஊக்குவித்தல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- கருணையுள்ள, சுத்தமான, திறமையான
- திறமைகள்

**10. வேறு விடயங்கள்:**

- ஆசிரியரின் விருப்பப்படி இச்செயற்பாட்டை மறுசீரமைத்து, பிள்ளைகளுக்கு விநோதமும், இன்ப அனுபவமும் கிடைக்கும் வகையில் செயற்படுத்துவது பொருத்தமானது.

- ஒவ்வொன்றிலும் திறமையான பிள்ளைகள் மூலம் அந்தந்த செயற்பாடுகளைச் செய்து, ஒரு செயற்பாட்டில் திறமையுள்ள பலரை ஒன்று சேர்த்து ஒரு குழுவாக ஈடுபடுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07

# தொடர்பாடல் திறன்கள் விருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7.1

# தன்னை அறிமுகம் செய்தல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தொடர்பாடல் திறன்கள் அபிவிருத்தி

02. தலைப்பு : தன்னை அறிமுகம் செய்தல்.

03. பிரதான இலக்கு : தன்னைப் பற்றிய பல்வேறு தகவல்களை விபரித்தல்

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் : • விடயங்களை விபரிக்கும் ஆற்றலைப் பெறுவர்.

திறன்கள் : • பேச்சுத் திறனை விருத்தி செய்து கொள்வர்.

பண்புகள் : • சபைக் கூச்சமின்றி முன்வருவதற்குத் தூண்டப்படுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் : பெற்றோர்களினதும் குடும்ப உறுப்பினர்களினதும் பெயர், ஊர், தொழில் போன்றவற்றை அறிந்து வருமாறு அறிவுறுத்தல்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- ஆசிரியர் பின்வரும் விடயங்களுடாகத் தன்னைப் பற்றி விபரிப்பார்.
- பெயர்
- தனது உடை
- உடையின் நிறம்
- தான் பாடசாலைக்கு வரும் விதம்
- எனது வீட்டிலுள்ளவர்கள்

படி 2
- எல்லாப் பிள்ளைகளையும் அமரச் செய்க.
- ஒவ்வொரு பிள்ளைக்கும் முன்வந்து தன்னைப் பற்றி விபரிக்க சந்தர்ப்பம் வழங்குக.
  - தனது பெயர்
  - தனது ஊர்
  - தனது உடை
  - தனது வீட்டிலுள்ளோர்
  - தான் பாடசாலைக்கு வரும் விதம்
  - தனது குடும்பத்திலுள்ளோர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- முன்வரும் பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- விடயங்களை முன்வைப்பதை மதித்தல்
- எல்லாப் பிள்ளைகளுக்கும் சின்ன சின்ன பரிசில்களை வழங்குதல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- ஏனையோரின் பெயர்கள்
- ஊர்
- உடை
- வீடு
- அம்மா
- அண்ணா
- அக்கா
- தங்கை
- குடும்பம்

**10. வேறு விடயங்கள்:**

- இச்செயற்பாடு வருட ஆரம்பத்திலேயே செய்யப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7.2

# அந்தரே சீனி உண்ட விதம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தொடர்பாடல் திறன்கள் அபிவிருத்தி

02. தலைப்பு : அந்தரே சீனி உண்ட விதம்

03. பிரதான இலக்கு : கதை சொல்லும் திறனைப் பெற்றுக் கொடுத்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- ஒரு கதையைக் கற்றுக்கொள்வர்.

திறன்கள் :
- மனங்கவரும் கருத்துக்களைக் கூறும் திறனைப் பெற்றுக்கொள்வர்.

பண்புகள் :
- கதை கூறும் விருப்பை விருத்தி செய்து கொள்வர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- அந்தரேயையும் அவனது மகனையும் போல உருவம் தயாரித்தல்
- பிங்பொங் பந்துகள் 2 / வெடித்த டெனிஸ் பந்துகள்
- ஒரு கறுப்புத் துணித்துண்டு
- வட்டவடிவில் வெட்டிக்கொண்ட இரு துணித்துண்டுகள்

- சிறிய துளைகள் 2 வெட்டப்பட்டிருத்தல் வேண்டும்.



- பின்வருமாறு உருக்களைத் தயாரித்துக் கொள்க.
- பிங்பொங் பந்து இரண்டிலும் கீழ்ப்பாகத்தில் நடுவிரலைப் போடக்கூடிய அளவு 2 துளைகளை இடுக.
- பந்துகளின் மேற்பாகத்தில் கறுப்புத் துணித்துண்டால் வட்டங்களை வெட்டி, கொண்டை போல் ஒட்டுக.
- பந்துகளின் முன் பக்கத்தில் இரு கண்கள், வாய், மூக்கு, ஆகியவற்றைக் கறுப்பு நிறத்தால் வரைந்து கொள்க. ஒரு பந்தில் மேல் மீசையை வரைக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உடைக்கென துணியிலிருந்து வெட்டிய இரு வட்டங்களையும் பிங்பொங் பந்துகளின் துளைகளில் புகுத்தி, ஒட்டுக. நடுவிரலைப் பயன்படுத்துக.
- இப்போது மேல் மீசையுள்ள உருவத்தை அந்தரேயாகவும்,மற்றையதை மகனாகவும் பயன்படுத்துக.
- உருவங்களைத் தயார் செய்து கொள்க.
- வளர்ந்தோரிடமிருந்து அந்தரே பற்றிய கதையை அறிந்து கொண்டு வருமாறு பிள்ளைகளிடம் கூறுதல்.

## 07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1

- விகடகவி நான் விகடகவி நான்
மன்னர் காலம் இருந்துவந்த விகடகவி நான்
விழுந்து விழுந்து சீனி உண்ட விகடகவி நான்
அந்தரே என்றழைக்கும் விகடகவி நான்.....
லல்லலா... லல்லலா..... லல்ல லல்ல லா.... என்று நடித்துக்கொண்டு ஆசிரியர் வகுப்பறைக்கு வருதல்.

இரு உருவப் படங்களையும் மேசையின் மேல் வைக்க. வகுப்பறைக்கு முன்னால் சென்று, இன்று நான் உங்களுக்கு ஓர் அழகான கதை சொல்லித் தரப் போகின்றேன். கதைக்குத் தேவையான இரண்டுபேர் எனது மேசையின் மேல் இருக்கிறார்கள். உருவப் படங்களைக் காட்டுக. அவற்றை நடுவிரலில் இட்டுக் கொள்க.

படி 2

- முன்பு ஒரு காலத்தில் அந்தரே என்றொரு விகடகவி இருந்தான். அவன்தான் முன்னைய அரசர்களுக்கு விகடக்கதைகளைக் கூறுவான். (அந்தரேயின் உருவத்தைக் காட்டுக) ஒரு நாள் அவன் அரச மாளிகைக்குச் சென்ற போது முற்றத்திலே ஒரு பாயில் ஒரு வகை வெள்ளை நிறத் தூள் உலரவிடப்பட்டிருந்தது. அந்தரே, எங்கே பார்ப்போம். இதென்ன பாயில் உலரவிடப்பட்டிருக்கின்றது என்று ஆராய்ந்து பார்த்தான். அப்போது அந்தரே இதென்ன என்று அரசனிடம் கேட்க விரும்பினான். அரசரே அந்தப் பாயில் உலரவிடப்பட்டிருப்பது என்ன? என்று கேட்டான். (உருவப்படத்தை விரலில் இட்டுக்கொண்டு அங்கு மிங்கும் நடந்து கேள்வி கேட்கின்ற மாதிரி காட்டுக.) அது ஒரு வகை மண் என்று அரசர் கூறினார். அரசர் பொய் சொன்னது அந்தரேயிற்கு விளங்கிவிட்டது. அந்தரே வீட்டுக்குப் போனார். (உருவப்படத்தை இயக்கிக் காட்டுக) மகன்.... மகன்.... என்று மகனை அழைத்தார். (அடுத்த உருவத்தைக் கையில் எடுத்து) என்ன அப்பா? (என்று குரலை மாற்றிப் பேசுக) மகன், நான் அரச மாளிகைக்குப் போன பின்பு ஐயோ! அப்பா எங்கள் அம்மா இறந்து விட்டார் என்று சத்தம் போட்டுக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாளிகைப் பக்கம் ஓடி வரச் சொன்னான். நல்லது அப்பா என்று மகன் பதில் சொன்னான். அந்தரே சொன்னது போல அம்மா இறந்து விட்டார் என்று சத்தம் போட்டுக் கொண்டு மகன் அரச மாளிகைக்கு வந்தான். அப்போது ஐயோ மகனே உன் வாயிலும் மண், என் வாயிலும் மண் என்று சொல்லிக் கொண்டு இருவரும் சீனிப் பாயில் விழுந்து சீனி சாப்பிட்டார்கள்.

- இதனைச் செய்யும்போது இரு உருவங்களையும் கையில் வைத்துக் கொண்டு இயக்கிக் காட்டுக. குரலை உயர்த்தியும் தாழ்த்தியும் பேசுவதில் கவனஞ் செலுத்துக.

- பிள்ளைகளையும் அக்கதையைக் கூறுமாறு நெறிப்படுத்துக.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- கதையைக் கூறும் பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- உரையாடல் பகுதிகளை உச்சரிக்கச் செய்க.
- கதையை நடித்துக் காட்ட இடமளிக்குக.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள் :**

- அந்தரே
- சீனி
- அரசர்
- இராணி
- மகன்
- முற்றம்
- பாய்
- அதிகம், உலரவைத்தல், விகடகவி, அரசமாளிகை

**10. வேறு விடயங்கள் :**

- உருவங்களைத் தயாரித்துக் கொள்ளும் முறையை ஆசிரியரின் விருப்பப்படி மாற்றிக் கொள்ளமுடியும்.
- அந்தரேயின் கதையைப் பிள்ளைகளைக் கொண்டே நடிக்கச் செய்ய முடியும்.
- இது தவிர அந்தரேயின் வேறு கதைகளையும் கூறலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7.3

# தொலைக் காட்சி பேசுகிறது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : தொடர்பாடல் திறன்கள் அபிவிருத்தி

02. **தலைப்பு** : தொலைக் காட்சி பேசுகிறது.

03. **பிரதான இலக்கு** : கதை சொல்லும் திறனைப் பெற்றுக் கொடுத்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- நிகழ்வுகளை ஒழுங்கு முறையில் கூறும் ஆற்றலை விருத்தி செய்து கொள்வர்

**திறன்கள்** :
- திருத்தமாக சொற்களை உச்சரிக்கும் திறனை வளர்த்துக் கொள்வர்.

**பண்புகள்** :
- கதை கூறும் விருப்பை விருத்தி செய்து கொள்வர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- 1½ x 1 மீற்றர் நீள அகலமுள்ள ஒரு பொலித்தீன் தாள் (திரைக்காக)
- கறுப்பு அல்லது நிறத்தாள்கள் விளிம்புக்காக.
- திரைக்கு இடுவதற்கான ஒரு நாடா
- கம்பினால் செய்யப்பட்ட தாங்கிகள் இரண்டு







- 1½ x 1 மீற்றர் நீள அகலமுள்ள ஒரு பொலித்தீன் தாளை எடுக்க.
- பொலித்தீன் தாளின் மேல் நாடாவை இடுவதற்கு ஒரு கரையை விடுக.
- நிற வார்னிஷ் தாளிலிருந்து 3 அங்குலமளவு அகல முள்ள கீலங்களை வெட்டி சுற்றிலும் ஒட்டுக.
- முன் பக்கத்தின் இடது பக்கத்தில் 3 பற்பசை டியுப் மூடிகளை சம இடைவெளி உள்ளதாக ஒட்டுக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- கம்புத் தாங்கிகள் இரண்டையும் வகுப்பறையின் முன் வைத்து பொலிதின் திரையை முடிச்சிடுக.

**07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

படி 1 • ஆசிரியர் திரையின் பின்னால் நிற்க. இப்பொழுது நான் உங்களுக்கு தொலைக்காட்சியில் தென்படுவேன். இதோ நான் இப்பொழுது ஆமையும் முயலும் போட்டியில் பங்கு பற்றிய கதையைக் கூறப்போகின்றேன் எனக்கூறி கதையை முன்வைத்தல். ஆசிரியர் மெதுவாகக் கதையைச் சொல்லும் போது பிள்ளைகள் கேட்பதில்லை எனக்கூறுவர். உடனே ஒரு பிள்ளையை அழைத்து ஒட்டியுள்ள மூடியைத் திருப்புவது போல் பாவனை செய்யுமாறு கூறுக. கதையைக் கூறவேண்டும்.

படி 2 • பிள்ளைகளுக்கு முன்வந்து கதை கூற சந்தர்ப்பமளித்தல். அல்லது வேறொரு கதையைக் கூற இடமளித்தல். எல்லா மாணவர்களுக்கும் முன்வந்து கதை கூறுமாறு அறிவுறுத்துக.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- முன்வரும் பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- முன்வந்த பிள்ளைகளுக்கு கை தட்டி உற்சாகமளித்தல்.
- கதையை நிகழ்வு ஒழுங்கில் கூறிய பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- முடியாதவர்களுக்கு உதவுதல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- தொலைக்காட்சி, திரை, ஸ்விச், Television
- கதை கூறுதல்

**10. வேறு விடயங்கள்:**

- தொலைக்காட்சியில் மட்டுமன்றி வானொலியிலும் கதை கூறுவது போன்று கூற வழிப்படுத்துக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7.4

## இரண்டு நண்பர்கள் சந்தித்துள்ளார்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தொடர்பாடல் திறன்கள் அபிவிருத்தி

02. தலைப்பு : இரண்டு நண்பர்கள் சந்தித்துள்ளார்கள்

03. பிரதான இலக்கு : ஓர் உரையாடல் வடிவில் கருத்துக்களை முன்வைத்தல்

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் : • 'உரையாடல்' என்ற எண்ணக் கருவை அறிந்து கொள்வர்.

திறன்கள் : • திருத்தமாக சொற்களைப் பிரயோகிக்கும் திறனைப் பெறுவர்.

பண்புகள் : • மகிழ்ச்சியுடன் கருத்துக்களை முன்வைக்கும் தூண்டுதல் ஏற்படுத்திக் கொள்வர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது இவ்விருவராகச் செய்யும் செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :

- ஆசிரியர் ஒரு வண்ணத்துப் பூச்சியினதும் ஒரு ரோசாப் பூவினதும் சித்திரங்கள் இரண்டினை வரைக. அவற்றை ஒரு தடியில் ஒட்டி அல்லது முடிச்சிட்டுக் கொள்க.

- இப்படங்கள் இரண்டையும் கைகளில் ஏந்தியவாறு வகுப்பறைக்குள் வருதல். ஆசிரியர் இவ்விரு பாத்திரங்களைப்போல உரையாடி விடயங்களை முன்வைத்தல்.

- நான் தூர இடத்திலிருந்து ஏன் பறந்து வந்தேன் என்று தெரியுமா ரோசாப் பூவே? உங்களின் சுக துக்கங்களைத் தேடிப்பார்க்க. இனி எப்படி சுகம்?

- என்னைக் காண வந்ததற்கு மிக்க நன்றி. நான் நல்ல மகிழ்ச்சியாக இருக்கிறேன். நீங்களும் அப்படியா? இது போன்று உரையாட நீங்களும் விருப்பமா? அப்படியாயின் நாம் உரையாடுவோமா?

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1

- பிள்ளைகளை இவ்விரண்டு பேராக வேறுபடுத்தி, வகுப்பின் நடுப்பகுதிக்கு அழைத்து, வண்ணத்துப் பூச்சி, ரோசாப் பூ அட்டைகளைக் கையில் கொடுத்தல்.

- பிள்ளை விரும்பிய விதத்தில் கையிலுள்ள அட்டைக்கு ஏற்ப உரையாடுமாறு சந்தர்ப்பம் வழங்குக.

- இவ்வாறு வகுப்பில் எல்லா மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- அனைத்துப் பிள்ளைகளையும் பாராட்டுதல்.
- எல்லோரும் சேர்ந்து கை தட்டி உற்சாகமளித்தல்.
- மிக நன்று, நன்று, கேட்டுக் கொண்டிருப்பதற்கு சரியான ஆசை.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- வண்ணத்துப் பூச்சி, ரோசாப் பூ, அட்டை, பறந்து, தடி
- ஒன்று, இரண்டு
- உரையாடல்

**10. வேறு விடயங்கள்:**

- படங்களுக்குப் பதிலாக முன்னர் தயார் செய்து வைத்துள்ள முகமூடி, ஆடை ஆபரணங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி, இச்செயற்பாட்டைச் செய்வது மிகவும் பொருத்தமானது.

- முன்னர் கற்பித்த ஒரு கதையைப் பயன்படுத்தியும் இவ்வாறான உரையாடல்களைக் உருவாக்க முடியும்.

- இவ்வுரையாடலில் இரு பாத்திரங்களை மட்டுமல்ல பல பாத்திரங்களையும் பயன்படுத்தலாம்.

- கதைக்குரிய நிகழ்வுக்காக பல்வேறு சந்தர்ப்பங்களை ஆக்கிக் கொள்ள முடியும். (உதா: முதியோர் இருவரின் சந்திப்பு, பல பிராணிகளின் சந்திப்பு, வீட்டில் ஒரு நட்புறவாடல்) இங்கு பிள்ளைகளின் அனுபவத்துக்கேற்ற சந்தோசமாகக் கருத்துக்களை முன்வைக்கக் கூடிய நிகழ்வுகளைத் தெரிவு செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7.5

# கதைகளை உருவாக்குவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தொடர்பாடல் திறன்கள் அபிவிருத்தி

02. தலைப்பு : கதைகளை உருவாக்குவோம்

03. பிரதான இலக்கு : பல சித்திரங்களைப் பயன்படுத்தி ஒரு கதையைக் உருவாக்குவோம்

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :

ஆற்றல்கள் :
- பல நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி ஒரு கதையைக் உருவாக்குவோம்.

திறன்கள் :
- ஒரு குழுவின் முன் பேசும் பழக்கத்தைப் பெற்றுக் கொள்வர்.

பண்புகள் :
- கதை கூறுவதன் மூலம் இன்ப உணர்வைப் பெறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- ஆசிரியர் சித்திரங்கள் அடங்கிய அட்டவணை ஒன்றைத் தயார் செய்து கொள்ளல். (பக்கங்களைப் புரட்டிக் காண்பிக்கக் கூடியதாக)
- பிள்ளைகள் சித்திரங்களைப் பார்த்துக் கதை கூறும் வகையில் பல சித்திரங்களைத் தயார் செய்துகொள்ளல். (பக்கங்களைப் புரட்டிக் காண்பிக்கக் கூடியதாகவும், பலகையில் தொங்கவிடக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்)
- ஆசிரியர் தயாரித்த சித்திரங்கள் அடங்கிய அட்டவணையை பிள்ளைகளுக்குக் காண்பித்து, வகுப்பறைக்கு வெளியே சென்று கதையைச் சொல்லிக் கொடுத்தல்.

  பின்வருவன போன்ற வினாக்களை வினவுவதன்மூலம் பாடப் பிரவேசம் செய்யலாம்.

  - ★ இந்தப்படத்தில் என்ன இருக்கின்றது?
  - ★ பாய்ந்தோடுவது யார்?
  - ★ ஏன் இவர் பாய்ந்தோடுகிறார்?
  - ★ ஆற்றுக்கருகே ஓடிவிட்டு வந்துள்ளவர் யார்?
  - ★ முயல் மரத்தடியில் என்ன செய்து கொண்டிருந்திருக்கும்?
  - ★ முயல் எங்கே தப்பி ஓடியது?

  என்றவாறு கதையைக் கட்டியெழுப்புவதற்கு ஆசிரியர் கைகொடுத்து உதவி, கதையைக் கூறிக்காட்டுதல்.
- அங்கே ஒரு முயல் இருந்தது. அது ஆற்றுக்கருகில் புல் தின்று கொண்டிருந்தது. ஒரு நாய் இதனைக் கண்டது. அது குரைத்துக் கொண்டு முயலின் அருகில் வந்தது. முயல் பயந்தது. ஒரேயடியாக ஆற்றின் மறுகரைக்குப் பாய்ந்த முயல் காட்டுக்கு ஓடிச் சென்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

படி 1 • ஆசிரியர் ஏற்கனவே தயாரித்த அட்டைகளைப் பிள்ளைகளுக்குக் காண்பித்து, இப்பொழுது நீங்களும் இப்படங்களைப் பார்த்து கதை சொல்லலாம் தானே என்று கூறுதல்.



பூனை ஒரு பலூனைக் கண்டது.



தோட்டத்துக்குப் பின்னால் உள்ள வயல்வெளிக்குச் சென்று பலூனை ஊதியது.



திடீரென ஒரு காற்று வீசி பூனை மேலே சென்றது.



இதைக் கண்ட குருவி பலூனை தனது அலகினால் கொத்தியது. பலூன் டோங் என்ற சத்தத்துடன் வெடித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐயோ பூனை கீழே விழுந்தது.
குருவி பறந்து சென்றது.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- கதையை கட்டிக்கூறிய பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- முன்வந்த பிள்ளைகளைக் கை தட்டி உற்சாகப்படுத்தல்.
- கதையை முன்வைக்க முடியாமற்போன பிள்ளைகளுக்கு உதவுதல்.
- ஒரு சில வசனங்களையாவது கூறும்படி செய்தல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- ஆறு, புல், முயல், நாய், மறுகரை, மேலே, டோங்
- ஒன்று
- துக்கம், மகிழ்ச்சி, பயம்

10. வேறு விடயங்கள்:

- இவ்வாறான கதைகளைக் கட்டியெழுப்பக் கூடிய சித்திரங்கள் பலவற்றைப் பயன்படுத்தி பிள்ளைகளுடன் சேர்ந்து கதைகளைப் புனைதல்.
- கதைகளில் பாடல்களைச் சேர்த்துக்கொள்வது மிகவும் பொருத்தமானது.
- கதைகளில் வரும் சில நிகழ்வுகளை சித்திரமாக வரையுமாறு பிள்ளைகளுக்குக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7.6

# பிராணிகள் ஒரு கூட்டம் வந்திருக்கிறன





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தொடர்பாடல் திறன்கள் அபிவிருத்தி

02. தலைப்பு : பிராணிகள் ஒரு கூட்டம் வந்திருக்கிறன.

03. பிரதான இலக்கு : பிராணிகளைப் போல் பாவனை செய்து உரையாடல்

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் : • பல்வேறு பிராணிகளின் ஒலிகளை அறிந்து கொள்வர்.

திறன்கள் : • பல்வேறு ஒலிகளை ஒலித்துக் காட்டும் திறனைப் பெறுவர்.

பண்புகள் : • பிராணிகளின் மீது அன்பு கொள்வர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் : • நாய், பூனை, சேவல், மைனா, கிளி, காகம் போன்றவற்றின் தெளிவான படங்கள்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1
- பிள்ளைகளுடன் பாடசாலைத் தோட்டத்துக்குச் சென்று சூழலில் கேட்கின்ற ஒலிகளைச் செவிமடுக்கச் செய்தல்.
- பிள்ளைகளுடன் அந்த ஒலிகள் பற்றிக் கதைத்தல்.
- வானொலிச் சத்தம், வாகன ஒலி, பிராணிகளின் ஒலி ஆகியவற்றை அறிந்துகொள்ள உதவுதல்.
- பிள்ளைகளுக்குப் பிராணிகளின் படங்களைக் காட்டி, அவை பற்றிக் கதைத்தல்
- பிள்ளைகளுக்கு அவைகளைப் போல் ஒலிக்குமாறு கூறுதல்.
- ஆசிரியரும் அப்பிராணிகளைப் போல் ஒலித்தல்

படி 2
- பிள்ளைகளை இவ்விருவராக அல்லது குழுக்களாகப் பிரித்தல்.
- இருவர் அல்லது குழுவினர் பிராணிகளின் பாஷையில், அபிநயத்துடன் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள வழிகாட்டுக.
- முதலில் குழுவாகவும் அடுத்து கூட்டமாகவும் முன்வைப்பதற்கு வழி செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- முன்வரும் பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- முன்வராத பிள்ளைகளை ஊக்குவித்தல்

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- சேவல், நாய், பூனை
- காகம், மைனா, கிளி
- பிராணிகளின் ஒலி

**10. வேறு விடயங்கள்:**

- ஒவ்வொரு பிள்ளையும் ஏற்கும் பாத்திரத்தைக் காட்டுவதற்காகக் கடதாசி போன்ற ஒன்றை அணிந்துகொள்ளச் செய்து, மிகவும் உயிரோட்டமுள்ள ஓர் உரையாடலில் ஈடுபடச் செய்யலாம்.

- இவ்வுரையாடலை அங்க அசைவுகள், அபிநயங்கள், பிராணிகளின் ஒலிகள் ஆகியவற்றோடு மட்டும் மட்டுப்படுத்தி, அதனை மகிழ்ச்சிக்குரிய ஓர் அனுபவமாக ஆக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7.7

## டக் டுக் மாமா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தொடர்பாடல் திறன்கள் அபிவிருத்தி

02. தலைப்பு : டக் டுக் மாமா

03. பிரதான இலக்கு : உரையாடல்களை ஆக்குவதற்கு வழிகாட்டல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :

ஆற்றல்கள் : • ஓர் உரையாடலை ஆக்கும் விதத்தை அறிந்து கொள்வர்.

திறன்கள் : • பேச்சுத் திறனை விருத்திசெய்து கொள்வர்

பண்புகள் : • உரையாடலில் ஈடுபட்டு இன்பம் பெறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் : • டக் டுக் மாமாவின் படமொன்றைத் தயார் செய்து கொள்க.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1 • பிள்ளைகளை வெளியே அழைத்துச் செல்க. வானத்தைப் பார்க்குமாறு செய்க. உங்களுக்கு வானத்தைப் பற்றி என்ன கூற முடியும்? சுற்றாடலைப் பற்றிப் பேசுங்கள். இதோ நான் உங்களுக்கு இரக்கமுள்ள ஒரு மாமாவைப் பற்றிச் சொல்லித்தரப் போகின்றேன். செவிமடுங்கள். இந்த மாமா மிகவும் இரக்கமுள்ளவர். உங்களைப் போன்ற சிறுவர்களிடம் மிகவும் அன்புள்ளவர். அவரது சிறிய வீடு அப்பகுதியிலுள்ள முன் பள்ளிக்குச் செல்லும் வழியிலேயே உள்ளது. எனவே முன் பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகள் மீது மிகவும் இரக்கமுள்ளவர். பிள்ளைகளும் அவர் மீது நல்ல அன்பு. 'டக் டுக் மாமா' என்று பிள்ளைகள் மாமாவுக்குப் பெயரும் வைத்துள்ளார்கள். அம்மாமாவுக்கு அந்த இடத்தால் பிள்ளைகளை அழைத்துச் செல்வது மிகவும் கஷ்டம். பிள்ளைகள் மாமாவைப் பார்க்க வருவார்கள். கேள்வி கேட்பார்கள். மாமா விடையும் சொல்வார். இதோ பிள்ளைகள் கேட்ட கேள்விகளையும் மாமா சொன்ன பதில்களையும் கவிதையாக சொல்கிறேன். நீங்கள் செவிமடுங்கள். ஆசிரியர் மாமா போலவும் பிள்ளைகள் போலவும் குரலை மாற்றி கூறுக.

பிள்ளைகள் : டக் டுக் மாமா //
நேற்று என்ன செய்தீங்க?

மாமா : நிலத்தை வெட்டினேன்
சிறுவர்களே //

பிள்ளைகள் : டக் டுக் மாமா //
இன்று என்ன செய்றீங்க?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமா : பாத்தி செய்கிறேன்
சிறுவர்களே //

பிள்ளைகள்: டக் டுக் மாமா //
நாளை என்ன செய்வீங்க?

மாமா : பயிர் நட்டுவேன்
சிறுவர்களே //

பிள்ளைகள்: டக் டுக் மாமா //
காலை என்ன சாப்பிட்டீங்க?

மாமா : பிட்டு உண்டேன்
சிறுவர்களே //

பிள்ளைகள்: டக் டுக் மாமா //
பகல் என்ன செய்தீங்க?

மாமா : நீங்க வரும்வரை பார்த்திருந்தேன்
சிறுவர்களே //

பிள்ளைகள்: டக் டுக் மாமா //
மாலை என்ன செய்வீங்க?

மாமா : பாத்திகளுக்கு நீர் ஊற்றுவேன்
சிறுவர்களே //

பிள்ளைகள்: டக் டுக் மாமா //
இரவைக்கு என்ன செய்வீங்க?

மாமா : புத்தகம் வாசிப்பேன்
சிறுவர்களே //

பின்னர் மாமாவாக ஆசிரியர் கூற, பிள்ளைகளாக பிள்ளைகளைக் கூறச் செய்தல். செயற்பாட்டைச் செய்வித்தல்.

படி 2
- பிள்ளைகளை வகுப்பறைக்கு அழைத்துச் செல்க.
- இப்பொழுது நீங்கள் நேற்று செய்த வேலை ஒன்றைக் கூறுங்கள்.
- பிள்ளைகளுக்குக் கூற சந்தர்ப்பமளித்து பாராட்டுக.
- நீங்கள் சொல்லுங்கள் டக் டுக் மாமா இன்று என்ன செய்தார்? (தேவைப்படின் கவிதை வரியைத் தொடர்புபடுத்துக.
- சரி, நல்லது. நீங்கள் இன்று செய்த வேலையைச் சொல்லுங்கள்.
- பிள்ளைகளுக்குக் கூற இடமளித்து பாராட்டுக.
- இப்பொழுது டக் டுக் மாமா நாளை என்ன செய்ய நினைத்துள்ளார் என்று கூறுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிள்ளைகள் நாளை செய்யப்போகின்றவற்றையும் பேசுங்கள்.
- டக் டுக் மாமா காலை செய்தவற்றைக் கேளுங்கள்.
- காலை நீங்கள் செய்தவற்றைக் கூறுங்கள் என சந்தர்ப்பமளிக்குக.
- இங்கு காலை நடைபெறுகின்ற விடயங்கள் பற்றி பிள்ளைகளுடன் படங்கள் ஊடாகக் கதைக்க. (சூரியன் உதித்தல், பூக்கள் மலர்தல், பாடசாலை செல்லல் என்றவாறு)
- டக் டுக் மாமா பகல் செய்தவற்றைக் கேளுங்கள்.
- பகல் நீங்கள் செய்தவற்றைக் கூறுங்கள் என சந்தர்ப்பமளிக்குக.
- இங்கு பகல் நடைபெறுகின்ற விடயங்கள் பற்றி பிள்ளைகளுடன் கதைக்க. (சூரியன் உச்சிக்கு வருதல், வெயில் அதிகம், பாடசாலை விடப்படுகிறது என்றவாறு)
- டக் டுக் மாமா மாலை செய்கிறவற்றைக் கேளுங்கள்.
- மாலை நீங்கள் செய்கிறவற்றைக் கூறுங்கள் என சந்தர்ப்பமளிக்குக.
- இங்கு மாலை நடைபெறுகின்ற விடயங்கள் பற்றி பிள்ளைகளுடன் கதைக்க. (சூரியன் மறைதல், பறவைகள் கூடுகளுக்குச் செல்லுதல் என்றவாறு)
- டக் டுக் மாமா இரவில் செய்கிறவற்றைக் கேளுங்கள்.
- இரவில் நீங்கள் செய்கிறவற்றைக் கூறுங்கள் என சந்தர்ப்பமளிக்குக.
- இங்கு இரவில் நடைபெறுகின்ற விடயங்கள் பற்றி பிள்ளைகளுடன் கதையுங்கள்.
- பல்வேறு சந்தர்ப்பங்களை நடிக்கச் செய்க.
- பாடத்தைக் கற்பிக்கின்ற வேளையில் கவிதையின் பகுதிகளையும் ஆசிரியர் கூறல் வேண்டும். பிள்ளைகளுக்கு ஞாபகத்தில் வைத்திருக்க முடியாதிருக்கலாம். இவற்றை ஒரே தினத்தில் செய்ய முடியாவிடின் 2 நாட்களைப் பயன்படுத்துக.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- முன்வரும் பிள்ளைகளைக் கைதட்டி ஊக்குவித்தல்.
- நிகழ்வுகளை ஒழுங்கு முறையில் கூறும் பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- முன்வராத பிள்ளைகளுக்கு உதவி ஊக்குவித்தல்

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- நேற்று, இன்று, நாளை, காலை, பகல், இரவு, வானம், சூரியன் உதிக்கிறது, மறைகிறது, வெய்யில்.

**10. வேறு விடயங்கள்:**

- பிள்ளைகளைக் குழுக்களாகப் பிரித்து, இவ்வாறு உரையாடல்களைக் உருவாக்க சந்தர்ப்பமளிக்க.
- படி 1 இன் கீழ் உள்ள பாத்திரம், உரையாடல், செயற்பாடுகள் ஆகியவற்றைப் பொருத்தமாக மாற்றியமைத்துக் கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7.8

## பாலர் அறிவிப்பாளர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : தொடர்பாடல் திறன்கள் அபிவிருத்தி

02. **தலைப்பு** : பாலர் அறிவிப்பாளர்.

03. **பிரதான இலக்கு** : அறிவிப்பினூடாகக் கருத்துக்களைக் கூறப் பயிற்றுவித்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :**

**ஆற்றல்கள்** :
- சந்தர்ப்பத்துக்கேற்ப விடயங்களைப் படிப்படியாகக் கூறும் ஆற்றலைப் பெற்றுக்கொள்வர்.

**திறன்கள்** :
- திருத்தமாக சொற்களை உச்சரிக்கும் திறனைப் பெறுவர்.

**பண்புகள்** :
- ஓர் அறிவிப்பாளராக செயற்பட விரும்புவர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு குழு செயற்பாடாகும்.

- விளையாட்டுப் போட்டியின் அறிவிப்பாளராகச் செயற்பட எல்லா மாணவர்களுக்கும் இடமளித்தல்.
- ஏனைய மாணவர்கள் குழுக்களாக விளையாட்டு நிகழ்ச்சிகளில் ஈடுபடல்.

06. **முன் ஆயத்தம்** :

- மைக்ரோபோன் தயாரிப்பதற்காக பிரிஸ்டல் அட்டை, பசை, கத்தரிக்கோல், நிறப்பென்சில், வெற்று யோகட் கோப்பை இரண்டு, டுவைன் நூல், கயிறு. இதற்குப் பதிலாக வேறொரு முறையைப் பின்பற்றமுடியும்.
- போட்டி நிகழ்ச்சிகள் 3 இற்காக பின்ளைகள் குழுக்களைத் தயார்செய்தல்.

  நிகழ்ச்சி 1. போத்தலில் நீர் நிறைத்தல்

  நிகழ்ச்சி 2. முயற்பாய்ச்சல்

  நிகழ்ச்சி 3. பலாக்கொட்டைகளை ஒரு சிரட்டையில் நிரப்புதல் குழு விளையாட்டு
- அறிவிப்புச் செய்வதற்காக ஒரு பிரிஸ்டல் அட்டையினால் மைக்ரோபோன் செய்தல்.
- ஒரு பிரிஸ்டல் அட்டையின் அரைவாசியை வெட்டி, கூம்புபோல் மடித்து ஒட்டிக்கொள்ளல். மைக்ரோபோனைப் பிடிக்கும் இடத்தில் துளையிட்ட யோகட் கோப்பை போன்ற ஒன்றை வைத்து, நூலினால் கட்டுதல்.
- அதை நிறப் பென்சிலினால் அலங்காரம் செய்தல்.
- அறிவிப்பாளராகச் செயற்பட பிள்ளைகளைப் பழக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

படி 1
- ஆசிரியர் சிறுவர் விளையாட்டு விழாவுக்கு வருமாறு பிள்ளைகளுக்கு அழைப்பு விடுத்தல்.
- அறிவிப்புச் செய்யும் பொறுப்பைப் பிள்ளைகளுக்கு வழங்குதல்.

படி 2
- முதலாவது அறிவிப்பாளர்
- மைக்ரோபோனைக் கையில் வைத்துக் கொள்கிறார்.
- வணக்கம். சுப காலை வந்தனம்.
- எமது சிறுவர் விளையாட்டு விழாவை ஆரம்பிப்போம்.
- முதலில் நாம் சமய ஆராதனை செய்வோம்.
- விளையாட்டு விழாவுக்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்கின்றோம். (பிள்ளைகளுக்கு சுதந்திரமாக அறிவிப்பாளராகச் செயற்பட சந்தர்ப்பமளிக்குக.)

படி 3
- இரண்டாவது அறிவிப்பாளர்
- எமது விளையாட்டு விழாவின் முதலாவது போட்டி. போத்தலில் நீர் நிறைக்கும் போட்டியில் பங்குபற்றும் பிள்ளைகளின் பெயர்களை அறிவிக்கச் செய்தல்.
- ஆசிரியர் பிள்ளைகளை விளையாட்டுக்களில் ஈடுபடுத்தல்.

படி 4
- மூன்றாவது அறிவிப்பாளருக்கு முன்வருவதற்கு சந்தர்ப்பமளித்தல்
- முயற்பாய்ச்சல் போட்டியை அறிவிப்பதிலும் விளையாட்டிலும் பிள்ளைகளை ஈடுபடுத்தல்.

படி 5
- விளையாட்டு விழாவின் இடைவேளை பற்றி அறிவிப்பதற்கு நான்காவது அறிவிப்பாளரை ஈடுபடுத்தல். (ஒலி பெருக்கியில் பிள்ளைகளின் பாட்டுக்களை ஒலி பரப்பல்)

படி 6
- அறிவித்தல் செய்தல்.
- பலாக்கொட்டை பொறுக்குதல் போட்டியை அறிவிப்பதற்கும் விளையாடுவதற்கும் பிள்ளைகளுக்கு சந்தர்ப்பமளித்தல்.
- விளையாட்டு இரண்டு இடங்களில் பலாக் கொட்டைகளை ஐதாக்கிப் போடுதல்
- பிள்ளைகளை இரு குழுக்களாகப் பிரித்தல்.
- எல்லாப் பிள்ளைகளுக்கும் சிரட்டைகளை வழங்கி, அதில் பலாக் கொட்டைகளை நிரப்பச் செய்தல்.
- எல்லாவற்றையும் பொறுக்கிய பிள்ளைகள் வெற்றி பெறுதல்.

படி 7
- அறிவிப்பாளர்

விளையாட்டு விழாவின் பரிசுகளை அளிப்பதற்கு அழைப்பு விடுத்து அறிவிக்குமாறு செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 8 • அறிவிப்பாளர்

விளையாட்டு விழாவில் பங்கு பற்றிய எல்லாப் பிள்ளைகளுக்கும் பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவித்தல்.

படி 9 • அறிவிப்பாளர்

விளையாட்டு விழாவுக்கு வருகை தந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தல்.

படி 10 • அனைவரும் சேர்ந்து தேசிய கீதம் பாடுமாறு அழைப்பு விடுத்து அறிவிப்புச் செய்தல்.

எல்லோரும் சேர்ந்து தேசிய கீதம் இசைத்தல்.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- எல்லா வேளைகளிலும் கை தட்டி, பிள்ளைகளை உற்சாகப்படுத்தல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- வணக்கம்
- சுப காலை வேளை
- வரவேற்கிறோம்
- தேசிய கீதம்
- குழு
- போட்டி
- ஒன்று, இரண்டு, மூன்று
- விளையாட்டு விழா, அறிவித்தல்

10. வேறு விடயங்கள்:

- ஆசிரியரின் விருப்பப்படி பிரதேசத்துக்கும் சந்தர்ப்பத்துக்கும் பெறக்கூடிய வளங்களுக்கும் பொருத்தமான வகையில் விழாவின் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7.9

# இரகசியங்கூறல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : தொடர்பாடல் திறன்கள் அபிவிருத்தி

02. **தலைப்பு** : இரகசியங்கூறல்

03. **பிரதான இலக்கு** : செவிமடுத்தவற்றைத் தெளிவாகக் கூறுதல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- செவிமடுத்த ஒன்றை ஞாபகத்தில் வைத்திருக்கும் ஆற்றலை விருத்தி செய்து கொள்வர்.
- தான் செவிமடுத்த ஒன்றை இன்னொருவருக்குக் கூறும் ஆற்றலை விருத்தி செய்து கொள்வர்.

**திறன்கள்** :
- தெளிவாகப் பேசும் திறனை விருத்தி செய்து கொள்வர்.

**பண்புகள்** :
- இரகசியங் கூறும் ஆசை ஏற்படுதல்

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- கரடியின் கதையைக் காட்டும் ஒரு சித்திரம்.
- ஒரு பிள்ளை இன்னொரு பிள்ளையிடம் இரகசியங்கூறும் ஒரு சித்திரம்.
- விளையாட்டுச் சாமான்கள் இடப்பட்ட ஒரு பை.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி 1**
- பிள்ளைகளை வெளியே அழைத்துச் செல்க. அரை வட்ட வடிவில் உட்காரவைக்க. ‘கரடியும் இரண்டு நண்பர்களும்’ என்ற கதையைக் கூறி செயற்பாட்டை ஆரம்பிக்க.

- ஒரு நாள் இரண்டு நண்பர்கள் ஒரு பயணஞ் சென்றார்கள். சிறிது தூரம் சென்றவுடன் ஒரு கரடியைச் சந்தித்தார்கள். ஒரு நண்பன் அவசரமாக ஒரு மரத்தில் ஏறிக்கொண்டான். மற்ற நண்பன் நிலத்தில் விழுந்து படுத்துக்கொண்டான். கரடி அவனருகில் சென்று காதருகில் முகர்ந்து பார்த்துவிட்டு சென்றுவிட்டது. மரத்திலிருந்த நண்பன் கீழிறங்கி, மற்றைய நண்பனிடம் கரடி கூறிய இரகசியம் என்ன என்று கேட்டான். அப்போது அவன், “ஆபத்தின் போது நண்பர்களை விட்டு செல்கின்ற உன்னைப் போன்றவர்களுடன் பழக வேண்டாம்” என்று இரகசியமாகக் கூறியது என்றான்.

- கதைக்குரிய சித்திரத்தைக் காட்டி, அதில் என்ன உள்ளது எனக் கேளுங்கள். பின் அதுபோன்று இரகசியம் கூறும் ஒரு விளையாட்டு விளையாடுவோம் எனக் கூறி செயற்பாட்டை ஆரம்பிக்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 2
- பிள்ளைகளை அரைவட்டவடிவில் நிறுத்தி, 5 பேரை முன் வரச்செய்க. இரகசியம் கூறுவது கேட்காதவாறு அரைவட்டத்தின் முன் வரிசையாக நிறுத்துக. அவர்களுக்கு முன்னால் விளையாட்டுப் பொருட்கள் பையை வைக்க.
- வரிசையிலுள்ள முதல் மாணவனிடம் ஆசிரியர் இரகசியத்தைக் கூறுக. (உதா: விளையாட்டுப் பொருட்கள் பையிலிருந்து ஒரு முயலை வெளியே எடுத்துக் காட்டுங்கள்.) முதலாம் பிள்ளை இரண்டாம் பிள்ளைக்கும் 2 ஆம் பிள்ளை 3 ஆம் பிள்ளைக்கும் 3 ஆம் பிள்ளை 4 ஆம் பிள்ளைக்கும் 4 ஆம் பிள்ளை 5ஆம் பிள்ளைக்கும் இரகசியத்தைக் கூறச் செய்க. 5 ஆம் பிள்ளை முன்னால் ஓடிப்போய் இரகசியத்தை எல்லோருக்கும் கேட்குமாறு கூறி, சொன்ன பொருளை வெளியே எடுத்துக் காட்டச் செய்க. பிழையின்றி இரகசியத்தைக் கூறி சரியாகச் செய்தால் கைதட்டி உற்சாகப்படுத்துக.

படி 3
- வகுப்பிலுள்ள ஏனைய பிள்ளைகளையும் ஐந்து பேர்கள் வீதம் எடுத்து, ஓர் இரகசியத்தைக் கூறி, அதைக் குழுவிலுள்ளோருக்குக் கூறச் செய்து, கடைசியிலுள்ள பிள்ளை மூலமாகச் செய்வித்தல். இவ்வாறு எல்லாப் பிள்ளைகளையும் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

### 08. மாணவர்களில் துண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:
- பிள்ளைகள் குழுக்களைப் பாராட்டுதல்.
- கை தட்டுதல்
- தவறியவர்களுக்கு மீண்டும் சந்தர்ப்பம் வழங்குதல்.

### 09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:
- கரடி, நண்பன், மரம், மேலே
- முதலாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது, இருவர்
- இரகசியம்

### 10. வேறு விடயங்கள்:
- ஆசிரியரின் விருப்புப்படி ஒரு சொல், இரண்டு சொற்கள், ஒரு வசனம், வசனங்கள் கொண்ட ஒரு செய்தியை இரகசியமாகக் கூறுவதற்கும் ஞாபகத்தில் வைத்திருந்து மீண்டும் கூறுவதற்கும் ஏற்ற வகையில் செயற்பாட்டை விருத்தி செய்து கொள்வது பொருத்தமானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7.10

## றபான் பதம் இசைப்போம் (மேளம் கொட்டுவோம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தொடர்பாடல் திறன்கள் அபிவிருத்தி

02. தலைப்பு : றபான் பதம் இசைப்போம். (மேளம் கொட்டுவோம்)

03. பிரதான இலக்கு : சொற்களைத் திருத்தமாக உச்சரிக்கப் பழக்குதல்

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- சொற்களைத் திருத்தமாக உச்சரிக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வர்.

திறன்கள் :
- பாடலைத் தாளத்துக்கேற்ப பாடும் பயிற்சியைப் பெறுவர்.

பண்புகள் :
- மேளதாளம் இசைக்கும் விருப்பை விருத்தி செய்து கொள்வர்

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- ஒரு மாதிரி மேளம்
- அதை வைப்பதற்கான கால்கள் மூன்று.
- எல்லாப் பிள்ளைகளுக்கும் தமது கதிரைகளில் தட்டுவதன் மூலமாவது இசைக்கும் திறன் தொடர்பான பயிற்சியை கைகளுக்கு வழங்கலாம்.
- வளர்ந்தோரிடமிருந்து மேள இசைகளைக் கேட்டு வருமாறு பிள்ளைகளிடம் கூறுதல்.
- ஆசிரியர் எளிய பாடல்களைத் தயாரித்துக் கொள்ளல்.

உதாரணம் :-

| | | |
|---|---|---|
| | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- ஒரு மேளப் பாடலைத் தாளத்துக்கு இசைத்தவாறு வகுப்பறையில் நுழைதல். மேளப் பாடல்கள் பற்றிக் கலந்துரையாடல். மேளங் கொட்டும் சந்தர்ப்பங்களை அறிமுகப்படுத்தல். பெருநாள் கொண்டாட்டங்கள், வீட்டில் நடைபெறும் கொண்டாட்டங்கள் போன்றவை பற்றி வினவுதல்.

படி 2
- பிள்ளைகள் தெரிந்து வைத்துள்ள அவ்வாறான பாடல்களை முன்வைக்க சந்தர்ப்பமளித்தல். இங்கு வளர்ந்தோரிடமிருந்து கேட்டு வந்து முன்வைக்கும் பாடல்களை ஏனைய பிள்ளைகளுக்கு அவதானமாகச் செவிமடுக்கச் செய்க.

- அப்பாடல்களை பிள்ளைகள் எல்லோரும் சேர்ந்து பாடுதல். தாளத்துக்கேற்ப பாடுதல். தெரிவு செய்து கொண்ட பாடலை ஆசிரியர் தாளத்துக்குப் பாடும் போது பிள்ளைகளுக்கும் படிப்படியாகப் பாடுவதற்குச் சந்தர்ப்பமளித்தல்.

படி 3
- ஒரு றபான், மாதிரிப் பொருள் ஊடாக மேளம் இசைத்தல்.
- முதலில் ஆசிரியரும் அடுத்து எல்லாப் பிள்ளைகளும் இதில் பங்கெடுத்தல் வேண்டும்.

### 08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- கூச்சமின்றி முன்வரும் பிள்ளைகளைப் பாராட்டுக.
- முன்வராத பிள்ளைகளை ஊக்குவிக்குக.

### 09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- மல்லிகைப் பூ, மேளம், றபான் பதங்களில் வரும் சொற்கள்.
- மேளப்பாடல்

### 10. வேறு விடயங்கள்:

- நன்கு மேளம் இசைக்கத் தெரிந்த முதியவர் ஒருவரையும் இச்செயற்பாட்டில் ஈடுபடுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7.11

## எங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தொடர்பாடல் திறன்கள் அபிவிருத்தி

02. தலைப்பு : எங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சி

03. பிரதான இலக்கு : யாதேனுமொரு செயற்பாட்டைத் திட்டமிட்டு முன்வைப்பர்

4. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- திருத்தமாகவும் விளக்கமாகவும் கருத்துக்களை முன் வைக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வர்.

திறன்கள் :
- பாடுந் திறனை விருத்தி செய்து கொள்வர்
- நடிப்புத் திறனை விருத்தி செய்து கொள்வர்.

பண்புகள் :
- விடயங்களை முன்வைத்து இன்புறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பற்றி பிள்ளைகளுடன் கலந்துரையாடுதல். ஆடை அணிகளைத் தயார் செய்தல்.
- பிள்ளைகளைக் குழுக்களாகப் பிரித்தல்.
- ஒவ்வொரு குழுவுக்கும் செயற்பாடுகளைத் திட்டமிட்டு, தேவையான அறிவுறுத்தல்களை வழங்குதல். (ஒவ்வொரு குழுவுக்கும் பெயர் வைத்தல் மிகவும் பொருத்தமானது)
  1. கிளிக் குடும்பம். - இயற்கைச் சூழலிருந்து பெறப்பட்ட பொருட்களுடாக ஒரு சித்திரத்தை முன்வைத்தல்.
  2. மயில் குடும்பம்: - ஒரு நடிப்பை முன்வைத்தல்
  3. குயில் குடும்பம் - குழுப்பாடலை முன்வைத்தல்
  4. அன்னக் குடும்பம் - களிமண்ணினால் ஆக்கங்களை முன்வைத்தல்.
- நிகழ்ச்சியின் பிரதான அறிவிப்புக்களை ஆசிரியர் முன்வைப்பதோடு ஒரு குழுவிலிருந்து ஒரு பிள்ளை வீதம் தெரிவுசெய்து, உதவி அறிவிப்பாளராகச் செயற்படுமாறு அறிவுறுத்தல் வழங்குதல்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- பிள்ளைகளை வெளியே அழைத்துச் செல்லுதல்.
- ஆசிரியர் நிகழ்ச்சி பற்றிய ஒரு சுருக்கமான விளக்கத்தை முன்வைத்தல்.
- நிகழ்ச்சிக்கு ஒரு பெயரை வைத்தல். உதா: பறவைக் கிராமம், பறவைக் குடும்பம் அறிமுகப்படுத்தல்.
- தமக்குரிய தலை அணிகளை அணியச் செய்து உரிய செயற்பாடுகளில் ஈடுபடுத்தல்.
- செயற்பாட்டில் ஈடுபட்டவாறே ஒவ்வொரு குழுவையும் பற்றி விபரங்களை முன்வைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கிளிக் குடும்பம்:- ஒரு சித்திரத்தை முன்வைத்தல்.

    I. வண்ண வண்ண பூக்களின் இதழ்களைக் கடதாசியில் தேய்த்தல்.

    II. எலுமிச்சம் சாறு பூசப்பட்ட ஓர் ஈர்க்கினால் சுதந்திரமாக சித்திரம் வரைய இடமளித்தல்.

    III. சேப்பங் கிழங்கு தண்டு, கிழங்கு பகுதி, வெண்டிக்காய் போன்ற பொருட்கள் ஊடாக ஓர் ஆக்கமொன்றை முன்வைக்க முடியும்.

2. மயில் குடும்பம்: - ஒரு நடிப்பை முன்வைத்தல். கிராமிய நடனம்.

சிலம்பம், குடம் போன்ற கிராமிய நடனம் ஒன்றைக் குழுவாக முன் வைத்தல்.

★ ஒரு செடியில் தடிகள் ஆறு வெட்டி,
ஒரே உயர ஆறு பேர்கள் தேடி
ஆசானிடம் கொடுத்து தடிகள் பகிர்ந்துமே
நாமும் சிலம்பம் செய்வோம் குழுவாகவே.

3. குயில் குடும்பம் : (இதற்குப் பொருத்தமான பாடலொன்றைத் தெரிவு செய்து கொள்க

கூ கூ மர உச்சியில்
யார் அழுவது //
கீச் பீச் மர உச்சியில்
யார் அழுவது //
சின்னக் குருவிக் கூட்டம் அது பாடல் பாடுது.

4. அன்னக் குடும்பம் : களிமண்ணினால் ஓர் ஆக்கத்தை முன்வைத்தல்.

ஏற்கனவே பதப்படுத்தி தயார் செய்து வைத்துள்ள களிமண்ணைப் பிள்ளைகளுக்குக் கொடுத்து, சுதந்திரமாக பல்வேறு ஆக்கங்களை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குக. அவை பற்றிய கருத்துக்களை முன் வைப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்குக.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- முன்வரும் பிள்ளைகளைப் பாராட்டுக.
- முன்வராத பிள்ளைகளை ஊக்குவிக்குக.
- எல்லோரும் இணைந்து நடிப்பதூடாக இன்பம் பெறுக.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- குடும்பம், கிளி, மயில், அன்னம், கிராமம், தலை அணி, ஆடை அணிகள்,
- 1 - 4 வரை எண்ணுவதைக் கற்கச் செய்தல்.
- தொலைக் காட்சி நிகழ்ச்சிகள்.

**10. வேறு விடயங்கள் :**

- உங்கள் விருப்பப்படி இந்நிழ்ச்சியின் உருப்படிகளை வேறாக்கிக் கொள்ள முடியும். பிள்ளைகளின் கருத்துக்களை வெளிப்படுத்தும் ஆற்றல் விருத்தியாகும் வகையில் அவர்களை ஈடுபடுத்துவது அவசியமானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7.12

## வைத்தியர் மாமா வந்துள்ளார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தொடர்பாடல் திறன்கள் அபிவிருத்தி

02. தலைப்பு : வைத்தியர் மாமா வந்துள்ளார்.

03. பிரதான இலக்கு : ஒரு நோயாளிபோல் தனது கருத்துக்களை முன்வைக்கச் செய்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :

ஆற்றல்கள் : • பல்வேறு நோய் அறிகுறிகளை அறிந்து கொள்வர்.

திறன்கள் : • திருத்தமான சொற்களை உச்சரிக்கக் கற்றுக்கொள்வர்.

பண்புகள் : • அன்பு, கருணை, இரக்கம் ஆகிய பண்புகள் விருத்தியுறும்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :

- நோயாளிபோல் நடிப்பதற்குப் பிள்ளைகளைத் தயார் செய்து கொள்ளல்.
- மருந்தெண்ணெய், கசாயம், சூரணம், மருந்து வில்லை, உப்புக்கஞ்சி, இலைக்கஞ்சி என்பன உள்ளதாகக் காட்டும் பெயர்ச் சுட்டிகள் ஒட்டிய பாத்திரங்கள். உண்மைப் பொருள்களாக அவை இருத்தல் பொருத்தமானது.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1 • வைத்தியர் மாமா போல் ஆசிரியர் பாத்திரமேற்று, பிள்ளைகளின் மட்டத்துக்கு ஏற்ப நடிக்கும் சந்தர்ப்பங்களையும் திட்டமிட்டுக் கொள்ளல் வேண்டும். இங்கு தேசிய மருந்து வகைகளின் பெறுமதியை வெளிப்படுத்தி, நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தல் வேண்டும்.

அன்பு மகன் மகளே கேளு
நோயில் நாம் இருத்தலாகா
சின்ன சின்ன நோயிருந்தால்
மருந்து வாங்க வாருங்கள்.

என்ற பாடலைப் பாடிய வண்ணம் ஆசிரியை பிள்ளைகளிடம் வருதல். வைத்தியர் மாமாவிடம் மருந்து எடுக்க பிள்ளைகளுக்கு அறிவுறுத்தல்.

- காலில் வருத்தம் - தந்தையுடன் வரும் மகன், மகள்
- வயிற்று வலி - அம்மாவுடன் வரும் மகன், மகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தடிமன்
- தொண்டை நோவு

- என்றவாறு நோய்களை முன்வைத்து ஒவ்வொரு பிள்ளையாக வரச் செய்தல். நோயாளி, அவரை அழைத்து வருபவர் என்ற வகையில் இருவரை வரச்செய்து கருத்துக்களை முன்வைக்க இடமளிக்க.
- வைத்தியர் மாமா வைத்தியர் மாமா என் கால் வருத்தமாயுள்ளது. என்று கூறி ஒரு பிள்ளை முன்வரல், அவரை அழைத்து வந்த பிள்ளைக்கு அந்நோய் பற்றிக் கூற சந்தர்ப்பமளித்தல் வைத்தியர் மாமா: மருந்தெண்ணெய் கொஞ்சம் பூசி தடவுவோம் பார்ப்போம் எனக்கூறி, காலில் எண்ணெய் பூசுவது போல் நடித்தல்.

- இவ்விதம் ஒவ்வொரு நோயாளிக்கும் மருந்து செய்து அது பற்றிப் பிள்ளைகளுக்கு அறிவுறுத்துக.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- நன்கு உரையாடும் பிள்ளைகளைப் பாராட்டுக.
- முன்வரும் பிள்ளைகளைக் கைதட்டி ஊக்குவித்தல்.
- முன்வராத பிள்ளைகளை ஊக்குவிக்குக.
- கருத்துக்களை முன் வைப்பதில் இடர்படும் பிள்ளைகளுக்கு உதவுதல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- எண்ணெய், கசாயம், சூரணம், மருந்து வில்லை, உப்புக் கஞ்சி, வயிற்று வலி, தடிமன்
- நோய், மருந்து.

10. வேறு விடயங்கள்:

- வைத்தியர் மாமா அல்லது ஒரு மேற்கத்திய வைத்தியர், மருந்துப் பொருட்களை சூழலுக்குப் பொருந்தும் வகையில் தயார்படுத்தல் வேண்டும்.
- உப்புக் கஞ்சி, இலைக் கஞ்சி பருகுவதற்கும் நல்ல சுகாதாரப் பழக்கவழக்கங்களை ஏற்படுத்திக் கொள்வதற்கும் வழிசெய்க.
- வைத்தியர் மாமா போன்றே மேற்கத்திய வைத்தியர் ஒருவரின் சேவையை வழங்குவது போன்ற ஒரு செயற்பாட்டையும் ஒழுங்கு செய்ய முடியும்.
- ஆசிரியரின் விருப்பப்படி இவ்விரண்டு நிகழ்வுகளையும் இரண்டு நாட்களில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7.13

## காட்டில் உலாவுவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : தொடர்பாடல் திறன்கள் அபிவிருத்தி

02. **தலைப்பு** : காட்டில் உலாவுவோம்.

03. **பிரதான இலக்கு** : கருத்துக்களைக் கூறுவது போன்றே செயலிலும் செயற்பட வைத்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- சந்தர்ப்பத்துக்கேற்ப சொற்களைப் பயன்படுத்தக் கற்றுக் கொள்வர்.

**திறன்கள்** :
- கருத்துக்களை முன்வைக்கும் போது அதற்கேற்ப உடலுறுப்புக்களையும் வைத்துக்கொள்வர்

**பண்புகள்** :
- நியமமான ஒரு செயற்பாட்டில் ஈடுபட்டு இன்புறுவர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- ஒரு கரடியைப் போல ஒரு பிள்ளையைத் தயார் செய்க.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி 1**
- இன்று நாம் காட்டில் உலாவச் செல்வோம் என உணர்த்துக. காட்டைப் பற்றி மனங்கவரும் வகையில் பிள்ளைகளுடன் கலந்துரையாடுக.
- காட்டில் செருப்பு இன்றி செல்லும்போது நாம் பல்வேறு கஷ்டங்களுக்கு முகங்கொடுக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நாம் அதனை ஏனையவர்களுக்குக் காண்பிக்க வேண்டும்.
- காட்டில் உலவுவது போல் ஒரு வட்டத்துக்குள் பிள்ளைகளை உலாவுமாறு வழிகாட்டுக. “ஐயோ பெரிய முள் ஒன்று தைத்து விட்டது.” இப்பொழுது உங்கள் கால்களில் பெரிய முள் ஒன்று தைத்து வலிக்கிறது.. ஆய் .... நல்லது நாம் கீழே உட்கார்ந்து முள்ளை எடுப்போம்.

**படி 2**
- நேரம் செல்வதால் நாம் அவசரமாகச் செல்வோம். (வட்டத்தில் செல்கிறார்கள்) அதோ பாருங்கள் ஒரு கரடி வருகிறது. (கரடிபோல் உடுத்த பிள்ளை) வகுப்பறைக்கு வருகிறது. பிள்ளைகள் பயந்தது போல் முகபாவணையாலும் உடலாலும் காட்டுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 3 • "கரடி அதோ போகிறது,....." பிள்ளைகள் மகிழ்ச்சியாக நடக்கின்றனர். "சுவையான இனிப்பு மாங்காய் இதோ இருக்கிறது. நாம் இனிப்பு மாங்காய் உண்போம்" பிள்ளைகள் மிகுந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

படி 4 • "பிள்ளைகளே ஏதோ நாற்றம் வருகிறது. ..... பிராணி ஏதாவது செத்துவிட்டதோ தெரியாது......" பிள்ளைகள் மூக்கை மூடிக்கொண்டு அருவருப்பை வெளிக்காட்டுகின்றனர்.

படி 5 • விருப்பத்துடன் முன்வரும் சிலரை வட்டத்தின் நடுவே அழைத்து மேலே செய்தது போன்ற அபிநயங்களைச் செய்ய சந்தர்ப்பமளிக்குக. ஏனையவர்களிடம் அவ்வபிநயத்தால் காட்டப்பட்டது என்ன என வினவி, அபிநயஞ் செய்தல், அதனைப் புரிந்து கொள்ளல் ஆகியவற்றில் பிள்ளைகளை ஈடுபடுத்தல்.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- தேவைப்படும் சந்தர்ப்பங்களில் பிள்ளைகளுக்கு வெவ்வேறாக உதவிகளை வழங்குக.
- தேவையான சந்தர்ப்பங்களில் கை தட்டுதல், நன்றி தெரிவித்தல், போன்ற செயல்கள் மூலம் பிள்ளைகளை மதிக்குக.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- காடு, முள், கரடி, இனிப்பு மாங்காய்
- இனிப்பு, கசப்பு, வேதனை, பயம்
- தகவல்களை உள்வாங்கி துலங்கலைக் காட்டுதல்.

10. வேறு விடயங்கள்:

- ஒவ்வொரு படிகளுடன் தொடர்பான சந்தர்ப்பத்துக்கேற்ற வகையில் ஆண், பெண் இருபாலாருக்கும் உகந்ததாக உரையாடல், அங்க அசைவுகள், மெய்ந்நிலை ஆகியவற்றுக்கு வழிகாட்டி, இப்படிகளை மிகவும் சிறப்பாக்குக.
- ஆசிரியரின் விருப்பப்படி பல்வேறு செயற்பாடுகளை, படிகளைச் சேர்த்துக் கொள்க.
- காட்டில் உலாவும் வேளையில் தேநீர் அருந்த சந்தர்ப்பமளித்தல், கல் ஒன்றின்மீது அமர்ந்து ஒரு பாட்டுப்பாடுதல், ஒரு மரத்தில் ஏறுதல், சேனையில் குடிசைப் பாடல் பாடுதல் போன்ற சந்தர்ப்பங்கள் பற்றியும் உங்கள் கவனத்தைச் செலுத்தவேண்டும். பிள்ளைகளிடத்திலே உரையாடல்களைக் உருவாக்குவது பற்றியும் கவனத்திற் கொள்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7.14

## விளையாட்டு வீட்டில் அதிகமான சனம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : தொடர்பாடல் திறன்கள் அபிவிருத்தி

02. **தலைப்பு** : விளையாட்டு வீட்டில் அதிகமான சனம்

03. **பிரதான இலக்கு** : ஒவ்வொரு பாத்திரத்துக்கும் பொருத்தமான உரையாடல்களைப் பயிற்றுவித்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- பாத்திரம் மாறும்போது கதைக்கும் விதமும் மாறும் என்பதை அறிந்து கொள்வர்.

**திறன்கள்** :
- பாத்திரங்களுக்கேற்ப மாற்றிப் பேசும் திறனைப் பெறுவர்.

**பண்புகள்** :
- கூச்சமின்றிக் கதைப்பதற்கு முன்வருவர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒருங்கிணைந்த செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- பொம்மைகள், சிறிய உடைகள், தொப்பிகள், பைகள், தகரப்பேணிகள், வெற்றுப் பவுடர் பெட்டிகள், சட்டிப் பானைகள், சிரட்டைகள், களிமண், பாய்கள், தலையணை தண்ணீர், பேசன், யோகட் கோப்பை, புனல், கரண்டி, ஊஞ்சல், ஈர்க்கு, பலா இலை, பூக்கள், மணல் போன்றவைகள்.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

படி 1
- வகுப்பறையை விளையாட்டு வீடாக மாற்றிக் கொள்க. பிள்ளைகளை விளையாட்டு வீட்டுக்கு அழைத்துச் செல்க. அதனை அவதானிக்குமாறு செய்க.
- இந்த விளையாட்டு வீட்டை நீங்கள் விரும்புகிறீர்களா எனக் கேட்க. ஆம் என்றால் இங்கு விளையாட விருப்பமா? விருப்பமாயின் விளையாட்டு வீட்டில் யாரைப்போல் இருக்க விரும்புகிறீர்கள் எனக் கேட்க.
- பிள்ளைகள் சரியாக ஈடுபடாவிட்டால் யார் விளையாட்டு வீட்டில் அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, தங்கை, தம்பி, பாட்டன், பாட்டி, ஆக மாற விருப்பம் என வினவி, பாத்திரங்களை வழங்குக.
- உங்களுக்கு விரும்பியபடி விளையாட்டு வீட்டு செயற்பாடுகளை பல பகுதிகளாகப் பிரிக்குக. அதற்கேற்ப தேவையான பொருட்களைப் பகிர்ந்தளித்து, ஒவ்வொரு குழுவையும் செயற்பாட்டிலீடுபடுத்தி, உரையாடி மகிழ்ச்சி அடையும் விதத்தில் வேலை செய்யப் பழக்குக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 2
- தேவைப்படின் குழுக்களையும் பொருட்களையும் மாற்றி, பாத்திரங்களையும் மாற்றி, புதிய உரையாடல்களைப் பழகுவதற்கு பிள்ளைகளுக்கு சந்தர்ப்பம் வழங்குக.
- விளையாட்டு சோறு சமைத்தல், பிள்ளை தாலாட்டுதல், தாலாட்டுப்பாடல்கள், பூக்களை ஈர்க்குகளில் இணைத்து விளையாட்டு வீட்டை அலங்காரஞ் செய்தல். பாடல்களைப் பாடுதல், பலா இலைகளால் தொப்பி, உடைகளை ஆக்கி அணிதல் போன்ற பல்வேறு செயற்பாடுகளைத் திட்டமிட முடியும்.

படி 3
- செயற்பாடு முடிவடைந்தபின் அவ்விடத்தைத் துப்பரவு செய்தல். எடுத்த பொருட்களைக் கழுவி வைத்தல். அவ்வேலைகளில் ஈடுபடும் பிள்ளைகளைப் பாராட்டுதல்.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- குழுக்களிடையே சென்று தவறுகளைத் திருத்திவிடுக. உரையாடல்களை மிகவும் சிறப்பாகச் செய்ய, பாடல்களைப் பாடுதல் போன்ற செயல்களை விருத்தி செய்துகொள்ள உதவுக.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- பொம்மை, பால், தொட்டில்.
- தாலாட்டுப் பாடல்கள்
- விளையாட்டு வீடு

**10. வேறு விடயங்கள்:**

- வகுப்பிலுள்ள பிள்ளைகளுக்குப் பொருந்தும் வகையில் பல்வேறு செயற்பாடுகளைத் திட்டமிடுதலும், பிள்ளைகளைக் குழுக்களாகப் பிரிப்பதும் பல்வேறு திறன்களுக்கேற்ப அவர்களைப் பிரிப்பதும் ஆசிரியரின் பொறுப்பாகும்.
- செயற்பாடுகளைச் சித்திரமாக வடிப்பதற்கு பிள்ளைகளை ஈடுபடுத்துவது பொருத்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7.15

## எங்கள் சித்திரங்களை நீங்கள் கண்டீர்களா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தொடர்பாடல் திறன்கள் அபிவிருத்தி

02. தலைப்பு : எங்கள் சித்திரங்களை நீங்கள் கண்டீர்களா?

03. பிரதான இலக்கு : காண்பவற்றை விபரித்துக் கூறும் ஆற்றலை வளர்த்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- ஒரு படத்தை விபரிக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வர்.

திறன்கள் :
- சிக்கலின்றி கருத்துக்களை முன்வைக்கும் திறனைப் பெற்றுக் கொள்வர்.

பண்புகள் :
- பேச்சின் மூலம் இன்பம் பெறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- வகுப்பறையில் சித்திரக் கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்தல்.
- வகுப்பறையில் ஒரு மேடையை அமைத்தல்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- கருத்துக்கள் வெளிப்படும் வகையில் எளிமையாக வரையப்பட்டுள்ள சில சித்திரங்களைப் பார்வையிட சந்தர்ப்பமளித்தல்.
- தாம் பார்வையிட்ட சித்திரங்கள் பற்றிக் கருத்துக்கள் கூறுவதற்கு, மனங்கவர் விடயங்கள் பற்றிக் கூறுவதற்கு இடமளித்தல்.

படி 2
- பிள்ளைகளுக்கு கடதாசி, பெஸ்டல் களர் பகிர்ந்தளித்து, அது போன்ற தாம் விரும்பும் ஒரு கருத்தைச் சித்திரமாக வடிக்க சந்தர்ப்பமளித்தல்.
- ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குள் வரையும் சித்திரங்களைப் பாராட்டுதல்.
- அமைத்துள்ள சிறிய மேடைக்கு ஒவ்வொரு பிள்ளையாக அழைத்தல்.
- தான் வரைந்த சித்திரத்தைப் பற்றி கருத்துக்கூற இடமளித்தல்.
  உதா:- நான் ஒரு பூ வரைந்தேன்.
- ஒரு வண்ணத்துப் பூச்சி வருகிறது,....
- எல்லாப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பமளித்தல். கை தட்டி உற்சாகப்படுத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக :**

- முன்வரும் பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- முன்வரும்போது கை தட்டுதல்.
- முன்வராதவர்களை ஊக்குவித்தல்.
- கருத்துக்களைக் கூற இடர்படும் பிள்ளைகளுக்கு உதவுதல்.
- திருத்தமாகச் சொற்களைப் பயன்படுத்தி, சப்தமாகக் கூறும் பிள்ளைகளைப் பாராட்டுதல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- மேடை
- சித்திரக் கண்காட்சி

**10. வேறு விடயங்கள்:**

- செயற்பாடு முடிவின்போது பிள்ளைகளின் சித்திரங்களைக் கண்காட்சிக்காகச் சேகரிக்குக.
- முதலாவது காட்சிக்காக சித்திரங்களோடு படங்களையும் பயன்படுத்த முடியும்.
- எப்பொழுதும் பிள்ளைகள் முன்வைக்கும் விபரங்களை மேலும் வளமாக்கி, அச் செயற்பாட்டை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு ஆசியரும் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7.16

## மழை பொழிகிறது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தொடர்பாடல் திறன்கள் அபிவிருத்தி

02. தலைப்பு : மழை பொழிகிறது

03. பிரதான இலக்கு : செயல் சார் பாடலொன்றைப் பாடப் பழக்குதல்

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:
திறன்கள் :
- திருத்தமாக சொற்களை உச்சரிக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வர்.

பண்புகள் :
- ஒன்றின் மூலம் வெளிப்படும் ஒலியினால் இன்பம் அடைவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒருங்கிணைந்த செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- ஒரு தாளவாத்தியக் கருவி
- ஏற்கனவே தயார் செய்துள்ள சிறிய பாடல்கள், கவிதைகள், மேளப் பாடல்கள் போன்ற தாளத்துக்குப் பாடக்கூடியவைகளின் தொகுப்பு.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- மழை நாள் பற்றி ஒரு சிறிய கலந்துரையாடல். மழை பொழிய முன் சூழலில் ஏற்படும் மாற்றங்களை அறிமுகப்படுத்திப் பிள்ளைகளுடன் கலந்துரையாடலை முன்னெடுத்துச் செல்லல்.

- சிச் சிரி சிரி சிரி சிச்ரி சிச்ரி சிரி ///
மழை பொழியுது. /// என்ற பாடலடிகளை முதலில் ஆசிரியர் பாடுக. அடுத்து பிள்ளைகளைப் பாடச் செய்க. மீண்டும் ஆசிரியர் அதனைப்பாடுக. இவ்வாறு பிள்ளைக்கு நன்கு பரிச்சயமாகும் வரை செய்க.

படி 2
- காற்று அடிக்குது, மரங்கள் வளையுது ///
மழை பொழியுது ///
சோ.... என .... என்ற பாடலடிகளைப் பாடுக. பிள்ளைகளுடன் மீண்டும் மீண்டும் பாடுக.
மீண்டும் சிச் சிரி சிரி சிரி சிச்ரி சிச்ரி சிரி......... பாடலடிகள்
(இப் பாடலின் ஏனைய அடிகளை ஆசிரியரின் விருப்பப்படி தீர்மானிக்க முடியும்.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 3 • பாடலைப் பாடும்போது எல்லாப் பிள்ளைகளையும் பென்சிலைக் கையில் எடுத்து மேசையில் தாளத்துக்கேற்பத் தட்டுமாறு அறிவுறுத்துக.

இப்பொழுது மழை மிகவும் மெதுவாக ஆரம்பமாகிறது.......
இப்பொழுது மழை வேகமாகப் பொழிகிறது....... வேகமாகத் தட்டுதல்
இப்பொழுது மழை குறைந்து வருகிறது.... மெதுவாகத் தட்டுதல்
மீண்டும் மழை வேகமாக அதிகரிக்கிறது . இவ்வாறு பாடல்பாடி செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

படி 4 • ஆசிரியர் தெரிவு செய்து கொண்ட வேறு பாடல்களையும் வழங்கி, பிள்ளைகளைப் பயிற்சியிலீடுபடுத்துக.

## 08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- நன்கு தொனியைப் பயன்படுத்தும் பிள்ளைகளை ஊக்குவிக்குக.
- ஒரு பிள்ளையை முன்வந்து பாடச் செய்க.
- ஏனையவர்களுக்கும் துலங்குவதற்குச் சந்தர்ப்பம் வழங்கி ஊக்குவிக்குக.
- செயற்பாடு முடிவில் மகிழ்ச்சியுடன் குழுக்களைக் கலைந்து செல்லப் பணித்தல்.

## 09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- கத்தி, தோட்டம், கிளி, பெய்கிறது, மேடு
- மழை, காற்று, புதர், மிருகங்கள்.

## 10. வேறு விடயங்கள்:

- மேலே ஒவ்வொரு பாடலுக்கும் உதாரணம் மட்டுமே காட்டப்பட்டுள்ளது. ஆசிரியரின் விருப்பப்படி வேறு பாடல்களையும் பயன்படுத்த முடியும்.

உதா:-

1. சிறுவர் பாடல்
2. மேளப் பாடல்கள்
3. ஏனைய பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7.17

## ஒரு முரசறைகிறவன் வந்துள்ளான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : தொடர்பாடல் திறன்கள் அபிவிருத்தி

02. **தலைப்பு** : ஒரு முரசறைகிறவன் வந்துள்ளான்

03. **பிரதான இலக்கு** : ஒரு செய்தியைத் திருத்தமாக உள்வாங்குவதற்குப் பயிற்றுவித்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- ஒருவரின் செய்தியை விளங்கிக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வர்.

**திறன்கள்** :
- அவதானமாக செவிமடுக்கும் திறனை வளர்த்துக் கொள்வர்.

**பண்புகள்** :
- செய்திகளைத் திருத்தமாக உள்வாங்குவதனூடாக இன்பமுறுவர்

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- முரசுக்குப் பதிலாக ஒரு தவிலைத் தயார்செய்து கொள்ளல்.
- முரசறைபவனுக்குப் பொருத்தமான ஆடை அணிகளைத் தயார் செய்து கொள்ளல்.

  தலைக்கு - தலைப் பாகைக்கு ஒரு சிவப்பு நிறத் துணி

  இடுப்புக்கு - ஒரு சிவப்புத் துணித் துண்டு, ஒரு வெள்ளை சாரம், ஒரு வெள்ளைத் துணி.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி 1**
- தயார் செய்து கொண்ட தவிலை இசைத்து, எல்லாப் பிள்ளைகளினதும் கவனத்தைத் திருப்புதல்

| |
|---|
| கேள்! கேள்! கேள்!<br>இதோ சிறுவர் உங்களுக்குச் சிறந்த ஒரு சந்தர்ப்பம்<br>சித்திரை மாதம் 14 ஆம் நாள்<br>ஊர் மைதானத்தில் முழு நாளும் நடைபெறும்<br>சிறுவர் சித்திரைமாத கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளுமாறு<br>அழைப்பு விடுக்கின்றோம். |

- செவிமடுத்திருந்த பிள்ளைகளை அதுபற்றி வினாக்கள் வினவ ஊக்குவித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 2 • மேற்கூறிய விதத்தில் பல்வேறு செய்திகளைத் திட்டமிட்டு முன்வைக்குக. அச்செய்திகளின் உள்ளடக்கம் தொடர்பாகப் பிள்ளைகளுடன் கலந்துரையாடுக.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- நன்கு செயற்பட்ட பிள்ளைகளை கைதட்டி உற்சாகப்படுத்துக.
- முன்வராத பிள்ளைகளை ஊக்குவிக்குக.
- பலவீனமான பிள்ளைகளுக்கு உதவுக.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- முரசு, தவில், கேள், சித்திரை, சிறுவர், கொண்டாட்டம்.
- செய்தி

10. வேறு விடயங்கள்:

- முரசறைபவர்கள் சிலரைப் பயன்படுத்தி, பல்வேறு செய்திகளை முன்வைத்தல் பொருத்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7.18

## அந்தரேயின் மனைவியும் அரசனின் மனைவியும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : தொடர்பாடல் திறன்கள் அபிவிருத்தி

02. **தலைப்பு** : அந்தரேயின் மனைவியும் அரசனின் மனைவியும்

03. **பிரதான இலக்கு** : உரையாடல்களைக் கட்டியெழுப்பும் ஆற்றலை விருத்தி செய்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :**

**ஆற்றல்கள்** :
- கதையொன்றை ஆக்கும் ஆற்றலை விருத்தி செய்து கொள்வர்.

**திறன்கள்** :
- தெளிவாக சொற்களை உச்சரிக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்வர்.

**பண்புகள்** :
- உரையாடலை முன்வைத்து இன்பம் பெறுவர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- இரண்டு சிரட்டை அகப்பைகளைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட உருவங்கள் இரண்டு.
- சிரட்டை அகப்பையின் முகப்பக்கமாக குறுக்காக ஒரு தடியைக் கட்டி, ஒரு சட்டையை அணிவிக்க. இவ்வாறு இரண்டு உருவங்கள்.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

படி 1
- உருவங்கள் இரண்டையும் காண்பித்து அவற்றுக்கு அந்தரேயின் மனைவி, அரசனின் மனைவி எனப் பெயரிடல்.
- அரசிக்கும் அந்தரேயின் மனைவிக்கும் காது கேட்பதில்லை என ஏற்கனவே கதையில் தெளிவுபடுத்தல். பிள்ளைக்கு சப்தமிட்டு உரையாட சந்தர்ப்பமளிக்க. ஆசிரியர் அவ்விருவருக்கும் இடையில் நடந்த உரையாடலைக் கதை வடிவில் முன்வைத்தல். அந்தரே தன் மனைவியை அரசியைச் சந்திக்க அழைத்துச் சென்ற விதத்தை எளிமையாக முன்வைக்க.

படி 2
- இரு பிள்ளைகளை வரவழைத்து, இரு உருவங்களையும் வழங்குக.
- எளிய வாக்கியங்களூடாக உரையாட பிள்ளைகளுக்கு வழிகாட்டுக. உருவங்களைக் கையால் இயக்கியவாறு பேசச் செய்க.

படி 3
- இவ்விதம் எல்லாப் பிள்ளைகளுக்கும் உரையாடல்களை முன்வைக்க சந்தர்ப்பமளிக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. **மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக :**

- உரையாடல்களைக் கட்டியெழுப்ப பிள்ளைகளுக்கு சந்தர்ப்பமளிக்க.
- முன்வரும் பிள்ளைகளை ஊக்குவிக்குக.
- பலவீனமான பிள்ளைகளுக்கு அதிக சந்தர்ப்பம் வழங்குக.

09. **கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- அரசி, அந்தரே, மனைவி
- இனிமையானது

10. **வேறு விடயங்கள் :**

- ஆசிரியரின் விருப்பப்படி உரையாடலில் உட்படுத்தவேண்டிய சொற் கூட்டங்களைத் தெரிவு செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7.19

## தொப்பி வியாபாரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : தொடர்பாடல் திறன்கள் அபிவிருத்தி

02. **தலைப்பு** : தொப்பி வியாபாரி

03. **பிரதான இலக்கு** : கதையொன்றைச் செவிமடுத்துக் கிரகித்துக் கொள்ளல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- செவிமடுத்தவற்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும் ஆற்றலை விருத்தி செய்து கொள்வர்.

**திறன்கள்** :
- தெளிவாகப் பேசும் திறனைப் பெறுவர்.

**பண்புகள்** :
- திருத்தமாக விடயங்களைக் கிரகித்து இன்பமடைவர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- தொப்பி வியாபாரியின் கதையோடு தொடர்பான சில சித்திரங்கள்.
- தொப்பிகள் இடப்பட்ட ஒரு பெட்டி.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி 1**
- ஆசிரியர் தொப்பிகள் இடப்பட்ட பெட்டியைத் தலையில் வைத்தவாறு பிள்ளைகளின் முன் வந்து, தொப்பி, தொப்பி, தொப்பி, தொப்பி. யார் தொப்பி எடுப்பது? என்று அங்கு மிங்கும் நடமாடல். சிறிது நேரத்தின் பின் உங்கள் முன்னிலையில் யார் என்று சொல்ல முடியுமா? என்று கேட்க. சிலவேளை தொப்பி வியாபாரி என்று கூறுவார்கள். முடியாமற் போனால் ஆசிரியர் அதனை அறிமுகப்படுத்துக.

**படி 2**
- இன்று அது போன்ற ஒரு தொப்பி வியாபாரியின் கதையைக் கேட்க விரும்புகிறீர்களா? என வினவி, கதையைக் கூற ஆரம்பித்தல். ஒரு தொப்பி வியாபாரி இருந்தான். படத்தைக் காட்டுக. அவன் இப்படித்தான் வியாபாரம் செய்தான். (ஆசிரியர் தொப்பி பெட்டியைத் தலையில் வைத்துக்கொண்டு நடமாடிக் காட்டுக.) பல நிறத் தொப்பிகளைப் பெட்டியில் இட்டுக்கொண்டு தொப்பி, தொப்பி, யார் தொப்பி எடுப்பது? மிக இலாபம் தொப்பி. யார் தொப்பி எடுப்பது? என்றவாறு கூறுக.

- இவ்வாறு செல்லும்போது வியாபாரிக்குக் களைப்பு ஏற்பட்டது. "இப்போது சரியான களைப்பு. உட்கார வேண்டும்" எனக்கூறி, ஒரு மரத்தின் கீழ் இருந்தான். அவ்வாறிருக்கும் போது, கர்ர்......கர்ர் என்று குரட்டை விட்டுத் தூங்கினான். படம் 2 ஐக் காட்டுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- படம் 3 ஐக் காட்டுக. மரத்தின் மேல் ஒரு குரங்குக் கூட்டம் இருந்தது. தொப்பி வியாபாரியைப் பார்த்துக் கொண்டிருந்தது. வியாபாரியின் தலையில் ஒரு தொப்பி இருப்பதைக் கண்டன. குரங்குகளுக்கு தொப்பி போட ஆசை ஏற்பட்டது. அவை ஒவ்வொன்றாக மரத்திலிருந்து மெதுவாக இறங்கி, ஒவ்வொரு தொப்பியைப் போட்டுக் கொண்டு மரத்தில் ஏறின.

- தொப்பி வியாபாரி விளித்தார். "ஐயோ எனக்குத் தூக்கம் போய்விட்டதே, இப்பொழுது எஞ்சியுள்ள தொப்பிகளை விற்க உடனே போக வேண்டும்" எனக் கூறி, தொப்பிப் பெட்டியை எடுக்க ஆயத்தமானான். "ஐயோ! ஐயோ! எங்கே இந்தப் பெட்டியிலிருந்த தொப்பிகள்? யார் அவற்றை எடுத்தார்கள்?" என்று சுற்றுமுற்றும் பார்த்தான். ஆ இதோ என் தொப்பியை எடுத்தவர்கள் இங்கே இருக்கிறார்கள். எப்படி இந்தத் தொப்பிகளைத் திருப்பி வாங்குவது? என்று யோசித்தான். வியாபாரி தலையிலிருந்த தொப்பியைக் கழற்றி எறிந்தான். குரங்குகளும் தொப்பிகளைக் கழற்றி எறிந்தன. படம் 4 ஐக் காட்டுக.

- வியாபாரி தொப்பிகளைப் பொறுக்கிக் கொண்டு மீண்டும் வியாபாரம் செய்தான்.
  கதையை நிறுத்துக.

படி 3

- பிள்ளைகளிடம் கதை தொடர்பாக வினாக்கள் தொடுக்க.
- விரும்பியவர்களுக்குக் கதையைக் கூற இடமளிக்க.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- முன்வந்த பிள்ளைகளைப் பாராட்டுக.
- முன்வந்த பிள்ளைகளைக் கைதட்டி உற்சாகப்படுத்துக.
- கதையின் நிகழ்வு ஒழுங்கில் கூறிய பிள்ளைகளைப் பாராட்டுக.
- பலவீனமான பிள்ளைகளுக்கு உதவுக.
- நடிக்க விரும்பும் பிள்ளைகளுக்கு இடமளித்து ஊக்குவிக்குக.
- தொனி வேறுபாட்டுடன் கதைக்கும் பிள்ளைகளைப் பாராட்டுக.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- தொப்பி, பெட்டி, இலாபம், யார் எடுப்பது, மரத்தடியில், நித்திரை செய்தான்.
- களைப்பு, வியாபாரி

**10. வேறு விடயங்கள்:**

- கதையின் மனங்கவர் நிகழ்வொன்றை சித்திரமாக வரைய வழிப்படுத்துக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7.20

## நான் கூறுபவற்றைக் கேட்பீர்களா?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : தொடர்பாடல் திறன்கள் அபிவிருத்தி

02. தலைப்பு : நான் கூறுபவற்றைக் கேட்பீர்களா?

03. பிரதான இலக்கு : அறிவுறுத்தல்களைப் பின்பற்றப் பழக்குதல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- அறிவுறுத்தல்களுக்கு ஏற்பத் துலங்கும் பழக்கத்தைப் பெற்றுக் கொள்வர்.

திறன்கள் :
- கருத்துக்களைச் சித்திரமாக வடிக்கும் திறனைப் பெற்றுக் கெள்வர்.

பண்புகள் :
- சித்திரம் வரைவதினூடாக இன்பமடைவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- நிறப் பெட்டி, சித்திரம் வரைவதற்குத் தேவையான கடதாசிகள்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- நான் கூறுபவற்றைக் கேட்பீர்களா? அவற்றைச் செய்வீர்களா?
- பிள்ளைகளுக்கு கடதாசிகளை வழங்குதல்.
- நான் கூறுபவற்றைச் செவிமடுத்து, அவற்றை அழகாக வரையுங்கள்.

படி 2
- ஒரு மலையை வரையுங்கள். பிள்ளைகள் வரையும் விதத்தை அவதானித்துப் பாராட்டுதல்.
- மலைக்கு மேலே சூரியன் உதிக்கிறது....
  சூரியன் உதிக்கும்போது என்ன நிறம்?
  அதே நிறத்தில் வரையுங்கள்.
  அவதானித்துப் பாராட்டுங்கள்.
- சூரியன் உதிக்கும்போது பூக்கள் மலர்கின்றன.
  அழகான பூ மரங்களை வரையுங்கள். நிறந் தீட்டுங்கள். அவதானித்துப் பாராட்டுதல்.
- பூக்களின் மணத்திற்கு வண்ண வண்ண வண்ணத்துப் பூச்சிகள் வருவது போல வரைக. அவதானித்தலும் பாராட்டுதலும்.
- இப்போது நிறந்தீட்டி முடிந்துள்ளபடியால் நான் பார்க்க வரப்போகிறேன். பிள்ளைகள் வரைந்தவற்றை அவதானித்து பாராட்டுதல். நட்சத்திர அடையாளம் பெற்றுக் கொடுத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 3 • இதே போன்ற அறிவுறுத்தல்களை வழங்கி இன்னொரு சித்திரத்தை நிர்மானித்தல்.

08. **மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- பாராட்டுதல்
- கைதட்டுதல்
- நட்சத்திர அடையாளம் பெற்றுக் கொடுத்தல்.

09. **கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- மலை, சூரியன், பூக்கள், வண்ணத்துப் பூச்சி, நிறங்கள்.
- அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல்.

10. **வேறு விடயங்கள்:**

- சித்திரம் வரைவதோடு பிள்ளைகளை உடல் அப்பியாசத்திலும் ஈடுபடுத்தல். யாதேனுமொரு எளிய பொருளை ஆக்குவதில் ஈடுபடுத்தல். தாளத்துக்கேற்ப அசைதல் போன்ற விடயங்களையும் இச் செயற்பாட்டில் சேர்த்துக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7.21

## தாலாட்டுப் பாடல் பாடுவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**01. பிரதான துறை :** தொடர்பாடல் திறன்கள் அபிவிருத்தி

**02. தலைப்பு :** தாலாட்டுப் பாடல் பாடுவோம்

**03. பிரதான இலக்கு :** பாடலூடாகக் கூறப்படும் விடயங்களை விளக்குதல்.

**04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள் :**
- தாலாட்டுப் பாடல்கள் சிலவற்றைக் கற்றுக்கொள்வர்.

**திறன்கள் :**
- தாலாட்டுப் பாடலொன்றைத் தாளத்துக்குப் பாடும் திறனைப் பெற்றுக் கொள்வர்.

**பண்புகள் :**
- தாலாட்டுப் பாடல்கள் பாடி இன்புறுவர்.

**05. செயற்பாட்டின் தன்மை :** இது ஒரு தனி செயற்பாடாகும்.

**06. முன் ஆயத்தம் :**
- ஒரு தாளக்கருவி
- ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு பொம்மை வீதம் வழங்குதல்.

**07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி 1**
- பிள்ளைகளைச் சிறு வயதில் அம்மா தாலாட்டிய விதத்தை ஞாபகமூட்டி, அவ்வேளையில் பாடிய பாடல்கள் எவை என வினவி, பாடப் பிரவேசம் செய்தல்.

- ஆசிரியர் பாடும்போது பிள்ளைகளைச் செவிமடுக்கச் செய்தல்.

ஆராரோ ஆராரோ
ஆரிவரோ ஆராரோ
ஆரடித்து நீயழுதாய்
அடித்தாரைச் சொல்லியழு

அத்தை அடித்தாளோ
அமுதூட்டுங் கையாலே
மாமன் அடித்தானோ
மகிழ்ந்தெடுக்கும் கையாலே

பாட்டி அடித்தாளோ
பாலூட்டுங் கையாலே
ஆரடித்து நீயழுதாய்
அடித்தாரைச் சொல்லியழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இப்பாடலை அல்லது வேறு பாடல்களைத் தெரிவு செய்யும் சுதந்திரம் ஆசிரியருக்குண்டு.

- பொம்மைகளைக் கையில் வைத்துக் கொண்டு பாடலை ஒவ்வொரு அடியாகப் படிக்கத் தூண்டுக.

படி 2 • பொம்மையை ஆட்டியவண்ணம் பாடலைப் பாட வழி காட்டல்.

- மனனமாகப் பாடலைப் பாடும் திறன் வரும்வரை மீண்டும் மீண்டும் பாடச் செய்தல்

படி 3 • பாடலடிகளின் கருத்து வெளிப்படும் வகையில் பிள்ளைகளிடம் வினாக்கள் வினவி, விளக்குதல்.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- நன்று, ...... மிக நன்று,..... குட்...... போன்ற சொற்களைப் பயன்படுத்திப் பாராட்டுதல்.
- பொம்மையைத் தலாட்டும் விதத்தை நடித்துக் காட்டும் பிள்ளைகளைப் பாராட்டுதல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள் :

- பொம்மை, மாமா, அத்தை, அழு,
- சிறுவர் தாலாட்டுப் பாடல், பாட்டி, அடித்தல்

10. வேறு விடயங்கள் :

- சின்னஞ் சிறு கண்மலர்
  செம்பவள வாய் மலர்
  சிந்திடும் மலரே ஆராரோ.......
  இது போன்ற வேறு பாடல்களையும் பயன்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08

# ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8.1

# மிதக்கும் காகித ஓடம் செய்து அனுப்புவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்தி

02. தலைப்பு : மிதக்கும் காகித ஓடம் செய்து அனுப்புவோம்.

03. பிரதான இலக்கு : காகித ஓடமொன்றைச் செய்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- சிறுவர் பாடல் ஒன்றைக் கற்பர்.

திறன்கள் :
- காகிதத்தினால் ஓடமொன்றைச் செய்வதற்குப் பயிற்சி பெறுவர்.
- தாளம் போடுவது தொடர்பான திறனைப் பெறுவர்.
- சொற்களால் உணர்த்தப்படும் கருத்துக்களை வெளிப்படுத்தும் விதத்தில் நடிப்பர்.

பண்புகள் :
- ஏனையவர்களுடன் சுமுகமாகச் செயற்படத் தூண்டப்படுவர்

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- மேளமொன்றையும் கைமணியொன்றையும் ஒகனொன்றையும் பெற்றுக் கொள்ளல். அல்லது சுருதிப் பெட்டியொன்றைப் பெற்றுக் கொள்ளல்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1
- ஆசிரியர் பாடலைப் பாடும் போது மாணவர்கள் செவிமடுத்தல்.

காற்றடிக்கிறது
மரங்கள் அசைய
சோ சோ என்று
மழை பெய்கிறது
ஓடம் செய்து
மிதக்க விடுவோம்
போவதைப் பார்த்துத்
துள்ளி ஆடுவோம்

- ஆசிரியர் இந்தப் பாடலை பலமுறை பாடுதல்.

படி 2
- பாடலால் கூறப்படும் இச்சந்தர்ப்பம் தொடர்பாக பிள்ளைகளோடு கலந்துரையாடுதல்.

படி 3
- பாடல் மனப்பாடம் ஆனபின் அதற்கேற்பத் தாளம் போடுவதற்குப் பிள்ளை களைப் பயிற்றுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாடலை முழுமையாகப் பாடும்வகையில் பாடலின் சகல அடிகளையும் கற்பித்தல்.
- பாடலில் காட்டப்படும் விடயங்களை எடுத்துக் காட்டும் வகையில் குழுக்களாகப் பிரிந்து நடிப்பதற்குச் சந்தர்ப்பத்தை வழங்குதலும் அதனூடாக மாணவர்களுக்கு மகிழ்ச்சியைப் பெற்றுக் கொடுத்தலும்.

படி 4 • இப்பாடல் மூலம் கற்ற சொற்களை ஒவ்வொரு பிள்ளைக்கும் கூறுவதற்குச் சந்தர்ப்பம் அளித்தல்.

படி 5 • காகித ஓடமொன்றைச் செய்து நீரிலிட்டு மிதக்கும் விதத்தைப் பார்த்து கைதட்டிப் பாடலைப் பாட மீண்டும் சந்தர்ப்பம் அளித்தல்.

- பிள்ளைகளுக்கு காகித ஓடமொன்றைச் செய்வதற்குப் பயிற்சி அளித்தல்.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக :**

- பாடலை மனனம் செய்த பிள்ளைகளையும் நடித்த பிள்ளைகளையும் தாளம் போட்ட பிள்ளைகளையும் ஊக்குவித்தல்
- குழுவில் ஆசிரியர் அவதானித்த விஷேட சந்தர்ப்பங்களை மதிப்பீடு செய்து கொள்ளுதல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள் :**

- காற்று,மழை, படகு,
- மழை பொழிகிறது, காற்று வீசுகிறது, மிதக்கிறது

**10. வேறு விடயங்கள் :**

- எல்லாப் பிள்ளைகளுக்கும் காகித ஓடமொன்றைச் செய்யப் பயிற்சியளிக்கும் வகையில் பல்வேறு அளவுகளில் காகித ஓடங்களைச் செய்வித்தல்.

- நீர் பேசன் சிலவற்றைப் பயன்படுத்தி படகு செலுத்துவதற்குச் சந்தர்ப்பம் அளித்தல்.

- பாடலை ஆசிரியரின் விருப்பப்படி மேலும் அபிவிருத்தி செய்து வினோத விளையாட்டாக ஆக்கிக் கொள்வதற்கு வழிகாட்டுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.2

## பொன்னிற வண்ணத்துப் பூச்சி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : ஆக்கபூர்வமான மற்றும் அழகியல்சார் ஆற்றல்கள் விருத்தி.

02. தலைப்பு : பொன்னிற வண்ணத்துப் பூச்சிகள்

03. பிரதான இலக்கு : வண்ணத்துப் பூச்சி ஒன்றை ஆக்குதல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :

ஆற்றல்கள் : • பல்வேறு நிறங்களை இனங்காண்பர் .

திறன்கள் : • இனிப்புத்தாளினால் வண்ணாத்திப் பூச்சி ஆக்குவதற்கான திறனைப் பெற்றுக் கொள்வர்.

பண்புகள் : • மகிழ்ச்சியுடன் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு ஆர்வம் காட்டுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :

- பல்வேறு நிறங்களில் டொபித்தாள்களைச் சேகரித்துக் கொள்ளல்.
- வண்ணத்துப் பூச்சிகள் வரைவதற்கான சட்டகங்களைத் தயார்செய்து கொள்ளல்.
- பல்வேறு நிறங்களால் செய்யப்பட்ட வண்ணத்திப் பூச்சிகள் சிலவற்றை மேசையில் விழக்கூடியவாறு மேலே வீசுதல். பிள்ளைகளுக்குப் பரீட்சித்துப் பார்த்து இனங்காண்பதற்குச் சந்தர்ப்பத்தைக் கொடுத்தல்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1
- பிள்ளைகள் கொண்டுவந்த இனிப்புத்தாள்களை மேசையின்மீது வைக்கச் சொல்லுதல்.
- இனிப்புத்தாள் ஒன்றை எடுத்து அது சுருங்கியிருப்பின் அதனைக் கையால் ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு வழிகாட்டுதல். அந்த முறையில் பிள்ளைகள் செயற்படுதல்.

படி 2
- இனிப்புத்தாளின் சரிமத்திய பகுதியைக் கையால் பிடித்துச் சுற்றுவதற்கு வழிகாட்டுதல்.
- இருபக்கத்திற்கும் உள்ள இரு பகுதிகளயும் கையால் விரித்துக் கொள்வதைக் காட்டுதல்.
- அதே விதத்தில் தயாரித்த வண்ணத்துப் பூச்சியின் வடிவத்தைப் பார்த்து மகிழ்வதற்குச் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 3
- தேவைப்படின் அவ் வண்ணாத்திப் பூச்சியைச் சித்திரக் கொப்பியில் ஒட்டி பூக்களிலிருந்து தேன் எடுக்கும் உறுப்புகளை வரைவதற்குச் சந்தர்ப்பத்தை வழங்குதல்.
- சித்திர வரைதாள் முழுவதையும் பயன்படுத்தி வண்ணாத்திப் பூச்சிகளை ஒட்டுதல்.

- இனிப்புத்தாள் இல்லாது காகிதச் சட்டகங்களைப் பயன்படுத்தி வண்ணாத்திப் பூச்சிகளை வரைந்து நிறம் தீட்டுவதில் பிள்ளைகளை ஈடுபடுத்தல்.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக :

- எல்லாப் பிள்ளைகளும் தயாரித்த வண்ணாத்திப் பூச்சிகளைக் காட்டி ............மிகவும் அழகாகச் செய்திருக்கிறீர்கள்..... பாருங்கள். இந்த இறகுகளின் அழகை..........மகள் நன்று............ மகன் நன்று ....... போன்ற வார்த்தைகள் மூலம் மதித்தல். பாராட்டுதல். நாம் வண்ணாத்திப் பூச்சிகள் பறக்கும் விதத்தை நடித்துக் காட்டுவோமா? பிள்ளைகள் நடிப்பார்கள். இப்பாடலையும் பாடுவதற்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

அழகான வண்ணாத்திப்பூச்சி
பறந்து செல்கிறது
என்னையும் எடுத்துக் கொண்டு
பறந்து செல்வாயே
பொன்னிற வண்ணாத்திகளே

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள் :

- வண்ணத்துப் பூச்சி, இனிப்புத்தாள், மேசை, நிறம், சுற்றுதல்
- தேன் உறிஞ்சுதல், பறந்து செல்லுதல்.

10. வேறு விடயங்கள் :

- ஆசிரியரின் விருப்பப்படி பாடலை விருத்தி செய்து கொள்ளுங்கள்.
- மாணவர்களின் ஆக்கங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.3

## பல்வேறு ஆக்கங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : ஆக்கபூர்வமான மற்றும் அழகியல்சார் ஆற்றல்கள் விருத்தி.

02. **தலைப்பு** : பல்வேறு ஆக்கங்கள்

03. **பிரதான இலக்கு** : களியைப் பயன்படுத்தி ஆக்கங்கள் செய்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்** :

**ஆற்றல்கள்** :
- களியினால் பல்வேறு ஆக்கங்களைச் செய்ய முடியும் என்பதை விளங்கிக் கொள்வர்.

**திறன்கள்** :
- களியினால் வெவ்வேறு ஆக்கங்களைச் செய்வர்.

**பண்புகள்** :
- பொறுமையுடன் செயற்படுவதற்குப் பயிற்சி பெறுதல்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- பதப்படுத்தப்பட்ட களி.
- நீர்
- களி பிசைவதற்கு ஒரு பலகை
- கைத்துடைப்பம் ஒன்று
- பத்திரிகைத் தாள் ஒன்று

போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளல்.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்** :

படி 1
- ஆசிரியர் களியினால் செய்யப்பட்ட மிருக உருவமொன்றை அல்லது பறவை உருவமொன்றைக் காட்டுதல். பின்னர் அவ்வுருவம் எதனால் செய்யப்பட்டது என வினவுதல். பிறகு, எமக்கும் இவ்வாறு களியினால் பல்வேறுபட்ட உருவங்களைச் செய்யலாம் என்பதை எடுத்துக் காட்டுதல். பின்னர் பிள்ளைகளின் விருப்பப்படி களியினால் பொருட்களைச் செய்ய ஆயத்தமாதல்.
- குழுக்கள் கொண்டு வந்த களியை பலகையில் இட்டுப் பிசைவதற்கு ஆசிரியர் வழிகாட்டுதல்.

படி 2
- பதத்துக்குத் தயார் செய்த களியினால் அவர்களின் விருப்பப்படி ஆக்கங்களைச் செய்வதற்குச் சந்தர்ப்பம் அளித்தல்.

படி 3
- தயாரித்த ஆக்கங்களைப் பத்திரிகையில் வைத்து காற்றில் காயவைத்தல்.

படி 4
- காய்ந்த பின்பு குழுக்கள் செய்துள்ள அவ்வாக்கங்களை வெவ்வேறாக வைத்துக் காட்சிப்படுத்தல். குழுக்கள் தயாரித்த ஆக்கங்களின் பெயர்களை மற்றைய குழுக்களுக்கு அறிமுகப்படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- குழுக்களின் ஆக்கங்களைப் பரிசோதித்து அவை செய்யப்பட்டுள்ள முறைக்கு மிக நன்று, மிக அழகானது, மிகவும் நல்லது போன்றவற்றைச் சொல்லி மதிப்பிடலுக்கு உட்படுத்துதல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- களி பிசைதல், பல்வேறு, கைத்துடைப்படம், நீர், பலகை
- ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து,
- ஆக்கங்கள்.

10. வேறு விடயங்கள்:

- ஆக்கிய உருவம் ஒன்றைச் சாயம் பூசி அலங்காரம் செய்தல்.
- கண் வைப்பதற்காக (உருவங்களுக்கு) குண்டு மணி விதைகளைப் பாவித்தல் போன்ற சந்தர்ப்பத்துக்கேற்ற செயல்களை ஆசிரியரின் விருப்பப்படி தயார் செய்து கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.4

# கரணம் போடும் முயற்குட்டி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : ஆக்கபூர்வமான மற்றும் அழகியல்சார் ஆற்றல்கள் விருத்தி.

02. தலைப்பு : கரணம் போடும் முயற்குட்டி

03. பிரதான இலக்கு : முயற் குட்டி ஒன்று போல் நடிப்பதற்கு வழிசெய்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :

ஆற்றல்கள் : • சிறுவர் பாடல் ஒன்றைக் கற்பர்.

திறன்கள் : • பாடல் பாடுவதற்கும் நடிப்பதற்கும் பயிற்சி பெறுவர்.

பண்புகள் : • பாடுவதன் மூலமும் நடிப்பதன் மூலமும் இன்புறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் : • வெள்ளை முயலொன்றைப் போல் ஆயத்தமாகிய ஒரு சிறிய பிள்ளை

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1 • ஆயத்தப்படுத்திய பாடலை ஒலிப்பதிவு நாடா மூலம் அல்லது ஆசிரியர் சுருதி, லயங்களோடு பாடுதல்.

பாடல் - நீளக் காதை உயர்த்தி உயர்த்தி
சிறிய வாலை அடித்து அடித்து
அந்தப்பக்கம் இந்தப்பக்கம்
கரணம் போடும் முயல் குட்டி

மிகவும் சாதுவான தோற்றம்
பஞ்சுக் குவியல் போல வெள்ளை
அடுத்தவர்க்குத் தொல்லை செய்யா
அழகு வாய்ந்த முயல் குட்டி

• முதலில் பாடல் அடிகளை மாணவர்களோடு சேர்ந்து பாடுதல். ஆசிரியரோடு மாறிமாறிப் பாடல். மனப் பாடமாகும் வரை பாடுதல்.

படி 2 • மாணவர்களை மூன்று குழுக்களாக வகுத்தல்.

• ஒரு குழுவுக்கு முதலில் ஆயத்தம் செய்த மாதிரி தாளவாத்திய கருவியைப் பெற்றுக் கொடுத்தல்.

• இரண்டாவது குழுவைப் பாடச் செய்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மூன்றாவது குழுவினரை முயற்குட்டிகள் போல் சுதந்திரமாக அசைவதற்குச் சந்தர்ப்பம் அளித்தல்.

- குழுக்களை மாற்றி மாற்றி செயற்பாட்டில் ஈடுபடுத்துதல். ஆசிரியர் தாளவாத்தியத்தை இசைத்துப் பாடுவதற்கு ஒத்துழைத்தல்.

படி 3
- பாடலில் வரும் முயற்குட்டி தொடர்பாக பிள்ளைகளோடு கலந்துரையாடுதல் முயல் சாதுவானது என்பதையும் அது மனிதர்களுடன் வாழ்வதற்கு இசைவாக்கம் அடையக்கூடியது என்பதையும் எடுத்துக்காட்டுதல். நேரடியாக வளர்ப்பு முயற்குட்டி ஒன்றைத் தடவி அதன் உடல் மிருதுவானது என்பதையும் சாதுவானது என்பதையும் எடுத்துக்காட்டுதல். மிருகங்களிடத்து கருணை, அன்பு காட்டுவது தொடர்பாக நன்றாக விளங்க வைத்தல்.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- பாடலைச் சங்கீதத்துடன் தாளவாத்தியங்களுடன் முன்வைத்தல்.
- இனிமையாக ஆசிரியர் பாடிக்காட்டுதல்.
- எல்லா மாணவர்களுக்கும் பாடமாகும் வண்ணம் படிப்படியாகப் பாடுதல். (முதல் பாடலில் இவ்வாற்றல் உண்டு)
- நன்றாகப் பாடும் பிள்ளைகளோடு ஏனைய பிள்ளைகளைப் பங்குபற்ற வைத்தல்.
- நன்றாக அசைவுகளைச் செய்யும் பிள்ளைகளை முன்னே வரச் செய்து மற்றைய பிள்ளைகளுக்கு அது போல செய்து காட்ட சந்தர்ப்பம் அளித்தல்.
- தனித்தனியாக மாணவர்களின் திறனை மதிப்பிடல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- வால், இருகாதுகள், பஞ்சு
- கரணம் அடித்தல், சாதுவானது, அடித்தல்

**10. வேறு விடயங்கள்:**

- முயற்குட்டி ஒன்றினுடைய சித்திரம் ஒன்றை வரைவதில் பிள்ளைகளை ஈடுபடுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.5

# ஒரு பேரூந்து வந்துள்ளது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : ஆக்கபூர்வமான மற்றும் அழகியல்சார் ஆற்றல்கள் விருத்தி.

02. **தலைப்பு** : ஒரு பேரூந்து வந்துள்ளது.

03. **பிரதான இலக்கு** : பயணம் செய்யும் பேரூந்து ஒன்றைச் செய்தல்..

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :**

**ஆற்றல்கள்** :

- வசு வண்டி நடத்துனரின் காரியங்களைச் செய்து காட்டும் ஆற்றலைப் பெறுவர்.
- வசு வண்டியின் சாரதியின் காரியத்தில் ஈடுபடுவர்.
- சொற்களை உச்சரிப்பதற்குரிய ஆற்றலைப் பெறுவர்.
- பயணம் செய்யும் இடங்களின் பெயர்களை பெயரிடுவதற்குரிய ஆற்றலைப் பெறுவர்.

**திறன்கள்:**

- வசு வண்டி ஒன்றின் அமைப்பில் மாணவர்கள் ஒன்று சேர்ந்து சுயாதீனமாக செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு ஆற்றல்களைப் பெறுவர்.
- வசுவில் பயணம் போவது போல, சத்தமிட்டுப் பிரயாணம் செல்வதற்குரிய ஆற்றலைப் பெறுவர்..
- கணித எண்ணக்கருக்களைப் புரிந்து கொள்வர்.
- பணத்தைப் பரிமாறுவதற்குரிய ஆற்றலைப் பெறுவர்.
- வசு வண்டி நிறுத்துமிடங்களை இனங்காண்பர்.

**பண்புகள்** :

- சுயாதீனமாக ஒன்று சேர்ந்து செயல்களைச் செய்வதற்குக் கற்றுக் கொள்வர்.
- சுமுக உறவை ஏற்படுத்திக் கொள்வர்.
- வசு வண்டி பயணம் செய்து கொண்டிருக்கும் போது பணம் கொடுத்துப் பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொள்ளல் வேண்டும் என்பதை விளங்கிக் கொள்வர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :

- தேவையான உபகரணங்களை மாணவர்களோடு ஆயத்தம் செய்தல்.
- வசு வண்டி சாரதிக்கான சில்லு ஒன்று.
- கடதாசியால் பற்றுச் சீட்டுக்களைத் தயார் செய்தல்.
- தாள் நாணயங்களைக் காகிதத்தால் தயார் செய்தல்.
- குற்றி நாணயங்களை அட்டையால் தயார் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :**

**படி 1**
- வாங்க........ வாங்க........ ஏறுங்கள்........ ஏறுங்கள். புறக்கோட்டை. புறக்கோட்டைக்குச் செல்ல முடியும் என்று சொல்லி வசு வண்டியில் பயணம் செய்தல் பற்றி ஆசிரியர் மாணவர்களோடு கலந்துரையாடுதல்.

**படி 2**
- வகுப்பில் மாணவர்கள் இருவரை வசு வண்டியில் சாரதியும் நடத்துனருமாகத் தெரிவு செய்தல்.
- மற்றைய மாணவர் குழுக்களாகப் பிரிந்து அருகருகே இருக்கத்தக்கதாக வசு வண்டி ஒன்று போல் நிற்பதற்கு உதவி செய்தல்.
- வசு வண்டியின் முன்னால் சாரதி போல் சில்லைக் கையில் எடுத்துக் கொண்டு வண்டியைச் செலுத்துவதற்குப் பிள்ளை ஒன்றை ஈடுபடுத்தல்.
- நடத்துனர் போல் பயணச்சீட்டையும் பணத்தையும் கையில் வைத்துக் கொள்வதற்கு பிள்ளை ஒன்றை ஆயத்தம் செய்தல்.
- வசுவண்டி ஒன்றைப் போல் நின்ற மாணவர்களைத் தவிர மற்றைய பிள்ளைகளுக்கு வசுவண்டியில் ஏறுவதற்கு ஒவ்வொரு வசுவண்டித்தரிப்பிடங் களிலும் நிற்பதற்கு உதவி செய்தல்.

**படி 3**
- வசுவண்டி ஒலி எழுப்பிக் கொண்டு பயணம் செய்வதற்கு ஆரம்பித்தல். பீப்........பீப்............

நடத்துனர் :- நடத்துனர் வசுவண்டி பயணிக்கும் பாதையைச் சத்தமிட்டுக் கூறுதல். கொட்டாவ........ ஹோமாகம..........மீகொட.......ஏறுங்கள்.. ஏறுங்கள்.... முன்னே செல்லுங்கள்.

பிரயாணி :- இதோ பணம். எனக்கு ஹோமாகமவுக்குச் செல்ல பயணச் சீட்டு ஒன்று தாருங்கள்.

சாரதி :- வசுவண்டி நிறுத்துமிடத்தில் வசுவண்டி நிறுத்தப்படுகிறது. ......க்ரீஸ்.......

நடத்துனர் :- ஹோமாகம........ மீகொட........ ஏறுங்கள்.......ஏறுங்கள்........

சாரதி :- வசுவண்டி நின்று மீண்டும் பிரயாணம் செய்ய ஆரம்பிக்கின்றது.

பிரயாண :- ட்ரீங்.........ட்ரீங்.............மணி அடிக்கப்படுகிறது. நான் இறங்குகிறேன்............ பிரயாணி சத்தமிடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்துனர் :- நடத்துனர் மீண்டும் சத்தமிட்டு பிரயாணிகளை ஏற்றிக் கொள்கிறார். இம்முறையில் பிள்ளைகள் வசுவண்டிப் பிரயாணத்தை முடித்துக் கொள்கின்றனர்.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக :**

- பிள்ளைகள் எல்லோரும் சந்தோசமாகச் செயற்படுவதற்கு அவர்களைத் தைரியப்படுத்துவதற்காக வசுவண்டிப் பயணம் மிக நன்று எனக் கூறி பாராட்டுதல்.

- பயணப்பாதையை வேறுபடுத்தி மீண்டும் வசு வண்டியில் பயணம் செய்வோமா என ஊக்குவித்தல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள் :**

- சாரதி, நடத்துனர், பயணச்சீட்டு
- ஒரு ரூபா, இரண்டு ரூபா, மூன்று ரூபா, நான்கு ரூபா, ஐந்து ரூபா, ஆறு ரூபா, ஏழு ரூபா, எட்டு ரூபா, ஒன்பது ரூபா, பத்து ரூபா
- வசு வண்டி, பிரயாணப்பாதை, பணம்

**10. வேறு விடயங்கள்:**

- புகையிரதம் ஒன்றில் பயணஞ் செய்யும் முறையைக் காட்டுவதற்காக இவ்வாறான ஒரு செயற்பாட்டை ஒழுங்கமைக்க முடியும்.

- வசுவண்டியில், புகைவண்டியின் படத்தை வரையுமாறு பிள்ளைகளை ஈடுபடுத்துங்கள்.

- தாள் நாணயங்கள், குற்றி நாணயங்கள், பற்றுச் சீட்டுக்கள், போன்றவற்றிற்கு உண்மையானவற்றையே பயன்படுத்த முடியும்.

- வசுவண்டிப் பிரயாணம் செய்யும் பாதை ஒழுங்கை பிரதேசத்துக்கு ஏற்றது போல் மாற்றம் செய்தல் வேண்டும்.

- வசுவண்டியில் பிரயாணம் செய்யும் போது செய்யும் விடயங்களை, உரையாடலைப் பொருத்தமான விதத்தில் வேறுபடுத்திக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.6

# எங்கள் நண்பர் ஆமையார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : ஆக்கபூர்வமான மற்றும் அழகியல்சார் ஆற்றல்கள் விருத்தி.

02. **தலைப்பு** : எங்கள் நண்பர் - ஆமையார்.

03. **பிரதான இலக்கு** : காட்போர்ட்டினால் ஆமை ஒன்றை ஆக்கம் செய்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :**

**ஆற்றல்கள்** :
- ஆமையுடைய வடிவத்தையும் அங்க இலட்சணங்களையும் இனங்காண்பர்.

**திறன்கள்** :
- வெட்டி ஒட்டும் திறனை விருத்தி செய்து கொள்வர்.

**பண்புகள்** :
- உயிர்களிடத்தில் கருணை காட்ட ஆர்வமூட்டப்படுவர்

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- ஒவ்வொரு பிள்ளைக்கும் பகிர்ந்தளிப்பதற்காக
- முட்டையொன்றின் அளவிற்கு நீள்வட்டமாக வெட்டப்பட்ட காட்போட் துண்டொன்று.
- பைண்டர் கம்.
- தலைக்காக விரல் ஒன்றின் வடிவத்தில் வெட்டிய தடித்த அட்டைத் துண்டொன்று.
- அதே வடிவத்தில் கால் போல் வெட்டிய நான்கு துண்டுகள்
- பசை சிதறிதளவு.
- சிறிய துண்டுகளாக வெட்டப்பட்ட வார்னிசுக் கடதாசி.
- கண்ணிரண்டிற்கும் கறுப்பு நிற இரு வட்டங்கள்.
- தயார் செய்த மாதிரி ஆமை ஒன்று.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி 1**
- பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் வெட்டிய பகுதிகளையும் பசையையும் பகிர்ந்தளிக்குக.
- ஆமையின் மாதிரி வடிவத்தை ஆசிரியர் வகுப்புப் பிள்ளைகளுக்குக் காட்டி இவ்வுயிரினத்தைத் தெரியுமா எனக் கேளுங்கள். அது போன்ற ஒன்றை நாம் செய்வோம் என ஆலோசனை வழங்குங்கள்.
- நீள்வட்டமாக வெட்டப்பட்ட அட்டையில் இலக்கம் 3 இன் குறிப்புக்கேற்ப நீளப்பக்கமாக இரண்டாக மடித்து, கீழ்ப்பகுதியிலிருந்து அரை அங்குல அளவிலான ஒரு முக்கோணியை வெட்டி எடுக்க. (ஆசிரியர் உதவ வேண்டும்)

**படி 2**
- படத்திலுள்ளபடி பைண்டர் கம் பூசி ஒட்டுக. அவை சுருள் வடிவத்தைப் பெறும்.
- ஆசிரியர் ஒட்டும் விதத்தைச் செய்து காட்டுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 3 • தலை போல் வெட்டிக் கொண்ட பகுதியையும், கால்கள் போல் வெட்டிக் கொண்ட பகுதிகளையும் எடுத்து, ஒரே நிறக் கடதாசி ஒட்டுங்கள்.

படி 4 • மேலே நடுப்பகுதியில் தலையை ஒட்டுமாறு கூறுங்கள். இரு பக்கங்களிலும் 4 கால்களையும் ஒட்டுமாறு கூறுங்கள். ஆக்கத்தைப்பார்த்துப் பேசுவதற்கு வழிசெய்க.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- மாணவர்களுடைய ஆக்கங்களை மெச்சுதல்..
- கை தட்டி மகிழ்ச்சியடையச் செய்தல்.
- மற்றவர்களினுடைய ஆக்கங்களை அவதானிக்கச் செய்தல்.
- திறமை குறைந்தவர்களுக்கு உதவுதல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- ஆமை, தலை, கால்,
- ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு
- ஆக்கம் செய்தல்

10. வேறு விடயங்கள்:

- ஆமையினுடைய சித்திரம் ஒன்றை வரைய முடியும்.
- இச் செயற்பாட்டைத் தனித்தனியாகச் செய்ய முடியாத பிள்ளைகளை மற்றையவர்களின் உதவியுடன் முடிப்பதற்கு ஈடுபடுத்தல் பொருத்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.7

# வெற்றிகரமான எங்கள் கடை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : ஆக்கபூர்வமான மற்றும் அழகியல்சார் ஆற்றல்கள் விருத்தி.

02. **தலைப்பு** : வெற்றிகரமான எங்கள் கடை

03. **பிரதான இலக்கு** : கடையில் கொடுக்கல் வாங்கல் செய்வது பற்றி விளக்கமொன்றைப் பெற்றுக் கொடுத்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- பணக் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக விளக்கத்தைப் பெற்றுக் கொள்வர்.
- வியாபாரம் சம்பந்தமான சாதாரண அறிவைப் பெறுவர்.

**திறன்கள்** :
- சிறிய வீடு ஒன்றைக் கட்டும் திறனைப் பெறுவர்.

**பண்புகள்** :
- வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களில் நேர்மையைக் கடைப்பிடிப்பதற்கு ஆர்வம் காட்டுவர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- வெற்றுப் பால்பெட்டி
- சவர்க்காரத் தாள்களினால் சுற்றிய பலகைத் துண்டுகள்.
- வெற்றுத் தீப்பெட்டிகள்
- ரிசுக் கடதாசியைக் கரைத்துப் பெற்ற திரவம்.
- மணல்
- மெழுகுப் புடைவை
- செங்கல் தூள்
- பழைய உறைகள்
- டொபித்தாள்களால் சுற்றப்பட்ட கற்கள்
- சிரட்டைத் தராசு
- சிறிய வெற்றுப் போத்தல்கள்.
- தாள்களில் அச்சிடப்பட்ட பணத்தாள்களும் தாள்களில் எழுதப்பட்ட தாள் நாணயங்களும்.
- கம்புத் தூண்கள், கடதாசிச் சுருள்கள்
- மேலுள்ள பொருட்களில் தமக்கு முடியுமானவற்றை வீடுகளில் தயார் செய்து அனுப்புமாறு பெற்றார்களுக்குத் தெரிவித்தல்.
- பிள்ளைகளோடு கடைக்குச் சென்று பொருட்கள் வாங்கும் விதத்தையும் வியாபாரக் கடையொன்றின் மாதிரியொன்றையும் பார்வையிட்டு வருதல்.
- பிள்ளைகளின் ஒத்துழைப்புடன் கடைக்காக விளையாட்டு வீடு ஒன்றை அமைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1

- பிள்ளைகள் எடுத்து வந்த மாதிரிப் பொருட்களை அவர்களின் உதவியுடன் கடையில் காட்சிக்கு வைத்தல். தராசைத் தொங்கவைத்து வியாபாரத்துக்குத் தயாராதல்.
- விரும்பி முன்வரும் பிள்ளையை வியாபாரியாக ஈடுபடுத்தல்.
- பழைய உறைகளையும் மாதிரிக் காசுத் தாள்களையும் கொண்டு கடையில் இருந்து பொருட்களை வாங்குவதற்கு பிள்ளைகள் வரிசையில் நிற்றல்.
- பிள்ளைகளைத் தமக்குத் தேவையான பொருட்களையும் உபகரணங்களையும் விலை கொடுத்து வாங்குவதற்கு ஈடுபடுத்தல் கேட்பவர்களுக்குத் தேவையான அளவை விசாரித்து தேவையானவற்றைப் பெற்றுக் கொடுக்க முதலாளியை ஈடுபடுத்துதல்.
- மிகுதிப் பணத்தை பொருட்களை வாங்குபவருக்குத் திருப்பிக் கொடுக்கும் விதத்தையும் திரவவகைகளை வாங்குவதற்காக போத்தல்கள், கேன்கள் போன்றவற்றைக் கொண்டு வரும்படி நுகர்வோருக்கு அறிவிக்கும் விதத்தையும் பற்றி ஆசிரியர் பின்னால் நின்று பார்த்துக் கொண்டிருத்தல் வேண்டும்.
- முறையாகப் பொருட்களைக் கேட்பதற்கும் நுகர்வோருக்குக் கருணையுடன் கதைப்பதற்கும் பிள்ளைகளுக்கு அறிவுறுத்தல்.
- பொருட்களை வாங்கிய பின் அவர்கள் குழுவாக ஒன்று சேர்ந்து மீண்டும் கடைக்கு வந்து விற்பனை செய்து பணம் பெறுவதில் ஈடுபடுத்துதல்.
- பொருட்களை வாங்கிச் செல்லும் போது பாவிக்கும் உபகரணங்கள் சம்பந்தமாக பிள்ளைகளிடம் விசாரித்து அறிதல்.

  உதாரணம் : எண்ணெய், குளிர்பான வகைகள் என்பவற்றுக்கு
  போத்தலும் கேன்களும்,
  சீனி, தேயிலை வாங்க கடதாசிச் சுருள்கள்,
  சவர்க்காரம், பாற்பெட்டி, தீப்பெட்டி வாங்க உறைகள்.
- வியாபாரிகளாக வாங்குவோரை மாற்றிச் செயற்படவைத்தல்.
- முதலாளியிடம் பொருட்கள் வாங்கிய பின் நன்றி சொல்லுமாறு சொல்லுதல்.
- இறுதியில் பொருட்களையும் உபகரணங்களையும் முதலில் இருந்த இடங்களிலேயே வைத்து இடத்தைச் சுத்தம் செய்து செயற்பாட்டை முடித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. **மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- பிள்ளைகளின் செயற்பாட்டை மெச்சுதலும் பிள்ளைகளின் திறமைகளைப் பாராட்டலும் கைதட்டி தைரியப்படுத்துதலும்

09. **கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- வியாபாரி, தாள் நாணயம், பொருள் விலைக்கு வாங்குதல், சுருள், திரவம், ஒழுங்கு செய்தல், விளையாட்டுக் கடை, பணம்,
- கடை, வியாபாரி, நுகர்வோன்.

10. **வேறு விடயங்கள்:**

- ஆசிரியையின் விருப்பப்படி பொருத்தமான முறையில் சிறிய விளையாட்டுக் கடைகள் சிலவற்றைத் திறக்க முடியும்.
- ஒவ்வொரு கடையிலும் தனது கடையிலுள்ளவற்றைக் காட்டும் அறிவித்தல் பலகையொன்றைப் பொருத்திக் கொள்ள முடியும்.
- தேனீர்க் கடையொன்றை ஆரம்பிக்க முடியும்.
- பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகம் எனின் சிறிய கடைத் தெரு ஒன்றை ஒழுங்கு செய்க
- கடைத் தெருவைத் திறப்பதற்காக விழாவொன்றை ஏற்பாடு செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.8

# தேங்காய்ச் சிரட்டை நடனம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01 பிரதான துறை : ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்தி

02 தலைப்பு : தேங்காய்ச் சிரட்டை நடனம்.

03. பிரதான இலக்கு : பிள்ளைகளிடையே பல்வேறு நடிப்பு ஆற்றல்களைப் பழக்குதல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :

ஆற்றல்கள் : • பாடலை அல்லது கவிதையைக் கற்றுக் கொள்வர்.

திறன்கள் : • தாளம் போடும் திறனைப் பெறுவர்.

பண்புகள் : • சுயாதீனமாகச் மகிழ்ச்சியுடன் செயற்பாடுகளில் ஈடுபடுவர்.

05. செயற்பாட்டின் தன்மை: இது ஒரு குழுச் செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :

- ஒரே சமமான இரு சிரட்டைகளைச் சுத்தம் செய்து, பல்வேறு நிறங்களிலான லக்கர் மையை இரு சிரட்டை களிலும் பூசித் தயார் செய்து அனுப்பும்படி பெற்றோர்களுக்கு அறிவுறுத்தல்.
- மேளம்
- கைமணி ஒன்று.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1

- நிறம் தீட்டப்பட்ட சிரட்டைகள் இரண்டையும் கையில் எடுத்துக் கொண்டு தாளத்துக்கு ஏற்ப பாதங்களை வைத்து ஆசிரியர் வகுப்பறைக்குள் நுழைதல். அவ்வாறு செய்ய விருப்பமா என மாணவர்களிடம் கேட்டுச் செயற்பாட்டைச் செய்வதற்கு பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பம் அளித்தல்.
- பிள்ளைகள் அனைவரையும் திறந்த வெளி ஒன்றுக்கு அழைத்துச் செல்லல். தான் கொண்டு வந்த இரு சிரட்டைகளையும் எடுத்துச் செல்லும்படி கூறுதல்.

படி 2

- குழுக்களாகப் பிரித்து வட்டமாக நிற்கச் செய்தல்.
- இரு சிரட்டைகள், அல்லது கை மணியை ஆசிரியர் இசைக்கும் போது பிள்ளைகளுக்கும் இசைப்பதற்குச் சந்தர்ப்பம் அளித்தல்.
- நன்றாகப் பயிற்சி பெற்ற பின்பு கால்கள் இரண்டையும் வைத்து ஏதாவதொரு நடிப்பு முறையை ஆசிரியர் காட்டுதல்.
- வட்டமாக அபிநயத்தடன் செயற்பாட்டைச் செய்வதற்கு ஆசிரியர் வழிகாட்டுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 3
- ஒரு குழுவுக்குப் பாடலைப் பாட பயிற்சி அளித்தல்.

  பாடல்

  சிரட்டை ஒன்றைக் கையில் எடுத்து
  தாளம் போட்டு காலை வைத்து
  டக் டக் டக் சத்தம் இட்டு
  நடனம் ஆடுவோம். - சிரட்டை நடனம் ஆடுவோம்.

- ஒரு குழுவுக்குப் பின்னால் ஒரு குழு நிற்பதற்கும் சிரட்டை நடனத்தில் ஈடுபட்டு முன்னே செல்வதற்கும் வழிகாட்டல். ஆசிரியர் தாள வாத்தியக் கருவியை இயக்குதல்.

- எல்லாக் குழுக்களும் பாடுவதற்கும் ஆடுவதற்கும் ஏற்ற வகையில் திட்டமிடல்.

### 08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக :

- பிள்ளைகள் எல்லோரும் சந்தோசமாகச் செயற்பாட்டில் ஈடுபட, அவர்களை தைரியப்படுத்த, பிள்ளைகளுடைய பெயர்களைச் சொல்லி மிகவும் நன்று..................... மிக அழகாக இருக்கிறது.................... நாம் பெரஹர ஒன்றுக்கு சிரட்டை நடனத்தை ஆடுவோம்............. என உற்சாகமளித்தல்.

### 09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள் :

- சிரட்டை, நடனம், நிறம், தாளம், வட்டம், வரிசை, கைமணி.
- ஒன்று, இரண்டு.
- நடிப்பு.

### 10. வேறு விடயங்கள்:

- ஆசிரியரின் விருப்பப்படி பாடல் ஒன்றை, கவிதை ஒன்றைப் பயன்படுத்த முடியும். அது தான் செய்த ஆக்கம் ஒன்றாக அல்லது சம்பிரதாய பூர்வமான ஒன்றாக இருக்கலாம். அதற்குப் பொருத்தமான நடிப்பைப் பயிற்றுவிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8.9

# பட்டம் விடுவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01 பிரதான துறை : ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்தி

02 தலைப்பு : பட்டம் விடுவோம்

03 பிரதான இலக்கு : பட்டம் ஒன்றை விடும் பயிற்சியை வழங்குதல்

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :

ஆற்றல்கள் : • பாவனை எனும் எண்ணக்கருவை இனங்காண்பர்.

திறன்கள் : • பாவனை செய்யும் திறனைப் பெறுவர்.

பண்புகள் : • பாவனை செய்வதற்குரிய ஆசையை விருத்தி செய்து கொள்வர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் : பிள்ளைகள் குழு ஒன்று பட்டங்கள் விடும் படம்

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1 • மாணவர்களைத் திறந்த வெளி ஒன்றுக்கு அழைத்துச் செல்லுங்கள். பட்டங்கள் விடும் பிள்ளைகள் நிற்கும் படம் ஒன்றை மாணவர்களுக்குக் காட்டுங்கள். அதைப்பற்றிக் கலந்துரையாடுங்கள். அதன் பின்பு இப்பாடலை ஆசிரியர் முன்வையுங்கள். (பாடுங்கள்.)

பட்டங்களே பட்டங்களே
இதோ பாருங்கள்
பட்டங்களே பட்டங்களே
இதோ கேளுங்கள்

உங்களை நாம் வானில் ஏற்ற
கொள்ளை ஆசை
எம்மை விட்டுப் போயிடுவாய்
என்று அஞ்சுகிறோம்

• மாணவர்களுக்கு இப்பாடலைப் பாடுவதற்கு இடமளியுங்கள்.

படி 2 • இப்போது மகள் மகன் எல்லோரும் வானைப் பாருங்கள் என்று கூறுங்கள். மேகங்கள் செல்லும் விதத்தையும் பறவைகள் பறக்கும் விதத்தையும் மாணவர்கள் பார்ப்பதற்கு வழி செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாணவர்களுக்குச் சிறிது நேரத்தின் பின்னர் கண்ணை மூடுங்கள் என ஆசிரியர் சொல்லுங்கள்.

- இப்போது உங்கள் கையிலே பட்டம் ஒன்று உள்ளது என நினையுங்கள். அது மிக அழகாக இருக்கின்றதல்லவா? நீங்கள் அதனை வானில் விடுவதற்கு ஆசையா? மாணவர்கள் ஆம் எனச் சொல்வதுண்டு.

- அவ்வாறாயின் இப்போது மேலே விடுங்கள். இப்போது கண்களைத் திறவுங்கள். நூற்சுருளையை இறுக்கமாகப் பிடித்துக் கொள்ளுங்கள். பட்டத்தை மேலே விட்டு நூலைக் கீழே இழுங்கள். மேலும் கீழும் நோக்கி இழுங்கள். இப்போது சிறிது முன்னேயும் பின்னேயும் சென்று இழுங்கள். இப்போது சிறிது ஓடுங்கள் எனச் சொல்லி பாவணை மூலம் பட்டத்தை அனுப்பச் சந்தர்ப்பம் அளியுங்கள்.

- இப்போது உங்களது பட்டம் உயரச் சென்றுள்ளதா? வானில் எங்கும் பட்டங்கள் மிக அழகாக உள்ளதல்லவா? அதோ........ அதோ...... பெரிய காற்று வரப்போகிறது. மழையொன்றும் வருகிறது. நாம் அவசரமாக பட்டங்களை இறக்குவோம். நூற்சுருளைச் சுற்றும் படி சொல்லி அதனை பாவணை செய்து காட்டச் சொல்லுங்கள்.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- மாணவர்களின் செயற்பாட்டை மெச்சுதல்.
- கை தட்டுதல் மூலம் பாராட்டுதல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- பட்டம், நூற்கற்றை, காற்று , மழை
- வானம், ஆடுகின்றது, மேலே செல்கின்றது, சுற்றுகிறான்.

**10. வேறு விடயங்கள்:**

- பிள்ளைகளுக்குக் களைப்பாகும் வரை இச்செயற்பாட்டைச் செய்வதில் ஈடுபடுத்துங்கள்.
- ஆசிரியையின் விருப்பப்படி பாடலை விருத்தி செய்வதற்கு அல்லது மாற்றுவதற்கு இடமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.10

# விளையாட்டுத் தொலை பேசி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்தி

02. தலைப்பு : விளையாட்டுத் தொலை பேசி

03. பிரதான இலக்கு : விளையாட்டுத் தொலை பேசி ஒன்றைத் தயாரிப்பதற்குப் பயிற்சியளித்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :

ஆற்றல்கள் :
- தகவல் பரிமாற்றம் செய்வதற்காகத் தொலை பேசி ஒன்றைப் பாவிக்கும் முறையை விளங்கிக் கொள்வர்.

திறன்கள் :
- ஆசிரியருடைய உதவியால் தொலை பேசி ஒன்றைத் தயாரிக்கும் திறனைப் பெறுவர்.

பண்புகள் :
- பேசுவதன் மூலமும் கேட்பதன் மூலமும் மகிழ்ச்சியடைவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- செயற்பாட்டைச் செய்வதற்கு முன்னர் பிள்ளைகளைக் குழுக்களாகத் தெரிவு செய்து பொருட்களைக் கொண்டு வரும்படி ஒப்படைத்தல்.
- ஒரு குழுவுக்கு யோகட் கோப்பைகள் இரண்டு வீதம். (உங்கள் பகுதிக்குப் பொருத்தமான பொருட்களைப் பயன்படுத்தலாம்.) உதாரணம்:- தீப்பெட்டிகள்,சிரட்டைகள், தகரப்பேணிகள்
- 7 மீற்றர் நீளமான நூலொன்று.
- துளையிடுவதற்கான ஆணியொன்று.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- ஹலோ........ஹலோ........ எப்படி? சுகமாக இருக்கின்றீர்களா? நான் உங்களுடைய ஆசிரியர்...... கை விரல்களை மடித்து, காதில் வைத்துக் கொண்டு பேசுதல். இவ்விதத்தில் கதைக்கும் உபகரணங்கள் சம்பந்தமாகப் பிள்ளைகளோடு கலந்துரையாடல் செய்து பாடத்திற்குப் பிரவேசித்தல்.

- யோகட் கோப்பைகள் இரண்டையும் துளைத்தல். (ஆசிரியர் செய்ய வேண்டும்.)

- 7 மீற்றர் நீளமான நூலை துளைத்த யோகட் கோப்பையினுள் புகுத்தி முடிச்சு ஒன்று போடுங்கள். அடுத்த கோப்பையையும் எடுத்து நூலையிட்டு முடிச்சுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடுங்கள். குழுவில் இரண்டு பேருக்கு இத் தொலைபேசியைக் கொடுத்து கதைப்பதற்கு இடமளியுங்கள்.

படி 2 • இம்முறையில் குழுவில் சகல பிள்ளைகளுக்கும் இச்செயற்பாட்டில் ஈடுபடுவதற்குச் சந்தர்ப்பமளித்தல்.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- குழுக்களாகச் செயற்பாட்டில் ஈடுபடும்போது ஆசிரியர் நல்ல பிள்ளை, நல்ல மகன், நல்ல மகள், மிக நல்லது போன்ற சொற்கள் மூலம் தொலை பேசி மூலம் கதைத்த விதத்தை மெச்சுதல்.
- Good, நல்லம் போன்ற சொற்களைப் பாவித்தல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- தொலை பேசி, யோகட் கோப்பை, ஆணி,
- இரண்டு
- தொலை பேசி, அழைப்புவிடுத்தல்

**10. வேறு விடயங்கள்:**

- பிரதேசத்துக்குப் பொருத்தமான விதத்தில் பல்வேறு பொருட்களைப் பயன்படுத்துதல் மிகச் சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.11

# சிறிய முள்ளம் பன்றிகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்தி

02. தலைப்பு : சிறிய முள்ளம் பன்றிகள்

03. பிரதான இலக்கு : முள்ளம் பன்றி ஒன்றை உருவாக்குதல்

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :

ஆற்றல்கள் :
- முள்ளம் பன்றியை அறிந்து கொள்வர்.

திறன்கள் :
- முள்ளம் பன்றியின் உருவத்தை அமைப்பர்.

பண்புகள் :
- புதிய ஆக்கம் மூலம் இன்புறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- பசை இட்டுப் பிசைந்த களி அல்லது பைண்டர் பசையிட்டுப் பிசைந்த மரத் தூள்.
- தடித்த கார்ட் போர்ட் அட்டை
- சிரட்டைகள் இரண்டு
- தீப்பெட்டி ஒன்றினது குச்சிகள்.
- களியால் தயார் செய்த முள்ளம் பன்றி ஒன்றினது மாதிரி உருவம்
- மஞ்சாடி விதைகள் இரண்டு

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1
- பிள்ளைகளைத் திறந்த வெளி ஒன்றுக்கு அழைத்துச் செல்லல்.முள்ளம் பன்றி ஒன்றின் மாதிரியை மாணவர்களுக்குக் காட்டுதல். நாம் இன்று அதுபோல் அழகான முள்ளம் பன்றி ஒன்றைச் செய்வோம் எனக் கூறுங்கள். ஆசிரியரும் பிள்ளைகளோடு சேர்ந்து முள்ளம் பன்றியை ஆக்குவதில் ஈடுபடுங்கள்.

- பிசைந்த களிக்குத் தேங்காய் எண்ணெய் சிறிது இட்டு கையில் படாதவாறு செய்து கொள்ளுங்கள். (நீர்த்தன்மை குறைந்ததாக ) அதனைச் சிரட்டையில் இட்டு தடித்த அட்டையின் மேல் சிரட்டையின் முகத்தைத் திருப்பிவைக்கச் சொல்லுங்கள். மற்றைய சிரட்டையினால் அதற்குத் தட்டச் செய்யுங்கள். (ஒன்று, இரண்டு, மூன்று எனக் கூறியபடி)

- மரத்தூள் எடுப்பதாயின் சிரட்டைகளுக்கு மணல் சிறிதளவு தூவி அதற்குள் பசையுடன் மரத்தூள் இடும் போது சிரட்டையில் ஒட்டுவது தடுக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இப்போது சிரட்டையை அகற்றுங்கள். இப்போது குவியல் வடிவிலுள்ள களியைத் தட்டி சிறிது முட்டை வடிவில் நீட்டிக் கொள்ளுங்கள்.

- தீக்குச்சுகள் ஒவ்வொன்று வீதம் ஆங்காங்கே களிக்குவியலின்மீது பதியுங்கள். மஞ்சாடி விதைகள் இரண்டையும் தலையின் இரு பக்கங்களிலும் கண்களுக்குப்பதிலாக வையுங்கள்.

- முள்ளம் பன்றிகளைக் காய விடுங்கள்.

படி 2

- முள்ளம் பன்றிகளை ஆக்கிய பின்பு முள்ளம் பன்றி சம்பந்தமாக கவிதை ஒன்றை அல்லது கதை ஒன்றைக் கூறிப் பிள்ளைகளுக்கு இரசனை ஒன்றை ஏற்படுத்த முடியும்.

  முட்கள் நிறைந்து
  நல்ல வடிவு
  பயமும் தோன்றுது
  நான் செய்த
  முள்ளம் பன்றியாரே !!

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- ஆக்கத்தை மதித்தல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- களி, தீக்குச்சுகள், சிரட்டைகள், கண்கள், பிட்டு
- ஒன்று, இரண்டு, மூன்று
- முள்ளம் பன்றி

**10. வேறு விடயங்கள்:**

- களிக்குப் பதிலாகப் பசையை(பல்ப்) பயன்படுத்தியும் இவ்வாக்கத்தைச் செய்வதற்கு முயற்சி செய்ய முடியும்.

- முள்ளம் பன்றியின் சித்திரத்தை வரைந்து வகுப்பறையில் காட்சிப்படுத்தல்.

- முள்ளம் பன்றிகளை மத்தியில் வைத்து மாணவர்கள் வட்டமாக நின்று பாடல் ஒன்றைப் பாடி நடிப்பில் ஈடுபட இடம் அளியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.12

# நாம் சிறிய மிருகங்கள் ஆவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்தி

02. **தலைப்பு** : நாம் சிறிய மிருகங்களாவோம்.

03. **பிரதான இலக்கு** : பிராணிகளைப் போல் பாவணை செய்யும் பழக்கத்தைப் பெற்றுக் கொடுத்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்** :

**ஆற்றல்கள்** :
- பல்வேறு மிருகங்களை இனங்காண்பர்.

**திறன்கள்** :
- ஒவ்வொரு மிருகங்களைப் போல நடித்துக் காட்டும் திறனைப் பெறுவர்.

**பண்புகள்** :
- ஒவ்வொரு மிருகங்களைப் போலவும் நடித்துக் காட்டி திருப்தியைப்பெறுவர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- மிருகங்களின் படங்கள், தடித்த காட்போர்ட் அட்டை, பல்ப் ஆகியவற்றால் செய்த மிருக முகமூடிகள்.
- தேவையான பொருட்கள்:, முகமூடிகளை பெற்றார்களின் உதவியோடு தயார் செய்யுங்கள். எல்லாப்பிள்ளைகளுக்கும் ஒரு முகமூடிவீதம் வைப்பது முக்கியமாகும்.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி 1**
- இதோ சின்ன மிருகங்கள் உள்ளன.
  சிறிய குரங்குகள் கரணம் அடிக்குது - //
  முயற் குட்டிகள் புல் உண்ணுது
  குரங்குக் குட்டிகள் தலை சொறியுது - //
  மைனாக் குஞ்சுகள் முற்றம் எங்குமே
  கிளிக் கூட்டங்கள் வானில் பறக்குது - //
  பூனை மெல்ல – நடமாடுகின்றது
  நாய்க் குட்டிகள் - தொல்லை தருகுது
  யானை தும்பிக்கையை உயர்த்திச் செல்லுது
  நாங்கள் அவற்றையே பார்க்கச் செல்கிறோம் - //
- இப்பாடலைப் படித்து ஆசிரியை பாடத்தினுள் பிரவேசிப்பதுடன் பிள்ளைகளுக்கும் அப்பாடலைப் பாடுவதற்கும் பாத்திரங்களை ஏற்று நடிப்பதற்கும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுத்தல்.
- பல்வேறு மிருகங்களினுடைய படங்களைக் காட்சிப்படுத்திக் கலந்துரையாடல் ஒன்றை நடாத்துதல். மாணவர்களுக்குக் கருத்துக்களை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 2
- தெரிவு செய்த மிருகங்கள் சிலவற்றைப் போல் நடிப்பதற்குப் பிள்ளைகளை ஈடுபடுத்துதல்.
- ஒரு குழுவுக்குத் தயார் செய்த முகமூடிகளை அணிவதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.
- சுதந்திர அசைவுச் செயற்பாடுகளுக்காகப் பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுங்கள்.
- பாடலைப் பாடி நடிப்பதில் பிள்ளையை ஈடுபடுத்துங்கள்.

உதாரணம் :-

| | |
|---|---|
| 1 ஆம் குழு - குரங்கு | மரத்துக்கு மரம் தாவிடுமே<br>நீண்ட வாலை அசைத்திடுமே<br>நிதமும் தலையைச் சொறிந்திடுமே<br>அக்கம் பக்கம் பார்த்திடுமே |
| 2 ஆம் குழு - யானை | பெரிய காதை அசைத்திடுமே<br>தும்பிக்கையை உயர்த்திடுமே<br>மெல்ல மெல்ல நடை நடந்து<br>யானைகளும் வந்திடுமே |
| 3 ஆம் குழு - வண்ணாத்திப்பூச்சி | வண்ண வண்ண வடிவினிலே<br>இறகு இரண்டை அசைத்திடுமே<br>பூவை நோக்கிப் பறந்திடுமே<br>தேனை உண்டு மகிழ்ந்திடுமே |

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக :**

- நன்றாக நடிப்பை முன்வைக்கும் மாணவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்தல்.
- நன்றாகப் பாடும் மாணவர்களுக்கு நன்றி தெரிவித்தல்.
- முன்வந்த மாணவர்களை உற்சாகப்படுத்தல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள் :**
- மிருகங்கள், குரங்கு, யானை, மந்தி, வண்ணாத்திப்பூச்சி, முயல், வால்
- தும்பிக்கை, காதுகள் இரண்டு, இறகுகள்
- தும்பிக்கை, முணுமுணுத்தல்

**10. வேறு விடயங்கள் :**
- மேலே காட்டியுள்ளவை உதாரணம் மட்டுமே. ஆசிரியரின் விருப்பப்படி இந்த பாத்திரங்களை, பாடல்களை, நடிப்புக்களை, ஆக்கங்களை செய்து கொள்ள முடியும்.
- நடிப்புக்குப் பொருத்தமான சித்திரங்களை வரைவதில் பிள்ளைகளை ஈடுபடுத்துவது மிகச் சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.13

## கோழிக் குஞ்சுகள் ஒன்று சேர்ந்துள்ளன





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்தி

02. தலைப்பு : கோழிக் குஞ்சுகள் ஒன்று சேர்ந்துள்ளன.

03. பிரதான இலக்கு : கோழிக் குஞ்சுகள் போல் நடிப்பதற்குப் பழக்குதல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :

ஆற்றல்கள் :
- ஒன்றிலிருந்து ஐந்து வரை எண்ணுவதற்குக் கற்றுக் கொள்வர்.

திறன்கள் :
- குற்றுதல், புடைத்தல், அரித்தல் போன்ற செயல்களைப் போலச் செய்யும் திறனைப் பெறுவர்.
- கடதாசி வெட்டுதல், ஒட்டுதல், கிழித்தல் போன்ற திறன்களைப் பெறுவர்.

பண்புகள் :
- மிருகங்களைப் போல் நடிப்பதன் மூலம் இன்புறுவர்

05. செயற்பாட்டின் தன்மை: இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- செயற்பாட்டுக்குத் தேவையான விதத்தில் தடித்த கடதாசிகளால் வெட்டிக் கொள்ளப்பட்ட கோழிகளின் முகங்கள் கடதாசிச் சுளகு, கடதாசி அரிதட்டு, உரல், உலக்கை போன்றவற்றைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1
- மாணவர் ஒருவர் கோழி போல் நடித்து கொக் கொக் என சத்தமிட்டுக் கொண்டு முன்னே வருதல்.
- கோழியாரே எங்கே இது.?....... அழகான கோழி ஒன்று. இன்று நாங்கள் கோழிக் குடும்பம் ஒன்றின் கதை ஒன்றைக் கேட்போம். செயற்பாடு ஒன்றில் ஈடுபடுவோம்
- கோழியைப் போல செல்ல விருப்பமா? பயணஞ் செய்தல். சத்தம் இட முடியுமா? பயணம் செய்யும் போதே சத்தமிடுதல்

படி 2
- மாதிரிக் கதையை ஆரம்பித்தல். கோழிக் குடும்பத்திலே அம்மாவும், அப்பாவும் சிறிய குஞ்சுகள் சிலவும் மட்டுமே இருந்தார்கள். யார் அம்மா ஆவது? யார் தந்தையாவது? ஆ நல்லது இவை தான் கோழிக் குஞ்சுகள்.
- கோழிக் குடும்பம். சிவப்புச் சேவல், சிவப்புக் கோழி மிகவும் அழகானது. அதனைச் சுற்றிப் பயணம் செய்யும் குஞ்சுகள் அழகானவை.
- இக் குஞ்சுகள் மிக சந்தோசமாக வாழ்ந்தன. அம்மாவோடும் அப்பாவோடும் மிக இரக்கமிக்கவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உணவு தேடிக் கொண்டு சென்ற இக் கோழிக் குடும்பம் நெல் சிறிது நிலத்தில் இருப்பதைக் கண்டது. இவை எல்லாம் சேர்ந்து நெல் பொறுக்குவதற்கு ஆரம்பித்தன. சேவல் சத்தம் இட்டுக் கொண்டு சொண்டால் நெல் பொறுக்குகிறது. நாம் ஒவ்வொரு நெல் மணியாகப் பொறுக்குவோம் என்றது.

கொக் கொக் கொக் - ஒன்று
கொக் கொக் கொக் - இரண்டு
கொக் கொக் கொக் - மூன்று
கொக் கொக் கொக் - நான்கு
கொக் கொக் கொக் - ஐந்து

இதனைச் சொல்வதுடன் திரிதலும் ஓடுதலும்

- இப்போது நெல் மணி எத்தனை பொறுக்கினீர்கள்? ஐந்து .

படி 3
- இப்போது கோழிக் குஞ்சுகள் உரலுக்குள் நெல்லை இட்டுக் குற்றுவதற்கு ஆரம்பித்தன. (சுளகை எடுத்தன)

நெல் குற்றுது நெல் குற்றுது சிவப்பு சேவல் நெல் குற்றுது
நெல் குற்றுது நெல் குற்றுது சிவப்பு கோழி நெல் குற்றுது
நெல் குற்றுது நெல் குற்றுது கோழிக் குஞ்சுகள் நெல் குற்றுது

- அடுத்ததாகக் கோழிக் குடும்பம் ஒன்று சேர்ந்து நெல்லைப் புடைக்க ஆரம்பித்தது.

நெல் புடைக்குது நெல் புடைக்குது சிவப்புச் சேவல் நெல் புடைக்குது
நெல் புடைக்குது நெல் புடைக்குது சிவப்புக் கோழி நெல் புடைக்குது
நெல் புடைக்குது நெல் புடைக்குது கோழிக் குஞ்சுகள் நெல் புடைக்குது

படி 4
- இப்போது மா இடிக்க ஆரம்பிப்போம்.

மா இடிக்குது மா இடிக்குது சிவப்புச் சேவல் மா இடிக்குது.
மா இடிக்குது மா இடிக்குது சிவப்புக் கோழி மா இடிக்குது.
மா இடிக்குது மா இடிக்குது கோழிக் குஞ்சுகள் மா இடிக்குது.

படி 5
- மா அரிக்குது மா அரிக்குது சிவப்பு சேவல் மா அரிக்குது.
  மா அரிக்குது மா அரிக்குது சிவப்பு கோழி மா அரிக்குது.
  மா அரிக்குது மா அரிக்குது கோழிக் குஞ்சுகள் மா அரிக்குது.

படி 6
- இப்போது மாவைப் பிசைந்து உருண்டை செய்து ரொட்டி சுடப் போகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாவை உருண்டை செய்து ரொட்டி செய்தல். மா கையில் ஒட்டும் போது எண்ணெய் சிறிது தடவுவோம். இப்போது ரொட்டி செய்வோம்.

- ரொட்டி செய்வதற்கிடையில் கோழிக் குஞ்சுகள் சண்டையிட்டுக் கொண்டு ரொட்டி சாப்பிடுவதில் ஈடுபட்டன. இது எனக்கு இது எனக்கு ........ என சண்டையிடும் போது ரொட்டிகள் கீழே விழுந்தன. ரொட்டிப் பீங்கான் கீழே விழுந்தபோது கோழிக் குஞ்சுகள் அழத் தொடங்கிவிட்டன. நாமும் அதேபோல் அழுவோமா?.........

படி 7

- இவற்றைப் பார்த்துக் கொண்டிருந்த கோழிப்பாட்டிக்கு நன்றாகக் கோபம் வந்தது. (குரலை வித்தியாசப் படுத்தி ஆசிரியர்) ஆ ஆ யார் அது சண்டை செய்கிறது? சாப்பிடும் போது நாம் சண்டையிடக் கூடாது. இருப்பதைப் பங்கிட்டு சத்தம் இடாது உணவு உண்ணவேண்டும். விளங்குதா? இப்போது பாருங்கோ சண்டையிட்டதால் தான் நிலத்தில் சிந்தியுள்ளதல்லவா? இந்த ரொட்டியைச் செய்ய எவ்வளவு முயற்சி செய்தோமல்லவா? இப்போது நிலத்தில் விழுந்தவற்றை சாப்பிடக் கூடாது. மிகுதியாயுள்ளவற்றைப் பங்கிட்டுக் கொண்டு சாப்பிடுவோம். கோழிப்பாட்டி மீதியாய் இருக்கும் ரொட்டிகளை எல்லோருக்கும் பகிர்ந்தளித்தது. பெற்றார் பெருமுயற்சியோடு செய்யும் உணவுகளை நாமும் வீசாது சாப்பிடுவோமா? சாப்பிடும்போது சண்டையிடாது இருப்போம். நாம் நல்ல பிள்ளைகளாவோம்.

### 08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- செய்யப்பட்ட ஆக்கங்களை மதிப்பீட்டுக்குள்ளாக்குதல்.

### 09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- அம்மா, அப்பா, சேவல், பெட்டைக் கோழி, ரொட்டி
- ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து
- இடிக்கிறது, புடைக்கிறது, அரிக்கிறது

### 10. வேறு விடயங்கள்:

- வகுப்பறைக்குச் சென்று ஆசிரியரால் வரையப்பட்ட கோழி அம்மா, அப்பா, குஞ்சுகள் போன்றவற்றின் உருவங்களைக் கடதாசியின் மேல் கொலாஜ் முறையில் ஒட்டுவதில் ஈடுபடுத்துதல் (கத்தரியால் வெட்டி அல்லது கையால் கிழித்து)

- கொலாஜ் சித்திரத்தை வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.14

# நாம் கிளிக் குஞ்சுகள் ஆவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்தி

02. **தலைப்பு** : நாம் கிளிக்குஞ்சுகளாவோம்.

03. **பிரதான இலக்கு** : ஒரு கிளிக் குடும்பமாக நடிப்பதற்கு வழிப்படுத்துதல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :**

**ஆற்றல்கள்** :
- கிளி பற்றி பல்வேறு விடயங்களை அறிந்து கொள்வர்.

**திறன்கள்** :
- சிங்கள, ஆங்கிலச் சொற்களைச் சரியாக உச்சரிப்பர்.

**பண்புகள்** :
- தலைமைத்துவத்திற்கு மதிப்பளிப்பர்.
  மற்றவர்களுக்கு உபசாரம் செய்வர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- கிளியின் சொண்டோடு தலை.
- பாய்கள்.
- கிளியின் படம் ஒன்று.
- பல்வேறு தரத்திலான கிளியின் மாதிரி சட்டகங்கள்

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி 1**
- ஆசிரியர் கிளியைப் போன்று ஆயத்தமாகி

  பச்சை நிற மேனி - சிவப்பு நிறச் சொண்டு
  நான் யார்? //

- மாணவர்கள் பாவனை செய்து காட்டுவார்கள். கிளியினுடைய அங்க இலட்சணங்கள், உணவு வகை, தங்குமிடங்கள், வீடுகளில் வளர்த்தல், பறக்கும் முறைகள், பல்வேறு கிளி வகைகள் போன்றவற்றைப் பற்றிக் கலந்துரையாடுதல்.

**படி 2**
- மாணவர்களுக்கும் கிளியைப் போன்று ஆயத்தமாவதற்குச் சந்தர்ப்பம் அளித்தல்.

- கிளிக் குஞ்சுகள் போன்று ஆசிரியையோடு இறகுகளை அடித்துப் பறந்து செல்லுதல்.

- கிளிக்குஞ்சுகளை அழைத்துப் பாடல் ஒன்றைப் பல முறை பாடவைத்தல்.

  எங்களின் இறகுகள் பச்சை நிறம்
  வளைந்த சொண்டுகள் சிவப்பு நிறம்
  சுவையான பழங்கள் எல்லாம் உண்ணும்
  கூட்டம் கூட்டமாய்ப் பறந்து செல்லும் //



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- We are parrots //
  Our feathers are green
  Beak are red
  We are parrots //
  We eat fruits
  We fly together
  We are parrots //

- கிளிக் குஞ்சுகள் போல் பாடலைப் பாடி நடிப்பில் ஈடுபடச் சந்தர்ப்பம் அளித்தல்.

படி 3

- குழுக்களாகப் பிரித்து செல்லக்கிளி, மாலைக் கிளி, அன்னக்கிளி எனப் பெயர்கள் வைத்தல்.

- மாணவர்கள் விருப்பப்படி அப்பா, அம்மா, அண்ணா, அக்கா என கிளிக்குடும்ப அங்கத்தவர்களை அறிமுகம் செய்து வைத்தல். பறந்து கொண்டு முன்னே வந்து
  கிளியின் தந்தை நான் //

- இவ்வாறு குடும்பத்திலுள்ள சகலரும் முன்னே வந்து அறிமுகம் செய்தல்.

- ஒவ்வொரு கிளிக் கூட்டங்களிலும் இருக்கும் கிளிகளை எண்ணுவதில் ஈடுபடுத்தல். தான் ஒன்றாக இறகு அடித்து குடும்பத்தினரை எண்ண வைத்தல். இவ்வாறு எல்லோரும் எண்ணி முடிந்தபின் கை தட்டி ஆரவாரம் செய்தல்.

- கிளியின் தலைவன் (ஆசிரியர்) தமது கூடுகளுக்கு வரும்போது கவனிக்க வேண்டிய முறைகள், விருந்தளிக்கும் முறைகள்,

- வரவேற்றல், உபசரித்தல், வாழ்த்துதல்.
  வீட்டுக்கு வந்தபோது வணக்கம் கூறி வரவேற்றல். அமர்ந்து கொள்ளச் செய்தல். விருந்தளித்தல், மீண்டும் வாருங்கள் என்று கூறுதல்
  (வீட்டில் வளர்க்கும் கிளிகளைப் போல் பேசச் செய்தல்)

- கிளிக் குடும்பம் ஒன்றை வரைவதில் ஈடுபடுத்துதல். தயாரித்த பல்வேறு அளவுகளிலான சட்டகங்களைப் பெற்றுக் கொடுத்தல். அதனைச் சுற்றி வரையவும் நிறம் தீட்டவும் ஈடுபடச் செய்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- பங்குபற்றிய மாணவரைப் பாராட்டுதல். நன்றி தெரிவித்தல்.
- சரியான ஆங்கிலச் சொற்களை உச்சரிப்பதற்கு உதவி செய்தல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- கிளி பச்சை,சிவப்பு, பழங்கள், வணக்கம், நன்றி,
- ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, Beaks, parrots, Green
- பறவைக் கூட்டம்.

**10. வேறு விடயங்கள்:**

- ஆசிரியரின் விருப்பப்படி இச்செயற்பாட்டை வடிவமைத்துப் படிமுறையாக விருத்தி செய்தல் மிகவும் பொருத்தமாகும்.
- பாடல், அங்க அசைவுகள், சித்திரம் வரைதல், நிறம் தீட்டுதல் போன்றவற்றுக்கு விசேட அவதானம் செலுத்துவது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.15

# நாம் மாலை ஒன்றைச் செய்வோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்தி

02. **தலைப்பு** : நாம் மாலை ஒன்றைச் செய்வோம்.

03. **பிரதான இலக்கு** : விளையாட்டு மாலை ஒன்றைச் செய்வதற்குப் பயிற்சி அளித்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- கழிவுப் பொருட்களைக் கொண்டு பல்வேறு ஆக்கங்களைச் செய்ய முடியும் என இனங்காண்பர்.

**திறன்கள்** :
- இலைகளை வெட்டுதல், ஒட்டுதல் போன்ற திறன்களை விருத்தி செய்து கொள்வர்.

**பண்புகள்** :
- பல்வேறு ஆக்கங்களைச் செய்து மகிழ்ச்சியுறுவர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- ஈர்க்குத் துண்டுகள்
- வட்டம் ஒன்று வரைந்த தாள்.
- நீலம், மஞ்சள் நிறக் கடதாசி. (பல்வேறு நிறங்களைப் பாவிக்க முடியும்.)
- வட்டம் வரைவதற்காகச் சட்டகங்கள்.
- கத்தரிக் கோல்
- பசை போன்ற பொருட்களைச் சேகரித்துக் கொள்ளுதல்.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்** :

படி 1
- பாடசாலைத் தோட்டத்திலுள்ள கொடிகள், மரங்கள் ஆகியவற்றைப் பார்வையிட வைத்தல்.
- பெரிய மரங்கள், இலைகள், தடிப்பற்ற மரங்கள் ,இலைகள் போன்றவற்றைப் பார்வையிட வைத்தல்.
- தான் கண்ட இலைவகை ஒன்றின் மூலம் மாலை ஒன்றைச் செய்வதற்குக் கலந்துரையாடுதல்.
- பலாயிலைகள், மா இலைகள் போன்ற இலைகள் மூலம் ஈர்க்குத் துண்டுகளை உபயோகித்து மாலை ஒன்றைச் செய்வித்தல்.
- செய்யப்பட்ட மாலைகளைக் கழுத்தில் போட்டுக் கொண்டு பாடலொன்றைப் பாடி நடிப்பதில் ஈடுபடுத்துதல்.

இலையை இலையைச் சேர்த்துக் கொண்டு
பலா இலை மாலை செய்தோம் //
கழுத்தில் போட்டு அழகு பார்த்து
சின்னப்பாதம் வைத்து நடந்தோம். //



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 2
- சுற்றாடலைக் கண்டறிந்ததன் பின்னர் இலைகளைச் சேர்த்து மாலை செய்தது போல வகுப்புக்குச் சென்று அழகான நிறம் சேகரித்து மாலை ஒன்றைச் செய்வதில் பிள்ளைகளை ஈடுபடுத்துதல்.
- நீலம், மஞ்சள் இரு நிறங்களில் நிறக் கடதாசித் துண்டுகள் வீதம் மாணவர்களுக்குக் கொடுத்தல்.
- ஆசிரியர் சொல்லிய நிறங்களைக் கொண்டு அதன்மேல் தந்த வட்ட சட்டகத்தை வைத்து வரைவதற்கு வழிப்படுத்துதல்.
- வரைந்த வட்டத்தைச் சுற்றி வெட்டுவதில் ஈடுபடுத்துதல்.
- இரு நிறங்களில் வட்டங்களை வெட்டுவதில் ஈடுபடுத்துதல்.
- வேறு கடதாசி ஒன்றில் வேறு வட்டம் வரைந்து மாணவர்களுக்குக் கொடுத்தல்.
- நீல நிற வட்டத்தின் பின் பக்கத்தில் பசையைப் பூசி ஒட்டுதல்.
- நீல நிற வட்டத்தின் அண்மையில் மஞ்சள் நிற வட்டத்தை ஒட்டுதல்.
- இவ்வாறு மாற்றி மாற்றி இரண்டு மூன்று தடவைகள் வைத்து ஒட்டிய பின்பு அந்த அலங்காரம் பற்றி மாணவர்களோடு கலந்துரையாடுதல். நீலம், மஞ்சள், நீலம், மஞ்சள்
- முன்னுக்குப் பெரிய வட்டத்தையும் முடிவடையும் வரை இரு நிறத்தையும் மாறி மாறி ஒட்டி முடிக்க வைத்தல்.
- ஒட்டியுள்ள மாலை அலங்காரம் பற்றிக் கருத்துக்களை விசாரித்துப் பாடலொன்றைப் பாடவைத்துச் சுவைத்தல்.

வட்டம் ஒன்றை வரைந்து நாங்கள் - கத்தரியால் வெட்டியே
நீலம் மஞ்சள் நீலம் மஞ்சள் - வட்டங்களை ஒட்டியே
அழகான விளையாட்டு - மாலை ஒன்றைச் செய்தோமே

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**
- கேட்டுச் செய்து காட்டிய பிள்ளையைப் பாராட்டுதல்.
- மெதுவாகச் செய்யும் மாணவர்களை உற்சாகப்படுத்துதல்.
- கை தட்டி ஆரவாரம் செய்தல். பாராட்டுதல்

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**
- வட்டம், இலை, மாலை
- வடிவம்

**10. வேறு விடயங்கள்:**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.16

# ஒரு பிள்ளை விளையாட்டு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை :** ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்தி

02. **தலைப்பு :** ஒரு பிள்ளை விளையாட்டு

03. **பிரதான இலக்கு :** பிள்ளை விளையாட்டு ஒன்றில் ஈடுபடவைத்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :**

**ஆற்றல்கள் :**
- சிறுவர் பாடலொன்றைக் கற்றுக் கொள்வர்.

**திறன்கள் :**
- பாடல் பாடுவதற்குப் பயிற்சியைப் பெறுவர்.

**பண்புகள் :**
- ஒரு பிள்ளை விளையாட்டில் ஈடுபடுவதில் ஆர்வம் காட்டுவர்.

05. **செயற்பாட்டின் தன்மை :** இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம் :**
- சிறுவர் பாடலொன்றைக் கற்றுக் கொடுத்தல்.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள் :**

படி 1
- பிரதேசத்துக்குப் பொருத்தமான சிறுவர் விளையாட்டுப் பாடலொன்றைப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்தல்.
- ஐந்து குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவையும் வேறு வேறாக இருக்க வைத்தல்

படி 2
- எல்லாப் பிள்ளைகளும் இரு கைகளையும் கீழே வைத்தவண்ணம் இருக்க ஒருவர் மாத்திரம் ஒரு கையை நிலத்தில் வைப்பதற்கு ஆலோசனை கூறல்.
- பாடலைப் பிள்ளைகள் பாடி விளையாட்டை ஆரம்பித்தல்.
- ஒரு கையை மாத்திரம் நிலத்தில் வைத்துக் கொண்டிருக்கும் பிள்ளை, மற்றையவர்களின் கை விரல்களில் படும்படி தனது விரலை வைத்துப் பாடலைப் பாடுவற்கு வழிப்படுத்தல்.
- பாடலில் ஒரு சொல்லைச் சொல்லும் போது நண்பர்களுடைய ஒரு கையில் விரலை வைக்கும் படி பிள்ளைகள் ஐவருக்கும் கூறுதல்.
- இவ்வாறு ஒரு குழுவில் ஒரு கையை மாத்திரம் நிலத்தில் வைத்துக் கொண்டிருக்கும் பிள்ளையின் மற்றைய கையின் பெருவிரல்களினால் நண்பர்களினுடைய கையின் மேல் விரலை வைத்துச் சென்று பாடலைச் பாடி முடிவடையும் போது தனது விரலை வைத்துக் கொண்டிருந்த பிள்ளையுடன் பேசுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாடலைச் பாடி முடிவடையும் போது விரலை வைத்திருந்த கையை நெற்றியிலும் வைக்குமாறு கூறுதல்.
- அவ்வாறு குழுவில் எல்லோருடைய கைகளையும் அகற்றும் வரை பாடலைப் பாடி முடிந்தபின் ''நெற்றியில் என்ன'' எனக் கேட்கும் போது ''அண்ணா அடித்தது'' எனவும் ''வயிற்றில் என்ன'' எனக் கேட்டும் போது ''வயிற்றில் பாற்சோறு'' எனவும் சொல்வார். அப்போது ''எங்களுக்கும் பாற்சோறு. எங்களுக்கும் பாற்சோறு'' என மற்றைய பிள்ளைகளின் பின்னால் முன்னர் சொன்ன ஐவரும் ஓடுவதற்கு ஆரம்பிப்பர்.(குழுக்கள் வேறு வேறாக)
- அவ்வாறு ஓடும் போது முதலில் சந்திக்கும் பிள்ளை குழுவில் மற்றவர்களுடைய கையின்மேல் விரலை வைத்துப் பாடலைப் பாடுவதற்கு வழிப்படுத்துதல்.
- அவ்வாறு பிள்ளைகளுக்கு சுயாதீனமாக விளையாடுவதற்கு இடமளித்து, அவதானித்த பின், பிள்ளைகள் போதுமான அளவு பொழுது போக்கிய பின் விளையாட்டை முடித்தல்.

## 08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- பிள்ளைகளுடைய அவ்விளையாட்டு மிக அழகானது. நீங்கள் எல்லோரும் அதனை அழகாகச் செய்தீர்கள் என்று கை தட்டிச் சந்தோசத்தைத் தெரிவித்தல், கை தட்டி மதிப்பை வெளிப்படுத்தல், அறிவுறுத்துதல்.

## 09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள் :

- பெருவிரல்
- வெற்றிலைத்தட்டு
- பாற்சோறு
- 1 முதல் 5 வரை
- வயிறு
- கறுப்புக் கோழிகள்
- வெள்ளைக் கோழிகள்
- மணமகள்
- நெற்றி

## 10. வேறு விடயங்கள் :

- விளையாட்டு முடிந்தவுடன் அதனைச் சித்திரமாக வரைய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.17

## அகப்பைக் குழந்தை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்தி

02. **தலைப்பு** : அகப்பைக் குழந்தை.

03. **பிரதான இலக்கு** : அகப்பையைப் பயன்படுத்தி விளையாட்டுக் குழந்தை ஒன்றை ஆக்கம் செய்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்** :

**ஆற்றல்கள்** :
- இலகுவான பொருட்களைப் பயன்படுத்தி பல்வேறு ஆக்கங்களைச் செய்ய முடியும் என்பதை அறிந்து கொளவர்.

**திறன்கள்** :
- ஏதாவது ஒரு செயலின் போது இரு கைகளின் விரல்களைப் பயன்படுத்துவதற்குப் பயிற்சி பெறுவர்.

**பண்புகள்** :
- சுய ஆக்கங்கள் செய்வதில் ஆர்வம் காட்டுவர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- தேவையான பொருட்களைப் பெற்றுக் கொள்ளல்.
- பெரிய சிரட்டை அகப்பை ஒன்று.
- ஒரு அடி நீளமான தடியொன்று.
- மஞ்சள் நிற வார்ணிசுக் கடதாசியொன்று.
- புடைவைத்துண்டு ஒன்று.
- டுவைன் நூல்.
- பசை சிறிதளவு.
- கறுப்புக் கடதாசித் துண்டொன்று.
- கண்களிரண்டு, மூக்கு, வாய் போன்றவற்றை வெட்டுவதற்குத் தேவையான கடதாசித்துண்டுகள் (ஆசிரியை கடதாசியை வெட்டி மாணவர்களை ஒட்டுவதில் ஈடுபடுத்த முடியும்.)

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**



படி 1

- சிரட்டையிலான அகப்பை ஒன்றை எடுத்து, இங்கே காட்டப்பட்டுள்ளவாறு கறுப்புக் கடதாசியை ஊசி முனையாகும் படி வெட்டி அல்லது கிழித்துக் கொள்க. அதனை அகப்பையின் முகத்துக்குக் கொண்டையாக ஒட்டுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படி 2

- அதன் பின்னர் கண்ணிரண்டு, வாய், மூக்கு போன்றவைகளை ஒட்டுங்கள்.



படி 3

- மஞ்சள் வார்ணிசுக் கடதாசியை எடுத்து 16 அங்குல அளவு நீளமும் 3அங்கு அகலமும் கொண்ட நாடா ஒன்றை வெட்டிக் கொள்ளுங்கள். அதன் இரு அந்தங்களையும் இங்கு தென்படும் விதத்தில் வெட்டிக் கொள்ளுங்கள். தடித்துண்டை எடுத்து மஞ்சள் நிறத்தாளில் சுற்றிக் கொள்ளச் சொல்லுங்கள்.



படி 4

- அகப்பைப் பிடியில் தாளைச் சுற்றிய தடித்துண்டை வைத்து டுவைன் நூலால் கட்டுங்கள். அதனை இரு கைகளாக எடுத்துக் கொள்ளுங்கள்.



படி 5

- புடைவைத் துண்டொன்றை எடுத்து நாடா இரண்டு இருக்கும் வகையில் உருவத்தில் காட்டப்பட்டுள்ளவாறு சட்டையை வெட்டிக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படி 6

- சட்டையை எடுத்து அகப்பைக் குழந்தையினுடைய கழுத்துக்கு வைத்து பின்னுக்கு முடிச்சு ஒன்று இடுங்கள். நிறத் தாளொன்றினால் முக்கோண வடிவில் சட்டைஒன்றை வெட்டி ஒட்டிக் கொள்ள முடியும்.

படி 7 • மாணவர்களை திறந்த வெளியொன்றுக்கு அழைத்துச் செல்லுங்கள். தனது கையிலுள்ள அகப்பைக் குழந்தையை ஆட்டுவித்தல், உரையாடல் போன்ற செயற்பாடு ஒன்றை இக்கவிதையைப் பயன்படுத்திச் செய்யுங்கள்.

சிரட்டை அகப்பையினால்
செய்த குழந்தையே
அம்மாவைக் கேட்டு அழக்கூடாது
உன்னைச் செய்தது சின்ன நான் தான்
ஆடுவோம் ஆடுவோம் இப்போது நீயும் நானும்.

### 08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- எல்லோருடைய ஆக்கங்களுக்கும் மதிப்பளித்தல்.
- நன்றாகச் செய்த மாணவர்களைப் பாராட்டுதல்.
- செய்யாத மாணவர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தி உதவி செய்தல்.

### 09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- சிரட்டை அகப்பை, தடி, குழந்தை, முகம், கைகள், கழுத்து, சட்டை, ஒட்டுதல், கொண்டை
- ஒன்று, இரண்டு
- உயரம், கட்டை, பெரிய, சிறிய

### 10. வேறு விடயங்கள்:

- ஆசிரியரின் விருப்பப்படி உரையாடல், பாடல், ஆடல் போன்றவற்றைத் திட்டமிட்டுச் செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.18

# சித்திரம் ஒன்றை வரைவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்தி

02. செயற்பாடு : சித்திரம் ஒன்றை வரைவோம்.

03. பிரதான இலக்கு : இலகுவான சித்திரம் ஒன்றை வரைவதற்குப் பயிற்சி அளித்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :

ஆற்றல்கள் :
- சுற்றாடலில் உள்ள பொருட்களைப் பயன்படுத்தி பல்வேறு ஆக்கங்களைச் செய்ய முடியும். என்பதை அறிந்து கொள்வர்.

திறன்கள் :
- ஆக்கங்கள் செய்வதில் இரு கைகளின் விரல்களையும் இயக்குவதற்குப் பயில்வர்.

பண்புகள் :
- சித்திரம் வரைவதில் ஆர்வம் காட்டுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- நாளைக்குச் செய்வதற்கு ஆலோசித்திருக்கும் செயற்பாட்டுக்குத் தேவையான பொருட்களைக் கொண்டுவரும்படி பிள்ளைகளுக்கு அறிவுறுத்தல். இதற்காகப் பெற்றோர்களின் உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும்.
- சப்பாத்துப் பூக்கள் (10 பூக்கள்.)
- எழுமிச்சை ஒன்று
- ஈர்க்குத் துண்டு ஒன்று.
- கிழங்குவெட்டுத் துண்டுகள், வாழை மட்டை, வெண்டிக்காய், பல்வேறு வடிவங்களில் வெட்டப்பட்ட கரட் போன்றவை.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- சூழலில் உள்ள மரங்கள், இலைகளின் சாறு, பூக்கள் ஆகியவற்றால் சித்திரங்கள் வரைந்து நிறம் தீட்டிப் பாராட்டுப் பெற்ற பிள்ளை ஒன்றைப் பற்றிய கதை ஒன்றைக் கட்டி எழுப்புதல். (கதை சொல்வதில் அவர்களின் தரத்திற்கு ஏற்ற கதைகளைத் தெரிவு செய்வதற்கு ஆசிரியரால் முடியும்.)
- முதலில் பிள்ளைகளுக்கிடையில் சித்திர வரைதாள்களைப் பகிர்ந்தளித்து சப்பாத்துப் பூவைப் பிடித்து இலை முழுவதையும் பூசுவதற்குக் கூறுதல்.

படி 2
- எலுமிச்சைச் சாற்றைக் கையில் எடுத்து சப்பாத்துப் பூவைப் (பூசிய இலையை) கையால் பிடித்துக் கொண்டு அச்சுப் பதித்தல். எழுமிச்சைச் சாற்றைக் கைவிரலில் பூசிக் கொண்டு அதனால் விருப்பமான ஒன்றை வரைவதற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமளியுங்கள். இங்கு கிழங்குவெட்டுத் துண்டுகள், வாழை மட்டை வெண்டிக்காய் (வட்டமாக வெட்டப்பட்ட வெண்டி) பல்வேறு வடிவங்களில் வெட்டப்பட்ட கரட் கிழங்கு போன்றவைகளையும், எலுமிச்சைச் சாற்றைப் பூசி அச்சுப்பதித்தல் செய்வதற்குப் பயன்படுத்துங்கள்.

படி 3 • பின்பு ஆசிரியர் மூலம் வரைந்து கொள்ளப்பட்ட சித்திரங்களைக் (ஆசிரியர் முன்மாதிரி) காட்டி, அவர்களையும், ஈர்க்கு, வர்ணத்தூரிகை போன்றவைகளைப் பாவித்து சப்பாத்துப் பூக்களை சாற்றில் பதித்துக் கடதாசியில் சித்திரம் ஒன்றை ஆக்கச் செய்தல்.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- சகல ஆக்கங்களையும் மதித்தல்.
- திறமை குறைந்தவர்களுக்கு ஊக்கமளித்தல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- எலுமிச்சை, சப்பாத்துப் பூ (செவ்வரத்தம் பூ), ஈர்க்கு, வெண்டிக் காய், கரட்

**10. வேறு விடயங்கள்:**

- தயார் செய்து கொண்ட திரவ வகைகளை குடித்தல், விரல்களை வெட்டிக் கொள்ளுதல் போன்ற அபாயங்களில் இருந்து பிள்ளைகளைப் பாதுகாத்தல் மிகவும் முக்கியம்.
- பிள்ளைகளினுடைய ஆக்கங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.19

# சிறிய கோழிக் குஞ்சுக் கூட்டங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்தி

02. செயற்பாடு : சிறிய கோழிக் குஞ்சுக் கூட்டங்கள்.

03. பிரதான இலக்கு : கோழிக்குஞ்சு ஒன்றினது பல்வேறு செயற்பாடுகளைச் செய்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :

ஆற்றல்கள் :
- தனக்குப் பல்வேறு பாத்திரப்படைப்புக்களைச் செய்ய முடியும் என்பதை விளங்கிக் கொள்வர்.

திறன்கள் :
- பல்வேறு கருத்துக்களை வெளிப்படுத்தி பிரதேசத்துக்குப் பொருத்தமான விதத்தில் உடல் அவயவங்களை இயக்குவர்.

பண்புகள் :
- சுயதீனமாகச் செயற்பாட்டில் ஈடுபட்டு இரசிப்பர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- ஆசிரியர் சுவையான கதையொன்றை முன்வைப்பதுடன் மாணவர் குழுக்களைக் கதை கேட்பதிலும் அதே நேரம் சிறு சிறு பகுதிகளாக செயற்பாடுகளிலும் பங்கு பற்ற வைத்தல்.
- வளர்ந்தோரின் உதவியுடன் தேவையான உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளல்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- ஆசிரியர்: பிள்ளைகளே, வீடொன்றில் சிறிய கோழிக் கூடு ஒன்று இருந்தது. அங்கே இருக்கும் கோழி அம்மா அதற்குள் சிறிய சிறிய முட்டைகள் நிறைய வைத்துக் கொண்டு அன்பாய்ப் பாதுகாத்துக் கொண்டிருந்தது.
- இனி நீங்கள் தான் அந்தச் சின்ன முட்டைகள். இப்போது எல்லோரும் சிறிய முட்டைகளாக இருங்கள். முடியுமானவரை சுருண்டு கொண்டு உருண்டையாகி முட்டையொன்று மாதிரியான வடிவில் ஆகுங்கள்.
- மாணவர்: மாணவர்கள் நிலத்தில் முழங்காலில் இருந்து மிகவும் சிறியதாகி தலைகளை மறைத்துக் கொண்டு முட்டையைப் போன்று இருத்தல்.

படி 2
- ஆசிரியர்: இப்போது இந்த முட்டையின் உள்ளே சிறிய குஞ்சு இருப்பது கோழியம்மாவுக்குத் தெரியும். அக் கோழியம்மா ஒரு நாள் சொண்டால் முட்டைகளைக் கொத்திக் கொண்டு சென்றது. என்ன தெரியுமா நடைபெற்றது? முட்டையின் ஓட்டைக் கிழித்துக் கொண்டு சின்னச்சின்னக் கோழிக் குஞ்சுகள் வெளியே வந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாணவர்: கதை கேட்டுக் கொண்டிருந்த பின்ளைகள் கைகளை நீட்டிக் கொண்டு முட்டையிலிருந்து வெளிவந்தன. (மாணவர்களுக்கு கதை கேட்டுக் கொண்டிருக்கும் போது இச்செயற்பாட்டைச் செய்வதற்கு முதலில் வழிகாட்டுங்கள்.)

படி 3

- இச்சிறிய பெண் கோழிக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் போன்று சத்தமில்லாது உருண்டையாக இருக்கவில்லை. அவை உணவு கேட்டு, கீச் கீச் கீச்கீச் என்று அழத் தொடங்கி விட்டன. (எல்லாம் கீச் கீச் எனச் சத்தம் இட்டன.) கோழி அம்மா என்ன செய்தது தெரியுமா? எல்லோருக்குமாக கொக் கொக் கொக் எனப் பேசிக் கூட்டிலிருந்து வெளியே எடுத்துச் சென்றன. பெண் கோழிக் குஞ்சு அம்மாவின் பின்னாலேயே திரிந்தது (ஆசிரியர் கோழி அம்மா ஆவார்.)

படி 4

- இதோ இந்த இடத்தில் உணவு நிறைய உள்ளது. கோழி அம்மா கால்களால் கிளறி சிறிய குஞ்சுகளுக்கு உணவு தேடிக் கொடுக்கின்றது. குஞ்சுகள் அனைத்தும் போட்டியிட்டு உணவை உண்ணும். (இச் சந்தர்ப்பத்திலேயே மிக அமைதியாக உணவு உண்பதற்கும் சண்டையிடாது அம்மா சொல்வதைக் கேட்டு நடப்பதற்குமான மனப்பாங்கை விருத்தி செய்வதற்கும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.)
- இப்போது சிறிய சட்டியில் நிறைத்து இருக்கும் நீரை அருந்துங்கள். குஞ்சுகள் சொண்டினால் தண்ணீரை எடுத்து மேலே பார்த்துக் குடிக்கின்றன. அதோ இப்போது நன்றாக வயிறு நிரம்பியுள்ளது. அதனால் நாம் எல்லோரும் சந்தோசமாக ஆடுவோம்.
- கோழி அம்மா பாடல் ஒன்றைப் பாடுகின்றது. குஞ்சுகள் தாயைச் சுற்றி ஆடுகின்றன. (மாணவர்களுக்கு சுதந்திரமாக அசைவதற்குச் சந்தர்ப்பம் அளியுங்கள். ஆசிரியருடன் கீழேயுள்ளவாறு பாடிக் கொண்டு பின்னால் செல்லுமாறு அறிவுறுத்துங்கள்.)

சின்ன சின்ன கோழிக் குஞ்சுகள்.
பஞ்சு பஞ்சு போலக் குஞ்சுகள்.
வெள்ளை நிறச் சேவல் குஞ்சுகள்.
கறுப்பு நிறக் கோழிக் குஞ்சுகள்.

அம்மாவுடன் சுற்றும் குஞ்சுகள்
பந்து பந்து போலக் குஞ்சுகள்.
அழகு மிக்க பெண் குஞ்சுகள்
வீரம் மிக்க சேவல் குஞ்சுகள்

(தாளம் இசைத்து இப்பாடலை சொற்களை மாற்றித் தேவையான நேரம் வரை பாட முடியும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 5

- இப்போது சிறிய குஞ்சுகளுக்கு சரியான களைப்பு நன்றாக இருளாகிக் கொண்டு வருகின்றது. நாம் எல்லோரும் மீண்டும் கூண்டுக்குள் செல்வோம். தாயோடு வாருங்கள். (குஞ்சுகள் எல்லாம் பின்னால் செல்கின்றன.) இப்போது நன்றாகத் தூக்கம் வந்துவிட்டது. நாம் எல்லோரும் நித்திரை கொள்வோம்.

- செயற்பாடுகள் இறுதியில் மாணவர்களோடு கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபடுங்கள். பிள்ளைகளிடமிருந்து கருத்துக்களை எடுத்துக் கொள்ளுங்கள். உடலை இலகுவாக்கிச் சுதந்திரமாகத் திரிவதற்குச் சந்தர்பபம் பெற்றுக் கொடுங்கள்.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- சுயமாக அசைய, சுயமாகப் பயணம் செய்ய, கருத்துக்களை எடுத்துரைக்க, நண்பர்களோடு கதைத்துக்கொள்ள இடமளியுங்கள்.
- தான் செய்யும் செயற்பாடுகளில் திருப்தி உண்டா? என்பதை விசாரித்து அறிந்து கொள்ளுங்கள்.
- அசைவு செயற்பாடுகளை நன்றாகச் செய்து, பங்கு பற்றிய எல்லோரையும் பாராட்டுங்கள்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- குஞ்சுகள், முட்டைகள், பந்து

10. வேறு விடயங்கள்:

- ஆசிரியரின் விருப்பப்படி செயற்பாடுகளையும், பாடலையும் வேறு உயிரினங்களைப் பயன்படுத்தி, ஒழுங்கமைத்துக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.20

# எங்கள் வியாபாரச் சந்தை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்தி

02. தலைப்பு : எங்கள் வியாபாரச் சந்தை.

03. பிரதான இலக்கு : மாதிரிச் சந்தை ஒன்றை உருவாக்கல்

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- பண்டங்கள் கொள்வனவு விற்பனை சம்பந்தமான விடயங்களை அறிந்து கொள்வர்.

திறன்கள் :
- தாளத்துக்குப் பாடும் திறனை விருத்தி செய்து கொள்வர்.

பண்புகள் :
- வியாபாரி ஒருவராகச் செயற்படுவதில் ஆர்வம் காட்டுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- பாடத்தை முன்வைப்பதற்கு முந்திய நாளில் பின்வரும் பொருட்களை ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும். பெற்றோரின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கும் முடியும். ஆடை அணிகள் கொண்டுவரும்படி மாணவர்களிடம் ஒப்படைக்க முடியும்.
- வட்டில் அல்லது தடித்த கார்ட்போட் பெட்டி
- பெரிய சிறிய அளவுகளில் தயார் செய்த மீன் (கார்ட்போட்டினால் அல்லது பிரிஸ்டல் போர்ட்டினால்)
- தொப்பி, சாரம், பெனியன், சீத்தைப்புடைவை, சட்டை

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- மாணவர்களுக்கு சுயாதீனமாகச் செயற்படுவதற்கு முடியுமான சூழல் உள்ள திறந்த வெளி மிகவும் பொருத்தமாகும். அது போன்ற இடத்துக்கு மாணவர்களை அழைத்துச் செல்லுங்கள்.
- கடற்கரைக்குத் தோணி வரும் ஒரு சந்தர்ப்பம் பற்றி மாணவர்களோடு கலந்துரையாடுங்கள். அச் சூழலுக்கு அண்மையில் இருக்கும் மாணவர்கள் வகுப்பில் இருப்பின் அது சம்பந்தமாகத் தெளிவு பெறுவது இலகுவாகும். மாணவரின் மட்டத்துக்கேற்ப இங்கு கலந்துரையாடுவது முக்கியமானதாகும்.
- மாணவர்களை சிறு குழுக்களாகப் பிரித்து அவர்கள் கொண்டு வந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொப்பி, சாரம், பெனியன், புடைவை, சட்டை ஆகியவற்றை அணிவதற்குச் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுத்தல். (பெற்றோரின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள்.)

படி 2
- தோணி செலுத்துவதைக் குழுக்களாக முன்னெடுப்பதற்குச் சந்தர்ப்பம் அளித்தல்.
  ஓட்டுவோம் ஓட்டுவோம் தோணி ஓட்டுவோம்- ஏல ஏலோ ஏலோ ஏலோ.
- பாடலடிகளின் தாளத்துக்கு ஏற்ப அசைவுகளைக் காட்டுவதற்குச் சந்தர்ப்பம் அளித்தல். ஆசிரியரும் பாடலைப்பாடி மாணவர் குழுக்களுக்குத் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- தோணி கரைக்கு வருவதைப் போலச் செய்து காட்டுதல்.

படி 3
- முன்பு ஆயத்தம் செய்த பல்வேறு அளவுகளிலான மீன் பெட்டிகள் ஒவ்வொன்று வீதம் குழுக்களுக்குப் பெற்றுக் கொடுத்து அங்குள்ள மீன்களை இரண்டு குவியல்களாக வேறு படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குதல்.

  1. பெரியமீன்.
  2. சிறியமீன்.

படி 4
- மீன் வியாபாரம் செய்யும் சந்தர்ப்பம்.
- இங்கு மீன் வியாபாரிகளாகப் பலரையும், வாங்குவதற்காக குழுவில் மீதியான மாணவர்களையும் ஆசிரியர் ஈடுபடுத்த வேண்டும்.

  மீன் மீன் மீன் - மிக மலிவு மிக மலிவு
  வாருங்கள் நண்பர்களே - மிக மலிவு மிக மலிவு

- இந்தப் பாடலடிகள் இரண்டையும் தாளத்துக்குச் சொல்லி சுதந்திரமாக அங்க அசைவுகளை முன்வைப்பதற்கு ஒரு மாணவர் குழுவிற்கு சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுத்தல்.
- மற்றைய குழுவுக்கு தாளத்துக்குப் பாடுவதுடன் கைதட்டுவதற்கு சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுங்கள்.

படி 5
- செயற்பாட்டில் ஈடுபடும் சந்தர்ப்பத்திலேயே ஆசிரியர் அவர்களின் திறமைகளை மெச்சுவதோடு, தேவையான மாணவர்களுக்காக கருணையாக வழிகாட்டவும் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- நன்றாக பாடல் பாடவும் அங்க அசைவுகளைச் செய்யவும் முடியுமான மாணவர்களைப் பாராட்டுதல்.
- அக்குழுவை வகுப்பறையின் முன் அழைத்து அடுத்தவர்கள் காணுமாறு நடிப்பதற்குச் சந்தர்ப்பம் அளித்தல். நன்றி தெரிவித்தல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- கடல், கடற்கரை, தோணி, மீன், தோணி செலுத்துதல், இலாபம்.
- பெரிய, சிறிய

**10. வேறு விடயங்கள்:**

- தேவையான பொருட்களை நேரகாலத்தோடு ஆயத்தம் செய்து கொள்ளுங்கள்.
- படிப்படியாக போதுமான அளவு நேரத்தைப் பெற்றுக் கொடுத்து செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடுத்துதல்.
- பாடல், நடிப்பு ஆகிய சந்தர்ப்பங்களில் ஆசிரியரின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுத்தல்.
- உங்கள் சூழலுக்குப் பொருத்தமான விதத்தில் மரக்கறி அல்லது பழங்கள் கொண்ட ஒரு சந்தையை நடத்துவதற்குத் திட்டமிட முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.21

# பரமார்த்த குரு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்தி

02. தலைப்பு : பரமார்த்த குரு

03. பிரதான இலக்கு : பரமார்த்த குருவுடைய கதைகளை முன்வைத்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :

ஆற்றல்கள் :
- பரமார்த்தகுரு சம்பந்தமான கதை ஒன்றை அறிவர்.

திறன்கள் :
- நடிப்புத் திறனைவிருத்தி செய்து கொள்வர்.

பண்புகள் :
- கதையொன்றை நடித்துக் காட்டுவதில் ஆர்வம் பெறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- பரமார்த்த குருவுக்கும், சீடர்கள் ஐவருக்கும் தேவையான உடைகள்.
- இந்த ஆறு பேருடைய சுபாவத்தைக் காட்டும் பெரிய அளவிலான சித்திரங்கள்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1
- ஆசிரியை ''நான் தான் பரமார்த்த குரு'' எனச் சொல்லி வகுப்பின் முன்னே கம்பீரமாக வருதல். பலமுறை சுற்றிச் சுற்றிச் செல்லுங்கள். வந்து ''இப்போது மகன் மகள் நீங்கள் எல்லோரும் சொல்லுங்கள். இன்றைக்கு வகுப்புக்கு வந்தது யார்?......... மாணவர்கள் விடையளித்ததன் பின் நீங்கள் பரமார்த்த குரு பற்றிக் கேட்பதற்கு ஆசையாக இருக்கிறீர்களா? அவ்வாறெனில் நான் பரமார்த்த குருவும் அவரது சீடர்கள் ஐவர் பற்றியும் கதையொன்றைச் சொல்கிறேன். நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள்.'' எனக் கூறுங்கள்.

படி 2
- மீண்டும் ''நான் தான் பரமார்த்த குரு// நாட்டின் படித்தவனான எனக்கு சீடர்கள் ஐவர்//'' எனச் சொல்லிக் கொண்டு வகுப்பறையைச் சுற்றிச் செல்லுங்கள்.

படி 3
- ''எங்கே எனது மட்டி அண்ணா'' எனச் சொல்லிக் கேளுங்கள். ஆசிரியர் மட்டி அண்ணாவுடைய நடையை நடந்து காட்டுங்கள். (''நான் தான் மட்டி அண்ணா ////'') எனச் சொல்லிச் செல்லுங்கள்.
- மீண்டும் ''எங்கே எனது மடையன்'' எனக் கேளுங்கள். பிறகு ''நான் தான் மடையன்////'' எனச் சொல்லி ஆசிரியர் நடந்து காட்டுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ‘‘எங்கே என்னுடைய மிலேச்சன்’’ எனச் சொல்லிக் கேளுங்கள்.
- நான் தான் ‘‘மிலேச்சன்’’ எனச் சொல்லி தாளத்துக்கு ஏற்ப அடிவைத்துச் செல்லுங்கள்.
- ‘‘எங்கே எனது மூடன் அண்ணா?’’எனக் கேளுங்கள்.
  ‘‘நான் தான் மூடன் அண்ணா’’ எனச் சொல்லி வட்டமாகச் செல்லுங்கள்.
- ‘‘எங்கே எனது பேதை’’ எனக் கேளுங்கள். அதன் போது ஆசிரியர் ‘‘நான் தான் பேதை’’ எனச் சொல்லிக் கொண்டு வகுப்பைச் சுற்றிச் செல்லுங்கள்.

படி 4

- பரமார்த்த குருவின் முன்னே சீடர்கள் ஐவரும் இருப்பதாகவும் ஆசிரியருக்கு மரியாதை செய்ததாகவும் சொல்லி செய்து காட்டுங்கள்.
- சீடர்கள் :- ‘‘வணக்கம். வணக்கம். எங்கள் குருவுக்கு.’’
- குரு:- ‘‘ வணக்கம் வணக்கம் என்னுடைய சீடர்களே’’ எனச் சொல்லி மரியாதை செய்யும் முறையைச் செய்து காட்டுங்கள்.
- நண்பர்கள் :- ‘‘குரு அவர்களே நாம் இன்று என்ன செய்வது?’’ எனக் கேட்கும் முறையைப் பேசிக்காட்டல்.
- குரு :‘‘ பயணம் ஒன்று செல்ல வேண்டும்’’
- பின்பு பயணம் செல்லப் புறப்பட்டதாகவும் சிறிது தூரம் செல்லும் போது ஆறொன்று குறுக்கிட்டதாகவும் சொல்லுங்கள்.
- குரு :- ‘‘ஆறு ஒன்று போல’’ எனக் கூறிப் பயணத்தை நிறுத்துதல்.
- ஆறு நித்திரையாகும் வரை அங்கு நின்றிருத்தல்.
- அடிக்கடி சீடர்களுக்கு ஆற்றுக்கு நித்திரையா எனப் பார்க்கச் சொல்லுதல்.
- உதாரணம் :- மட்டி அண்ணா ஆற்றுக்கு நித்திரையா பார்த்து வரவும். ‘‘இல்லை’’
- மடையன் ஆற்றுக்கு நித்திரையா பார்த்து வரவும். ‘‘இல்லை’’
- மிலேச்சன் ஆற்றுக்கு நித்திரையா பார்த்து வரவும். ‘‘இல்லை’’
- பேதை ஆற்றுக்கு நித்திரையா பார்த்து வரவும். ‘‘இல்லை.’’
- மூடன் அண்ணா ஆற்றுக்கு நித்திரையா பார்த்து வரவும். ‘‘இல்லை.’’
- இவ்விடங்களில் பயணம் செய்யும் முறையைப் போல செய்து காட்டல் வேண்டும்.

படி 5

- மீண்டும் பரமார்த்த குருவும் சீடர்களும் ஆற்றின் மறு கரைக்குச் செல்லும் பயணத்தை ஆரம்பித்தல். அவர்களில் யாரும் குறைந்துள்ளார்களா எனத் தேடிப்பார்த்தல்.
- எல்லோரையும் வரிசையாக நிறுத்தி முதலில் பரமார்த்த குரு பின்வரும் முறையில் எண்ணிப் பார்த்தல். ‘‘நான், ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து ஆ......... எம்மில் ஒருவர் ஆற்றில் போய்விட்டார்’’
- சீடர்கள் :- மட்டி அண்ணா ‘‘எங்கே நான் எண்ணுகிறேன். ‘‘நான், ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து. ஐயோ எங்களில் ஒருவர் ஆற்றிலே போய் விட்டார்.’’



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இம்முறையில் ஐவரும் எண்ணுதல். அதன் பின்பு எல்லோரும் எங்களில் ஒருவர் ஆற்றிலே போய் விட்டார் எனச் சொல்லிக் கேட்டல். இதைக் கேட்டு மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த ஒரு மனிதன் வந்தான்.

- மனிதன்: "ஏன் நீங்கள் அழுகிறீர்கள்?"
- சீடர்கள்: "எங்களில் ஒருவர் ஆற்றில் போய்விட்டார்"
- மனிதன்: "எத்தனை போர் வந்தீர்கள்?"
- சீடர்கள்: "ஆறு பேர்"
- மனிதன்: இரகசியமாக எண்ணிப் பார்க்கிறான். ஆறு பேரையும் காட்டினால் என்ன தருவீர்கள்? பரிசு தருவோம். அவர்களை வரிசையாக நிறகச் செய்தல். ஒவ்வொருவருக்கும் தடியினால் அடிக்கும்போது இலக்கத்தைக் கூறுமாறு கேட்டல். அடிக்கிறான். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு
- சீடர்கள்: "எப்படி எங்கள் ஆறுபேரையும் எடுத்தார்?" "தடிக்கு மந்திர சக்தி இருக்கிறது" கையிலிருந்த பணத்தைப் பரிசாகக் கொடுத்துவிட்டு, பயணத்தை ஆரம்பித்தல்.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- பிள்ளைகளுக்குக் கதையை நடித்துக் காட்ட சந்தர்ப்பம் வழங்குக.
- உரையாடுவதில் ஈடுபடுத்துக.
- அவற்றை மெச்சுக.
- பயண முறைகளைப் பல்வேறு விதங்களில் செய்விக்குக.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- பரமார்த்த குரு, சீடர்கள்,
- ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு
- பரமார்த்த குரு

10. வேறு விடயங்கள்:

- ஆசிரியரின் விருப்பப்படி பரமார்த்த குருவுடன் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு கதையையும் இவ்வாறு நடித்துக் காட்டுதல் பொருத்தமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.22

# பாலர் இசைக் குழுவினர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01 **பிரதான துறை** : ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்தி

02 **தலைப்பு** : பாலர் இசைக் குழுவினர்.

03 **பிரதான இலக்கு** : மாதிரிப் பொருட்களைப் பயன்படுத்தி பாலர் இசைக் குழு ஒன்றை உருவாக்குதல்.

**04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- மாத்திரை இரண்டு (1, 2) தாளக் கோலத்தை இனங் காண்பர். பல்வேறு பிரமாணங்களுக்குரிய பொருட்களை அறிந்து கொள்வர்.

**திறன்கள்** :
- சரியாகத் தாளம் வைப்பர்.
  ஒன்றிணைந்து இசைப்பதற்குப் பயிற்சி பெறுவர்.

**பண்புகள்** :
- இசைப்பதில் ஈடுபட்டு இன்பம் பெறுவர்.

**05. செயற்பாட்டின் தன்மை** : இது ஓர் ஒன்றிணைந்த செயற்பாடாகும்.

**06. முன் ஆயத்தம்** :
- பிள்ளைகளினுடைய பெற்றோர்களை அழைத்து மாதிரிப் பொருட்களைத் தயார் செய்து கொள்வதற்கு, அவர்களுடைய உதவியைப் பெற்றுக் கொள்ளுதல். தயார் செய்யும் முறை பற்றிப் பெற்றார்களுக்கு அறிவுறுத்தல். வீட்டிலே அப்பொருட்களைத் தயார் செய்வதற்கு முன் பாடசாலைக்குக் கொண்டு வருவதற்கு ஆலோசனை வழங்குதலும் வழிகாட்டுதலும். இதற்குப் பின்வரும் பொருட்களைப் பயன்படுத்த முடியும்.
- தகரப் பேணிகள், ஐஸ்கிரீம் பேணிகள் (சிறிய, மத்தியதர, பெரிய)
- வெற்றுப் பவுடர் பேணிகள் (புளியம் விதை, மஞ்சாடி, கற்கள், பெரிய, சிறிய அளவுகளில் மணல்.)
- போத்தல்கள், சிரட்டைகள், தடித் துண்டுகள், டொனிக்மூடிகள், பலூன்கள்.

**07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி** 1
- பிள்ளைகள் தயார் செய்த மாதிரிப் பொருட்கள் பலவற்றை வகுப்பறைக்குக் கொண்டு வந்து ஆசிரியர் இசைத்துக் காட்டுதல்.
- பிள்ளைகள் தயார் செய்து கொண்டு வந்த பொருட்களை முறையாக வைத்து வட்டமாக இருக்க வைத்தல்.
- தட்டுதல், அசைத்தல், அடித்தல் போன்றவை மூலம் செய்ய முடியுமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களை வகைப்படுத்தி அவற்றை இசைக்கும் முறைகளை அறிமுகம் செய்து காட்டுதல்.

படி 2
- அப்பொருட்களில் தடிகள் இரண்டால் அடிக்க, அசைக்க, தட்ட சந்தர்ப்பம் கொடுத்தல். பிள்ளைகளுக்கு விருப்பமான முறைகளில் இசைப்பதற்குச் சந்தர்ப்பம் அளித்தல்.
- ஒன்று, இரண்டு - ஒன்று, இரண்டு என்றவாறு உச்சரிக்கும் போது இசைக் கருவியை இசைப்பதற்கு வழிகாட்டுதல். இம்முறையில் பல முறை செய்வித்தல்.
- அந்த இசைக் கருவிகளில் உருவாகும் சத்தங்களை இனங்கண்டு கொள்ளவும் இலகுவான முறைகளில் இசைப்பதற்கும் வழிகாட்டுதல்.

படி 3
- பாடலைப் பாடுவதற்குப் பயிற்சி பெற்ற பின் பாடலைப் பாடிக் கொண்டு இசைக் கருவியை இசைத்தல். ஆசிரியர் இப்பாடலைப் பாடுதல்.

மஞ்சள் வெள்ளை சிவப்பு மலர்
மரத்தின் கீழே விழுந்து எங்கும்
நான் அவற்றில் மிக ஆசை
பொறுக்கிக் கொண்டு செல்வதற்கே

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- இசைத்த எல்லாப் பிள்ளைகளுடைய பெயரையும் சொல்லி மிகவும் நன்று, Good போன்றவை மூலம் ஊக்கத்தை வழங்குதல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- மஞ்சள், வெள்ளை, சிவப்பு

**10. வேறு விடயங்கள்:**

- உங்களுடைய பகுதிக்குப் பொருத்தமான விதத்தில் மேளங்கள், சிறிய் ரபான், சிறிய மேளம், மூங்கிலிலான ஊது குழல்கள் போன்ற பல்வேறு பொருட்களை இச் செயற்பாட்டுக்குப் பயன்படுத்த முடியும்.

- பாடலுக்குப் பொருத்தமான பல்வேறு பாடல்கள், றபான் இசைகள் போன்றவைகளை ஆசிரியர் தெரிவு செய்ய வேண்டும்.

- இச்செயற்பாட்டை ஆசிரியையின் விருப்பத்துக்கேற்ப மாற்றிக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம்:

படி 1
- பிள்ளைகளிடம் உள்ள உபகரணங்களின்படி அவர்களை குழுக்களாக் குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் உபகரணங்களின் சத்தத்தைக் கேட்குமாறு கூறுதல். உ-ம் : சிரட்டைகள் இரண்டு, கரண்டிகள் இரண்டு, பேசின் ஒன்று
- ஒன்று, இரண்டு, மூன்று எனச் சத்தத்தை வெளிப்படுத்த வைத்தல் (ஒரு முறைக்கு ஓர் உபகரணம் வீதம்)

படி 2
- பலமுறை செய்ததன் பின்பு எல்லோரும் ஒரே முறையில் பாடல் ஒன்றைப் பாடிச் சத்தத்தை ஏற்படுத்துதல். (பாடலைப் பலமுறை படித்ததன் பின்பு)

ரோசா மல்லிகைப் பூக்கள் - மணக்கும் நல்ல பூக்கள்
மரத்தில் பூக்கும் பூக்கள் - எடுத்துச் செல்வோம் நாங்கள் ///
நீலோற்பலப் பூக்கள் - அல்லி தாமரைப் பூக்கள்
நீரில் பூக்கும் பூக்கள் - எடுத்துச் செல்வோம் நாங்கள் ///

- மரங்களில் பூக்கும் மலர்கள் எவை? நீரில் பூக்கும் பூக்கள் எவை? மலர்களின் சுபாவங்கள், எங்கே எடுத்துச் சொல்வது? இம்முறையில் சூழலுக்குப் பொருத்தமான வினாக்களை வெளிப்படுத்துதல்.
- சிரட்டைகள் வரிசைக்கு நான்கு............. இவ்வாறு வரிசைகள் பல செய்து பாண்ட் வாத்தியக் குழு ஒன்றைத் தயார் செய்தல்.

படி 3
- சத்தத்தை ஏற்படுத்திப் பாடசாலைத் தோட்டத்தைச் சுற்றி வருவதில் ஈடுபடுத்துதல்.
- பாண்ட் குழுவை இன்னும் அழகாக்குவதற்கு, தலைக்குத் தொப்பி ஒன்றைச் செய்வதில் ஈடுபடுத்துதல். 2- 3 அங்குல அளவிலான தடித்த கடதாசி ஒன்றில்  வடிவத்தை வரைந்து கொடுத்தல். அதன் மேல் துளை கருவியால் பெற்றுக் கொண்ட நிறங்கள் கொண்ட வட்டங்களை ஒட்டச் செய்தல்.  இக்கீலத்தை வட்டமாக்கி, குண்டூசி போன்றவற்றைப் பயன்படுத்தி இணைத்து தலையில் இடக்கூடியவாறு தயாரித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8.23

## கடதாசி நாய்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்தி

02. தலைப்பு : கடதாசி நாய்.

03. பிரதான இலக்கு : கடதாசியைப் பயன்படுத்தி நாய் ஒன்றைச் செய்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :

ஆற்றல்கள் :
- கடதாசியைப் பயன்படுத்தி மிருகங்களின் உருவங்களைச் செய்ய முடியும் என்பதை அறிவர்.

திறன்கள் :
- வெட்டுதல், வளைத்தல், ஒட்டுதல் போன்ற செயற்பாடு களுக்காக இரு கைகளையும் பழக்கிக் கொள்வர்.

பண்புகள் :
- ஆக்கம் செய்வதில் இன்பம் பெறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- ஒவ்வொரு பிள்ளை தொடர்பாகவும் பின்வரும் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுதல்.
- வார்ணிஸ் தாளினால் 6 அங்குல நீள அகலத்தில் வெட்டிக் கொள்ளப்பட்ட சதுரம் ஒன்று.
- அரைத் தாள் (ஹாப்சீட்) 1
- சிறிதளவு பசை.
- வெட்டப்பட்ட கறுப்பு வட்டங்கள் இரண்டு. (கண்களுக்காக)

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- தாளினால் மடித்துச் செய்த. நாய் ஒன்றின் படத்தைக் காட்டி. அதிலுள்ள மிருகத்தின் பெயரைக் கேட்டு அம் மிருகத்தின் தன்மையைக் கதைத்துக் கலந்துரையாடல் ஒன்றை உருவாக்குதல்

படி 2
- மாணவர்களுக்கு சிறிய சதுரங்களைப் பகிர்ந்தளித்து அதனை மூலையிலிருந்து மூலைக்கு வளைத்தல்.
- அதன் பிறகு காதுகள் இரண்டையும் வளைக்கும் முறையைக் காட்டி அவ்வாறு செய்வதற்குப் பிள்ளைகளை ஈடுபடுத்துதல்.
- வளைத்துக் கொண்ட முகத்துக்குக் கண்கள் இரண்டையும் ஒட்டுதல். வாய் ஒன்றையும் மூக்கையும் கறுப்பு நிறத் துண்டினால் அடையாளம் செய்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அரைத் தாள் - ஹாப் சீட் ஒன்று வீதம் பகிர்ந்து கொடுத்து முகத்தை தாளின் மேற்பகுதியில் ஒட்டுங்கள். கீழ் பகுதியில் நாயின் உடலின் பகுதியை வரைந்து வால் ஒன்றையும் கால்களையும் வைத்தல்.

படி 3 • ஆக்கங்களை நிறந் தீட்டுங்கள்.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- எல்லோரினதும் ஆக்கங்களை காட்சிக்கு வைத்தல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- நாய் வளைக்கிறது, ஒட்டுகிறது, வாய், மூக்கு, முகம், வால், கால்கள், உடல்பகுதி, நிறம்
- ஒன்று, இரண்டு
- சிறிய, பெரிய

**10. வேறு விடயங்கள**

- ஆசிரியரின் விருப்பப்படி இது போன்ற வேறு ஒரு செயற்பாடொன்றைத் திட்டமிட்டுச் செய்ய முடியும்.

  உ-ம் :- தாமரைப்பூ ஒன்றைச் செய்தல், ஆகாய விமானமொன்றைச் செய்தல், படகு, தோணி ஒன்றைச் செய்தல், முயலொன்றைச் செய்தல், பூனையொன்றைச் செய்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.24

## செல்லப் பிராணிகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**01. பிரதான துறை :** ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்தி

**02. தலைப்பு :** செல்லப் பிராணிகள்

**03. பிரதான இலக்கு :** பிராணிகளின் சத்தத்தைப் போலச் செய்தல்.

**04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :**

**ஆற்றல்கள் :**
- பிராணிகள் சிலவற்றின் ஒலிகளை அல்லது சத்தங்களை இனங்காண்பர்

**திறன்கள் :**
- பிராணிகளின் ஒலிகளை, சத்தங்களை போலச் செய்யும் திறனைப் பெறுவர்.

**பண்புகள் :**
- பிராணியின் ஒலி அல்லது சத்தத்தைப் போலச் செய்து காட்டுதல் மூலம் இன்ப அனுபவம் பெறுவர்.

**05. செயற்பாட்டின் தன்மை :** இது ஒரு குழு செயற்பாடாகும்.

**06. முன் ஆயத்தம் :**
- பிள்ளைகள் எந்நேரமும் செவிமடுக்கும், ஒலி எழுப்பும் பிராணிகள் நான்கினது பெயர்களைக் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.
- அதன் படி நாய், பூனை, தவளை, காகம் போன்றவற்றின் சத்தங்களை வீட்டிலே பிள்ளைகளுக்குக் கேட்கும் வண்ணம் செய்யும் படி முந்திய நாளிலே பெற்றோருக்கு அறிவுறுத்துதல்.
- முகமூடி தயார் செய்து கொள்ளுதல்.
- நாய், பூனை, தவளை, காகம் போன்றவற்றின் முகமூடிகள்.
- கைமணி
- மேளம் போன்ற உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளல்.

**07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :**

**படி 1**
- ஆசிரியர் தயார் செய்த ஒரு நாயின் முகமூடியொன்றை அணிந்து கொண்டு நாயின் குரலை எழுப்பியவாறு வகுப்பின் முன்னே வருதல்.
- அக்குரலைப் போன்று பிள்ளைகளையும் செய்வதற்குத் தூண்டுதல்.
- ஆசிரியர் அம்முகமூடியை அணிந்து கொண்டு பிள்ளைகளின் முன்னே வந்து கீழ் வரும் பாடலைப் பாடுதல்.

வவ் வவ் வவ் நான் நாய் குட்டியாவேன்.
என் பெயர் டொமியா
வவ் வவ் வவ் - புஹ் புஹ் புஹ்
நான் நாய்க்குட்டியாவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முடியுமான அளவு பிள்ளைகளைச் சேர்த்துக் கொண்டு பாடலைப் பாடுதல்.

- மீண்டும் மீண்டும் நாய் ஒன்றின் சத்தத்தைப் பிள்ளைகளுக்குப் பயிற்றுவித்தல்.

படி 2

- பூனையொன்றின் முகத்தை அணிந்து சத்தமிட்டுக் கொண்டு பிள்ளைகள் முன்னே வருதல்.
- ஆசிரியர் அச்சத்தத்தைப் போன்று செய்து காட்டி பிள்ளைகளையும் செய்யுமாறு தூண்டுதல்.
- ஆசிரியர் முகமூடியை அணிந்து கொண்டே பிள்ளைகளின் முன்னே சென்று கீழ்வரும் பாடலைப் பாடுவார்.

ஞாவ் ஞாவ் ஞாவ் ஞாவ் - பூனையார் நான்
பூனையார் நான் பிள்ளைகளே பூனையார் நான்

- பிள்ளைகள் இரண்டு பேர் வீதம் கைகளைக் கோர்த்துக் கொண்டு இரு பாடல்களையும் பாடுதல்

படி 3

- ஆசிரியர் தவளை ஒன்றின் முகமூடியை அணிந்து கொண்டு தவளை போல் சத்தம் செய்து பிள்ளைகளையும் அவ்வாறே செய்வதில் ஈடுபடுத்துதல்.
- தவளை முகமூடியணிந்து ஆசிரியர் கீழ் வரும் பாடலைப் பாடுதல்.

பக் பக் பக் // நான் தவளையார்.
கிணற்றினுள்ளும் நீர்க் குழியிலும் நான் தவளையார்.
பக் பக் பக் // நான் தவளையார்.

- பிள்ளைகள் கைகளைக் கோர்த்துக் கொண்டு ஆசிரியரோடு மூன்று பாடல்களையும் பாடுதல்.
- மீண்டும் மீண்டும் அதே சத்தங்கள் மூன்றையும் எழுப்புவதில் ஈடுபடுத்துதல்.

படி 4

- காகத்தின் முகமூடியை அணிந்து, காகத்தின் சத்தத்தை எழுப்பிக் கொண்டு வகுப்பின் முன்னே வருதல்.
  பிள்ளைகளையும் அவ்வாறே சத்தமிட வைத்தல்.
- ஆசிரியர் முகமூடியை அணிந்து கொண்டே பாடலைப் பாடுதல்.
  காக் //// நான் காக்கையார்
  காலை மாலை உணவு தேடும் காக்கையாரே நான்
  கறுப்பு காக்கையாரே நான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிள்ளைகளோடு மீண்டும் மீண்டும் இப் பாடலைப் பாடுதல்.
- நான்கு பாடல்களையும் பாடி நடித்தல்.
- பிள்ளைகளோடு பாடலைப் பாடி அது போலச் செய்து காட்டுதல்.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக :

- கைதட்டி பிள்ளைகளை தைரியப்படுத்துதல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள் :

- நாய்
- பூனை
- காகம்
- பக்
- காலை, மாலை
- கிணறு
- நீர்க் குழி
- ஞாவ்
- முகமூடி
- பவ் பவ்
- புஹ் புஹ்
- தவளை
- காக் காக்

10. வேறு விடயங்கள் :

- ஆசிரியரின் விருப்பப்படி நடிப்பு ஆக்கங்களையும் பாடல் ஆக்கங்களையும் செய்து கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09

# பகுப்பு மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல்கள் விருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9.1

# நீளம், கட்டை தெரிவு செய்வோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : பகுப்பு மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல் விருத்தி

02. **தலைப்பு** : நீளம், கட்டை தெரிவு செய்வோம்.

03. **பிரதான இலக்கு** : நீளம், கட்டை எண்ணக்கருவை விளக்குதல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :**

**ஆற்றல்கள்** :
- நீளம், கட்டை என்ற எண்ணக்கருவை விளங்குவர்.

**திறன்கள்** :
- படங்களுக்கு நிறந்தீட்டும் திறனைப் பெற்றுக்கொள்வர்.

**பண்புகள்** :
- செயற்பாட்டின் பின் அவ்விடத்தைச் சுத்தப்படுத்துவதற்கு முன்வருவர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06 **முன் ஆயத்தம்** :
- எல்லாப் பிள்ளைகளுக்கும் கடதாசிகளில் பின்வரும் படங்களை வரைந்து வைத்திருத்தல்.

  உதா:- ஒரு நீட்டக் காற்சட்டையும் கட்டைக் காற்சட்டையும்
  ஒரு நீட்டப் பாம்பும் கட்டைப் பாம்பும்
  ஒரு நீளமான வெண்டிக்காயும் கட்டையான வெண்டிக்காயும்.
- பலா இலையும் ஈர்க்கும் எடுத்துவருமாறு பிள்ளைகளுக்கு அறிவுறுத்தல்.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி 1**
- பிள்ளைகளுடன் வகுப்பறைக்கு வெளியே வருதல்.
- கிட்டிப்புள் விளையாடுதல்
- செயற்பாட்டுக்குப் பொருத்தமான விதத்தில் ஆசிரியர் விளையாட்டைத் திட்டமிடுதல்.
- அவ்விளையாட்டுக்குத் தேவையான தடிகளைக் கொண்டு வரச் செய்தல்.
- அவற்றை நீளம், கட்டை என்றவாறு வேறுபடுத்தச் செய்தல்.

  உதா:- நீளமான தடி, கட்டையான தடி

**படி 2**
- பிள்ளைகள் வீட்டிலிருந்து கொண்டுவந்த பலா இலைகளிலிருந்து நீளமான, கட்டையான இலைகளை வேறுபடுத்தி, ஈர்க்கில் கோர்க்கச் செய்தல்.
- கடதாசிகளில் வரைந்துள்ள படங்களிலிருந்து நீளமான, கட்டையான படங்கள் பற்றிக் கலந்துரையாடல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படி 3**

- நீளமான படங்களுக்கு சிவப்பு நிறமும் கட்டையான படங்களுக்கு நீல நிறமும் தீட்டும் செயற்பாட்டில் ஈடுபடுத்தல்.
- நீளமான, கட்டையான கோடுகள் வரைவோம் என பிள்ளைகளைப் பயிற்சியில் ஈடுபடுத்தல்.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- சரியாகச் செய்த பயிற்சிகளைக் காட்சிப்படுத்தி, பாராட்டுதல்.
- பின்தங்கிய பிள்ளைகளுக்கு உதவுதல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- காற்சட்டை, பாம்பு, வெண்டிக்காய், தடிகள், இலை
- நீளமான, கட்டையான

**10. வேறு விடயங்கள்:**

- இந்த எண்ணக் கருவை விளக்கும் போது முதலில் விளையாட்டினூடாகச் செய்தால் பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் கற்பார்கள். மேலும் செயன்முறைப் பயிற்சிகளில் ஈடுபடுத்துவதன் மூலம் படிப்படியாகப் பயிற்சியின் பக்கம் இட்டுச் செல்ல வேண்டும்.

- ஆசிரியரின் விருப்பப்படி இச்செயற்பாட்டின்போது பல்வேறு பொருட்களையும் வேறு செயற்பாடுகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.2

# முயற் குட்டிகள் ஆறு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : பகுப்பு மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல் விருத்தி

02. **தலைப்பு** : முயற் குட்டிகள் ஆறு.

03. **பிரதான இலக்கு** : 1 இலிருந்து 6 வரை எண்ணுதல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்** :

**ஆற்றல்கள்** :
- 1 இலிருந்து ஆறு வரை எண்ணும் ஆற்றலைப் பெறுவர்.

**திறன்கள்** :
- தாளத்திற்கேற்ப அங்கங்களை அசைக்கும் திறனைப் பெற்றுக் கொள்வர்.

**பண்புகள்** :
- திருத்தமாக எண்ணி இன்பமுறுவர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- பிரிஸ்டல் அட்டையில் தயாரிக்கப்பட்ட முயல்களினதும் தாராக்களினதும் முகங்கள்.
- அவ்விரு பிராணிகளினதும் படங்கள்

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

**படி 1**
- நாம் இன்று வெளியே சென்று விளையாடுவோம்.
- தாராக்கள் சத்தமிட்டுக் கொண்டு செல்லுதல். பிள்ளைகளுடன் நடித்தல்.
- முயல்கள் போவது போல் நடித்தல்.

**படி 2**
- பிள்ளைகளின் விருப்பப்படி குழுக்களாக்குதல்.
- பின் அவர்களுடன் பாடலைப் பல தடவைகள் பாடுதல்.

ஒன்று இரண்டு மூன்று
முயற் குட்டிகள் மூன்று
மெல்ல மெல்ல மூவரும்
கரட் கிழங்கை சுவைப்பர்

நான்கு ஐந்து ஆறென
பாய்ந்து பாய்ந்து வந்தன
அனைவரும் சேர்ந்து
ஆறு வரை எண்ணின


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று இரண்டு மூன்று
நான்கு ஐந்து ஆறு

ஒன்று இரண்டு மூன்று
என்று தாரா குஞ்சுகள்
மூன்றும் பீ பீ என்று கூறி
நீரில் பாய்ந்தன

நான்கு ஐந்து ஆறு
இன்னும் சில வந்தன
எல்லாம் சேர்ந்து ஒன்றாய்
ஆறு வரை எண்ணின

படி 3
- முதலில் ஆறு பிள்ளைகள் வீதம் நடிப்பில் பங்கேற்க ஆயத்தப்படுத்தல். தராக் குஞ்சுகள் ஆறு. முயற் குட்டிகள் ஆறு.
- அவர்களுக்கு பிராணிகளின் முகங்களை அணியச் செய்தல். ஏனையவர்களைப் பாடச் செய்தல்.
- பாடலைப் பாடி நடிப்பதில் சகலரையும் ஈடுபடுத்தல்.
- அவர்களைப் பாராட்டுதல்.
- வட்டமாக நிறுத்தி, மீண்டும் பாடலைப் பாடி நடிக்கச் செய்தல்.

படி 4
- வகுப்பறைக்குச் சென்ற பின்னரும் பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- தாராவினதும் முயலினதும் (ப்லொக்) படிதகட்டைப் பிள்ளைகளுக்கு வழங்கி, ஆறு முயல்களை வரையச் செய்தல்.
- நிறந்தீட்டச் செய்தல். தாராக் குஞ்சுகளை வரைந்து நிறந்தீட்டச் செய்தல்.
- தாம் வரைந்த படங்களை எண்ணச் செய்தல்.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**
- பிள்ளைகளைப் பாராட்டுக.
- பின்தங்கிய பிள்ளைகளை உற்சாகப்படுத்துக.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**
- முயல், தாரா, குட்டி, குஞ்சு, கரட், சுவை, தண்ணீர்
- 1, 2, 3, 4, 5, 6 என எண்ணுதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10. வேறு விடயங்கள்:**

- பிள்ளைகளின் படங்களைக் காட்சிப்படுத்தல்.
- ஜில் பந்து, இறப்பர் விதை, பலா விதை, சிறு கற்கள் இவற்றில் ஏதாவதொன்றைப் பயன்படுத்தி, 1 முதல் 6 வரை எண்ணுவதற்குப் பழக்குதல்.
- ஆசிரியரின் விருப்பப்படி பாடலை விருத்தி செய்து கொள்ளல்.
- ஆங்கில, சிங்கள மொழிகளிலும் எண்ணச் செய்யலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.3

# அழகான நிறங்களை நாம் மிகவும் விரும்புகிறோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : பகுப்பு மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல் விருத்தி

02. தலைப்பு : அழகு நிறங்களை நாம் மிக விரும்புகிறோம்.

03. பிரதான இலக்கு : நீலம், சிவப்பு, மஞ்சள், பச்சை நிறங்களை அறிமுகப் படுத்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :

ஆற்றல்கள் :
- நீலம், சிவப்பு, மஞ்சள், பச்சை நிறங்களை இனங் காண்பர்.

பண்புகள் :
- சிறந்த ஆக்கங்கொண்ட சித்திரங்கள் வரையும் திறனைப் பெறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- நீலம், சிவப்பு, மஞ்சள், பச்சை நிற பலூன்கள்.
- இந்நான்கு நிறங்களிலான வார்ணிஷ் கடதாசிகளை ஒட்டிய அட்டைகள். ஒரு பிள்ளைக்கு ஒன்று வீதம் தயாரித்தல்.
- இந்நான்கு நிறங்களில் ஏதாவதொரு நிறத்தில் ஓர் உடையை எடுத்து வருமாறு முன் தினத்தில் பெற்றோருக்கு அறிவுறுத்தல். நான்கு நிறங்களிலும் உடைகளை எடுத்துவரச் செய்க.
  ஆண் - சேர்ட், ட சேர்ட்
  பெண் - கவுண், ட சேர்ட், பிளவ்ஸ்- சட்டை என்றவாறு
- உடைகளை எடுத்து வருவது கடினமாயின் நான்கு நிறங்களில் பட்டிகளைத் தயாரித்து, தலையில் அல்லது கையில் கட்டிக் கொள்ளவும் முடியும்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1
- நீலம், சிவப்பு, மஞ்சள், பச்சை நிறங்கொண்ட பலூன் மரமொன்றைக் காட்சிப்படுத்தல். ஒவ்வொரு நிறங்கள் பற்றிப் பிள்ளைகளுடன் கலந்துரையாடி நிறங்களை அறிமுகப் படுத்தல்.
- பிள்ளைகள் எடுத்து வந்த உடைகளை அணிந்து கொள்ளச் செய்தல். அவர்களை வெளியே அழைத்துச் செல்லல்.

படி 2
- தான் அணிந்துள்ள உடையின் நிறத்தைக் கவனிக்கச் செய்தல்.

படி 3
- ஒரே நிற உடையுள்ள பிள்ளைகளை ஒரு குழுவாக நிறுத்தி, நிறத்தைப் பற்றி விசாரித்தல்.

படி 4
- எல்லா இடங்களிலும் பரந்து செல்லுமாறு பிள்ளைகளைப் பணிக்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 5
- விளையாட்டினூடாக நிறங்களைப் பிள்ளைகளுக்கு வலியுறுத்துக.
- ஒரு கோட்டினை வரைந்து எல்லையிடுக. அதில் சுதந்திரமாகப் பயணஞ் செய்யுமாறு பணிக்க. ஆசிரியர் கைதட்டி ஒரு நிறத்தைக் கூறுக. அந்நேரத்தில் அந்நிற உடை அணிந்துள்ள பிள்ளைகள் கோட்டிற்கு வெளியே செல்ல வேண்டும். அவ்வாறு செல்லாத பிள்ளைகள் போட்டியிலிருந்து நீக்கப்படுவர். சரியாகச் சென்ற பிள்ளைகளும் ஏனைய பிள்ளைகளும் மீண்டும் குழுவில் சேர்வர். இவ்வாறு எல்லா நிறங்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கி இவ்விளையாட்டில் ஈடுபடுத்துக.

படி 6
- அட்டைகள் ஊடாக நிறங்கள் பற்றிய அனுபவங்களை மேலும் விருத்தி செய்க.
- தயாரித்த அட்டைகளைப் பிள்ளைகளுக்குப் பகிர்ந்தளிக்க.
- தனக்குக் கிடைத்துள்ள நிறங்களைக் கூறுவதற்கு சந்தர்ப்பம் வழங்குக.
- இந்நான்கு நிறங்களையும் அன்றாட வாழ்க்கையில் காணக்கூடிய சந்தர்ப்பங்கள் பற்றிக் கலந்துரையாடுக. உதா:- நீலம் - வானம், கடல்
  சிவப்பு - வாகனங்கள், உடைகள், இரத்தம்
  மஞ்சள் - பழங்கள், வாகனங்கள்
  பச்சை - மரங்கள், கொடிகள், வாகனங்கள்

## 08. மாணவர்களில் துண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- நன்கு செயற்பாட்டில் ஈடுபடும் பிள்ளைகளைப் பாராட்டுக.
- நிறங்களைச் சரியாக இனங்காணும் பிள்ளைகளை கைதட்டி உற்சாகப்படுத்துக.
- நிறங்களைச் சரியாக இனங்காணாத பிள்ளைகளுக்கு உதவுக.

## 09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- நீலம், சிவப்பு, மஞ்சள், பச்சை நிறங்கள்
- ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு
- வர்ணங்கள்

## 10. வேறு விடயங்கள்:

- பிள்ளைகளை பலூன் வியாபாரிளாக ஆக்கி, ஒவ்வொரு நிற பலூன்களைப் பிள்ளைகளுக்கு வழங்கி, விநோத நடிப்பில் ஈடுபடுத்த முடியும். ஒவ்வொரு நிறங்களுக்கு ஏற்ப 4 பாடல்களை ஆக்கிக் கொள்க.
- பலூன் வியாபாரிகளை சித்திரமாக வரையச் செய்க. நான்கு நிறங்கள் பற்றிய தெளிவையும் 4 வரை எண்ணுவதையும் உறுதிப் படுத்துக.
- பிரவேச ஆற்றல் இருந்தால் 1 இலிருந்து 5 வரை எண்ணுவதில் ஈடுபடுத்தலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.4

# குறை நிரப்புவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : பகுப்பு மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல் விருத்தி

02. தலைப்பு : குறை நிரப்புவோம்

03. பிரதான இலக்கு : படங்களின், பொருட்களின் குறைவான பகுதிகளை நிரப்புதல்

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:
ஆற்றல்கள் :
- தர்க்க ரீதியாக சிந்திக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்வர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- செயற்பாட்டுக்குப் பொருத்தமான இரண்டு பொம்மைகள், ஒரே மாதிரியான உடைகள், ஒரே நிறத்திலான இரண்டு தொப்பிகள், ஒரே மாதிரியான மாலைகள் இரண்டு.
- ஒரு பொம்மைக்கு உடை அணிந்தும் மற்றையதற்கு உடை அணியாமலும் தயார் செய்து கொள்க. கீழே 1, 3 படிகளின்போது ஒரு பிள்ளைக்கு ஒன்று வீதம் பட அட்டைகள், கை கால்கள் கழற்றிப் பொருத்தக் கூடிய பொம்மைகள், பிராணிகள் போன்ற விளையாட்டுப் பொருட்களைப் பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1
- பிள்ளைகளுக்கு உடை அணிந்த பொம்மையையும் உடை அணியாத பொம்மையையும் காட்டி, குறைபாடுகள் பற்றிக் கலந்துரையாடலும் அவற்றை நிவர்த்தி செய்தலும். இங்கு பின்வருவன போன்ற வினாக்களைப் பிள்ளைகளிடம் வினவ முடியும்.
- உதா:- இந்தப் பொம்மைக்குப்போல மற்றைய பொம்மைக்கு என்ன குறைபாடுள்ளது? நாம் அதுபோலவே இந்தப் பொம்மையையும் அழகுபடுத்துவோமா? என்று வினவி, மற்றைய பொம்மையையும் அணிவித்தல். ஒரே நிறத் தொப்பிகள், உடைகள் அணிந்த இப்பிள்ளைகள் இப்போது ஒரேமாதிரி தானே? என வினவி, கலந்துரையாடல்.

படி 2
- முதலில் இரண்டு படங்கள் உள்ள அட்டைகளைக் கொடுத்து, முதலாம் படத்தைப் பார்த்து இரண்டாம் படத்தின் குறைபாடுகளைக் கலந்துரையாடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படம் 1



படம் 2



- பின்னர் முதலாவது படத்திலுள்ளதை விட இரண்டாவது படத்திலுள்ள குறைபாடுகளைப் பூர்த்தி செய்தல்.
- பொம்மைகள், பிராணிகள் போன்ற விளையாட்டுப் பொருட்களின் ஒரு பகுதியைக் கழற்றி, எல்லாவற்றையும் கலந்து கொடுத்து, சரியான பகுதிகளைத் தேடிப் பொருத்துவதில் பிள்ளைகளை ஈடுபடுத்தல்.

**படி 3**

- பின்வருவன போன்ற அட்டைகளை வழங்கி, அவற்றின் குறைபாடுள்ள பகுதிகளை நிறந்தீட்டி, பூர்த்தி செய்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- கலந்துரையாடலில் ஈடுபடும் பிள்ளைகளைப் பாராட்டுக.
- அட்டைகளில் குறைபாடுகளைப் பூர்த்தி செய்யும் பிள்ளைகளை மதித்தல்.
- பின்தங்கிய பிள்ளைகளுக்கு வழிகாட்டுதல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள் :**

- குறைவு
- மாலை
- சொண்டு
- காதுகள்
- ஒரே மாதிரி
- வளையல்
- தொப்பி
- உடை
- கால்கள்
- பூர்த்திசெய்தல்

**10. வேறு விடயங்கள் :**

- ஆசிரியரின் விருப்பப்படி விளையாட்டுப் பொருட்களைத் தெரிவு செய்து கொள்ளல். படங்களை வரைந்து கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.5

# ஒத்த தன்மையானவற்றைத் தெரிவு செய்வோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : பகுப்பு மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல் விருத்தி

02. **தலைப்பு** : ஒத்த தன்மையானவற்றைத் தெரிவு செய்வோம்

03. **பிரதான இலக்கு** : ஒத்த தன்மை கொண்ட பொருட்களை ஒரே குவியலில் இடுதல்

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- உப பகுதிகளை ஒப்பிட்டு ஒத்த படங்களை இனங் காண்பர்.

**திறன்கள்** :
- ஒத்த படங்களைத் தெரிவு செய்யும் திறனைப் பெறுவர்.
- ஒத்த படங்கள் தொடர்பான தெரிவு செய்யும் திறனைப் பெறுவர்.

**பண்புகள்** :
- நடிப்புத் திறனை வளர்த்துக் கொள்வர்
- செயற்பாட்டிலீடுபட்டு இன்புறுவர்

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- பிரிஸ்டல் அட்டை
- ஒரு கத்தரிக்கோல்
- ஒரு பென்சில்
- ஓர் அழி றப்பர்
- ஒரு வரைகோல்
- பிளடிக்னம் செட்
- ஒத்த படங்கள் வரைந்து அட்டைகளைத் தயார் செய்து கொள்ளல். (வாகனங்கள், பிராணிகள், பூக்கள், மனிதர்கள்)

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள் :**

படி 1
- ஒரேவிதமான இரண்டு படங்களை அட்டைகளில் வரைந்து பிள்ளைகளுக்குக் காட்டுதல். அவற்றைப் பார்ப்பதற்கு 3 நிமிடங்கள் அவகாசம் வழங்குக. பின் அவை தொடர்பாக வினவி பாடப்பிரவேசம் செய்தல்.



- பிள்ளைகளை வட்டமாக நிறுத்துக.
- ஒவ்வொரு பிள்ளைக்கு ஒரு அட்டை வீதம் வழங்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அதன்பின் செய்ய வேண்டியவற்றை விளக்குக.
- "இப்பொழுது நான் உங்களுக்கு அட்டைகள் தந்தேன். இவ்வட்டத்துக்கு மத்தியில் பல அட்டைகள் காணப்படுகின்றன. நான் கட்டளை இட்டதும் ஓடி வந்து கையிலுள்ள படத்துக்கு ஒத்த படத்தைத் தெரிவு செய்து மீண்டும் ஓடி வந்து எனது கையில் தர வேண்டும்."
- இதோ நான் கட்டளை இடுகிறேன். பிள்ளைகள் ஒத்த படங்களைத் தெரிந்து கொண்டு வந்து தருகிறார்கள்.
- ஆசிரியர் அவ்விரு படங்களையும் பிள்ளைகளின் கைகளில் கொடுக்கிறார். தன்னிடமுள்ள படங்களை ஒப்பிடுகிறார்கள்.
- அப்படங்கள் இரண்டையும் கையில் வைத்துக்கொண்டு ஏனைய பிள்ளைகளுக்குக் காட்டியவாறு நடிப்பில் ஈடுபடல். அதற்கு இப்பாடலைப் பயன்படுத்துக.

படங்கள் இரண்டும் ஒத்தவை
வேறுபாடு அங்கில்லை
சிறுவர் நாமும் அதுபோலே
வித்தியாசம் இல்லையே

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- அட்டைகளைத் தெரிவு செய்து முதலில் வரும் பிள்ளைகளையும் ஏனைய பிள்ளைகளையும் பாராட்டுதல்.
- முன் வந்தவர்களைக் கைதட்டி உற்சாகப்படுத்தல்.
- விசேட திறமைகளைக் காட்டும் பிள்ளைகளை மதித்தல். (நன்று, மிக நன்று என்றவாறு)

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- படங்கள், ஒத்த, வட்டம், ஓடி, கையில்
- ஒன்று, இரண்டு
- ஒத்த தன்மை, சதுரமான

**10. வேறு விடயங்கள்:**

- பிள்ளைகளைச் சிறு குழுக்களாகப் பிரித்து அட்டைகளைத் தெரிதல் ஒழுங்கு முறையாக அமையும்.
- படங்கள் ஒட்டிய, சித்திரங்கள் உள்ள அட்டைகளை அதிக எண்ணிக்கையில் தேடிக் கொள்ளல் வேண்டும்.
- இச் செயற்பாட்டை படி 2, படி 3 என முன்னெடுத்துச் செல்ல வாகனங்கள், மனிதர்கள், மரங்கள், பறவைகள், மிருகங்கள் போன்ற படங்கள், விளையாட்டுப் பொருட்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி, ஒத்தவற்றைத் தெரிந்து சோடியாக்குவதற்கு சந்தர்ப்பம் வழங்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.6

# படம் சரியானதா என்று பார்ப்போம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : பகுப்பு மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல் விருத்தி

02. தலைப்பு : படம் சரியானதா என்று பார்ப்போம்.

03. பிரதான இலக்கு : பகுதிகளைப் பொருத்தி முழுமையை ஆக்குதல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :

ஆற்றல்கள் :
- பகுதிகளைப் பொருத்தி முழுமையைக் காணும், சிந்திக்கும், ஆராயும் திறனைப் பெறுவர்.

திறன்கள் :
- பாடலைப் பாடும் திறனைப் பெறுவர்.

பண்புகள் :
- பகுதிகளை இணைத்து முழுமையைக் கட்டியெழுப்பி இன்புறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- பின்வருமாறு பிராணிகளின் படங்களை வரைந்து நிறந்தீட்டி இரு துண்டுகளாக வெட்டிக்கொள்க.







- பின்வருமாறு பிராணிகளின் படங்களை வரைந்து நிறந்தீட்டி மூன்று துண்டுகளாக வெட்டிக்கொள்க.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒரு பிள்ளைக்கு ஒன்று வீதம் போதுமானளவு தயாரித்துக் கொள்க.
- பெற்றோர்களையும் வரவழைத்து, படங்கள் கொண்ட அட்டைகளை வெட்டித் தயாரித்துக்கொள்க.
- இலக்கம் 1 இன் கீழ் உள்ள படங்களின் இரண்டு பகுதிகளில் ஒன்று வீதம் வகுப்பின் முன்னாலுள்ள பலகையில் ஒட்டிவைக்க.

## 07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1
- பின்வரும் பாடலைப் பாடிய வண்ணம் படங்களைப் பூர்த்தியாக்குக.
- மெல்ல மெல்ல அடியெடுத்து வருவது...... யார்?
  பிள்ளைகள்: யானை, யானைக் குட்டி
- புல்லை புல்லைத் தின்றுமே – வட்ட கண்ணை சுழற்றுதே... இது யார்?
  பிள்ளைகள்: முயல், முயல் குட்டி
- குவெக் குவெக் குவெக் குவெக் இதோ வருகுது ... இது யார்? பிள்ளைகள்: தாரா, தாராக் குட்டி
- ஒவ்வொரு பிராணிகளையும் குறித்துப் பாடி கடைசியில் இதோ வருகுது ... இது யார்? என்பதை மீண்டும் கூறுக.
- ஒன்று, இரண்டு, மூன்று என மிருகங்களை எண்ணுக.

படி 2
- பிள்ளைகளுக்கு ஒரு பிராணியின் பகுதிகள் இரண்டையும் வழங்கி, இணைக்கச் செய்து, அதன் பெயரைக் கூற வழிப்படுத்துக.

படி 3
- ஒவ்வொரு பிள்ளைக்கும் இரண்டு பிராணிகளின் நான்கு பகுதிகளையும் வழங்கி, இணைக்கச் செய்து, பெயர்களைக் கூற வழிப்படுத்துக.

படி 4
- இலக்கம் 2 இன் (3 பகுதிகளாகப் பிரித்த) அட்டைகளை வழங்கி, செயற்பாட்டிலீடுபடுத்துக.
- படிப்படியாக பிள்ளைகளின் ஆற்றலுக்கேற்ப படங்களை மாற்றி, பகுதிகளை அதிகரித்து, முழுமையைக் கட்டியெழுப்ப வழிகாட்டுக.

## 08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- ஆசிரியரின் அறிவுறுத்தல்களை விளங்கி செயற்படும் பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- படத்தை அவசரமாகப் பொருத்தும் பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- ஏனையோருக்கு ஒத்துழைப்பு வழங்கும் பிள்ளைகளை வகுப்பறையில் தெரியப்படுத்தி மதித்தல்.
- பின்தங்கிய பிள்ளைகள் திறமையான பிள்ளைகளிடம் உதவி பெற வழிகாட்டல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- யானை, தாரா, முயல், பகுதிகள், கண்கள், பாதங்கள்.
- ஒன்று, இரண்டு, மூன்று.
- பகுதி, முழுமை, படம்.

**10. வேறு விடயங்கள்:**

- இச்செயற்பாட்டின்போது பல்வேறு பண்டங்கள், பொருட்களின் படங்களையும் பயன்படுத்த முடியும்.
- சந்தையில் காணப்படும் மரப்பலகையினால் செய்யப்பட்ட பிராணிகளின் தொகுதியையும் இச்செயற்பாட்டின்போது பயன்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9.7

# பாரத்தை நிறுத்தல்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : பகுப்பு மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல் விருத்தி

02. **தலைப்பு** : பாரத்தை நிறுத்தல்

03. **பிரதான இலக்கு** : நிறை குறைய, கூட என்ற எண்ணக்கருவை உறுதிப் படுத்தல்

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்** :

**ஆற்றல்கள்** :
- நிறை பற்றிய எண்ணக்கருவை அறிந்து கொள்வர்.

**திறன்கள்** :
- நிறையை நிறுக்கும் திறனைப் பெறுவர்.

**பண்புகள்** :
- நிறையை நிறுப்பதனூடாக இன்புறுவர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- படங்களுடனான அட்டைகளை எல்லாப் பிள்ளைகளுக்கும் தயார் செய்து கொள்ளல்.
- தயாரிக்கப்பட்ட தராசு
- மணல், பஞ்சு, பந்து, சிறிய, வாளி, துணி, ஊசி, நூல்.
- ஒரே அளவில் தயாரிக்கப்பட்ட ஒரு மணல் தலையணையும் ஒரு பஞ்சு தலையணையும்
- ஒரு பலூனும் ஒரு டெனிஸ் பந்தும்
- நீர் நிறைத்த, நிறைக்காத பிளாஸ்டிக் வாளிகள் இரண்டு.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்** :

**படி** 1
- ஒரு கதையை முன்வைத்தல்
- ஓர் ஊரில் ஒரு வியாபாரி இருந்தான். அவன் ஒரு கழுதையின்மேல் ஒரு உப்பு மூட்டையைக் கட்டிக்கொண்டு தூர நகரமொன்றிற்கு வியாபாரம் செய்யச் சென்றான். அந்தக் கழுதை மிகவும் சோம்பேரி. முதுகில் இருந்த மூட்டை பாரங்கூட என்பதால் கழுதை மிகவும் கஷ்டத்துடன் நடந்து சென்றது. கொஞ்ச தூரம் சென்றதும் ஓர் ஆறு குறுக்கிட்டது. அன்று ஆற்றில் அதிக தண்ணீர் காணப்படவில்லை. சோம்பேரிக் கழுதை ஆற்றில் இறங்காமல் சோம்பேரித்தனத்தில் ஆற்றுக்கு அருகில் நின்றது. வியாபாரி கழுதையை ஆற்றில் இறக்கி ஓட்டிக் கொண்டு சென்றான். ஆற்றின் நடுவில் சோம்பேரிக் கழுதை நீரில் அமிழ்ந்தது. ஐயோ சாக்கில் இருந்த உப்பு நீரில் கரைந்தது. முதுகில் இருந்த பாரம் குறைந்ததால் கழுதைக்கு மிகுந்த மகிழ்ச்சி. இரண்டாம் நாளும் உப்பு வியாபாரத்தில் சென்றபோது கழுதை வேண்டுமென்றே ஆற்றில் அமிழ்ந்தது. அன்றும் உப்பு நீரில் கரைந்து விட்டது. வியாபாரிக்கு சரியான கோபம். கழுதைக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும் என நினைத்து, ஒரு பெரிய பஞ்சு மூட்டையை முதுகில் கட்டிக்கொண்டு சென்றான். அன்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய நாட்களைப்போல் கழுதை ஆற்றில் அமிழ்ந்தது. அன்று உப்பைப் போல பஞ்சு கரையவில்லை. பஞ்சு சாக்கில் நீர் நிறைந்து பஞ்சு நன்றாக நனைந்தது. இப்பொழுது ஈரமான பஞ்சு என்பதால் முதுகில் பாரம் கூடியது. இப்பொழுது செய்வதற்கு எந்த வழியுமில்லை. கழுதை மிகவும் கஷ்டத்துடன் பஞ்சு மூட்டையையும் சுமந்து கொண்டு கரைக்குச் சென்றது. அதன்பின் ஒருபோதும் சோம்பேரித்தனத்தில் நீரில் அமிழவில்லை.

படி 2
- பிள்ளைகளை வட்டமாக நிறுத்துதல்.
- தயாரித்த மணல் தலையணையையும் பஞ்சு தலையணையையும் கைக்குக் கை அனுப்புதல்.





- பின்: அவ்விரண்டில் பாரம் கூடியது எது?
  பாரம் குறைந்தது எது?
- அப்படியாயின் பஞ்சை விட மணல் பாரம் தானே.? என்பதைப் பிள்ளைகளுக்கு விளக்குதல்.

படி 3
- இவ்வாறு நீர் நிரப்பிய வாளியையும் வெற்று வாளியையும் வழங்கி, பாரம் கூடியது எது? குறைந்தது எது? என வினவுதல்.

படி 4
- டெனிஸ் பந்தையும் இறப்பர் பந்தையும் கைக்குக் கை அனுப்புதல்.
- அதிலும் பாரம் கூடியது எது? குறைந்தது எது? என வினவுதல்.

படி 5
- இதனை மேலும் வலியுறுத்த தயாரித்த தராசில் பஞ்சு தலை யணையை ஒரு தட்டிலும் மணல் தலையணையை மறு தட்டிலும் வைத்து நிறுத்துப் பார்க்கச் செய்தல். அங்கு பாரங்கூடிய தட்டு தாழ்ந்தும் பாரங்குறைந்த தட்டு உயர்ந்தும் காணப்படுவதை அவதானிக்கச் செய்தல்.

படி 6
- தயாரித்த அட்டைகளைப் பிள்ளைகளுக்குப் பெற்றுக்கொடுத்து பாரங் குறைந்த பக்கத்தைத் தேடி புள்ளடி இடச் செய்தல். பாரங்கூடிய பக்கத்தின் படத்துக்கு நிறந்தீட்டச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- முன்வரும் பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- பாரம் கூட, குறைய என்பதை விளங்காத பிள்ளைகளுக்கு உதவுதல்.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள் :

- மணல், பஞ்சு, கழுதை, வியாபாரி, உப்பு, தராசு, ஓட்டிக்கொண்டு, கரைந்தது, முதலாம் நாள், இரண்டாம் நாள்.
- 1, 2, 10, 20, 30.
- பாரம் கூட, பாரம் குறைய, கிலோகிராம், தலையணை.

10. வேறு விடயங்கள் :

- தாரா சொண்டைப் பயன்படுத்தி, பிள்ளைகளின் நிறையை நிறுக்கும் செயற்பாட்டில் ஈடுபடுத்தல்.
- பாரம் கூட, குறைய என்ற எண்ணக்கருவுடன் தேவைப்படின் கிலோகிராம் எண்ணக்கருவையும் அவர்களுக்குப் பெற்றுக் கொடுத்தல்.
- ஆசிரியரின் விருப்புப்படி ஒரு தட்டுத் தராசைப் பயன்படுத்தி நிறையை நிறுப்பதில் பிள்ளைகளை ஈடுபடுத்த முடியும்.
- தகரப் பீங்கானினால் விளையாட்டுத் தராசை அமைப்பதில் பிள்ளைகளை ஈடுபடுத்த முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.8

## எண்ணுதல்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : பகுப்பு மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல் விருத்தி

02. தலைப்பு : எண்ணுதல்

03. பிரதான இலக்கு : 1 இலிருந்து 10 வரை எண்ணப் பழக்குதல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :

ஆற்றல்கள் : • 1 இலிருந்து 10 வரை எண்ணும் ஆற்றலைப் பெறுவர்.

திறன்கள் : • பாடுந் திறனை விருத்தி செய்து கொள்வர்.

பண்புகள் : • ஒன்றை எண்ணுவதனூடாக இன்புறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் : • சில பிளாஸ்டிக் பந்துகள், சில ஜில் பந்துகள்
• கூடைகள், வெற்றுப் பெட்டிகள்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1
- பிள்ளைகளை முற்றத்துக்கு அழைத்துச் செல்லல்.
- பல தடவைகள் துள்ளுதல்.
- பல தடவைகள் கை தட்டுதல்.
- ஒரே இடத்தில் ஓடுதல்.
- ஒரே இடத்தில் அசைதல்.
- பாடல் ஒன்றைப் பாடுதல்.

  ஒன்று இரண்டு மூன்று - நாங்கள் துள்ளுவோம்
  நான்கு ஐந்து ஆறு - கைகள் தட்டுவோம்.
  ஏழு எட்டு ஒன்பது - மேலே துள்ளுவோம்.
  பத்து வரை எண்ணி - கீழே அமருவோம்.

- இதனைப் பல தடவை சொல்லிக் கொடுத்து நடிக்கச் செய்தல்.

படி 2
- முற்றத்தில் பல பிளாஸ்டிக் பந்துகளையும் ஜில் பந்துகளையும் ஆங்காங்கே போடுதல்.
- பிள்ளைகளின் கையில் ஒரு பெட்டி அல்லது கூடை வீதம் கொடுத்தல்.
- விசிலடித்தவுடன் ஓடிப்போய் தாம் பொறுக்கும் பந்துகளைப் பெட்டியில் போட்டுக்கொண்டு வருமாறு கூறுதல்.
- பிள்ளைகள் பந்துகளைப் பொறுக்கும் போது ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுக்குவோம் பொறுக்குவோம் - பந்து பொறுக்குவோம்
ஓடி ஓடி ஒன்று சேர்ந்து – பந்து பொறுக்குவோம்.
ஒன்று இரண்டு மூன்று என்று – நாங்கள் எண்ணுவோம்.
பொறுக்கி பந்தை பெட்டியிலே – நாங்கள் போடுவோம்.

- ஒவ்வொரு பிள்ளையும் பொறுக்கி வந்த பந்துகளை அவர்களுக்கே எண்ணி ஆசிரியருக்கருகில் உள்ள பிளாஸ்டிக் கூடையில் இடச்செய்தல்.

படி 3
- முற்றத்திலிருந்து பத்துக் கற்கள் பொறுக்கி எடுங்கள். கீழே விழுந்துள்ள இலைகளையும் எண்ணிப் பொறுக்கி எடுங்கள்.
- கற்களை வேறாக்குதல் - இலைகளை வேறாக்குதல்.
- இலைகளையும் கற்களையும் வைத்து ஓர் ஆக்கத்தைச் செய்க.
- எல்லோரும் தான் நிர்மாணித்த ஆக்கங்களைச் சுற்றி நின்று விரும்பிய பாடலொன்றைப் பாடி மகிழ்ச்சியடைதல்.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- 1 முதல் 10 வரை எண்ணிய பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- இடர்படும் பிள்ளைகளுக்கு உதவுதல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- 1 முதல் 10 வரையுள்ள எண் பெயர்கள்
- எண்ணுதல்.

**10. வேறு விடயங்கள்:**

- பயன்படுத்தும் பொருட்களையும் பாடல்களையும் ஆசிரியர் விருப்பப்படி தீர்மானித்துக் கொள்ள முடியும்.
- பிள்ளைகளைப் பத்துப் பேராக குழுக்களாக்கி எண்ணச்செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.9

# பாதைகளைத் தேடுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**01. பிரதான துறை :** பகுப்பு மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல் விருத்தி

**02. தலைப்பு :** பாதைகளைத் தேடுவோம்.

**03. பிரதான இலக்கு :** படங்களில் உள்ள பிராணிகள் பயணஞ் செய்யும் திசையை அறிந்து கொள்ளல்.

**04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள் :**
- சிக்கலான படமொன்றிலுள்ள சரியான பாதையை அறிந்து கொள்வர்.

**திறன்கள் :**
- கண்ணையும் கையையும் ஒரே நேரத்தில் செயற் படுத்தும் பழக்கத்தைப் பெற்றுக் கொள்வர்.

**பண்புகள் :**
- பிரச்சினை தீர்ப்பதனூடாக பொறுமையைக் கைக்கொள்ளப் பழகுவர்.

**05. செயற்பாட்டின் தன்மை :** இது ஒரு தனி செயற்பாடாகும்.

**06. முன் ஆயத்தம் :**
- பின்வரும் படங்கள் கொண்ட அட்டைகளை ஒருவருக்கு ஒன்று வீதம் தயாரித்துக் கொள்ளல்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- காட்போட்டிலிருந்து வெட்டி நிறந்தீட்டிக் கொண்ட இரு பூக்களை எடுத்து, அவற்றை ஒரு பலகையின் வலப்பக்கம் பொருத்துதல் அல்லது ஒட்டுதல்.
- காட்போட் துண்டிலிருந்து வெட்டி நிறந்தீட்டிக்கொண்ட ஒரு வண்ணத்துப் பூச்சியை ஈர்க்கின் நுனியில் பொருத்திக் கொள்ளல்.
- மாணவர்களுக்குத் தேவையான படங்கள் கொண்ட அட்டைகளைத் தயாரித்துக் கொள்ளல்.

**07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

படி 1
- வலப்பக்கம் பூக்களை ஒட்டிய பலகையை எல்லா மாணவர்களுக்கும் தெரியுமாறு வகுப்பில் காட்சிப்படுத்தல். ஈர்க்கில் பொருத்திய வண்ணத்துப் பூச்சியைப் பலகையின் இடது பக்கத்திலிருந்து பூவின் பக்கம் மெல்லக் கொண்டு செல்க. எல்லாப் பிள்ளைகளுக்கும் இதே செயற்பாட்டைச் செய்ய சந்தர்ப்பம் வழங்குக.

படி 2
- பிள்ளைகளுக்கு அட்டைகளைப் பகிர்தல்.
- முதலில் விரலால் புள்ளிக் கோடுகளை இணைத்து பாதையைத் தேடுமாறு உதா: பறவைக்குக் கூட்டிற்குச் செல்ல வழியைத் தேடிக் கொடுப்போம். இவ்வாறு எல்லாப் பிள்ளைகளினதும் கைகளில் அட்டையைக் கொடுத்து செய்யமுடியும்.
- பிள்ளைகள் பென்சிலை, பெஸ்டலை சரியாகப் பிடிக்கப் பழகிய பின் புள்ளிக் கோடுகளை இணைத்து பென்சிலால் பாதையைக் குறிக்கப் பழக்குதல்.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- வண்ணத்துப் பூச்சியை மெதுவாகப் பூவின் பக்கம் எடுத்துச் செல்லும் பிள்ளையைப் பாராட்டுதல். கைதட்டுதல்.
- சரியாகப் புள்ளிக் கோடுகளை இணைத்த பிள்ளைகளுக்கு சரி அடையாளம் வழங்குதல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள் :**

- பறவை, பூ, வண்ணத்துப் பூச்சி, கூடு, பூச்செடி.
- பாதை

**10. வேறு விடயங்கள் :**

- ஆசிரியரின் விருப்பப்படி இவ்வாறு சிக்கலான படமொன்றிலுள்ள சரியான வழியைத் தெரிவு செய்யும் செயற்பாடுகள் பலவற்றில் பிள்ளைகளை ஈடுபடுத்தலாம்.
- ஓய்வு நேரங்களில் பிள்ளைகளை இச்செயற்பாட்டில் ஈடுபடுத்தி இன்ப அனுபவம் பெற வழிசெய்யலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.10

# நீங்கள் எங்கே?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : பகுப்பு மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல் விருத்தி

02. தலைப்பு : நீங்கள் எங்கே?

03 பிரதான இலக்கு : அயல் பற்றிய தெளிவைப் பெற்றுக் கொடுத்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :

ஆற்றல்கள் :
- ஒரு பொருளின் அமைவிடம் பற்றிய தெளிவைப் பெற்றுக் கொள்வர்.

திறன்கள் :
- எளிய பொருட்களை ஒழுங்குபடுத்தும் பழக்கத்தைப் பெற்றுக் கொள்வர்.

பண்புகள் :
- ஒன்றின் அமைவிடத்தை அறிந்து இன்புறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒருங்கிணைந்த செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- தேவையான உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளல்
- ஒரு பெரிய பந்து
- ஒரு பூச்சாடி
- ஒரு கோப்பை
- ஒரு பெரிய காட்போட் பெட்டி
- காட்போட்டில் வரைந்து வெட்டிக்கொண்ட ஊர்வலத்திற் செல்லும் பலரின் படங்கள். (கதை சுழற்றுபவன், நடனக்காரன், மேளம் கொட்டுபவன், குழலூதுபவன், கொடிகள் எடுத்துச் செல்வோர்)
- சில ஈர்க்குத் துண்டுகள்.
- ஒரே நீளமான வாழை மட்டைகள்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1
- வகுப்பறையில் ஆசிரியர் மேசையில் கோப்பையை வைத்து, கோப்பை எங்கே இருக்கிறது என வினவுதல்.
- வகுப்பறையில் மேசையின் மேல் ஒரு கோப்பையை வைத்தல்.
- வகுப்பறையில் மேசையின் கீழ் காட்போட் பெட்டியை வைத்தல்.
- வகுப்பறையில் மேசையின் அருகில் பூச்சாடியை வைத்தல்.
- வகுப்பறையில் மேசைக்குத் தூரமாக ஒரு பெரிய பந்தை வைத்தல்.
- பிள்ளைகளிடம் வினவுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கோப்பை எங்கே இருக்கிறது? மேசையின் மேல்
- காட்போட் பெட்டி எங்கே உள்ளது? மேசையின் கீழ்
- பூச்சாடி எங்கே உள்ளது? மேசையின் அருகில்
- பந்து எங்கே இருக்கிறது? மேசைக்குத் தூரத்தில்
- வினாக்கள் வினவி விடைகளைப் பெற்று, மேலே கோடிட்ட எண்ணக் கருக்களைத் தெளிவுபடுத்துக.

படி 2
- பிள்ளைகளுடன் ஊர்வலம் பற்றிக் கலந்துரையாடல்.
- நீங்கள் ஊர்வலம் பார்த்திருக்கிறீர்களா?
- ஊர்வலத்தில் யார் யார் செல்வார்கள்?
- ஊர்வலத்தில் என்ன எடுத்துச் செல்வார்கள்?
- ஊர்வலம் பற்றி பிள்ளைகள் அறிந்து வைத்துள்ள எல்லா விடயங்களையும் கலந்துரையாடுக.
- ஊர்வலம் தொடர்பான படங்களை ஈர்க்கில் கொளுவி, வாழை மட்டையில் பொருத்தி வைக்க.
- பிள்ளைகளுக்குத் தென்படுமாறு அவற்றை வரிசையாக வைத்தல்.
- பிள்ளைகளிடம் வினவுதல்.
- ஊர்வலத்தில் முதலில் செல்பவர் யார்?
- ஊர்வலத்தில் பின்னால் செல்பவர் யார்?
- கசை சுழற்றுபவனுக்கும் மேளம் கொட்டுபவனுக்கும் இடையில் இருப்பது யார்?
- ஊர்வலத்தின் நடுவே செல்பவர் யார்? என்றவாறு வினவுக.
- விடைகளைப் பெறுக.

படி 3
- பிள்ளைகளுடன் ஊர்வலத்திற் கொண்டு செல்லும் பொருட்களை ஆக்குதல்.
- தடிகள், கடதாசி என்பன பயன்படுத்தி கொடி தயாரித்தல்.
- பழைய தகரப் பேணியால் மேளம் தயாரித்தல்.
- ஊர்வலம் பற்றி ஒரு பாடலைச் சொல்லிக் கொடுத்தல்.

எங்கள் ஊரின் பாதையிலே ஊர்வலம் காணீர்
பூக்கள் சுமந்து கொடிகள் சுமந்து வருகுது பாரீர்
மேளதாளம் கொட்டி அங்கே வருகுது பாரீர்.
அணி அணியாய் அழகு காட்டி போகுது பாரீர்.

- ஊர்வலம் பற்றி ஒரு கதை கூறுதல்.
- பிள்ளைகளுடன் பாடசாலையைச் சுற்றி ஓர் ஊர்வலம் செல்லல். பிள்ளைகளின் விருப்பப்படி பாத்திரமேற்கச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. **மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- முன்வரும் பிளளைகளைப் பாராட்டுதல்.
- முன்வராத பிள்ளைகளுக்கு உதவுதல்.

09. **கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள் :**

- மேல் - கீழ், தூரத்தில் - அருகில், பின்னால் - முன்னால்
- அயல்

10. **வேறு விடயங்கள் :**

- ஊர்வலத்துக்குப் பதிலாக அது போன்ற வேறொரு செயற்பாட்டை ஒழுங்கு செய்ய முடியும்.
- மேலே குறிப்பிடப்பட்ட பொருட்களுக்குப் பதிலாக வேறு பொருட்களையும் பயன்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.11

# நாமும் வளர்கிறோம். மரங்களும் வளர்கின்றன





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : பகுப்பு மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல் விருத்தி

02. **தலைப்பு** : நாமும் வளர்கிறோம். மரங்களும் வளர்கின்றன.

03. **பிரதான இலக்கு** : படிப்படியாக வளர்தல் என்ற எண்ணக் கருவைத் தெளிவுபடுத்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்** :

**ஆற்றல்கள்** :
- அவதானிப்பு ஆற்றலை விருத்தி செய்து கொள்வர். ஒப்பிடும் ஆற்றலை வளர்த்துக் கொள்வர்.

**திறன்கள்** :
- சாடிகளைத் தயாரித்து, நாற்றுக்களை நட்டும் திறனைப் பெற்றுக் கொள்வர்.

**பண்புகள்** :
- ஒரு நாற்றின் வளர்ச்சியை அவதானிப்பதன் மூலம் இன்புறுவர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- ஒரு குழந்தையினதும் மரத்தினதும் வளர்ச்சிச் சந்தர்ப்பங்களைக் காட்டுவதற்கான படங்களைத் தயார் செய்து கொள்ளல்.
- பயற்றங்காய் விதை, போஞ்சி விதை, பயறு போன்ற ஏதாவதொரு தானிய வகை.
- முளைக்க வைப்பதற்கான இரு சாடிகள்.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்** :

**படி 1**
- சின்ன விதை முளைக்கிறது
  சின்னக் கன்று வளர்கிறது
  சின்ன சின்ன அறிவினால்
  சின்ன பிள்ளை வளர்கிறது
- இப்பாடலைப் பாடியவாறு ஆசிரியர் பாடப்பிரவேசம் செய்தல். இதன் ஒவ்வொரு வரிகளையும் பிள்ளைகளுடன் பல தடவைகள் பாடுதல். அவ்வாறு செய்தால் அவர்களுக்கு மனனம் ஏற்படும்.
- பாடலின் கருத்தைப் பிள்ளைகளுடன் கலந்துரையாடல்.

**படி 2**
- வீட்டில் வதியும் தம்பி, தங்கைகள் பற்றி வினவி, இலக்கம் 1 முதல் படங்களை முன்வைத்தல். அது பற்றி கருத்துக்களை முன்வைப்பதற்கு பிள்ளைகளுக்கு சந்தர்ப்பமளித்தல். இங்கு பிள்ளை தற்போதைய நிலை வரை படிப்படியாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்துள்ள விதத்தையும் அவனால் செய்யக் கூடிய வேலைகளையும் பற்றிக் கதைத்தல்.

- மரங்கள் வளரும் விதம் பற்றியும் அதனால் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் கலந்துரையாடல்.

படி 3
- சிறிய மரங்களையும் பெரிய மரங்களையும் கொண்ட ஒரு சித்திரம் வரையச் செய்தல்.
- ஒரு பிள்ளை, ஒரு வயது முதிர்ந்தவர், பாட்டன், பாட்டி படங்களை படத் தாள்களிலிருந்து வெட்டி எடுத்து ஒட்டச் செய்தல்.

படி 4
- எம்மைச் சூழவுள்ள மரஞ்செடிகள் நாளுக்கு நாள் வளரும் என்பதைக் கலந்துரையாடல். அதுபற்றிய செயன்முறை அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்க வழிசெய்தல்.

I. பயற்றங்காய் விதை அல்லது வேறு ஒரு விதை வகையை ஓரளவு நீர் விட்டு சாடியில் இடுதல். அதனை இலக்கம் 1 எனப் பெயரிடல்.

II. இரண்டு நாட்களின் பின் அதே வகை விதையை வேறொரு சாடியிலிட்டு, நீர் ஊற்றி, இலக்கம் 2 எனப் பெயரிடல்.

III. இரு சாடிகளிலும் இட்ட விதைகளில் ஏற்படும் மாற்றங்களை நாளுக்கு நாள் அவதானிக்க சந்தர்ப்பம் வழங்கல்.

IV. இரு சாடிகளிலுமுள்ள விதைகளில் ஏற்பட்ட மாற்றம் பற்றி பிள்ளைகளுடன் கலந்துரையாடல்.

இங்கு இலக்கம் 1 , 2 சாடிகளிலுள்ள கன்றுகளின் தன்மைகளை விளக்கி, ஒரு விதையிலிருந்து கன்று முளைப்பது பற்றிய விடயங்களை முன்வைத்தல்.

- முற்றத்தில் இடமுள்ள ஓரிடத்தில் அக்கன்றுகளை நட்டுதல். அவற்றுக்கு நீர் ஊற்ற பிள்ளைகளை ஈடுபடுத்தல்.
- கன்றுகளின் வளர்ச்சியை நன்கு அவதானிக்கச் செய்தல். அது பற்றிப் பிள்ளைகளுடன் கலந்துரையாடல். அதனூடாக நாமும் வளர்கிறோம் மரங்களும் வளர்கின்றன என்ற கருத்தை வலியுறுத்தல்.

## 08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- நன்கு கருத்துக்களை முன்வைக்கும் பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- கலந்துரையாடலுக்கு முன்வராத பிள்ளைகளை ஊக்குவித்தல்.

## 09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- விதை, முளைக்கிறது, மரம், பிள்ளைகள், வளர்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10. வேறு விடயங்கள்:**

- இச்செயற்பாட்டை ஓரிரண்டு வாரங்களில் செயற்படுத்த முடியும்.
- பிள்ளைகளின் மரங்களின் பல்வேறு வளர்ச்சிப் படிகளை எடுத்துக் காட்டும் சித்திரங்கள் படங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்தச் செய்து, பிள்ளைகளுக்கு அது பற்றிய தெளிவைப் பெற வழிசெய்தல்.
- ஒரு பிள்ளையின், மரத்தின் வளர்ச்சிப் படிகளைக் காட்சிப்படுத்துவதற்கான படங்கள்.

ஒரு பிள்ளையின் வளர்ச்சிப் படிகள்



ஒரு மரத்தின் வளர்ச்சிப் படிகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9.12

# மாற்றங்கள் ஏராளம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : பகுப்பு மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல் விருத்தி

02. தலைப்பு : மாற்றங்கள் ஏராளம்

03. பிரதான இலக்கு : பல்வேறு வடிவங்களை அறிமுகப்படுத்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :

ஆற்றல்கள் :
- ஒப்பிடுவதன் மூலம் வடிவங்களுக்கிடையிலான மாற்றங்களை அறிந்து கொள்வர்.

திறன்கள் :
- வடிவங்களை வரையும் திறனைப் பெறுவர்.

பண்புகள் :
- பல்வேறு ஆக்கங்களைச் செய்து இன்புறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- முக்கோணம், வட்டம், சதுரம், செவ்வகம் போன்ற வடிவங்கள் கொண்ட மரத்தினால் செய்யப்பட்ட திண்ம உருத்தொகுதிகள் பலவற்றைத் தயார் செய்து கொள்ளல்.
- கனமான காட்போட்டினால் செய்யப்பட்ட வடிவங்களை வர்ணந்தீட்டி தயார் செய்து கொள்ளல்.
- அவ்வடிவங்களுக்குச் சமமான சில பொருட்களைத் திரட்டிக் கொள்ளல்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1
- பிள்ளைகளைக் குழுக்களாக்கி, மர வடிவங்களைப் பகிர்ந்தளித்து, சுதந்திரமாக விளையாட வழிசெய்தல்.
- வடிவங்களைப் பயன்படுத்தி பல்வேறு கோலங்களை ஆக்குமாறு அறிவுறுத்தல்.
- அவர்கள் செய்தவற்றை விபரித்துக் கூற இடமளித்தல்.
- விபரிப்பதற்கு உதவியாக சில வினாக்களைத் தொடுத்தல்.

  எல்லா வடிவங்களும் ஒரே மாதிரியானவையா?<br>
  அல்லது அவை வேறுபட்டனவா?<br>
  வடிவங்களை உபயோகித்து நீங்கள் என்ன ஆக்கினீர்கள்.
- பின்னர் இன்னும் ஆக்கங்களைச் செய்ய ஊக்குவித்தல்.

படி 2
- காட்போட்டினால் செய்யப்பட்ட வடிவத் தொகுதியை வழங்கி, அவற்றைப் பல்வேறு வடிவங்களுக்கு ஏற்ப தெரிவு செய்ய வழிசெய்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வடிவங்களை ஒன்றுடன் ஒன்றை வைத்து, சமமானதா என ஒப்பிடச் செய்க.
- பின்னர் வட்டம், முக்கோணி, சதுரம், செவ்வகம் போன்றவற்றை நிலத்தில் அல்லது பெரிய கடதாசியில் வரைந்து கொடுத்து அதன் மேல் விரலால் வரையவும் தானிய விதைகளை அல்லது கற்களை வைக்கவும் அறிவுறுத்துக.
- மேலும் மர வடிவங்களைப் பிள்ளைகளுக்கு வழங்கி, கடதாசியின் மேல் வைத்து, வெண்கட்டி, பென்சில், நிற வெண்கட்டி போன்றவற்றால் வரையச் செய்க. அப்போது தன்னிடமுள்ள படத்துக்குச் சமனான படம் வரையப்பட்டுள்ளதை விளங்கிக் கொள்வார்கள்.
- பின்னர் ஒரே விதமான மூன்று வடிவங்களையும் வித்தியாசமான ஒரு வடிவத்தையும் வரையச் செய்து மாற்றமானது எது என வினவுதல்.

படி 3
- அவ்வடிவங்களைப் பயன்படுத்தி ஆக்கங்களைச் செய்ய வழி செய்தல். அதாவது, நீளமான கட்டம், சதுரக் கட்டம், வட்டங்களைப் பயன்படுத்தி தொடரூந்துப் பெட்டி, பேரூந்து, வீடு போன்றவற்றை ஆக்குதல்.
- இறுதியில் பிள்ளைகளிடம் வினாக்கள் வினவி விடைகளைப் பெறல். வட்ட வடிவப் பொருட்கள் சிலவற்றின் பெயர்களை வினவுதல். வளையல், பீங்கான், தோடங்காய் என்றவாறு விடைகளைப் பெற முடியும். ஏனைய வடிவங்கள் பற்றியும் அவ்வாறே வினவுதல்.

**08. மாணவர்களில் துாண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- சுதந்திரமாக செயற்பாடுகளில் ஈடுபடும் பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- பின்தங்கிய பிள்ளைகளுக்கு வடிவங்களை இனங்காண வழிகாட்டல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- காப்புகள், பீங்கான்கள், தோடங்காய்கள்.
- வடிவம், வட்டம், நீளமான கட்டம், சதுரக் கட்டம், மூன்று மூலை.

**10. வேறு விடயங்கள்:**

- முன்பள்ளியில் வட்டம் - வளையமாகவும்
  செவ்வகம் - நீளமான கட்டமாகவும்
  சதுரம் - சதுரக் கட்டமாகவும்
  முக்கோணம் - மூன்று மூலையாகவும்
  அறிமுகப்படுத்தல் பொருத்தமானது.
- பல்வேறு வடிவங்களிலான மரத்துண்டுகளைச் சேகரித்து, பேரூந்து, தொடரூந்து, வீடு போன்ற ஆக்கங்களைச் செய்ய வழிசெய்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.13

# கரடிக் குடும்பம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : பகுப்பு மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல் விருத்தி

02. **தலைப்பு** : கரடிக் குடும்பம்.

03. **பிரதான இலக்கு** : அளவு பற்றிய எண்ணக்கருவைத் தெளிவுபடுத்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்** :

**ஆற்றல்கள்** :
- பல்வேறு அளவுகள் பற்றிய எண்ணக் கருவை அறிந்து கொள்வர். பொருட்களின் அளவுகளுக்கேற்ப அவற்றை ஓர் ஒழுங்கில் வைக்க முடியும் என்பதை அறிந்து கொள்வர்.

**திறன்கள்** :
- பொருட்களைக் கவனமாகக் கையாளுந் திறனைப் பெறுவர்.

**பண்புகள்** :
- அளவு பற்றிய எண்ணக்கருவை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டு இன்புறுவர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- செயற்பாட்டுக்குத் தேவையானவற்றை முன் தினத்தில் தயார் செய்து வைத்தல்.
- கரடிக் குடும்பம் என்ற தலைப்பில் அளவை என்ற எண்ணக்கருவை உறுதிப்படுத்துவதற்காக கரடி அப்பா, கரடி அம்மா, கரடி மகன் என மூன்று பெறுமானங்களில் மூன்று பிராணிகளைத் தயார் செய்து கொள்ளல்.
- மேலும் மூன்று அளவுகளில் மூன்று கோப்பைகள்
- பிராணிகளை இட்டு வைக்கக்கூடிய மூன்று அளவுகளிலான பெட்டிகள்.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்** :

**படி 1**
- பிள்ளைகளின் இரசனை அதிகரிக்கும் வகையில் கரடிக் குடும்பம் என்ற கதையைக் கூறல். இங்கு வரிசைப்படுத்தல் என்ற எண்ணக் கரு விருத்தியாகுமாறு பிள்ளை விரும்பும் விதத்தில் கதையைக் கூறல் முக்கியமானது.

  'கரடிக் குடும்பம்'
- ஒரு நாட்டில் ஒரு கரடி அப்பாவும் ஒரு கரடி அம்மாவும் ஒரு கரடி மகனும் இருந்தனர். கரடி மகன் கஞ்சி - சூப் குடிக்க மிகவும் விருப்பம். ஒரு நாள் கரடி அம்மா கரடி மகனுக்கு கஞ்சி - சூப் தயாரிக்கத் தொடங்கினார். கரடி மகன் கஞ்சி - சூப் தயாரிக்க அம்மாவுக்கு மிகவும் உதவி செய்தது. அம்மா கஞ்சை அடுப்பில் வைத்துவிட்டு சமையலறையை ஒழுங்குபடுத்தத் தொடங்கினார். கரடி மகனுக்குப் பொறுக்க முடியாது கஞ்சி - சூப் வேகும் வரை. கஞ்சி நன்கு சூடாகி வேகும்போது அம்மா கஞ்சை அடுப்பிலிருந்து எடுத்து, கரடி மகனிடம் கரடி அப்பாவினதும் கரடி அம்மாவினதும் கரடி மகனினதும் கோப்பைகளை எடுத்து வருமாறு சொன்னது. கரடி மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரமாகக் கோப்பைகளைக் கழுவி மேசை மேல் வைத்தது. அம்மா அவற்றில் கஞ்சை ஊற்றினார். இப்பொழுது கஞ்சிக்கு உப்பு இட வேண்டும். கரடி அம்மா, கரடி அப்பாவின் கோப்பை பெரிது என்பதால் மூன்று கரண்டி உப்பு இடுமாறு கரடி மகனுக்குக் கூறியது. கரடி மகன் சீனி உண்ண மிகவும் விருப்பம். கரடி மகன் அதை சீனி என நினைத்து தனது கோப்பையில் இட்டுக்கொண்டது. பின்னர் அம்மாவின் கோப்பையில் இடுமாறு சொன்ன இரண்டு கரண்டி உப்பையும் தனது கோப்பையில் இட்டுக்கொண்டது. கரடி மகனின் கோப்பை சிறிது என்பதால் அம்மா ஒரு கரண்டி உப்பு போடுமாறு சொன்னது. அதையும் தனது கோப்பையில் இட்டுக் கொண்டது. ஆனால் இதை அம்மா கண்டுவிட்டார். இப்பொழுது குடிக்க எடுத்தால் கரடி மகனுக்கு சூப்பைக் குடிக்க முடியாது. வாந்தி எடுக்குமளவுக்கு உப்பு அதிகம். கரடி மகனுக்கு நடந்த இவ்வேலையைக் கண்டு கரடி அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சரியான சிரிப்பு வந்ததாம்.

- தயாரித்த படங்களை அப்பா, அம்மா, மகன் என ஓர் ஒழுங்கில் வைக்குமாறு பிள்ளைகளுக்கு அறிவுறுத்துதல்.
- பிராணிகளின் பருமனுக்கேற்ப பொருத்தமான கோப்பைகளை ஒழுங்கு முறையில் வைக்கச் செய்தல்.
- பிராணியையும் கோப்பையையும் உரிய பெட்டிகளில் இட்டு வைக்கச் செய்தல்.

படி 2

- பல அளவுகளிலான பூக்கள் 4 அல்லது 5 ஐத் தேடிக் கொள்ளல்.
- பூக்களின் பருமனுக்கேற்ப சிறியதிலிருந்து பெரியது வரை, பெரியதிலிருந்து சிறியது வரை வைப்பதற்கு வழிசெய்தல்.
- ஏறு வரிசை, இறங்கு வரிசை எனப் பயன்படுத்துவது அவசியமில்லை. விளங்கிக் கொள்ளக் கூடியதாக பெரியதிலிருந்து, சிறியதிலிருந்து எனப் பயன்படுத்துவது பொருத்தமானது.

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- கருத்துக்களை முன்வைக்கும் பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- பின்தங்கிய பிள்ளைகளை ஊக்குவித்தல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- பெட்டிகள், பூக்கள், கரடி.
- தூரத்தில் - அண்மையில்.
- பின்னால் - முன்னால்.
- பெரிய, சிறிய, ஒழுங்கு முறை

**10. வேறு விடயங்கள்:**

- ஆசிரியரின் விருப்பப்படி வேறு கதையொன்றை, அல்லது செயற்பாடொன்றை இதற்குப் பயன்படுத்த முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.14

## இவைகள் எங்கே உள்ளன?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : பகுப்பு மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல் விருத்தி

02 தலைப்பு : இவைகள் எங்கே உள்ளன?

03. பிரதான இலக்கு : ஒரு பொருளின் அமைவிடத்தை அறிந்து கொள்ளல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :

ஆற்றல்கள் :
- மேல், கீழ், அண்மையில், தொலைவில் போன்ற எண்ணக்கருக்களை அறிந்து கொள்வர்.

திறன்கள் :
- பொருட்களைக் கவனமாகக் கையாளுந் திறனைப் பெறுவர்.

பண்புகள் :
- பொறுமையுடன் செயற்படுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு தனி செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- செயற்பாட்டுக்குத் தேவையான உபகரணங்களை, பொருட்களை முன் தினத்தில் தயார் செய்து வைத்தல்.
- பல்வர்ணத்தில் தயாரித்துக் கொண்ட ஒரு பூச்சாடி.
- ஒரு பொம்மை
- ஒரு வாகனம்.
- ஒரு பூனை
- ஒரு மேசை
- பிள்ளைகள் வகுப்பறைக்கு வருமுன் உபகரணங்களை எல்லாம் ஒரு பெட்டியிலிட்டு பரிசிற் பொதி போல் தயாரித்து வைத்தல். பிள்ளைகளுக்கு நன்கு தென்படுமிடத்தில் வைத்தல்.
- அப்போது வகுப்புக்கு வரும் பிள்ளைகள் அதனை ஆசையுடன் பார்ப்பர். வினாக்கள் வினவுவர்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- பிள்ளைகளை ஒரு மரத்தடிக்குக் கூட்டிச் செல்லல்.
- மரத்தில் மேலே என்ன இருக்கிறது?
- இலைகள், பூக்கள், காய்கள் என விடை கிடைக்கும்.
- மரத்துக்குக் கீழே என்ன இருக்கிறது?
- மணல், கல், பழுத்த, காய்ந்த இலைகள் என்பன.
- நாமும் இருப்பது மரத்துக்குக் கீழே.
- மரத்துக்குத் தூரத்தில் உள்ள ஒன்றைப் பெயரிடுக. (இடத்துக்கேற்ப பிள்ளைகள் விடையளிப்பர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மரத்துக்கு அண்மையிலுள்ள ஒரு பொருளைப் பெயரிடுக. (இடத்துக்கேற்ப பிள்ளைகள் விடையளிப்பர்)

படி 2 • உபகரணங்களைப் பெட்டியிலிருந்து எடுத்து, பின்வருமாறு வைத்தல்.



- பிள்ளைகளிடம் வினாக்கள் தொடுக்க.
- வாகனம் எங்கே இருக்கிறது? மேசையின் மேல்
- பொம்மை எங்கே உள்ளது? மேசைக்குத் தொலைவில்.
- பூனை எங்கே இருக்கிறது? மேசையின் கீழ்
- பூச்சாடி எங்கே உள்ளது? மேசைக்கு அருகில்.
- இந்த எண்ணக்கருக்களைப் பிள்ளைகள் கற்கத் தவறுமிடத்து, ஆசிரியர் பின்வருமாறு வினாக்கள் வினவலாம்.
- மேசையின் மேல் இருப்பது என்ன? ஒரு வாகனம்.
- மேசைக்குத் தொலைவில் இருப்பது என்ன? ஒரு பொம்மை.
- மேசையின் கீழ் என்ன இருக்கிறது? ஒரு பூனை
- மேசைக்கு அருகில் என்ன இருக்கிறது? ஒரு பூச்சாடி

படி 3 • பின்வரும் விதத்திலான ஒரு படம்.

- இங்கு பின்வருமாறு வினாக்கள் வினவலாம்.
- கொக்கு வரிசையில் எங்கே செல்கிறது? முன்னால்
- யானை வரிசையில் செல்வது எவ்விடத்தில்? நடுவில்
- முயல் வரிசையில் செல்வது எவ்விடத்தில்? பின்னால்
- வரிசையின் முன்னால், நடுவால், பின்னால் செல்லும் பிராணிகளின் பெயர்களைச் செவிமடுக்கச் செய்வதனூடாக இந்த எண்ணக்கருவைப் பிள்ளைகளுக்குத் தெளிவுபடுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- சரியான துலங்கலைக் காட்டும் பிள்ளைகளைப் பாராட்டுதல்.
- முதலில் முன்வரும் பிள்ளைகளைக் கைதட்டி ஊக்குவித்தல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- கொக்கு, யானை, முயல், மரம், இலை, பூக்கள், காய்.
- மேலே, கீழே, தூரம், கிட்ட, முன்னால், நடுவில், பின்னால்.

**10. வேறு விடயங்கள்:**

- தயாரிக்கும் படங்கள், சித்திரங்கள், பொருட்களை ஆசிரியரின் விருப்பப்படி மாற்றிக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.15

## எங்கள் உயரம் எப்படி?







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : பகுப்பு மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல் விருத்தி

02. தலைப்பு : எங்கள் உயரம் எப்படி?

03. பிரதான இலக்கு : பிள்ளைகளின் உயரத்துக்கேற்ப ஒரு வரிசையை அமைக்க வழிசெய்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :

ஆற்றல்கள் :
- உயரத்துக்கேற்ப பொருட்களைத் தெரிவு செய்யக் கற்றுக் கொள்வர்

திறன்கள் :
- நடிப்புத் திறனை வளர்த்துக் கொள்வர்.

பண்புகள் :
- அடக்கத்துடன் ஒரு செயலில் ஈடுபடும் பழக்கத்தைப் பெற்றுக் கொள்வர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- தேவையான போத்தல்கள், தகரப் பேணிகள், எடுத்து வருமாறு பிள்ளைகளுக்கு அறிவுறுத்தல்.
- உயரத்திற் கூடிய பிளாஸ்டிக் போத்தல்கள், தகரப் பேணிகள், குப்பிகள் சுமார் 20 (பிள்ளைகளின் எண்ணிக்கைக்கேற்ப)
- உயரத்திற் குறைந்த பிளாஸ்டிக் போத்தல்கள், தகரப் பேணிகள், குப்பிகள் சுமார் 20 (பிள்ளைகளின் எண்ணிக்கைக்கேற்ப)
- வெண்கட்டி, ஒரு கயிற்றுத் துண்டு.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள் :

படி 1
- பிள்ளைகளை வட்டமாக நிற்கச் செய்தல்.

படி 2
- இப்பொழுது இருவர் முன்னுக்கு வாருங்கள்.
- இவ்விருவரில் உயரங் கூடியவர் இப்போத்தலை எடுங்கள்.
- மற்றையவர் உயரங் குறைவு என்பதால் இந்தப் போத்தலை எடுங்கள்.
- இவ்வாறு இருவர் வீதம் வரச் செய்து போத்தல்களை எடுக்கும் செயற்பாட்டில் எல்லோரையும் ஈடுபடுத்துக.

படி 3
- உயரமான போத்தல் கையிலுள்ள பிள்ளை முன்னுக்கு வரவும்.
- வெண்கட்டியால் நிலத்தில் ஒரு கோடு வரைக. அல்லது ஒரு கயிற்றுத் துண்டை விரித்து வைக்கவும்.
- இப்பொழுது இக்கோடு வழியே வரிசையாக நில்லுங்கள்.
- கையிலுள்ள போத்தல்களைக் கீழே கோட்டில் வையுங்கள்.
- நீங்கள் பின்னே சென்று வரிசையாக வாருங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 4
- ஏனைய போத்தல் உள்ள பிள்ளைகள் இக்கோட்டினருகே வாருங்கள்.
- நீங்களும் கோட்டின் வழியே வரிசையாக நில்லுங்கள்.
- கையிலுள்ள போத்தல்களைக் கீழே கோட்டில் வையுங்கள்.
- நீங்கள் பின்னே சென்று வரிசையாக வாருங்கள்.



படி 5
- இப்பொழுது இரு போத்தல் வரிசைகளையும் நன்றாகப் பாருங்கள்.
- உயரமான போத்தல்கள் உள்ள வரிசை எது எனக் காட்டுங்கள்.
- உயரங் குறைந்த போத்தல்கள் உள்ள வரிசை எது எனக் காட்டுங்கள்.
- பிள்ளைகள் எல்லோரும் கைதட்டி மகிழ்கின்றனர்

படி 6
- பிள்ளைகள் எல்லோரும் மீண்டும் வட்டமாக நில்லுங்கள்.
- எல்லாப் போத்தல்களையும் கலந்து ஒரு குவியலில் வையுங்கள்.
- ஆசிரியர் கை தட்டியவுடன் ஓடிப்போய் தான் விரும்பும் போத்தல் ஒன்றைக் கையில் எடுங்கள்.

படி 7
- தனது கையிலுள்ள போத்தல் உயரங் கூடியதா? உயரங் குறைந்ததா? எனக் கூறுங்கள்.
- பிள்ளைகள் விடை கூறும்போது கைதட்டுதல்.

படி 8
- இப்பொழுது நாம் இரு வரிசைகளாக நிற்போம்.
- உயரமான போத்தல், உயரங் குறைந்த போத்தல் என போத்தலைக் கையிலே வைத்துக்கொண்டு,

உயரம் குட்டை வரிசை வரிசையாக ஆடுவோம்
நாம் சேர்ந்து ஆடுவோம்
எல்லோரும் சேர்ந்து ஆடுவோம். //

உயரமான சிறுவர் கையில்
உயரமான போத்தல்கள்
கட்டையான சிறுவர் கையில்
கட்டையான போத்தல்கள்

பாடலைப் பாடி எல்லோரும் சேர்ந்து நடித்து செயற்பாட்டை முடித்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:**

- நடிப்பில் ஈடுபடும் பிள்ளைகளைப் பாராட்டுதல்.

**09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:**

- போத்தல்கள்
- சூரியன்
- வட்டம்
- உயரங்கூடிய, உயரங்குறைந்த, வரிசை

**10. வேறு விடயங்கள்:**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9.16

# நீங்கள் எப்போது வந்தீர்கள்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : பகுப்பு மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல் விருத்தி

02. தலைப்பு : நீங்கள் எப்போது வந்தீர்கள்?

03. பிரதான இலக்கு : நேற்று, இன்று, நாளை, நாளை மறுநாள் என்ற எண்ணக் கருக்களைத் தெளிவுபடுத்தல்.

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:

ஆற்றல்கள் :
- நேற்று, இன்று, நாளை, நாளை மறுநாள் என காலங்கள் பற்றி அறிந்து கொள்வர்.

திறன்கள் :
- கதையை நடித்துக் காட்டும் திறனைப் பெற்றுக் கொள்வர்.

பண்புகள் :
- கதையைச் செவிமடுத்து அதை நடித்துக் காட்டி இன்புறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- வண்ணத்துப் பூச்சி இறகுகள் முகமூடிகள் 5
- பறவை இறகுகள் முகமூடிகள் 5
- தயாரித்த பூ முகமூடிகள் 5.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- ஆசிரியர் பூ முகமூடியொன்றை அணிந்து கொண்டு, இதோ பிள்ளைகளே, இன்று பூந்தோட்டத்தில் ஒரு பூ மலர்ந்துள்ளது. நேற்று நான் பூக்களுக்கு நன்றாக நீர் ஊற்றினேன். இன்னும் கொஞ்ச நேரத்தில் இன்னும் நிறைய பூக்கள் மலரும்.
- 5 பிள்ளைகளுக்கு பூ முகமூடிகளை அணிவித்து வட்டத்தின் நடுவே நிற்கச் செய்தல். இன்னும் 5 பேருக்கு வண்ணத்துப் பூச்சி இறகு முகமூடிகளையும், மேலும் 5 பேருக்கு பறவை இறகு முகமூடிகளையும் அணிவித்து, பின்னால் நிற்கச் செய்தல்.
- பூ முகமூடி அணிந்த பிள்ளைகள் காற்றில் ஆடுவது போல் வட்டத்தின் நடுவே அங்குமிங்கும் ஆடியவாறு அமர்ந்திருத்தல். நேற்று இந்தப் பூக்கள் எவ்வாறு இருந்திருக்கும்? இன்றுதானே இந்தப் பூக்கள் மலர்ந்திருக்கின்றன? எனப் பிள்ளைகளிடம் வினவுதல். பிள்ளைகளை விடையளிக்கச் செய்தல்.
- இதோ பிள்ளைகளே நான் இப்போது கதை சொல்லத் துவங்குகின்றேன். இது போல பூக்கள் மலர்ந்த ஒரு பூந்தோட்டம் இருந்தது. பூக்கள் மலர்ந்ததும் இப் பூந்தோட்டத்துக்கு ஒரு புதியவர் வந்தார். பூக்கள் சிரித்தவாறு அங்குமிங்கும் ஆடி வணக்கம் தெரிவித்தனர். புதியவர்தான் இப்பூந்தோட்டத்தின் உரிமையாளரான சின்னப் பிள்ளை. அவர் பூந்தோட்டத்துக்கு (ஒரு பிள்ளையை நடுவிற்கு அழைத்துக் கொள்க) வந்தது பூக்களுக்கு ஒரு செய்தி சொல்வதற்காக. அவர் இப்படிச் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- "பூ அழகிகளே, பூ அழகிகளே, நீங்கள் நேற்று மலர்ந்திருக்கவில்லை. நான் கன்றுகளுக்கு நன்றாகத் தண்ணீர் ஊற்றினேன். அதன்பிறகுதான் நீங்கள் இன்று அழகாக மலர்ந்திருக்கின்றீர்கள். ஒரு வண்ணத்துப் பூச்சியும் ஒரு குருவியும் வந்து நீங்கள் பூத்தால் சொல்லச் சொன்னார்கள். நாளைக்கு உங்களைப் பார்க்க வண்ணத்துப் பூச்சிகள் வருகிறார்கள். நாளை மறுநாள் உங்களைப் பார்க்க குருவிகள் வருகிறார்கள்.
- இனி அதுவரைக்கும் உங்களுக்கு வாடாமல் இருக்கச் சொன்னார்கள். (அவ்வாறு ஆசிரியை சொல்லும்போது பிள்ளை அவ்வாறு சொல்லும் விதத்தைக் காட்டும்)
- பூ அழகிகளுக்கு இச் செய்தியைக் கேட்டு மிகுந்த மகிழ்ச்சி. பூ அழகிகள் அசைந்து அசைந்து நடனமாடினார்கள்.
- இந்நேரத்தில் சூரியன் மாமா மெல்ல மெல்ல சென்று தெரியாமலேயே ஒளிந்து கொண்டார். கொஞ்சம் கொஞ்சம் இருள் சூழ்ந்தது. பூ அழகிகள் இதழ்களைச் சுருட்டிக் கொண்டு நித்திரை செய்யத் தயாராகினர். இப்போது நாளை உதயமாக இன்னும் கொஞ்ச நேரம்தான். நாங்கள் தூங்குவோம். (பூக்களைப் போலுள்ள பிள்ளைகளைத் தலையைக் குனிந்து கொண்டிருக்க அறிவுறுத்தல்.)
- இரவு முழுதும் தூங்கிக் கொண்டிருந்த பூ அழகிகளுக்கு பறவைகளின் சத்தம் கேட்டு விளிப்பு வந்தது. சுற்று முற்றும் பார்த்தன. அதோ சூரியன் மாமா மலைகளுக்கிடையே வந்து சிரிக்கிறார். விடிந்து விட்டது. இன்று வண்ணத்துப் பூச்சிகளும் வருவார்கள். நாம் நடனத்தை ஆரம்பிப்போம். பூ அழகிகள் ஆட ஆரம்பித்தனர். இதோ அழகான சிறகுகளை அடித்து வண்ணத்துப் பூச்சிகள் வரிசையாகப் பறந்து வந்துள்ளார்கள். பூ அழகிகள் தலை தாழ்த்தி வணக்கம் தெரிவித்தனர். அவர்களும் வணக்கம் தெரிவித்தார்கள்.(பிள்ளைகளை அவ்வாறு செயற்பட ஈடுபடுத்தல்)
- இப்பொழுது வண்ணத்துப் பூச்சிகளும் பாட்டுப் பாடி ஆடினர். ஆடி ஆடி இப்பொழுது நல்ல களைப்பு.
- சூரியன் மாமா இன்றும் மெல்ல மெல்ல சென்று ஒழிக்க ஆயத்தமாகினார்.
- வண்ணத்துப்பூச்சிகள் பூ அழகிகளிடமிருந்து விடை பெற்றுச் சென்றனர். எங்களைப் பார்க்க வந்தமைக்கு மிக்க நன்றி. மீண்டும் ஒரு நாளைக்கு வாருங்கள் என பூ அழகிகள் கூறின.
- இப்பொழுது நன்றாக இருட்டி விட்டது. குருவிகள் எங்களைப் பார்க்க நாளை தான் வருவார்கள். காலையிலேயே எழும்ப இப்பொழுது தூங்குவோம். பூ அழகிகள் நித்திரை செய்தனர். (பூ அழகிகள் தலையைக் குனித்து சத்தமின்றி இருக்கிறார்கள்)
- முழு இரவும் தூங்கிக் கொண்டிருந்த பூ அழகிகள் "குக்கூ குக் குக்" என்ற நாதம் கேட்டு அவசரமாக எழும்பினர். இதோ சூரியன் மாமா சிரிக்கிறார். விடிந்து விட்டது தானே? சத்தமிட்டது சேவல் தானே?
- எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி. இன்று தான் குருவிகள் எங்களைப் பார்க்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவார்கள். பூ அழகிகள் ஆட ஆரம்பித்தனர். இதோ அழகான சிறகுகளை அசைத்து குருவிகள் தோட்டத்துக்கு வருகின்றனர்.

- வணக்கம் குருவி நண்பர்களே, பூ அழகிகள் கூறினர். வணக்கம் பூ அழகிகளே, குருவிகள் கூறினர். காணக்கிடைத்தமைக்கு சந்தோசம். எல்லோரும் கூறினார்கள். நாம் பாட்டுப்பாடி ஆடுவோம். எல்லோரும் உடன்பட்டார்கள். இரு சாராரும் போதுமாகும் வரை ஆடினார்கள். இன்றும் நாம் போதுமாகும் வரை ஆடினோம். மகிழ்ச்சி அடைந்தோம். இப்பொழுது இரவாகப் போகிறது. நாங்கள் போய்வருகிறோம் என குருவிகள் கூறினர். வந்தமைக்கு மகிழ்ச்சி. மீண்டும் வாருங்கள் என பூ அழகிகள் கூறினர். குருவிகள் விடைபெற்றுச் சென்றனர். இவ்வாறு ஆசிரியர் கதையைக் கூறி முடித்தார்.

படி 2

- இப்பொழுது நான் உங்களுக்கு ஓர் அழகான கதை சொல்லித் தந்தேன். இனி நீங்கள் எனக்குக் கதையைக் கூறிக்காட்டவேண்டும்.
- முகமூடிகளை வேறு பிள்ளைகளுக்கு மாற்றிக் கொடுத்தல்.
- அப்பாத்திரங்களை அந்தந்த இடங்களில் நிறுத்தி நாடகமாக நடிக்க இடமளித்தல்.
- நேற்று, இன்று, நாளை, நாளை மறுநாள் போன்ற சொற்களைப் பிள்ளைகள் பயன்படுத்தும் விதத்தை அவதானித்து, அவற்றைப் பயன்படுத்தாதபோது அந்தந்த சந்தர்ப்பங்களில் அவற்றைப் பயன்படுத்த அறிவுறுத்துக.

## 08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- பிள்ளைகள் நன்கு கதையைச் செவிமடுப்பதையும் நன்கு செயற்படுவதையும் பாராட்டுதல்.

## 09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- சூரியன் மாமா, வண்ணத்துப் பூச்சிகள், குருவிகள், பூ அழகிகள்
- இரவு, இருட்டு, வணக்கம், நாளை மறுநாள், புதியவர், விடைபெறுதல்
- காலை, இரவு. நேற்று, இன்று, நாளை

## 10. வேறு விடயங்கள்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9.17

## இராட்சதனும் கட்டையனும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. **பிரதான துறை** : பகுப்பு மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல் விருத்தி

02. **தலைப்பு** : இராட்சதனும் கட்டையனும்

03. **பிரதான இலக்கு** : உயரம், கட்டையானது, பிரமாணம் போன்ற எண்ணக் கருக்களைத் தெளிவுபடுத்தல்.

04. **விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும்:**

**ஆற்றல்கள்** :
- பிரமாணங்களுக்கேற்ப உபகரணங்களை ஒழுங்கு படுத்தும் ஆற்றலைப் பெறுவர்.

**திறன்கள்** :
- உடலின் கைகால்களைத் தேவையான விதத்தில் பயன்படுத்தும் திறனைப் பெறுவர்.

**பண்புகள்** :
- செயற்பாடொன்றில் ஈடுபட்டு இன்புறுவர்.

05. **செயற்பாட்டின் தன்மை** : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. **முன் ஆயத்தம்** :
- மேசைப் பந்து போன்ற சிறிய பந்துகள் (Ping Pong Balls)
- 2 அங்குல இறப்பர் பந்து
- 4 அங்குல இறப்பர் பந்து
- 6 அங்குல இறப்பர் பந்து
- 12 அங்குல அளவிலான பந்து (பலூன் போன்ற) இவற்றைத் திரட்டிக்கொள்ளல்.

07. **செயற்பாட்டின் பல்வேறு படிகள்:**

படி 1
- விளையாட்டு முற்றத்துக்குப் பிள்ளைகளை அழைத்துச் செல்க.
- இறப்பர் பந்துகளுடன் சுதந்திரமாக விளையாட விடுக.
- பிள்ளைகளைக் குழுக்களாக்கி வெவ்வேறு அளவிலான பந்துகளைக் குழுக்களுக்கு வழங்குக. அதன் பின் குழுக்கள் இணைந்து விரும்பிய விதத்தில் உபகரணங்களை ஒரே வரிசையில் வைக்க வழி காட்டுக.



பந்துகளை ஒழுங்கு முறையில் வைக்க.

படி 2
- வரிசையிலுள்ள பந்துகளை பெரியதிலிருந்து சிறியது வரை மீண்டும் ஒழுங்குபடுத்துமாறு செய்க. பந்துகளில் மிகப் பெரிய பந்து எது? மிகச் சிறிய பந்து எது? என வினவி பெரிய சிறிய என்ற எண்ணக்கருவை விளக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 3 • பிள்ளைகளின் உயரத்துக்கேற்ப வரிசையை ஒழுங்குபடுத்துக. ஓர் இடத்தில் உயரமான, கட்டையான பிள்ளைகளை அறிந்து கொள்ளமுடியும். வகுப்பிலுள்ள உயரமான பிள்ளையைப் பற்றி வினவுங்கள். அதே போல் கட்டையான பிள்ளையைப் பற்றியும் வினவுங்கள். இவ்வாறு வினவுவதன் மூலம் உயரம், கட்டை என்ற எண்ணக்கருக்களைப் பெற்றுக் கொடுங்கள்.

படி 4 • அப்பிரதேசத்திலுள்ள உயரமான, கட்டையான மரங்கள் சிலவற்றை இனங்காணச் செய்யுங்கள்.

படி 5 • ஆசிரியர் "இராட்சதன்" என்றதும் கைகளை உயர்த்தி, கால் விரல்களால் நின்று முடியமானளவு உடம்பை உயர்த்திக் காட்டுவதற்கும் "கட்டையன்" என்றதும் உயரத்தைக் குறைத்துக் காட்டுவதற்கும் பிள்ளைகளை ஊக்குவிக்குக.

08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- எப்பொழுதும் பிள்ளைகளைச் சுதந்திரமாக முன்வர வழிப்படுத்துக.
- தேவையான சந்தர்ப்பங்களில் கைதட்டி, பாராட்டுக.

09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- மேல்
- கீழ்
- சிறிய
- உயரம் - கட்டை, பெரிய - சிறிய

10. வேறு விடயங்கள்:

- இச் செயற்பாட்டினூடாக பாடலொன்றைப்பாடி நடிப்பில் ஈடுபடுவது போன்ற ஒன்றை ஆசிரியர் ஆக்கிக் கொள்ளல் பொருத்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.18

## சின்ன சின்ன விடுகதைகள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பிரதான துறை : பகுப்பு மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல் விருத்தி

02. தலைப்பு : சின்ன சின்ன விடுகதைகள்

03. பிரதான இலக்கு : கிராமிய வழக்கில் வரும் விடுகதைகளை அறிமுகப் படுத்தல்

04. விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் :

ஆற்றல்கள் : • பல்வேறு விடுகதைகளை அறிந்து கொள்வர்.

பண்புகள் : • விடுகதையின் பிரச்சினைகளை விடுவித்து இன்புறுவர்.

05. செயற்பாட்டின் தன்மை : இது ஒரு குழு செயற்பாடாகும்.

06. முன் ஆயத்தம் :
- ஒரு பட்டத்தின் படம்
- ஓர் அன்னாசிக் காயின் படம்
- ஒரு செவ்விளநீர் காயின் படம்
- ஒரு தொடரூந்தின் படம்
- இவற்றைத் திரட்டிக்கொள்ளல்.

07. செயற்பாட்டின் பல்வேறு படிகள்:

படி 1
- ஆசிரியர் சில பிள்ளைகளுடன் ஒவ்வொருவரின் தோளில் இரு கைகளையும் வைத்த வண்ணம் பின்வரும் பாடலைப் பாடியவாறு வகுப்பறையைச் சுற்றி செல்கிறார்.

கரியை உண்பேன்
நீரைக் குடிப்பேன்
ஓடி வருவேன்
கொழும்பு செல்வேன்

பாம்பைப் போல் நான்
கறுப்பு நிறம் நான்
மிக நீளம் நான்
என் பெயர் என்ன?

- பிள்ளைகள் அவசரமாக விடுகதையை விடுவிப்பர்.
ஒரே குரலில் "தொடரூந்து" எனக் கூறுவர்.

- ஆசிரியர் தொடரூந்தின் காட்டியவாறு பிள்ளைகளைத் தொடரூந்து போல் செல்வதில் ஈடுபடுத்தல். (முடியுமானளவு பிள்ளைகளுக்கும் பாடலைப் பாடச் செய்தல்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 2
- ஆசிரியர் அடுத்த விடுகதைப் பாடலைப் பாடல்.
- மரத்தின் மேல் ஒரு காய்
  காயின் மேல் ஒரு மரம்
- பிள்ளைகள் அன்னாசிக்காய் என விடுகதையை விடுவிப்பர்.
- அன்னாசிக்காயின் படத்தைக் காட்டி விடுகதையைக் கூறுவார்.

படி 3
- ஆசிரியர் பின்வரும் பாடலைப் பாடுதல்.

நான் ஒரு குருவி அல்ல
ஆகாய விமானமும் அல்ல
என்றாலும் உயர உயர
நான் பறப்பேனே

உங்களைப் போன்ற சிறுவர்கள்
என்னை மிகவும் விரும்புவர்
பாய்ந்து போவேன் என்று பயந்து
நூலால் என்னைக் கட்டுவர்

- பிள்ளைகள் விடுகதையை அறிந்து பட்டம் என்று கூறுவர்.

படி 4
- சின்ன கிணற்றின் தண்ணீர் இனிமை
  என்றவுடனே பிள்ளைகள் செவ்விளநீர் அல்லது இளநீர் எனக் கூறுவர்.
- ஒரு செவ்விளநீரின் படத்தைக் காட்டி அதனை உறுதிப் படுத்தல்.
- மீண்டும் மீண்டும் இவ் விடுகதைகளைக் கூறி விடுவிக்கச் செய்தல்.

படி 5
- விடுகதைகள் மூலம் கூறப்பட்டவற்றை வெவ்வேறாக சித்திரமாக வரையச் செய்தல்.

## 08. மாணவர்களில் தூண்டுதலை விருத்தி செய்வதற்கு இவ்வாறு அவர்களை வெகுமதிக்கு உட்படுத்துக:

- பிள்ளைகள் மிகச் சிறப்பாக செயற்பாடுகளில் ஈடுபட்டதாகக் கூறி, கைதட்டி ஊக்குவித்தல்.

## 09. கற்கும் சொற்கள், எண்கள், எண்ணக்கருக்கள்:

- தண்ணீர்
- சுவை
- செவ்விளநீர்
- ஆகாய விமானம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒன்று
- தொடரூந்து
- அன்னாசிக்காய்
- பட்டம்
- சின்னக் கிணறு
- விடுகதைகள்

10. **வேறு விடயங்கள்:**

- இது தவிர உங்கள் பிரதேசத்தில் அதிகமாகப் பயன்படுத்துகின்ற விடுகதைகளைப் பயன்படுத்துவது பொருத்தமானது.
- உதா:- தீக்குளித்தாலும் திடமாக இருப்பவன்- செங்கல்
- குறைந்து குறைந்து போவான். பின்னர் கூடிக் கொண்டே போவான் - நிலவு
- ஐந்து தூண் நான்கு இடுக்கு - விரல்கள்
- வயிறு உண்டு சாப்பிடாது. காது உண்டு கேட்காது - துணிப்பை
- பிள்ளைகளின் சித்திரங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

# இவ்வாறான நிகழ்ச்சிகளைத் திட்டமிடும்போது பயன்படுத்தக்கூடிய சில கவிதைகள், பாடல்கள், மேளப்பாடல்கள், விடுகதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிக்கும் பூக்கள்

வண்ண வண்ணப் பூக்கள் - நல்ல
மணம் நிறைந்த பூக்கள்
என்னைப் பார்த்துச் சிரிக்கும் - அவை
இனிய நல்ல பூக்கள்

ஆடி அசையும் பூக்கள் - நான்
அருகில் சென்று பறிப்பேன்
கூடை நிறைந்து போகும் - நான்
கொய்த மலர்கள் சிரிக்கும்

பார்க்கும் போதும் சிரிக்கும்
பறிக்கும் போதும் சிரிக்கும்
சேர்த்துக் கட்டும் போதும் - அவை
சிரித்துக் கொண்டே இருக்கும்

- அழ. - வள்ளியப்பா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எறும்பு

ஓடும் எறும்பே நில்
ஓடி விளையாடச் சொல் சொல்

ஊரும் எறும்பே நில் நில்
உழைத்து வாழச் சொல் சொல்

சின்ன எறும்பே நில் நில்
சேர்ந்து படிக்கச் சொல் சொல்

புற்று எறும்பே நில் நில்
பூக்கள் மலரச் சொல் சொல்

கடிக்கும் எறும்பே நில் நில்
சுறு சுறுப்பை நமக்குச் சொல் சொல்

- நல்லை அமிழ்தன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது சின்ன நாய்க்குட்டி

வவ் வவ் வவ்
யாரைப் பார்த்துக் குரைக்கிறாய்?
சிறிய இலை விழுந்தாலும்
உனது தூக்கம் கலையுதா?

வவ் வவ் வவ்

காதை உயர்த்திக் கண்ணை உருட்டி
யார் வருவார் காணவே
என்னைக் கண்டு வாலை ஆட்டி
அன்பு என்று சொல்கிறாயா?
வவ் வவ் வவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவாயோ எல்லாம் எத்தனை என்று

இக்கிளையில் இரண்டு பூக்கள்
அக்கிளையில் மூன்று பூக்கள்
அறிவாயோ பூக்கள் எல்லாம்
எத்தனை என்று //

இரண்டும் மூன்றும் ஐந்து பூக்கள்
அழகு மிக்கவை ஆகா
அழகு மிக்கவை

இக்கிளையில் அதோ அதோ
மூன்று குருவிகள்
அப்பக்கம் பறந்து பறந்து
மூன்று குருவிகள்
அறிவாயோ குருவிகள் எல்லாம்
எத்தனை என்று //

மூன்றும் மூன்றும் மொத்தம் ஆறு
அழகு மிக்கவை ஆகா
அழகு மிக்கவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடிவான தாராக்கள்

டக் டக் டக்
தாராக் குஞ்சு
ஓடும் பாயும்
தாராக் குஞ்சு
குவெக் குவெக் ////

வெள்ளை நிறம்
வெள்ளை நிறம்
குவெக் குவெக்
தாராக் குஞ்சு
குவெக் குவெக் ////

நீரில் எங்கும்
நீந்திச் சென்று
கரையை அடையும்
தாராக் குஞ்சு
குவெக் குவெக் ////

அலகு பெரிது
வடிவு நன்று
குவெக் குவெக்
குவெக் குவெக் ////


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் கிளியே வா

பச்சை நிறத்துக் கிளியக்கா
பக்கம் வந்து பேசக்கா
பாலும் பழமும் நான் தருவேன்
பாட்டும் சொல்லித் தந்திடுவேன்

கொய்யாப் பழமும் நான் தருவேன்
கொஞ்சிக் கொஞ்சிப் பேசிடுவேன்
பேசும் கிளியே வந்திடுவாய்
பெருமையாக வளர்த்திடுவேன்

மழலை மொழியில் பேசிடுவாய்
மகிழ்ந்து நானும் கேட்டிடுவேன்
ஆசை தீரப் பேசிடுவோம்
அருகில் வந்து அமர்ந்திடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலா மின்சாரம்

நீல வானக் கடலுக்குள்ளே
நிலவே நீந்தி வா - நீ
நீந்தி வரும் போது வைரம்
நிறைய அள்ளி வா!

வைர மாலை மின்னல் நூலில்
கட்டித் தருகிறேன் - எங்கள்
வீட்டுக்கு மின்சாரமாகி
விரைந்து ஓடி வா!

நிலாச் சோறு உனக்கு நானும்
பொங்கித் தருகிறேன் - அதை
நீயும் நானும் சேர்ந்து உண்போம்
நிலத்தில் ஓடி வா!

வெள்ளை உள்ளம் உனக்கு மட்டும்
தந்தது யாரு? - அதை
எல்லாருமாய் பங்கு கொள்ளும்
வழியினைக் கூறு!

இரவைப் பகலாய் ஆக்கி நீயும்
இன்பம் தருகிறாய் - உலகில்
ஏற்றத் தாழ்வு பாராமலே
ஒளியைத் தருகிறாய்

- குழ. கதிரேசன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டி பெரஹரா

கண்டி நகரில் பெரஹரா
காண இனிய பெரு விழா
ஆடி மாதத் திருவிழா
அன்பர் போற்றும் பெரு விழா

புனித தந்தம் யானையில்
பவனி வரும் திரு விழா
வீதி தோறும் மக்கள் கூடி
விரும்பிப் பார்க்கும் ஒரு விழா

கண்டிய நடனம் பார்க்கலாம்
கரக ஆட்டமும் பார்க்கலாம்
ஆனைகளின் பவனி தன்னை
ஆசையோடும் பார்க்கலாம்

தீப அழகைப் பார்க்கலாம்
தீப நடனம் பார்க்கலாம்
வாண வேடிக்கை பலதும்
வழி நெடுகக் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண்ணத்துப் பூச்சியே கேளாயோ

வண்ணத்துப் பூச்சியே கேளாயோ
ஆடி ஆடி உயரப் பறக்க
ஆரோ உனக்குக் கற்பித்தார்?
கோபம் இன்றிக் கூறாயோ

சிவனொளிபாத யாத்திரை செய்ய
நீயும் வருவாயா சொல்லு
சின்னக் கையில் சுமந்தே உன்னை
கூட்டியே நானும் செல்வேனே

பூங்காவில் நீ பறந்து திரிந்து
மலர்களின் வடிவைப் பார்க்கின்றாய்
புள்ளிகள் நிறைந்த உந்தன் இறகுகள்
கொஞ்ச நேரம் தருவாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த நாள்

பிரியாவுக்குப் பிறந்த நாள்
பிரியமான நல்ல நாள்
அம்மா அப்பா அனைவரும்
அன்பு காட்டும் அரிய நாள்

அக்கா அண்ணா தம்பியும்
அடுத்த வீட்டு அனோமாவும்
பாத்திமாவும் பாராட்டிப்
பாசம் காட்டும் நல்ல நாள்

பரிசு பலவும் கிடைத்திடும்
பட்டுச் சட்டை கிடைத்திடும்
நலமாய் நன்கு வாழ்ந்திட
நல்ல வாழ்த்தும் கிடைத்திடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசைகள்

ஓட நமக்காசை
பாய நமக்காசை
ஓடிப் பாய்ந்து விளையாட
மிகவும் நமக்காசை

எழுத நமக்காசை
வாசிக்க நமக்காசை
எழுத, வாசிக்க, பாடம் செய்ய
மிகவும் நமக்காசை

பாட நமக்காசை
ஆட நமக்காசை
பாடி ஆடி மகிழ்ந்திருக்க
மிகவும் நமக்காசை

அம்மாவுக்கு உதவ ஆசை
அப்பாவுக்கு உதவ ஆசை
அம்மா அப்பாவுக்குதவ
மிகவும் நமக்காசை

சமைக்க நமக்காசை
ருசிக்க நமக்காசை
சமையலுக்கு உதவி செய்ய
மிகவும் நமக்காசை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தபால் மாமா எனக்கும் ஒன்று

ட்ரிங் ட்ரிங் ட்ரிங் ட்ரிங்
காக்கி நிற உடையுடனே
மிதிவண்டியில் வரும்போது
உள்ளமதில் கொள்ளை ஆசை
தபால் மாமா வருகிறார்

ட்ரிங் ட்ரிங் ட்ரிங் ட்ரிங்
கடிதக் கட்டைக் கையிலெடுத்து
எனக்குக் கடிதம் தரும்போது
முகமெல்லாம் பூ மலர்ந்து
தானே சிரிப்பு வந்திடுதே

ட்ரிங் ட்ரிங் ட்ரிங் ட்ரிங்
தூர தூர வாழுகின்ற
உறவினர்கள் வந்ததுபோல்
செய்திகளை எடுத்து வரும்
எனது நண்பன் தபால் மாமா

ட்ரிங் ட்ரிங் ட்ரிங் ட்ரிங்
ட்ரிங் ட்ரிங் ட்ரிங் ட்ரிங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்ன சின்ன மீன்கள்

நீந்தி நீந்தி நீரில் நடனம்
ஆடும் மீன்களே
வண்ண வண்ண வடிவான
சின்ன மீன்களே

ஓடி ஆடி அங்குமிங்கும்
அலையும் மீன்களே
ஒற்றுமையை அறியத் தரும்
சின்ன மீன்களே

சிறிய எங்கள் நாட்டை நாங்கள்
கட்டி எழுப்புவோம்
கைகள் கோர்த்து ஒற்றுமையாய்
உலகில் காட்டுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சுப் பிள்ளை நான்

சிட்டுக் குருவி நான்
செல்லப் பிள்ளை நான்
பட்டமாகப் பறந்து திரியும்
பஞ்சுப் பிள்ளை நான்!

வட்ட நிலவு நான்
சுட்டிப் பூவும் நான்
சட்டை ஒன்று போட்டுக் கொண்ட
கட்டெறும்பு நான்

பட்டாம் பூச்சி நான்
மிட்டாய்ப் பூந்தி நான்
கிட்ட வந்து குறும்பு செய்யும்
குட்டிப் பிள்ளை நான்

அம்மா பிள்ளை நான்
அப்பா பிள்ளை நான்
அன்பு உள்ளம் கொண்டிருந்தால்
உங்கள் பிள்ளை நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்புத் தாமரை

சிவப்பு நிறத்துத் தாமரைப் பூ
கொள்ளை அழகு நீ
வண்டினங்கள் உன்னைச் சுற்றித்
தேனைக் குடிக்குதே. //

கிட்ட வந்து தொட்டுப் பார்க்க
எனக்கும் ஆசைதான்
நீர் நடுவே நிற்கின்றாயே
பயந்து துடிக்கின்றேன். //

தூர நின்று தலையசைத்து
என்னைப் பழிக்கின்றாய்
வளர்ந்தவனாய் ஆகும்போது
உன்னைப் பறிக்கின்றேன். //



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீல வானம்

கொத்து கொத்தாய் நீலவானில்
மின்னும் வெள்ளிகள்
அதோ பார் மின்னுறதே
நீல வானின் வெள்ளிகள்

ஒன்று இரண்டு மூன்று என்று
எண்ண முடியா வெள்ளிகள்
இரவின் இருளை அழகு படுத்தும்
ஒன்று சேர்ந்து வெள்ளிகள்

தனி வெள்ளியில் அழகில்லை
பல சேர்ந்தால் அழகவை
வெள்ளி போல நாம் இணைந்தால்
சிறுவர் உலகும் அழகுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன காகம்

தாகம் கொண்ட காகம் ஒன்று
தண்ணீர் தேடி அலைந்ததுவே
சோகம் கொண்டே நாற்புறமும்
சிறகு விரித்துப் பறந்ததுவே

வீடு ஒன்றின் முற்றத்திலே
வேப்ப மரத்து நிழலினிலே
தேடும் தண்ணீர் குடமதிலே
தேங்கி இருக்கக் கண்டதுவே

பட்டெனக் காகம் கீழிறங்கி
பானையுள் அலகை நீட்டியதே
எட்டாமல் நீரும் இருந்ததனால்
எட்டிடத் திட்டம் தீட்டியதே

அருகினில் கிடந்த குழலினையே
அலகால் தூக்கிக் குடத்திலிட்டு
விரைவாய்க் காகம் உறிஞ்சியதே
விரைவாய் நீரும் அருந்தியதே

முயற்சி திருவினையாக்கிடுமே
முதுமொழி பெரும் பயன் சேர்த்திடுமே
உயர்ச்சி காண வேண்டுமென்றால்
உழைப்பே தினமும் வேணுமன்றோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டம் ஏற்றிடுவோம்

காற்றில் பறக்கும் பட்டமாம்
கயிற்றில் ஆடும் பட்டமாம்
நேற்றுக் கட்டின பட்டமே
நேர்த்தியாக ஆடுது.

பட்டம் விட்டுப் பாடுவோம்
பாலர் நாங்கள் கூடுவோம்
விட்ட பட்டம் அழகாக
விண்ணில் ஏறி ஆடுது

எட்டு மூலைப் பட்டமே
எழும்பி எழும்பி ஏறுது
தொட்டுத் தொட்டுக் கயிற்றினைத்
தூரம் போக விட்டிடு

வாலும் பெரிய வாலென
வளைந்து வளைந்து ஆடுது
மேலும் மேலும் ஏறவே
வேண்டும் வாலின் உதவியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பா

இறைவன் அருள்வான் அப்பாவே
இறைவன் காப்பான் அப்பாவே
இரவும் பகலும் பாராமல்
எமக்காய் உழைக்கும் அப்பாவே

அதிகாலை வேளை எழுந்து
தொழிலை நாடிச் சென்றிடுவீர்
இரவின் இருளின் போதினிலே
இல்லம் மீண்டும் சேர்ந்திடுவீர்

உழைக்கும் உங்கள் கரங்களுக்கு
உரத்தை இறைவா கொடுத்திடுவாய்
அப்பா நீங்கள் இறைவனிடம்
உயர்வாம் சுவர்க்கம் அடைவீரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டும் டும் மேளம்

டும் டும் டும் டும் மேளமடா
உத்தமன் அடியடா மேளத்தை
பிப்பீ பிப்பீ நாதசுரம்
பேரின்பம் ஊது நாதசுரம்

சய் சய் சய் சல்லரியாம்
சங்கரன் போடு சல்லரியும்
ஊம் ஊம் ஊம் ஊம் ஒத்தூது
உதயன் நன்றாய் ஊதுவனே

வாத்தியம் எல்லாம் ஒன்றாக
வட்டமாய் நின்று வாசிப்போம்
வாத்தியார் கண்டு மகிழ்ந்திடுவார்
வாழ்த்தும் கூறிப் புகழ்ந்திடுவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலாட்டம்

தின தந்தினா தின தந்தினா
    தின தந்தினா தினனா
    தின தந்தினா தினனா
தின்னாதினா தினனா
    தின தந்தினா தினனா

பன்னிரண்டு கயிர் போட்டு
    பள்ளிப் பிள்ளையாட
    பள்ளிப் பிள்ளையாட
பாங்கான பாடல்களும்
    பக்கத்திலே பாட

ஆண்பிள்ளையும் பெண்பிள்ளையும்
    அருகில் நின்று பார்க்க
    அருகில் நின்று பார்க்க
ஆதி சிவன் என்று சொல்லி
    அனைவருமே சொல்வார்

பூமணக்கும் பெண்மணிகள்
    போற்றி வந்து சூழ
    போற்றி வந்து சூழ
பொன்னொழுக நன்னயத்தில்
    நன்னயமா தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேடிக்கைப் பாட்டு

ஏண்டி குட்டி என்னடி குட்டி என்னாடி செய்தாய்
அம்மியடியில் கும்மியடித்தேன் சும்மாவா இருந்தேன்?

ஏண்டி குட்டி என்னடி குட்டி என்னாடி செய்தாய்
ஆட்டுக் குட்டிக்கு ஆறுதல் பண்ணினேன் சும்மாவா இருந்தேன்?

ஏண்டி குட்டி என்னடி குட்டி என்னாடி செய்தாய்
கோழி முட்டையிலே மயிர் பிடுங்கினேன் சும்மாவா இருந்தேன்?

ஏண்டி குட்டி என்னடி குட்டி என்னாடி செய்தாய்
பாம்புக் குட்டிக்குப் பல் விளக்கினேன் சும்மாவா இருந்தேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேயிலைத் தோட்டத் தொழிலாளர் பாடல்

வாடை அடிக்குதடி வடகாற்று வீசுதடி
சென்னல் அடிக்குதடி நாம் சேந்து வந்த கப்பலிலே

எண்ணிக் குழி வெட்டி இடுப்பொடிஞ்சி நிற்கையிலே
வெட்டு வெட்டு எங்கிறாரே பொட்டு வெச்ச கங்காணி

ஆத்தோரம் கொந்தரப்பு அது நெடுக வல்லாரை
வல்லாரை வெட்டியல்லோ என் வல்லமை கொறஞ்சுதையா

ஊரான ஊர் இழந்தேன் ஒத்தப்பனை தோப்பிழந்தேன்
பாரான கண்டியிலே பெத்த தாயும் வீடிழந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நொடிகள்

மூக்கு மூன்றுண்டு; முகத்தாறு கண்ணுண்டு;
நாக்கு நாலுண்டு; நடக்கும் கால் பத்துண்டு

தத்தக்கப்பித்தக்க நாலு கால்
தான் நடக்க இரண்டு கால்
முற்றிப் பழுத்தால் மூன்று கால்
ஊருக்குப் போகையில் எட்டுக் கால்

நீரருகே நில்லேன்; நிலம் அதிர வேரூண்டேன்;
நிற்பேன் பெரு வெளியில்; கேட்பதோ அவப்பெயர்.

நெற்றியிலே கண்ணுண்டு சிவனுமல்ல;
நீண்டதொரு வாலுண்டு பாம்புமல்ல;
இரும்பிலே ஏறுவான் எல்லாரையும் ஏற்றுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நொடிகள்

மூன்றங்குலக் கோட்டைக்குள் முப்பத்திரண்டு பேர் காவலில்
பாங்காக இருக்கும் ராஜா பவனி வரத் துடிக்கின்றார்.

ஆக்கும் கறிக்கு ஆகும் பூ
அனைவரும் உணவாய்க் கொள்ளும் பூ
தலையில் சூடிக் கொள்ளாப் பூ
தாரணி மீதில் என்ன பூ

காட்டிலே ஊர்ந்து வரும் பாம்புமல்ல
பயங்கரமாய் ஊளையிடும் நரியுமல்ல
வெளிச்சம் எடுத்து வரும் சந்திரனல்ல
எதற்கும் பயப்படாது சிங்கமல்ல

கூரை வீட்டைப் பிரித்தால் ஓட்டு வீடு
ஓட்டு வீட்டைப் பிரித்தால் வெள்ளை மாளிகை
வெள்ளை மாளிகைக்குள் குளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Plan
Be a part of it.

Produced by

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org